தமிழும் ஆரியமும்

ம.சோ. விக்டர்

தமிழும் ஆரியமும்

ம. சோ. விக்டர்

யாத்திசைப் பதிப்பகம்

50, அண்ணா நகர்

அரியலூர் – 621 713

அலைபேசி: 98432 73914

தமிழும் ஆரியமும்

Dr. Ma.So. Victor, M.A., Ph.D.,
Cell : 98432 73914

© ஆசிரியர்

முதல் பதிப்பு : 2010

பக்கம் : 230
படிகள் : 1200

பதிப்பு :
யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர்
அரியலூர் - 621 713
அலைபேசி: 98432 73914

வடிவமைப்பு :
எஸ். தனசேகர்

விலை : **200. 00**

அச்சிட்டோர்:
ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 044-42664695, 90031 81586

காணிக்கை

கடந்த நூற்றாண்டுகளில் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றிய

பரிதிமாற்கலைஞர்,

உ.வே.சாமிநாதையர்,

இராகவய்யங்கார்,

சேசயங்கார்,

நீலகண்ட சாத்திரியார்

என விரியும்.

தமிழ்ப் பார்ப்பனப் பெரியோர்களுக்கு.

செம்மொழிச் சித்தர், முதுமுனைவர், செந்தமிழ் அந்தணர் இளங்குமரனாரின் சான்றுரை

வெற்றியர் திரு. விக்டர்

இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர் – 620 101.
திருச்சி மாவட்டம்.

தமிழ்த் திருவாளர் ம.சோ. விக்டர் அவர்கள் அரிய தமிழ்ப் பற்றாளர்; ஆழ்ந்த ஆய்வாளர், பாவாணர் கருத்து களில் பயின்ற தோய்வாளர்; அவர் கண்ட கொள்கைகளைப் பலப்பல நூல்களால் நிறுவி வரும் மொழி நல மீட்பாளர்.

தமிழன் தோன்றிய குமரிக் கண்டம்;

அவன் பேசிய மொழி தமிழ்;

அத்தமிழே உலக மொழிகளின் தாய்மொழி;

தமிழே ஆரியத்துக்கு மூலம்;

திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி ஆவது தமிழே;

என்னும் கொள்கைகளை உலகப் பேரறிவர் சான்றொடும் உள்ளார்ந்த ஆய்வொடும் நிறுவுவதே தமது வாழ்வாகக் கொண்டு, அசைக் கொணாச் சான்றுகளுடன் நூல்களைப் படைத்தவர் பாவாணர்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள், தம் ஆழிய ஆய்வொடும், கால வளர்ச்சியாலும் தம் உள்ளொளியாலும் மேலும் மேலும் அக்கொள்கைகளை நிறுவ ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துவரும் தமிழ்த் தாயின் தவப்புதல்வர். அவர் தம் நூல்களை இயல்பான ஓட்டத்தில் தடையின்றிக் கற்கவும்

தெளிவுறவும் வாய்ப்பாம் வகையில், வனப்புற ஓர் ஒழுங்கில், நல்ல கட்டமைப்பில் அச்சிட்டு, உலகத் தமிழர்க்குக் கொடை யாக வழங்க வல்ல "யாத்திசைப் பதிப்பகமாம்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள் பன்மொழிப் புலமையாளர்; நுனிப்புல் மேயாத நுண்ணிய கல்வியர். தொல்காப்பியச் செல்வம், சங்க நூல்வளம், திருக்குறள் தோய்வு, காப்பியக் கவின் யாவும் ஒருங்கே கைவரப் பெற்றவர். புலமையர் வழக்கோடு பொதுமக்கள் வழக்கையும் ஊன்றி அறிந்து, உரிய வகையில் போற்றும் ஆற்றலர். இயல்பான ஆற்றொட்ட நடையில் எழுதவும் வல்லவர். ஆதலால், தம் பெயரை நிறுவு வார் போல், "வெற்றி" மேல் வெற்றிப் படைப்புகளைச் செய்து வருகின்றார்.

"க" என்னும் எழுத்துப் பற்றி விளக்கி ஒரு நூல்,

"எல்-யா" என்னும் இருமை ஒரு சொல் பற்றி ஒரு நூல்,

உலகளாவிய தமிழ், உலக மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள், எபிறேய மொழியில் தமிழின் வேர், தமிழும் சமற் கிருதமும், தமிழும் செமிட்டிக் மொழியும், இந்திய மொழி களின் தாய் தமிழே, பஃறுளி - யூப்ரடீசு, குமரிக்கண்டம், குமரிக்கண்டமும் ஆப்பிரிக்கக் கண்டமும், தமிழும் ஆரியமும், மேற்கிலும் தமிழ், வாழும் தமிழ், தமிழ் மணம், சேயோன், சேயன், தமிழரின் எண்ணியல், வானியலும் தமிழரும், சிந்துவெளி நாகரிகம், தமிழும் எபிறேயமும், பாபிலோனியர் தமிழ், தமிழ்நாட்டுக் கிறித்துவம், இசுலாம் தமிழர் சமயமே என அடுக்கடுக்காக ஆய்வு நூல்களைப் படைத்து வருபவர்.

பன்முகப் பார்வைப் படைப்பவராம் திரு. ம.சோ. விக்டர், நன்முகத் தோற்றத்தர்; நவில் தோறும் நயமாம் நூல்போல், பழகுந்தொறும் "தேனோடு பால் கலந்த" இனியர். தமிழ்த் தொண்டரை மதிப்பவர். தமிழ்த் தொண்டரொடு தாமும் தொண்டராய் ஊன்றி நிற்பவர். மேலும் மேலும் அவர் படைப்புகள் தமிழ் வளமாய்த் தொடருமாக! இன்பமே மல்குக.

இரா. இளங்குமரன்

ஆசிரியர் உரை

கடந்த ஆண்டுகளில் நான் எழுதிய நூல்கள், உலகின் முதன் மொழி தமிழே என்பதை மொழியியல், புவியியல், வானியல், எண்ணியல், சமயவியல், சமூகவியல் என்றவாறு பல்வேறு கண்ணோட்டங்களில், உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தன. ஒருமூத்தமொழி, அது தமிழைத் தவிர வேறெந்த மொழியாக இருக்கமுடியும்! உலகில் அறியப்பட்ட, அறியப்படும் மொழிகளுக்கான தோற்ற காலத்தை,ஆய்வாளர்கள் ஓரளவிற்கு உணர்ந்து உறுதி செய்துள்ளனர். தமிழ்மொழியின் தோற்ற காலம்பற்றி எவரும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

பல்வேறு இயற்கையின் ஒலிகளை உள்வாங்கிக் கொண்டு, இயல்பாய்த் தோன்றிய மொழியே தமிழ்மொழியாகும். பல்லாயிரம் ஆண்டுகளில் புதுப்புது சொற்களை உருவாக்கிக் கொண்டு வளர்ந்துள்ளது. தமிழ்மொழி பேசப்பட்ட தொன்மைக் காலத்தில், வேறு மொழிகள் எவையும் அறியப்படவில்லை. தற்காலத்தில் மொழியியல் அறிஞர்கள். ஒரு மூப்புடைய மூலமொழியினின்றே இன்று உலகெங்கும் பேசப்படும் மொழிகள் தோன்றிக் கிளைத்ததாகக் கூறுகின்றனர். அந்த மூலமொழி எதுவென்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன என்றாலும், அம்மொழி தமிழாகவும் இருக்க வாய்ப்புகளுண்டு என்பது அண்மைக்கால ஆய்வாளர்களின் கருத்து. இவ்வாறான கருத்தினை கடந்த நூற்றாண்டுகளில் ஆய்வாளர்கள் கொண்டிருக்கவில்லை.

மொழிகளைப் பற்றிய சிந்தனைகள் கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டன. அண்மைக் காலம் வரையிலும் பல்வேறு மொழிக் கொள்கைகளை மேலை நாட்டவர் அறிவித்தனர். அவையாவும் மொழி வரலாற்றின் இடையில் புகுந்து தெரிவிக்கப்பட்ட கருதுகோள்களே. மொழி வரலாற்றின் தொடக்கத்தை அவர்கள் தொடாததால், மொழிக் கொள்கைகள், எதிர்பார்த்த முடிவுகளைத் தர இயலாமற்

போயின. குறிப்பாக, கிழக்கித்திய மொழிகள் பற்றிய சிந்தனைத் தெளிவு, மேற்கித்திய மொழியியலாரிடம் காணப்படாததால், ஐரோப்பாவைச் சுற்றியே மொழி உலகத்தைப் படைத்துக் கொண்டனர்.

கடந்த இருபதாம் நூற்றாண்டில், தமிழ்மொழியைப் பற்றிய புதிய சிந்தனைகள் மேற்கித்திய மொழி ஆய்வாளர் களிடையே தோன்றின. எமினோ -பர்ரோ போன்ற அறிஞர் கள், தமிழின் மூப்புத்தன்மையை உணர்ந்து வெளிப்படுத்தினர். இலகோவரி என்ற பிரெஞ்சு அறிஞர் தமிழைப் பற்றிய பல புதிய செய்திகளைக் கொடுத்தார். இன்றும் வாழ்ந்து கொண் டிருக்கும் மொழியியல் அறிஞரும், தொண்ணூறு அகவை யைத் தொடும் ஆய்வாளருமான நோவாம்சுகி என்பார், தற்காலத்திய மொழியியல் பேரறிஞராகக் கருதப்படுகின்றார். தமிழைப் பற்றிய அவரது கருத்து, உலகின் பல்வேறு அறிஞர் களையும் சிந்திக்க வைத்துள்ளது. தமிழையும் முதன்மொழி யாகக் கருதிஆய்வுகள் மேற்கொள்ளலாம் என்றும் அதற்கான தகுதி தமிழுக்கு உண்டென்றும் கருத்து வெளியிட்டுள்ளார். நோவாம்சுகி போன்ற அறிஞர்களிடத்தில், தமிழின் பல்வேறு தொன்மைக்கால பதிவுகளை உணர்த்தி மேலும் அவர்கள் தமிழைப் புரிந்து கொள்ளும் வகையில், சரியான முயற்சிகளை இதுவரையிலும் கூட தமிழறிஞர்கள் மேற்கொள்ளவில்லை.

அண்மையில் மொழி அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள், தமிழின் மூப்புத்தன்மை பற்றிய சான்றுகளை, உலக அரங்கிற்குக் கொண்டு சென்றுள்ளார். மேற்கித்திய மொழி யியல் அறிஞர்கள், அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையிலும் உள்ளனர் என்றவாறு செய்திகள் வந்துள்ளன. சிந்துவெளியில் வாழ்ந்திருந்த தமிழர்களைப் பற்றிய தெளி வான சான்றுகளை ஐராவதம் அவர்கள் வெளிக்கொணர்ந் துள்ளார். இவைகள் இலக்கிய மேற்கோள்கள் என்ற நிலை யைக் கடந்து, வரலாற்று நோக்கில் அணுகப்பட்டுள்ளன. மேலும் பல முயற்சிகள் தொடங்கப்படல் வேண்டும். குறிப் பாகக் குமரிக் கண்ட நிலைப்பாடு பற்றிய ஆய்வுகள், தமிழ் மொழியின், தமிழர் வரலாற்றின் மூப்புத்தன்மையை உலக அரங்கில் நிலைநிறுத்தக் கூடியவை. குமரிக் கண்டக்கொள்கை, அறிவியில் கண்ணோட்டத்தில் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், தமிழ்மொழியின் முதன்மைத்தன்மை எளிதாக நிலை நாட்டப் படும்.

இந்தியமொழிகளில் தமிழும் சமற்கிருதமும் மூப்புடையவை யென்றும், சிலர் தமிழுக்கும் மூப்புடையது சமற்கிருதம் என்றும் கருதினர். இவ்வாறான சிந்தனைகள் தமிழைப் பற்றியும் சமற்கிருதம் பற்றியும் தெளிவான கண்ணோட்டங்கள் இல்லாமல், விருப்பு வெறுப்பு அடிப்படைகளில் சொல்லப் பட்டன. தமிழே சமற்கிருதத்துக்கும் மூப்புடைய மொழியென் பதை, தமிழறிஞர்கள் மெய்ப்பித்தாக வேண்டும். அதுபோன் றே, தமிழுக்கும் மூத்த மொழி சமற்கிருதமே என்பதை அவர் களும் மெய்ப்பிக்க வேண்டும். கடந்த காலத்தில் அறியப்பட்ட புதிய தரவுகளின் அடிப்படையில், சமற்கிருதமே மூத்தமொழி என்று கூறுவதற்கான காரணங்கள் வலுவிழந்து காணப்பட் டன. தமிழே மூத்த மொழியென்பதற்கான சான்றுகள், பல் வேறு கோணங்களிலும் தெளிவாகக் கிடைத்துவருகின்றன.

ஒரு மொழியென்பது, அம்மக்களின் வாழ்வோடும், வரலாற்றோடும் பின்னிப்பிணைந்த உயிரோட்டமான நிலை யாகும். ஒருநாட்டின் ஒழுக்கநெறிகள் கட்டிக் காக்கப்பட வேண்டுமானால், அம்மக்களின் மொழியும் வரலாறும் பேணிக் காக்கப்படல் வேண்டும். மேலைநாடுகளில் சில, தங்களது இன வரலாறுகளை மறந்துபோனதால், பண்பாட்டுச் சீரழிவுகளுக் குள்ளாயின என்று கருதப்படுகின்றது. முதன்மொழியும் மூத்த மொழியுமான தமிழ்,அம்மொழி பேசும் மக்கள் வாழும் நாட் டில் புறக்கணிக்கப்படும் சூழல்கள் தற்போது உருவாகியுள்ளன. ஆம், தமிழகத்தில் தமிழ் இரண்டாம்நிலை மொழியாக்கப்பட் டுள்ளது. இந்திய அரசு அறிவித்துள்ள மும்மொழிக்கொள்கை யென்பது ஒரு மோசடிக் கொள்கை. தமிழ்நாட்டில் அறியப் படும் இருமொழிக் கொள்கையென்பது கல்வியை வணிகப் பொருளாக்கும் கொள்கை. தாய்மொழியாகிய தமிழ்மொழி யிலேயே அனைத்துக் கல்வியும் கற்பிக்கப்படவேண்டும் என்ற ஒருமொழிக் கொள்கையே உயர்வான கொள்கை.

உலக நாடுகளில் ஒருமொழிக் கொள்கையை நடை முறைப்படுத்தும் நாடுகளே இன்று பொருளியல், வாழ்வியல் கூறுகளில் உயர்ந்து நிற்கின்றன என்ற உண்மை வெளிப்பட்ட பின்பும் மும்மொழிக் கொள்கை, இருமொழிக் கொள்கை யென சொல்லி வருவது, மாணவர்களின் ஆற்றலைச் சிதறடித்து, ஒரு சிலரின் வருமானத்துக்கு வழிவகுக்கும் நிலைகளையே உருவாக்கும். இதன்மூலம் பயனடையும் அரசியல் வித்தகர்கள்,

ஒரு காலத்திலும் தாய்மொழிக் கொள்கையை ஏற்கவே மாட்டார்கள். உலகளாவிய தொடர்பு, அனைத்திந்தியத் தொடர்பு என்ற மாயவித்தைகள் வருமானத்தின் அடிப்படையில் சொல்லப்படுபவைகளே. விடுதலை பெற்று 60 ஆண்டுகள் சென்ற பின்னரும் அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை இந்திய அரசும், மாநில அரசுகளும் இதுவரையிலும் எட்டவேயில்லையென்பது, ஏதோ தற்செயலாக நிகழ்ந்ததாகக் கருதமுடியாது. ஒவ்வொரு பத்தாண்டுக்கும் இந்தக் கொள்கையைப் புதுப்பிப்பார்கள். இன்னும் நூறாண்டுகளுக்கும் புதுப்பித்துக் கொண்டே போவார்கள். அறிவார்ந்த சமூகம் அமைந்துவிட்டால், அரசியல்காரர்களுக்கு வேலையில்லாமற்போகும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

தமிழாய்ந்த தமிழ் மகனே தமிழகத்தை ஆளவேண்டும் என்று பாவேந்தர் கூறினார். இதற்குத் தமிழறிஞர்கள் தான் தமிழ்நாட்டை ஆளவேண்டும் என்பது பொருளன்று. தமிழ் மொழியையும், தமிழ்மக்களையும் உயர்த்துகின்ற திட்டங்களைச் செயலாற்றும் எந்தத் தமிழனையுமே பாவேந்தர் தமிழ்மகன் என்று கூறினார் என்க. சிலர் கருதுகின்றபடி, தமிழறிஞர் எவரும்கூட தமிழகத்தை இதுவரை ஆள வரவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வழக்கிழந்து போன எபிறேய மொழியும் அதே கால அளவில் தங்கள் தாய்நாட்டையும் இழந்த எபிறேய மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாகப் போராடி தங்கள் மொழியையும் நாட்டையும் மீட்டுக் கொண்ட வரலாறு, ஒவ்வொரு தமிழனும் அறிந்துகொள்ள வேண்டிய வரலாறாகும்.

முற்றிலும் சிதைந்து அழிந்துபோன எபிறேய மொழி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பிறகு அப்போது பேசப்பட்ட வழக்கினை மீண்டும் இப்போது அடைந்திருப்பதற்கான அடிப்படைக் காரணம், அந்த அரசின் உறுதியான கொள்கையாகும். அக்கொள்கையை நிறைவேற்ற எபிறேய மக்கள் அளித்த ஒத்துழைப்புமாகும். எபிறேய மொழியைப் போல், தமிழ்மொழி சிதைந்துவிடவில்லையாயினும், அதனைச் சிதைப்பதற்கான கருவியாக அரசாங்கமே செயல்படுவதுதான் விந்தையாக உள்ளது, இன்று படிப்பறிவற்ற எழுதப்படிக்கத் தெரியாதவனும் தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு 25 ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதாக ஒரு புள்ளிக் குறிப்பு கூறுகின்றது.

200 ஆண்டுகால ஆங்கில ஆட்சியில் புகுந்த அயன்மொழிச் சொற்களை, 60 ஆண்டு காலத் தமிழர்களின் ஆட்சிகள் களைய முற்படவில்லை யென்பதோடு, அக்கணக்கை மேலும் உயர்த்த நினைக்கின்றன.

தாய்மொழியாம் தமிழ்மொழி மீது பற்றுகொண்ட தமிழரில் பலர் இந்த அவலங்களை யெல்லாம் கண்டு, விம்மி வெடிக்கின்றனர். அறம்பாடியே அழித்த புலவர்களும் இன்றைக்கு இல்லாமற் போய்விட்டனர், அரசியலில் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதாகும் என்பது பொய்யாகும் செய்தியோ எனவும் பலர் குமுறுகின்றனர். உணர்ச்சிப் பிழம்புக்ளாய் பல தமிழ் இளைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், தமிழ் மொழி வெல்லுமா? இந்தக் கேள்விக்கு விடை கூற வேண்டியவர்கள்.....?

இந்நூலை வடிவமைத்து அச்சிட்டு உதவிய ஸ்ரீராக வேந்திரா லேசர் பிரிண்டர்ஸ் நிறுவனத்துக்குஎனது நன்றி.

ம.சோ. விக்டர்

பொருளடக்கம்

I.	பதிப்பாசிரியர் பக்கம்	6
II.	ஆசிரியர் உரை	8
III.	முன்னுரை	14
1.	புதைந்து போன வரலாறு	31
2.	சமற்கிருத மொழி பற்றிய மேற்கத்திய ஆய்வாளர்களின் கருத்து	49
3.	வேதங்களும் புராணங்களும்	57
4.	இரிக்கு வேதம்	67
5.	மேற்கித்திய எழுத்துமுறைகள்:	83
	அ. தமிழினின்றும் கிளைத்த எழுத்து முறைகள் – விளக்கப்படம்.	88
	ஆ. நூற்றாண்டுகளாக மாற்றம் பெற்ற தமிழ் எழுத்துகள் – விளக்கப்படம்	96
	இ. சங்ககாலத் தமிழ் எழுத்துகள் – விளக்கப்படம்	108
6.	ஆரியரும் – கிரேக்கரும் – தமிழரும்	113
7.	கிரேக்க –ஆரிய வானியல்	130
8.	கிரேக்கர்களின் வானியல்	141
9.	தொல்தமிழரின் வானியல்	151
10.	தமிழும் ஆரியமும்	181

முன்னுரை

தமிழும் ஆரியரும் என்ற தலைப்பு, தமிழர்களையும் ஆரியர்களையும் பற்றிய வரலாற்றுச் செய்திகளை விளக்கும் தலைப்பாகும். உலக வரலாற்றில் பாபிலோனியர், கல்தேயத்தார், சுமேரியர், எபிறேயர், போன்ற இனத்தாரின் தொன்மைக் கால வரலாறு இன்றுவரையிலும் கூடத் தெளிவாக்கப்படவில்லை என்பதுபோல், ஆரியர்களின் வரலாறும் கமுக்கப் புதிராகவே உள்ளது. ஆரியர்களுடைய வருகையை யொட்டிய கால அளவைக் கொடுக்கும் வரலாற்றாய்வாளர்கள்,அவர்களது இனம் பற்றிய தொன்மைச் செய்திகளை விளக்கிக் கூறவில்லை. எப்படியிருப்பினும் ஆரியர்கள் இந்தியாவின் தொன்மக் குடிகள் அல்லர் என்ற கருத்து ஏற்கப்பட்டுள்ளது.

ஆரியரின் வருகை இந்தியப் பதிவுகளில் சரியாகக் குறிக்கப்படவில்லையென்றாலும், கி.மு..1500 ஆண்டுகளில் ஆரியரின் இந்திய வருகை நிகழ்வுற்றிருக்கக் கூடும் என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆரியர்கள் பற்றிக்கூறும் செய்திகள் அனைத்தும், சொல்லப்பட்டவைகளையே திரும்பத் திரும்பக்கூறும் செய்திகளாகவே உள்ளன. புதிய செய்திகளை எவரும் தெரிவிக்க முன்வருவதில்லை. ஆரிய எதிர்ப்பாளர்கள் கூறும் செய்திகள் அனைத்தும் பகைமையில் வெளிப்பாடுகளாகவே உள்ளன. இவ்வாறான சார்பு அல்லது எதிர்ப்புச் செய்திகளைக் கொண்டு ஆரிய இனத்தின் வரலாற்றைக் கணிக்க இயலாது.

இதுவரை அறிவிக்கப்பட்ட செய்திகளின்படி, ஆரியர்கள் சிந்துப்பகுதியில் முதன்முதலில் குடியேறினர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சிந்து மற்றும் அதன் கிளை ஆறுகள் தந்த நீரால் வளமுற்றிருந்த அப்பகுதி, கால்நடைகளை வளர்க்க நல்வாய்ப்பான இடங்களாக இயற்கையிலேயே அமைந்திருந்தன. ஆரியர்களை அப்போது சிந்துவெளியில் வாழ்ந்திருந்த மக்கள் வரவேற்றனர். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர்.

சிவத்த தோலும், உயர்ந்த உருவமும் கொண்ட ஆரியர்களிடம் தமிழர்கள் மயங்கினர். இதுவரை அறியப்படாத புது இனத்தார் மீது தமிழர் விருப்பமும் கொண்டனர். கருமைத் தோலும், கருத்த சுருட்டை முடியும் கொண்ட தமிழர்கள் மீது ஆரியர்களும் விருப்பம் கொண்டனர். இவ்வாறு தொடக்கத்தில் இரு இனங்களும் நட்புணர்விலேயே இருந்தனர்.

நாடோடி வாழ்க்கையில் ஈடுபட்ட ஆரியர்கள், பரந்த புல்வெளிகளை இந்தியாவில் கண்டபோது, நிலையான குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். முற்றிலும் நாட்டுப்புற வாழ்க்கையை மேற்கொண்டிருந்த ஆரியர்களுக்கு கல்வி போன்ற அறிவு சார்ந்த நிலைப்பாடுகள் அக்காலத்தில் அவர்களுக்குப் புதுமைகளாகத் தோன்றின. ஆரியம் என்ற பிற்கால ஆய்வாளர்களால் அழைக்கப்பட்ட அவர்களது மொழிக்கு அக்காலத்தில் எழுத்து வடிவங்கள் இருந்திருக்கவில்லை. உண்மையில் அவர்கள் பேசிய மொழியின் பெயரும் கூட இதுவரை அறியப்படவில்லை.

நகரிய நாகரிகத்தில் சிறப்புற்றிருந்த சிந்துவெளியில், ஏராளமான பள்ளிகள் தமிழர்களால் நடத்தப்பட்டுவந்தன. அவை தமிழ்க் கணியர்களால் நடத்தப்பட்ட ஐந்திறப் பள்ளிகள் என தற்காலத்திய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிந்துவெளியில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே, அப்பள்ளிகள் செயல்பட்டு வந்தன. அறிவியல், வானியல், கணக்கியல், பொறியியல், வேளாண்மை, நெசவு, கலைப்பொருட்களை உருவாக்குதல், அணிகலன்களைச் செய்தல், கனிமங்களை உருக்கி வார்த்தெடுத்தல் போன்ற முதிர்ந்த நிலை நாகரிகம் சிந்துவெளி மக்களிடம் காணப்பட்டன. இத்துறைகள் சார்ந்த செய்திகளுக்கான சான்றுகள் சிந்துவெளியில் கிடைத்துள்ளன என்பதால், இவையயெல்லாம் கற்பனையான செய்திகள் எனக் கூற இயலாது. இவையெல்லாம் ஆரியர்களுக்குப் புதுமையாகத் தோன்றின.

இச்சூழல்களில், தமிழ்ப் பள்ளிகளில், ஆரியர்களும் சேர்ந்து படித்தனர். தமிழர்களும் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தனர். இவ்வாறு அவர்கள் பெற்ற பயிற்சி, பிற்காலத்தில் அவர்கள் தொகுத்த வேதங்களின் மூலம் வெளிப்படுவதைக் காணலாம். தமிழர்களே ஆரியர்களுக்குக் கல்வியை கற்பித்தனர் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது, அதற்கானச் சான்றுகள் உண்டா என்று கேள்விகளைக் கேட்பவர்களுக்கு, ஆரியர்களின் வேதங்

களே விடைகளைத் தருகின்றன. இரிக்குவேதம் என்பது, அக்கால பஞ்சாப் பகுதி மக்களின் வாழ்க்கை முறையை படம் பிடித்துக் காட்டும் சான்றாக உள்ளது. இரிக்கு வேதத்தைப் படித்தவர்கள், இவ்வாறான செய்திகளையெல்லாம் புரிந்து கொள்ளவில்லை. இருக்குவில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் இன்று தமிழர்களால் அலசி ஆராயப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில், ஏன் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட, வேதங்கள் என்ன சொல்கின்றன என்பதைத் தமிழர்கள் அறியாதிருந்தனர். அதற்கான நூல்களும் தமிழில் இல்லாதிருந்தன.

ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பிறகு, சமற்கிருதமும் இரிக்குவேதமும் ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்டன. வேதங்களைப் பற்றிய விளக்கங்களை, வில்சன் மற்றும் மோனியர் வில்லியம்சு போன்ற ஐரோப்பியர்கள் நூல்களாக அளித்தனர். சிவத்தியாநாநந்த மகரிசி என்ற தமிழ்த்துறவி, கி.பி. 1935 ஆம் ஆண்டில், இரிக்கு வேதம் பற்றிய விளக்கத்தைத் தமிழில் கொடுத்தார். இந்நூல்கள் வழியே, வேதங்களைத் தமிழரும் கற்றுத் தெளிகின்ற வாய்ப்புகள் தோன்றின. வில்சன், வில்லியம்சு போன்றவர்கள் கி.பி. 1860களுக்குப் பிறகே தங்களுடைய விளக்க நூல்களை வெளியிட்டனர். அக்கால அளவுகளில், சிந்துவெளி பற்றிய செய்திகள் எவையும் அறியப்படவில்லை. அதனால் ஆரியரே இந்தியாவின் தொன்மக்குடியினர் என்று கருத்து பரவலாகக் கூறப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், சிந்துவெளி மக்கள் பற்றியும், ஆரியர்கள் பற்றியும் தெளிவான விளக்கங்கள் கிடைத்தன. தற்போது வேதங்கள் அனைத்தும் தமிழ்க் கண்ணோட்டத்தில் நோக்கப்படுகின்றன. இப்புதிய பார்வை, கடந்த காலத்தில் அறியப்படாத பல புதிர்களை அவிழ்த்து விட்டிருக்கின்றது.

தொடக்கத்தில் தமிழர்களோடு இணைந்து வாழ்ந்த ஆரியர்கள், தமிழ்ப் பள்ளிகளில் பெற்ற கல்வியினால், தங்கள் இனத்தை இந்தியாவில் நிலைநிறுத்திக் கொள்வதற்கான சிந்தனைகளில் ஈடுபட்டனர். தொடக்க கால ஆரியர் வாழ்க்கை, தமிழர்களுடன் அவர் கொண்டிருந்த உறவு, தமிழர்களிடையே திருமண உறவுகள் கொண்டது, தங்களுக்கென புதிய சமயத்தைத் தோற்றுவித்துக் கொண்டது. பிற்காலத்தில் தமிழர்களோடு முரண்பட்டது போன்ற செய்திகள், இரிக்கு வேதத்திலேயே காணப்படுகின்றன.

சிந்துவெளி மக்களின் நகரிய நாகரிகம், செல்வவளம், நிலையான ஆட்சிமுறைகள், சட்டங்கள், சமயம், சமயம் சார்ந்த வழிபாட்டுமுறைகள், வேளாண்மைத் திட்டங்கள் போன்ற பல்வேறு செய்திகளை இரிக்கு வேதம் சொல்கிறது. இந்த வேத நூலை உன்னிப் பார்த்து ஊன்றிப் படித்தவர்களால் மேற்கண்ட உண்மைகளை உணரமுடியும். ஐந்திறப் பள்ளிகளால் உருவாக்கப்பட்ட ஆரியர்கள், தங்களுடைய நிலைப்பாடு கருதி, தங்களுக்கேற்ற சமயக் கொள்கைகளை வகுத்துக் கொண்டனர். இவைகளும் கூட, தமிழர் சமயத்தைச் சார்ந்தே காணப்பட்டன. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தமிழரின் உலகளாவிய மாந்த நேயக் கொள்கை, ஆரியரின் வாழ்க்கை நிலைப்பாட்டுக்கு ஏற்றதல்ல என்பதை அவர்கள் உணர்ந்தனர். தங்கள் இனம் எதிர்காலத்தில் கவனிக்கப்படாமல் போகும் என்பதாலும், தமிழரை எத்துறையிலும் வென்று அவர்கள் மீது ஆளுமை செலுத்த இயலாமற்போகும் என்பதாலும், இயற்கையிலேயே அவர்கள் கொண்டிருந்த உடல்நிறத்தையும், உருவத்தையும் பயன்படுத்திக் கொண்டு, இவ்வுலக மக்களில் தாங்களே உயர்ந்தவர்கள் என்ற புதிய கோட்பாட்டைக் கூறினர். இந்திய மக்களை நால்வகை வண்ணங்களாகப் பிரித்தனர்.

இந்தப் புதிய கொள்கையைத் தமிழர்கள் எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், இது இயற்கைக்கு மாறுபட்டக் கொள்கை என்பதையும் இடித்துரைத்தனர். ஆரியர் -தமிழர் பகைமை இங்குதான் முதன்முதலில் வித்திடப்பட்டது. ஒரு காலத்தில் தங்களது அறிவைப் பெருகிக் கொள்ள, எந்த ஐந்திறப் பள்ளிகளில் படித்தார்களோ, அப்பள்ளிகளை நடத்தியவர்களை ஆசீவகர்கள் என்றும், அவர்கள் சமணர்களே என்றும் வரலாற்றில் தவறாகப் பதிவு செய்துவிட்டனர். ஆசீவகா (**Ajeevaka**) என்ற சொல்லையும் பெயரையும் அப்பள்ளிகள் நடத்தியவர்களைக் குறிக்க ஆரியர்களே பயன்படுத்தினர். ஆசீவகம் என்பது என்ன? அக்கொள்கையை அறிவித்தவர் யார்? அவர்களது ஐந்திறப் பள்ளிகள் என்ன பணிகள் செய்தன? என்பன பற்றிய கேள்விகளுக்குக் கூட, இன்றைய தமிழறிஞர்கள் பதிலைத் தந்துள்ளனர்.

உண்மையில் தமிழ்க் கணியம் (ஆசீவகம்) பெற்றெடுத்த குழந்தைதான் சமணம் ஆகும் என்பதை இன்றைய ஆய்வுகள்

மெய்ப்பிக்கின்றன. கணியர்களின் வாழ்க்கைமுறையை அப்படியே பின்பற்றிய சமணர்களை, பிரித்து உணரமுடியாத சில ஆய்வாளர்களில் சிலர், ஆரியமும் சமணமும் ஒன்றே எனத் தவறாகக் கருதி, ஆசீவகர்கள் செய்த பணிகளையெல்லாம் சமணர்களே செய்ததாகப் பதிவுசெய்துவிட்டனர். ஆசீவகர் களையும் அதற்குப் பின் தோன்றிய சமணம், சமணர்களையும் ஆரியர்கள் எதிர்த்தனர் என்ற செய்தி, தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆசீவகர்களும், தொடக்ககாலச் சமணர் களும் தமிழர்களே என்பதை இன்றைய ஆய்வுகள் மெய்ப் பிக்கின்றன.

தமிழருக்கும் ஆரியருக்குமிடையே ஏற்பட்ட பகைமை, கி.மு. 700 ஆண்டுகளிலேயே அறியப்படுகின்றது. முதலில் ஆசீவகர்களும் அடுத்து சமணர்களும் ஆரியக் கொள்கைகளை எதிர்த்தனர். இருவரையும் ஒரு சேர எதிர்க்கத் துணிவில்லாத ஆரியர்கள் சில காலம் அமைதி காத்தனர். இருப்பினும் அப்பகை நீறுபூத்த நெருப்பாகவே இருந்தது. அடுத்த நூற்றாண்டுகளில் அறியப்பட்ட புத்த சமயமும் ஆரியத்தைச் சாடத் தொடங்கியது.இவ்வாறு மூன்று பக்கங்களிலும் எழுந்த எதிர்ப்பினால், ஆரியர்கள் மிரண்டு போயினர். கி.பி. 300 ஆண்டுகளில் ஆரியர் செய்வதறியாது திகைத்தனர். இக்கால அளவுகளில் அறியப்பட்ட புத்தர் பற்றிய கதைகளும், புத்த சாதகக் கதைகளும், ஆரியத்தின் ஆணிவேரையே ஆட்டின. வடஇந்தியப் பகுதிகளில் ஆரியரின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு வலுத்ததால், இம்மூன்று பகைகளையும் வெல்வதற்கான காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

கி.மு. 700 ஆண்டுகளில் அறியப்படும் நந்தர்களின் ஆட்சி, சூத்திரர்களின் ஆட்சியெனவும், கொடுங்கோல் ஆட்சியென வும், ஆரியர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. நந்தர்கள் தமிழ்மரபில் வந்தவர்களே என்பதும் ஐந்திறப்பள்ளிகளை ஊக்குவித்தவர்கள் என்பதும் வரலாற்றில் அறியக்கிடக்கின்றன. நந்து என்று தமிழ்ச்சொல்லுக்கு அணுகுதல், நெருங்குதல், இணைதல் என்றவாறு தமிழில் பொருள் அறியப்படும். நந்து - நத்து என்றும் சொல்லப்பட்டது. நந்தன் - நந்தி என்ற சொற்கள் தமிழ்ச் சொற்களே. சிவனோடு இணைந்ததால், காளை நந்தியெனப்பட்டது. நீரும் நிலமும் இணைந்த பகுதி நத்தம் எனப்பட்டது. நத்து என்ற தமிழ்ச் சொல்லிலிருந்தே நதி என்ற சமற்கிருதச் சொல் திரிந்தது.

கி.மு. 332 ஆம் ஆண்டில் அலெக்சாந்தரின் படையெடுப்பு, ஆரியருக்கு நல்வாய்ப்பாய் அமைந்தது. சூத்திர நந்தர்களை, சாணக்கியன் என்ற ஆரியன் சூழ்ச்சியால் மோரியர் என்ற மரபினர் தூக்கியெறிந்தனர்.

முர்-முர-முரு என்ற சொல், விலங்குகளோடு இணைந்த தமிழ்ச்சொல்லாகும். முரு என்ற சொல்லுக்கு, விலங்குத்தன்மை, மாந்தனை விஞ்சிய ஆற்றல் அல்லது வலம், வலத்தின் அடிப் படையில் ஒரு வல்லாண்மை, போர், வெற்றி என்ற பொருளில் அறியப்படும். முருகன் என்ற சொல், இவ்வாறான வல்லாற்றல் என்ற பொருளையே விளக்கும் சொல்லாகும். முருகன் என்றால் அழகன் என்று கூறுவது நேரிடையான பொருளைத் தராது. முரு என்ற சொல்லிலிருந்துதான், ம்ரு என்ற சமற் கிருதச் சொல்திரிந்து, ம்ருக அல்லது விலங்கு எனப்பட்டது. ம்ருக என்பதனை, மிருகம் என்று தமிழ்ப்படுத்தினர். அந்த வகையில் மோரியர் - மூரியர் என்ற சொல், முர் என்ற தமிழ் வேரினின்றும் விரிந்து திரிந்த சொல்லே.

சந்திரகுப்தன் காலத்தில் ஆரியருக்குப் பாதுகாப்பு கிடைத்தது. இச்சூழலைத் தமக்குச் சார்பாக்கிக் கொண்ட ஆரியர், எல்லா நிலைகளிலும் தங்களை உறுதிப்படுத்திக் கொண் டனர். இடையில் அசோகன் புத்த சமயத்தில் இணைந்த போது ஏற்பட்ட தொய்வு, அடுத்து அவன் மகனைக் கொலை செய்யும் அளவுக்கு வந்தது. கிறித்துப் பிறப்பாண்டுகளுக்குப் பிறகு ஏறக்குறைய ஆரியர்கள் தங்கள் நிலைப்பாட்டை உறுதி செய்து கொண்டனர். கி.மு. 300 - கி.பி. 200 ஆண்டுக்கால இடைவெளியில்தான், வேதங்கள் தொகுக்கப்பட்டு எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டன. உபநிடதங்கள், புராணங்கள் ஆகியவை, புத்த சாதகக் கதைகளுக்கு மாற்றாகவும், பதிலடி யாகவும் எழுதப்பட்டன. இவைகள் யாவும் ஏற்கனவே தமிழர் களால் அறியப்பட்டிருந்த மூலக் கதைகளே. ஆரியக் கண் ணோட்டத்தில் அவை -திருத்தப்பட்டன. சமற்கிருதத்தில் அறியப்படும் 18 புராணங்களும், தமிழ்க் கடவுளையும், தமிழ்ச் சூழல்களையும் கொண்டவைகளே. (இவை பற்றிய விளக் கங்களை ஆசிரியரின் சேயோன், சேயன் என்ற இரு நூல்களில் காண்க.)

கிறித்து பிறப்பாண்டுகளில் சாங்கியம், ஓகம், வைசேடி யம், ஞாயம், மீமாஞ்சம், வேதாந்தம் என்றவாறு அறுவகைச்

சிந்தனைகள் அறியப்பட்டிருந்தன. இவைகள் அனைத்தையும் ஆரியர்களே உருவாக்கினர் என்றவாறு பதிவு செய்துள்ளனர். இச்சிந்தனைகள் ஆரிய மரபுக்கு ஏற்றவைகளாகவும் தெரிய வில்லை. ஆரியரின் தொகுப்பான அர்த்தசாத்திரம் (இது சாணக்கியரால் எழுதப்பட்டதன்று எனக் கருதப்படுகின்றது. சாணக்கியர் சொன்னதாக இதிகவுதில்யோ - இப்படி சாணக் கியர் கூறுகிறார் என்ற வரிகள் அதில் காணப்படுகின்றன. தொல்காப்பியர் கூறும் என்மனார் புலவர் என்ற வரியினை ஒப்பு நோக்கலாம்) அன்விக்சகி என்ற நூலில், சாங்கியம், ஓகம், உலகாய்தம் ஆகிய நூல்கள், ஆரியரால் படைக்கப்பட்டவை யன்று என்ற கருத்தை வெளியிடுகின்றது.

தமிழ்க் கணியர்களில் ஒரு பிரிவினர் (ஆசீவகர்கள்) கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்தவர்களாவர். அவர்கள் வழியில் பிறந்த சமயங்களான சமணமும் புத்தமும் கடவுளை ஏற்றுக்கொள்ளவில்லை. சாங்கியம், ஓகம், உலகாய் தம் ஆகிய மூன்று நூல்களும் கடவுள் மறுப்புக் கொள்கையை வலியுத்துகின்றன. இம்மூன்று நூல்களையும் கூட ஆரியர்களே படைப்பித்தனர் என்றவாறு பதிவு செய்துள்ளனர். இது முற்றி லும் நகைப்பிற்கிடமானது. கடவுளை ஏற்கும் வேதாந்தமும், கடவுளை மறுக்கும் உலகாய்தமும் ஆரியரால் எவ்வாறு படைக் கப்பட்டிருக்க முடியும் என்பதை பிற்காலத்தவர் சிந்தித்துப் பார்ப்பார்களே என்பதைக் கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை. மாக்சு முல்லர் போன்ற சமற்கிருத அறிஞர்கள், மேற்கண்ட நூல்களெல்லாம் ஆரியருடையதே என்று கூறுகிறார்.

மொகஞ்சதரோவில் அகழ்வாய்வு செய்தபோது சில மண் பொம்மைகள் கண்டெடுக்கப்பட்டன. அவைகள் ஒவ்வொரு ஓக இருக்கைபற்றிய (ஆசனங்கள்) விளக்கத்தினை உருவங் களாகக் கொண்டுள்ளன. இந்த ஓகக் கலை, தமிழர்களின் உடலோம்பும் அறிவியல் கலையென்பதை மறைத்து, ஓகம் (யோகா) ஆரியரால் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியில் கலையே என பதிவு செய்துகொண்டனர். ஒக்கை என்ற தமிழ்ச்சொல் லுக்கு சரியான, தகுதியான, சிறப்பான என்றவாறு பொருள் விரியும். உடலைத் தகுதியான வகையில் வைத்துக் கொள்ளுதல் என்பது, நோய்களை அணுகவிடாமல் தடுக்கும் முறையாகும். தகுதியான உடலைக் கொண்டிருப்பவர் நலமாகவும், மகிழ் வாகவும் வாழமுடியும். ஒக்கை ஒகையைத் தரும். அதாவது

தகுதி மகிழ்வைத் தரும். ஒக்கை, ஓகை என்றவாறு ஓகம் என்ற சொல் விரிந்து, தகுதியான (to be fit) என்ற பொருளைத் தந்தது. ஓகம், யோகா என சமற்கிருதத்தில் திரிந்தது.

ஆரியருடைய வேதங்கள் பற்றி இப்போதுகூடத் தெளிவான விளக்கங்கள் கிடைக்கவில்லை. வேதம் ஒன்றாகவே இருந்தது என்றும் அது கி.பி. 200 ஆண்டுகளுக்குப் பிறகே நான்காகப் பிரிக்கப்பட்டது என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதர்வவேதம் என்பது இறுதியாகத் தொகுக்கப்பட்டது. இரிக்கு யசூர், சாம வேதங்கள் ஒன்றையொன்று தழுவிய நிலையில் ஒரே இலக்கியச் சொல் நடையில் காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வேதம் என்பது பிரமனால் அருளப்பட்டு, காற்றில் ஒலி அலைகளாக மிதந்து கொண்டிருந்தனவென்றும், அவற்றை சுநகன் போன்ற முனிவர்கள் தங்களது தவ வலிமையால் ஈர்த்து, மக்களுக்கு அளித்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. இந்தக் கருத்துகூட மிகவும் பிற்காலத்தில் இடைச்செருகலாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பர்.

இரிக்கு வேதத்திலும், மனு சாத்திரத்திலும் கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரையிலும் கூட பல்வேறு செய்திகள் திணிக்கப்பட்டன என்று அம்பேத்கர் கூறுகிறார். உலகின் முதல் சட்ட நூலைத் தந்தவன் மனு என்பானே என்று சொல்கின்றனர். அவ்வாறான ஒரு நூலை எவரும் பார்த்ததாகவோ படித்ததாகவோ தெரியவில்லை. வாய்மொழியாக, ஆரியருக்குச் சார்புடைய பல செய்திகள் கொண்ட சுலோகங்களைக் கூறிவந்துள்ளனர். காலத்திற்கேற்றவாறு பல செய்திகள் அவைகளில் இணைக்கப்பட்டன. ஆங்கில கிழக்கித்தியக் குழுமத்தின் நடுவராக கல்கத்தாவில் பொறுப்பேற்ற சர்வில்லியம் ஜோன்சு என்பார், இந்தியர்களுக்கு மனுநூல் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்க எண்ணி, அந்நூலைத் தருமாறு, கல்கத்தாவிலிருந்த பிராமணர்களைக் கேட்டார். அந்தப் பிராமணர்களும் அப்படியொரு நூலைப் பார்த்ததில்லையாதலால், இல்லையென்று சொன்னால், மனுநூல் என்பதே பொய்யான கருத்தாகிவிடும் என்ற அச்சத்தில், கி.பி. 1780களில் முதன்முதலாக தாங்கள் கேட்டிருந்த செய்திகளையும், மேலும் தமக்குப் பாதுகாப்பான புதிய செய்திகளையும் இணைத்து, இதுதான் மனு சாத்திரம் என்றவாறு ஒரு நூலைக் கொடுத்தனர். உண்மையில் மனு

சாத்திரம், கி.பி. 1780 ஆண்டிலேயே முதன்முதல் எழுதப்பட்டது எனலாம்.

வேதங்களிலும் மனு நூலிலும் அவ்வப்போது தேவைப் பட்டதை இணைத்துக் கொள்ளும் வகையில் பல குறுக்கு வழிகள் அந்நூல்களில் அனுமதிக்கப்பட்டிருந்தன. அண்மை யில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு இதழாசிரியர் ஒரு சமற்கிருத சுலோகத்தை எழுதி, இது இரிக்குவேதத்தில் எந்த இடத்தில் உள்ளது எனக் கேட்டார், எவரும் சரியான பதிலைச் சொல்ல வில்லை. பிறகு அவரே, இது இரிக்குவேதத்தில் உள்ள சுலோகம் அன்று,இதை நானே எழுதியிருந்தேன் என்று கூறினார். எனவே, சமற்கிருதத்தில் எதைச் சொன்னாலும், எப்போது சொன்னாலும் அது வேதம் கூறியதே என ஏற்றுக் கொள்ளும் மனநிலையில்தான் பலரும் உள்ளனர். இரிக்குவேதத்தின் 10வது சூக்தம், கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குப்பிறகு எழுதப்பட்டது என அம்பேத்கர் எழுதி மெய்ப்பித்திருக்கிறார்.

ஆரியச் சார்புடையவர்களுக்கு, தொன்மைக் காலம் தொட்டு, அண்மைக்காலம் வரையிலும் இந்தியாவில் அறியப் படும் சிறப்புக்குரிய அனைத்தும் ஆரியர்களால் படைக்கப்பட் டவையே என்ற எண்ணங்களுண்டு. இதன் அடிப்படையி லேயே, தொல்காப்பியரைக் கூட ஆரியர் என்றே கூறிக் கொண் டனர். அதற்குச் சில தமிழறிஞர்களும் ஒப்புதல் அளித்தனர். திருவள்ளுவரை ஆரியர் என்று கூற இயவில்லை. ஆனாலும் ஆதிபகவனை வள்ளுவர் கூறியதால் வள்ளுவர் ஆரியச் சார் புடையவரே என்றும் கூறினர். மேற்கண்டவாறு சொல்லப் பட்ட காலங்களில், அவைகளை மறுத்துக்கூற எந்தத் தமிழ் அறிஞரும் முன்வரவில்லை. ஏனெனில் தமிழ்நாட்டில் பிராம ணர்களைத் தவிர தமிழர் எவரும் சமற்கிருதம் படிக்கவில்லை.

தற்காலத்தில் பல தமிழர்கள் வேதங்களையும் புராணங் களையும் படித்துப் பார்த்துவிட்டு அவைகளின் உண்மை நிலைகளை ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். சமற்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ள வேதங்களிலும் புராணங்களிலும் ஆயிரக்கணக்கான தமிழ்ச்சொற்கள் கலந்தி ருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

ஆரியர்களையும் அவர் வழிவந்த பிராமணர்களையும் இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கில் இவையெல்லாம்

சொல்லப்படவில்லை. தமிழருடைய அறிவுச் செல்வங்களை யெல்லாம் தம்முடையது எனக் கூறி இவ்வுலகை நம்பவைத்து, தமிழர்களைச் சிறுமைப்படுத்தி, அவர்கள் நான்காம் குடிமக்கள் என்றுகூறி, அதனைப் பதிவும் செய்த பொய்த்தன்மையை தமிழர்கள் இன்று அறிந்து கொண்டு, உண்மைநிலையை வெளிப் படுத்தும்போது, அது பிராமணர்களுக்கு நெருடலாகத் தெரி கின்றது.

பிராமணர்களைத் தமிழர்கள் வெறுக்கவுமில்லை ஒதுக்க வுமில்லையென்பதை கடந்த காலவரலாறு கூறும். பிறப்பொக் கும் எல்லா உயிர்க்கும் என்று கூறியவர்கள் தமிழர்கள். குறிப் பாக சமற்கிருதம் என்றமொழி, ஆரியர்களுடையதே என்பதைக் கூட கடந்த காலங்களில் தமிழர்கள் ஏற்றுக்கொண்டனர். அது உண்மையில் ஆரியமொழியன்று என்பதை அண்மைக் கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. இன்று தமிழ்நாட்டில் (வடக்கேயுங் கூட) அறியப்படும் பார்ப்பனர்கள் ஆரியர்களு மல்லர், பிராமணர்களுமல்லர். இவர்களெல்லோரும் தமிழர் களே. இருந்தாலும் தங்களுடைய பிழைப்பைக் கருதி, தங் களை ஆரியப் பிராமணர்ளெனச் சொல்லிக் கொண்டிருக்கி றார்கள். உண்மையான ஆரிய வித்து இன்று தமிழ்நாட்டில் இல்லை. இடைக்காலச் சோழர்கள் ஆட்சியில், ஏராளமான சிவநெறித் தமிழர்கள் பிராமணர்களாக்கப்பட்டனர். இராமா னுசர் தம் பங்கிற்கு பறையர்கள், படையாட்சிகள், வள்ளுவர் கள் எனப் பலரை வைணவப் பிராமணர்களாக்கிவிட்டார். பிராமணர்களைக் குறித்த பட்டப்பெயர்களாக இந்தியாவெங் கும் அறியப்படும் பெயர்கள் அனைத்தும் தமிழ்மூலத்தைக் கொண்டவைகளே. சார்மா(சர்மா), தீக்கையர் (தீட்சிதர்) பட்டர்(பட்), தீவாரி- திவாரி (யாகம் செய்யும்போது தீயை வளர்ப்பவன்) என்ற பெயர்களை நோக்குக. அய்யர் என்ற சொல், தெலுங்கில் அய்யங்காரு என்று உயர்வு கருதிச் சொல் லப்பட்டது. அய்யர் - அய்யங்கார் இரண்டும் ஒரு பொருள் குறித்த சொற்களே. பெரிய துறவி அல்லது மேலான துறவி என்றபொருளில், பெரும் அமணன் என்பதே பிரமாணன் ஆனது.

சமற்கிருதம் என்ற சொல், சம்-சு-கிரிதா (Sam- s-Krita) என்றவாறு சொல்லப்படும். இதனை ஆங்கிலப்படுத்தியவர்கள் சான்சுகிரீட் (Sanskrit) என்று குறித்தனர். சமற் என்ற சொல்லுக்கு

செம்மைப்படுத்து (to refice, to make perfect) என்பதே பொருளாகும் (சமற்கிருத ஆங்கில அகரமுதலி -மோனியர் வில்லியம்சு, ப. 1120)கிரிதா என்ற சொல், கிரி (Kri) என்ற சொல்லின் நீட்சியாகும். கிரி என்ற சொல்லுக்கு ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுதல் என்பது பொருளாகும் (to make mention of).

கிரி என்ற சொல், பல்வேறு பின்னொட்டுச் சொற்களை இணைத்துக் கொண்டு பல்வேறு பொருளைத் தருகின்றது. Krika, Krikana, Krikara, Krikasha, Krikata என்றவாறு விரியும். கிரிட் (Krit) என்பதும் அதன் ஒரு விரிவுச்சொல்லாகும். கிரிட் என்ற சொல், வளைத்தல் (to bend), முறுக்குதல் (to twist), சுழற்றுதல் (to spin) என்ற பொருளைத் தருவதாகும். வளைத்து எழுதப்படும் எழுத்துகளையும், சொற்களையும் கொண்ட எழுத்துமுறையைக் கொண்ட மொழிக்கும் கிரிட் என்றே பொருள் கொள்ளப்பட்டுள்ளது. சம-ற்-கிரிட் என்பது எழுத்து முறையையும், சம-ற்-கிரிட்டா (Kirta) என்பது மொழியையும் குறித்தது. Kri என்ற சொல், குறி என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. எழுத்துக்களைக் குறியீடுகள் என்றும், எழுத்துகள் சேர்ந்த சொற்களை உள்ளடக்கிய செய்தி, குறிப்பு என்றும் தமிழில் சொல்லப்படும். குறி என்பது எழுத்தையும், குறிப்பு என்பது மொழியையும் குறித்தது போன்றே, க்ரி - கிரிட்டா என்ற சொற்கள் அமைந்துள்ளன. செம்மை என்ற சொல்லே (to make perfect) சம்-சு என்றும், குறி என்ற சொல்லே க்ரி என்றும் திரிபுபட்டுள்ளதை நோக்குக. செம்மைக்குறி அல்லது குறிப்பு என்ற தமிழ்ச் சொற்களே, சம-சு-கிரிட்டா என்று திரிந்துள்ளது.

அக்காலத்தில் ஓலைகளில் கீறுதல், மரத்தைச் செதுக்குதல், பாறைகளைத் துருவுதல் போன்ற முறைகளில்தான் எழுதப்பட்டன. இதனால் ஒரு பொருளைச் சிதைத்தே, எழுதுவது அறியப்பட்டதால், கீறு என்ற சொல்லே கிரிட் என்று திரிந்ததாகவும் கொள்க. இவ்வாறு கீறுவதையே Krit என்றும் அம்மொழி விளக்குகிறது. (அகரமுதலி ப. 304).

கீறு என்ற தமிழ்ச்சொல், Krit (சமற்கிருதம்). Kertu (இலத்துவேனியம்), Kirt (கிரேக்கம்), Kurtus (இலத்தீன்) என்றவாறு திரிந்துள்ளன. கீறுவதற்குப் பயன்படுத்தப்படும் கத்தி அல்லது ஆணி Kuire என்றவாறு எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ளது (ப.304).

தமிழ்ச் சொற்களையே தனக்குப்பெயராகக் கொண்டுள்ள சமற்கிருதம், தமிழால் உருவாகி, வளப்படுத்தப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டது என்பதே உண்மை நிலையாகும். சமற்கிருதம் என்ற சொல்லை, இதுவரை எவரும் தமிழ்க் கண்ணோட்டத்தில் நோக்கவில்லை யாதலால், அப்பெயர் பற்றிய பொருளைத் தமிழர் அறியாதிருந்தனர் எனலாம். சமற்கிருதம் ஆரியர்களால் உருவாக்கப்பட்ட மொழியன்று. ஆரியர்களுக்கும் சமற்கிருதத்துக்கும் தொடக்க காலத்தில் எந்தத் தொடர்பும் இருந்தது இல்லை.

கி.மு.1500 ஆண்டுகளில் சிந்துவெளித் தமிழ் எழுத்துகளை, செம்மைப்படுத்தி, புதிய வரி வடிவங்களைத் தமிழர் உருவாக்கினர். இப்புதிய முறையால், மக்களும்கூட எளிதில் படிக்கவும் எழுதவும் புரிந்து கொள்ளவும் முடிந்தது. இப்புதிய முறைக்கு பிராமி என்றவாறு பிற்காலத்தில் பெயர் சூட்டினர் (இது பற்றிய விளக்கம் உள்ளே கூறப்பட்டுள்ளது). புதிய எழுத்துமுறைகளுக்குப் பிறகு, கற்றவர்களும், அரசும் கையாளும் வகையில், தமிழ்ச் சொற்களைச் சுருக்கி, தமிழ்ப் பொருளைத் தழுவி, புதிய மொழியொன்றை, தமிழர்களே உருவாக்கினர். அப்புதிய மொழி, புதிய எழுத்துவடிவத்தில் எழுதப்பட்டது. ஆனால் பொருள் மறைபொருளாகவே அறியப்பட்டது, இதுவே சமற்கிருதமாகும். தொடக்கத்தில் அரசு வெளியிட்ட ஆணைகள், பிறர் படிக்க இயலாதவாறு சமற்கிருதத்தில் எழுதப்பட்டன, மேற்கித்திய நாடுகளான பாபிலோன், எகிப்து போன்ற நாடுகளில் இவ்வாறான கமுக்க மொழிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றைக் கற்றவர் மொழி **(Scribal language)** என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறான மொழியாகவே சமற்கிருதம் தொடக்கத்தில் அறியப்பட்டது.

சமணர்கள் இப்புதிய மொழியை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர். பல புதிய உத்திகளையும் சொற்களையும் கூட இணைத்துக் கொண்டு, தங்களுடைய சமய மொழியாகவும் சமற்கிருதத்தைப் பயன்படுத்தினர். அக்காலங்களில் ஆரியர்கள் சமற்கிருதம் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. புத்தரும்கூட சமற்கிருத மொழியைக் கற்றார் என்றவாறு சில குறிப்புகளில் காணப்படுகின்றன. தமிழர் நடத்திய ஐந்திறப் பள்ளிகள் சமற்கிருதத்தை மேலும் மெருகேற்றிக்

கொடுத்தன. அடுத்த சில நூற்றாண்டுகளில், கற்றவர்களின் மொழியாக சமற்கிருதத்தில் எழுதப்பட்டாலும், சமற்கிருத எழுத்துகளைக் கொண்டு எழுதப்படாமல், பிராமி எழுத்துக் களைக் கொண்டே எழுதப்பட்டது. கிறித்துப் பிறப்பாண்டு களுக்குப் பிறகு, சமற்கிருதத்துக்கு எழுத்துகள் கண்டுபிடித்த தற்குப் பிறகே, பிராமியிலிருந்து சமற்கிருதத்துக்கு அப்போது அறியப்பட்ட புதிய எழுத்துமுறை கொண்டு, அட்டத்யாயீ மீண்டும் எழுதப்பட்டது.

(சிந்துவெளித் தமிழ் - பிராமித் தமிழ் வரி வடிவங்கள் எவ்வாறு சமற்கிருத வரி வடிவங்களாக மாற்றம் பெற்றன வென்பதை, விளக்கப்படத்தில் காண்க.)

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு சமற்கிருத எழுத்துகள் கொண்ட இலக்கியங்கள், கல்வெட்டுகள், பனை ஓலைகள் என எவையும் கிடைக்கவில்லை. அசோகனுடைய பிராமி என்பதும், புதிய தமிழ் வரிவடிவங்களின் நீட்சியே. அசோகனுடைய பிராமி எழுத்துகள், கி.மு. 800 ஆண்டுகளில் வாழ்ந்திருந்த பாலத்தீன மன்னன் மேழம் (Mesha) என்பவனது அரசாங்கக் குறிப்புகளிலும் காணப்படுகின்றன. விளக்கங்கள் உள்ளே தரப்பட்டுள்ளன. எனவே சமற்கிருத எழுத்து வடிவங் கள் பற்றியும் தவறான செய்திகளையே இதுவரை கொடுத் துள்ளனர் எனலாம்.

சமணர்களுக்குப் பிறகே,புத்தர்களும் சமற்கிருத மொழி யைச் சில காலம் கையாண்டனர். புத்தருடைய கொள்கைகள், சமற்கிருத மொழியில்சொல்லப்பட்டு, அவை பிராமி எழுத் தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பாழி(பாலி) என்ற புதிய மொழியை புத்த சமயம் கைக் கொண்டபிறகு, சமற்கிருதத் தைக் கைவிட்டனர். கி.மு. 500 ஆண்டுகளுக்குப் பிறகே, சமற் கிருத மொழியை ஆரியர்கள் கையிலெடுத்தனர். அதன்பிறகு தமிழகத்தின் மேலாண்மை வடநாட்டில் குறைந்து போன தால், சமற்கிருதத்தில் மென்மேலும் பல புதிய சொற்களை ஆரியர்கள் இணைத்துக் கொண்டனர். இக்கால அளவுகளில் தான் ஏராளமான தமிழ்ச்சொற்களை சமற்கிருதம் ஏற்றுக் கொண்டது. அடுத்த நூற்றாண்டுகளில், ஆரியர்களின் மொழி யாகவே சமற்கிருதம் கருதப்பட்டது. சமற்கிருத மொழி தமிழர் களால் அறிமுகம் செய்யப்பட்டு, சமண புத்த சமயத்தினரால் கையாளப்பட்டு, இறுதியில் ஆரியர்களால் கைக் கொள்ளப் பட்டது என்பதே வரலாறாகும்.

தமிழர்கள் சமற்கிருத மொழியை ஆரியம் என்றும், வடமொழியென்றும் பிற்காலத்தில் (கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு) குறிப்பிடுவாராயினர். உண்மையில் சமற்கிருதம், ஆரியம், வடமொழி என்ற பெயர்களுக்கான பொருள் வெவ்வேறானவை. அவை சமற்கிருதத்தைக் குறிப்பிடுவன ஆகா. ஆரியம் என்பது, ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தபோது அவர்கள் பேசி வந்த இலக்கணமற்ற கொச்சையான நாடோடி மொழியெனவும், சமற்கிருதம் என்பது தமிழர்கள் தோற்றுவித்த புதிய மொழியெனவும் கொள்க. தரவுகளின் அடிப்படையில், சமற்கிருதம் உள்ளிட்ட மேலை மொழிகள் மறு ஆய்வுகள் செய்ய வேண்டியவைகளாகின்றன. இப்புதிய ஆய்வுகளை இலக்கியங்கள் வாயிலாக மட்டுமின்றி, வரலாறு புவியியல், வழக்குகள், வழக்காறுகள் என்ற அடிப்படைகளிலும் அணுகவேண்டும். இவ்வாறான நடுநிலையான ஆய்வுகளை இதுவரை எவரும் மேற்கொள்ளவில்லை.

சமற்கிருதம் தமிழோடு எக்காலத்திலும் முரண்படவேயில்லை. ஏனெனில் சமற்கிருதம் தமிழின் குழந்தையாதலால், பெற்ற குழந்தையைப் பகைத்துக் கொள்ள தமிழுக்கு மனம் வராது. தன் குழந்தை தன்னிலும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற ஒருதாயின் கண்ணோட்டத்திலேயே தமிழர்கள் சமற்கிருதத்தை வளர்த்தனர். ஆரியர்கள் பிற்காலத்தில் சமற்கிருதத்தைக் கையிலெடுத்துக் கொண்ட காலத்தில், தமிழர்களே ஆரியக் கொள்கைகளை எதிர்த்ததால், தமிழ்மொழியைத் தங்களது பகை மொழியாக ஆரியர்கள் கருதினர். தமிழை அழிப்பதின் மூலம் தம் பகைவர்களை அழிக்கலாம் எனக் கருதினர். அந்த கடும்முயற்சியில்தான் பல நூறு தமிழ் நூல்கள் அழிக்கப்பட்டன. மக்களைப் பிரித்து, தம் நிலைப்பாட்டை உறுதி செய்துகொள்ள ஆரியர்களுக்கு தமிழும், தமிழரும் தடையாயிருந்ததை உணர்ந்திருந்த ஆரியர்கள், சமற்கிருதம் தேவமொழியென்றும், தமிழ் சூத்திரர்கள் மொழியென்றும் சாடினர். ஆண்டான்- அடிமைக்கொள்கையை நிலைநாட்டவே, சமற்கிருதம் ஆரியருக்குக் கருவியாகப் பயன்படுத்தப் பட்டது. சமற்கிருதம் தமிழர்கள் உருவாக்கிக் கொடுத்த மொழியென்பதை வரலாற்றில் மறைத்துவிட்டனர். ஆரியர்கள் மேல் வெறுப்படைந்த பிற்காலத் தமிழர்களும் சமற்கிருதத்தை எதிர்ப்பாராயினர். ஒருகால அளவில் கண்மூடித்தனமாக, சமற்கிருதம் ஆரியமும் தமிழர்களால் எதிர்க்கப்பட்டன. இரண்டு நிலைப்பாடுகளும் உணர்வுகளின் அடிப்படையில் மேற்கொள்

ளப்பட்டதால், உண்மையை இருவருமே அறிந்து கொள்ள வில்லை யெனலாம்.

சமற்கிருதம் ஒரு இனிமையான மொழி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அது மூவாயிரம் ஆண்டுக்கால பழமையைக் கொண்டது. தொல்காப்பியத்தின் இலக்கண அமைவுகளால் வளம் பெற்றது. தமிழ் இலக்கியங்கள் தந்த பல்வேறு செய்திகளை உள்வாங்கிக் கொண்டது. தமிழின் எழுத்து முறைகளை ஏற்றுக் கொண்டது. எனவே சமற்கிருத மும் தமிழர்களின் மொழியே எனலாம். தமிழைச் சிறுமைப் படுத்த ஆரியம் சமற்கிருதத்தைக் கையிலெடுத்துக் கொண் டது, சமற்கிருதம் செய்த தவறன்று. மாறாக ஆரியர்கள் அவ் வாறு கருதினர். தமிழை அழித்து சமற்கிருதம் வளர்வதைத் தான் தமிழர்கள் எதிர்த்தனர். தமிழ்க் கடவுளர்களைப் போற் றவும், தமிழ்க் கோயில்களில் வழிபாடுகளை மேற்கொள்ளவும் தமிழுக்குத் தகுதியில்லையென்று, தமிழ்நாட்டிலேயே கூறும் அளவுக்கு அவர்களுக்குத் துணிச்சல் எவ்வாறு வந்தது என்பதுதான் இன்றைய வினா. கடவுள் இல்லை என்று கூறும் நாத்திகர்கள்தான் இன்று தமிழ்நாட்டில் தமிழ்ப்பற்று மிக்க வர்களாக உள்ளனர். ஆத்திகம் பேசும் தமிழர்களுக்கு, சமற் கிருதம் ஒரு தடையாக உள்ளது. தமிழ்ப்பற்று மிக்க ஆத்திகர் களும் கூட, சமற்கிருதம்தான் கோயில் வழிபாடுகளுக்கேற்றது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். சமய நம்பிக்கைகள், தமிழை இரண்டாம் நிலைக்குத் தள்ளியுள்ளன. தமிழ்நாட்டில், தமிழைப் புறந்தள்ளும் எந்தச் சமயமானாலும், அச்சமயத்தி லிருந்து தமிழர்கள் தங்களை விடுவித்துக் கொண்டாலொழிய, தமிழ்மொழி அரியணையேறாது. சமயம் -மொழி ஆகிய இரண்டிலும், மொழியே முதன்மையானது. தமிழ்மொழியை அழிக்க முயலும் எந்தச் சமயமும் தமிழனுக்குத் தேவையில்லை. ஏனெனில், தமிழ்ச் சமயம் உலகிற்கே வழிபாட்டு மெய்யியல் கொள்கைகளைத் தந்த மூப்புடைய சமயமாகும்,

சமற்கிருத மொழி பற்றிய பல்வேறு செய்திகள் வெளிக் கொணரப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது, சார்பான எதிர்ப்பான சிந்தனைகளுக்கும் இந்நூல் வழிகோலும். உங்களுடைய சிந்தனைகள் எவையாக விருந்தாலும், ஆசிரியருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

அண்மையில் ஆய்வு நூல்களை வெளிக்கொணர்வது பற்றிய அறிஞர்களின் கூட்டம் ஒன்றில் நூலாசிரியர் கலந்து கொண்டபோது, ஒரு தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராயிருந்து ஓய்வு பெற்றுள்ள பேரா சிரியர் ஒருவர், அசோகன் காலத்துக்கு (கி.மு. 200) முன்பு இந்தி யாவில் எழுத்துமுறை இருந்ததில்லை என்று கூறினார். அக் கருத்தை அவர் உண்மையென்றே நம்பியிருந்தார். அவர் கூறியது உண்மையாயின், தொல்காப்பியம் எவ்வாறு எழுதப் பட்டது, சிந்துவெளியில் அறியப்பட்ட எழுத்துகள் எல்லாம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டனவா என்பதை அவர் எண்ணிப் பார்க்கவில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண் டுக்குப் பிற்பட்டனவா என்பதை அவர் எண்ணிப் பார்க்க வில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே தொல்காப் பியம் உள்ளிட்ட சங்க இலக்கியங்கள் படைக்கப்பட்டன என்ற மேலைநாட்டு ஆய்வாளர் ஒருவரின் கூற்றையும் மேற் கோள் காட்டினார். தமிழ்மொழியின் மூப்புத்தன்மையை மறைத்து, தமிழின் அகவை ஆயிரம் ஆண்டுகட்குட்பட்டதே என்ற கருத்தை, தமிழ்ப் பகைவர்கள் கூறிவருவதை, தமிழர் பலரும் நம்பியிருப்பது, அவர்கள் வரலாறு தெரியாமலேயே, இவ்வாறான பொய்ச் செய்திகளைக் கற்பித்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

தமிழைச் செம்மொழியாக அறிவித்த இந்திய அரசு, தமிழ்மொழி ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்தது எனத் தனது அறிவிப்பில் கூறியிருந்தது. இதற்கு எதிர்ப்புகள் தோன் றவே ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் என்று மீண்டும் அறிவித் தது. மொழியும் வரலாறும் பற்றிய செய்திகளை அறிந்திராத அமைச்சர்களும், அதிகாரிகளும் தங்களைப் பேரறிஞர்கள் என எண்ணிக் கொண்டு, இதுபோன்ற அறிவிப்புகளை வெளி யிடுகின்றனர். தமிழுக்குச் செம்மொழித் தகுதியை இந்திய அரசு அறிவித்ததே பெரிய வெற்றியென இங்குள்ளவர் விழாக்கள் எடுத்தனர்.

பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள் தங்களுடைய தமிழறிவையும் வரலாற்றறிவை யும் வளர்த்துக் கொள்ளவேண்டும். தவறான செய்திகளை மாணவரிடையே விதைத்து விடக்கூடாது. நாளும் வெளிவந்து கொண்டிருக்கும் புதிய தரவுகளையும், ஆய்வு விளக்கங்களையும்

பேராசிரியர்கள் அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். பேரா சிரியர்களைக் குறைகூறுவதாகக் கருதக்கூடாது. தமிழ்ப் பகை வர்களின் கூற்றுகளுக்குத் தோள் கொடுப்பவர்களாக மாறி விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழறிஞர்களும் தங் களது பழைய சிந்தனைகளிலிருந்து விடுபட வேண்டும் என்ப தே நமது வேணவா.

1. புதைந்து போன வரலாறு

வரலாற்றுக்காலம், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றவாறு காலங்கள் பிரிக்கப்பட்டன. கி.மு. 1000 ஆண்டுகள் தொடங்கி அறியப்படும் காலம் வரலாற்றுக்காலம் எனவும், அதற்கு முந்திய காலம் முற்பட்ட காலம் எனவும் கருதப்படு கின்றது. வரலாற்றில் அறியப்பட்டதைவிட அறியப்படாமல் போனவைகளே ஏராளமாக உள்ளன. கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட செய்திகளும் சில சான்றுகளைத் தருகின்றன. இதற்குப் பிற்பட்ட ஆண்டுநிகழ்வுகளில் பல சான்றுகளில்லா லும் உள்ளன. தம்மைப் பற்றிய செய்திகளை அடுத்த தலை முறையினருக்கு அளிக்க வேண்டும் என்ற சிந்தனை அக்காலத் தில் சிலரிடம் இருந்தது; என்றாலும் அவர் தம் பதிவுகள் இயற்கையில் பல்வேறு சூழல்களால் அழிந்துபட்டன.

கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து தொடங்கி இந்தோனேசியா வரையிலும் மக்கள் வாழ்ந்திருந்தனர். அம் மக்களில் நடுத்தரைக் கடலையொட்டி வாழ்ந்திருந்தோரும், சிந்துவெளி மக்களும் சிறப்பான நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக பாபிலோனியர், கனானியர், எபிறேயர், சுமேரியர், எகிப்தியர், கிரேக்கர் போன்ற மேலை நாட்டவர் பற்றிய தெளிவான வரலாறு கிடைக்கவில்லை. அந்நாட்டு மக்கள் யாவர், அவர்கள் எந்த நாடுகளின் தொன் மக்குடியினர், அவர்கள் பேசிய மொழிகள் யாவை என்பன போன்ற கேள்விகளுக்குத் தெளிவான விடைகள் கிடைக்க வில்லை. அவர்கள் விட்டுச் சென்ற பதிவுகளும் கூட, சரியாகப் படிக்கப்படவில்லை.

இந்தியாவின் தொன்மக்குடியினர் தமிழரே என்ற கருத்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சிந்துவெளியில் வாழ்ந்திருந்தோர் தமிழரே என்பதை இன்று பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். கி.மு. 2000 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள், வரலாற்றில் புதிராகவும், அறிந்து

கொள்ள இயலாமலும் உள்ளனர். ஏறக்குறைய வரலாற்றுக் காலத்தில் அறியப்படும் ஆரியர்களின் தொடக்கம் பல ஊகங் களைத் தோற்றுவித்துள்ளது. ஆரியர்கள் தங்களைப் பற்றிய வரலாறு எதனையும், தங்களுடைய பதிவுகளில் குறிப்பிட வில்லை. சிலர் கூறுவதுபோல், தங்களுடைய வரலாற்றை அவர்கள் திட்டமிட்டே மறைத்துவிட்டனர் என்ற கருத்தும் உண்டு.

ஆரியர்கள் இந்திய வருகை கி.மு. 2000 என்பதை மேல் இலக்காகவும், கி.மு. 1000 என்பதை கீழ் இலக்காகவும் வரலாற் றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆரியர்கள் இந்தியாவின் தொன்மக்குடிகள் அல்லர் என்பதையும் ஏற்றுக்கொண்டுள் ளனர். அவ்வாறாயின் ஆரியர்களின் நாடு எது, அவர்களின் முன்னோர் எவ்வினத்தைச் சார்ந்தவர், அவர்கள் பேசிய மொழி யாது என்ற கேள்விகள் இன்னும் கேள்விகளாகவே உள்ளன. ஆரியச் சார்புடைய வரலாற்றாசிரியர்கள், ஆரியர்கள் இந்தி யாவின் தொன்மக்குடிகளே என்றும், சிந்துவெளி நாகரிகம் அவர்களுடையதே என்றும், ஆரியர்களே வானியலையும் அறிவியலையும், கணக்கியலையும், பல்வேறு இலக்கியங்களை யும் அளித்தவர்கள் என்றும் அறுதியிட்டுக் கூறுகின்றனர். மருத்துவம், ஓகம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர் என்றும், போர்முறைகளில் வல்லவர்கள் என்றும் கூறுகின்றனர். இவற்றுக்கெல்லாம் அவர்கள் எழுதியதாகக் கருதப்படும் வேதங்களையும், புராணங்களையும் சான்றுகளா கக் காட்டுகின்றனர். வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இவை கள் ஏற்கக் கூடியவைகள் அல்லவென்பதை அவர்கள் அறிந் திருந்தாலும், திரும்பத் திரும்பக் கூறி, அவர்களது நிலைப் பாட்டை வலுப்படுத்த முயன்றனர்.

ஆரியர்கள் வரலாற்றில் புதிரானவர்களாகவே அறியப் படுகின்றனர். தங்களைப் பற்றிய செய்திகளை திட்டமிட்டே அவர்கள் மறைத்துவிட்டனர் என்றும், வெளிப்படுத்தியிருந் தால், அவர்கள் இந்தியாவின் தொன்மக்குடிகள் அல்லர் என்பது அறியப்பட்டுவிடும் என்ற காரணம் பற்றியே மறைத்துவிட்டனர் என்ற கருத்தும் உண்டு. பல்வேறு ஊகங்களுக்குத் தம்மை உட் படுத்திக் கொண்டதால், ஆரியர்கள் தம்மைப் பற்றிக் கூறிய கருத்துகள் அனைத்தும் உண்மையாகிவிடும் என்று கருதியி ருக்கலாம் என்ற சிந்தனையும் நோக்கத்தக்கது.

ஆனாலும் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில், ஆரியர்கள் இந்தியாவின் தொன்மக் குடிகள் அல்லர் என்பதை வரலாற்றாசிரியர்கள் கூறிவருகின்றனர். நடு ஆசியப் பகுதியே ஆரியர்கள் வாழ்ந்திருந்த பகுதியென்பதை பெரும்பாலான வர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.[1] பாலகங்காதர திலகர், ஆரியர் கள் வடமுனையின் பனிப்பகுதிகளில் வாழ்ந்திருந்தவர்கள் என்றும், இயற்கையின் இடர்ப்பாடுகளுக்கு அஞ்சி, தங்களது இருப்பிடங்களைத் தெற்கு நோக்கி வந்து அமைத்துக் கொண் டனர் என்றும், அதனாலேயே அம்மக்கள் வெள்ளைத் தோலைக் கொண்டிருந்தனர் என்றும் கூறுகிறார். யூத சமய இலக்கிய மான தோரா (Torah) ஆரியர்களைப் பற்றியசெய்திகளைக் கோடிட்டுக் காட்டுகின்றது.[2] தோரா அளிக்கும் செய்திகள் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகவும் உள்ளன.

கி.மு. 10000 ஆண்டுகளில் அரைகுறையான நாகரிக மக்கள் மெசப்பத்தோமியாவில் வாழ்ந்ததாக அறிஞர்கள் தெளிவுபடுத் துகின்றனர். கி.மு. 75000 ஆண்டுகளிலேயே நடுத்தரைக் கடலை யொட்டிய பகுதிகளில் மக்கள் வாழ்ந்திருந்தனர் என்றும், கி.மு. 40000 ஆண்டுகளில், ஐரோப்பிய நாடுகளில் மக்கள் அறியப்பட்டிருந்தனர் என்றும் கூறுகின்றனர். அம்மக்கள் அனைவரும் நாகரிகமற்ற மக்களாகவே கருதப்படுகின்றனர்.[3] தோரா தரும் செய்தியின்படி, நாகரிக வாழ்க்கையை மேற் கொண்டிருந்த மக்கள் கூட்டம் ஒன்று, மெசபத்தோமியாவில் குடியேறியதாக அறியப்படுகின்றது. இவர்கள் எக்காலத்தில் அங்கு குடியேறினர் என்ற செய்தி தெளிவாக்கப்படவில்லை யென்றாலும், தோரா தரும் தகவல்களின் அடிப்படையிலும், தற்காலத்தில் அறிஞர்களின் ஆய்வுகளின் முடிவுகளின் படியும், அம்மக்கள் கி.மு. 10000 ஆண்டுகளில் அங்கு குடியேறியிருக்க வேண்டும் என்ற கருத்துக்கு பின்புலங்கள் உள்ளன. அம்மக்க ளே, மேலைநாடுகளில் முறையான நாகரிகத்துக்கு வித்திட்ட வர்கள் என்றும் கருதப்படுகின்றனர்.

உலக வரலாற்றில் ஒவ்வொரு தலைமுறையினரும் தமக்கு முந்திய தலைமுறையினரைவிட சிந்தனையாளர்களாகவும், அறிவாளிகளாகவும் விளங்கி வந்துள்ளனர். இயற்கையிலேயே இவ்வாறான அறிவு வளர்ச்சி காணப்படுகின்றது. இன்று அறியப்படும் பல்வேறு அறிவியல் வியப்புகளையும், ஒரு குறிப் பிட்ட காலத்தில் மக்களினம் கண்டுபிடித்து விடவில்லை.

இந்த முன்னேற்றங்கள், தலைமுறைகள் தந்த பட்டறிவின் விளைவுகளே எனலாம். இக்காலத்திலும் கூட, தந்தையைப் பார்க்கிலும் மகன் அறிவுள்ளவனாகக் கருதப்படுகின்றான். கடந்த காலத்தில் பெரியவர்களும் அறிந்து கொள்ள இயலாத பல சிக்கல்களை, இளம் அகவைகளிலேயே இன்றைய தலை முறை புரிந்து கொள்வதைக் காண்கிறோம்.

நடுத்தரைக் கடல் நாடுகளில், கி.மு. 10000 ஆண்டுகளில் விதைக்கப்பட்ட நாகரிகம், கி.மு. 4000 ஆண்டுகளில் சிறப்புற் றிருந்தது. அதற்கடுத்த ஆயிரம் ஆண்டுகளில், மிகச்சிறந்த நகரிய நாகரிகம் மெசபத்தோமியாவில் அறியப்பட்டிருந்தது. கி.மு. 10000 - 3000 என்ற கால அளவுகளில், இந்தியாவிலும் மிகச் சிறந்த நாகரிக மக்கள் வாழ்ந்திருந்தனர் என அறியப் படுவதும்,அம்மக்களில் பல குழுக்கள் மேற்கு நோக்கிப் புலம் பெயர்ந்து, தங்களுடைய நாகரிகத்தை மெசபத்தோமிய நாக ரிகத்துடன் கலந்தனர் என்பதும் அறியக்கிடக்கின்றது. இவ்வாறு மேற்கித்திய நாகரிகம், ஒவ்வொரு கால அளவிலும், கிழக்கித்திய நாகரிகத்தால் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். இவ்வாறு கிழக்கித்திய நாகரிகத்தை மேற்கே பதித்தவர்களில் சுமேரியர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.[4]

மெசபத்தோமியப் பகுதிகளில் வாழ்ந்திருந்த பல இனக் குழுக்களின் வரலாறுகள் அறியப்படாமல்போனது போலவே, அடுத்தடுத்த குடியேற்ற மக்களின் வரலாறுகளும் தெளிவுபடுத் தப்படவில்லை. குறிப்பாக சுமேரியரும் எபிறேயரும் இன்று வரையிலும் கூட அறியப்படாதவர்களாகவே உள்ளனர். மெசப்பத்தோமியப் பகுதிகளில் தொடர்ந்த மக்கள் பெருக்கம், அடுத்துக் குடியேறிய மக்கள் கூட்டம் ஆகிய காரணங்களால், அப்பகுதி மக்களும் தெற்கிலும் வடக்கிலும் புலம்பெயர்ந் தனர். தொடக்க கால மக்களிடத்தில் ஒரு கூட்டம், கருங்கடல் பகுதிகள், கிரேக்கம், கரட்டுத் தீவு (Crete) போன்ற பகுதிகளில் குடியேறினர். மேலும் ஒரு குழுவினர் வடக்கு நோக்கிச் சென்றனர். தொடர்ந்து வடக்கே முன்னேறிய அக்குழுவினரில் சிலர் வழி நெடுகிலும் தங்கினர். இவ்வாறான ஒரு புலப் பெயர்ச்சி வடக்கு மெசபத்தோமியா (இன்றைய துருக்கி) தொடங்கி பால்டிக் கடற்பகுதி வரை நீண்டது. இந்த மக்கள் கூட்டம் ஒரு குழுவின் மக்கள் பெருக்கம் என்பதால், இவர்களது மொழியும் மெசபத்தோமியாவில் பேசப்பட்ட மொழியினின்றும்

சிறிதளவே மாறுபட்டிருந்தது. இக்குழுவினரில் ஒரு பகுதியினர் ஈத்தியர் (Hittites) எனப்படுகின்றனர்.[5] இவர்கள் இன்றைய துருக்கியின் தென்பகுதியில் வாழ்ந்திருந்தோராவர். உரேனியர் ஆரியராகக் கருதப்படுவர்.[6]

கி.மு. 10000 ஆண்டுகளில் அறியப்பட்டிருந்த ஒருமொழி (தோராவின் கூற்றுப்படி), கி.மு. 3000 ஆண்டுகளில் பன்மொழி களாகக் கிளைத்திருந்தன. மொழிகள் எவ்வாறு தனித்தனியே கிளைத்தன என்பது பற்றிய கதையொன்றையும் தோரா கூறுகி றது. துருக்கி தொடங்கி பால்டிக் கடல் வரை பரவி வாழ்ந்த குழுவினரே ஆரிய இனத்தவர் என்று கருதப்படுகின்றனர். இக்குழுவினர் கிரேக்கம், கருங்கடல், கரட்டுத்தீவு பகுதிகளில் வாழ்ந்திருந்த மக்களோடும் அவர் தம் மொழிகளோடும் தொடர்பு கொண்டிருந்ததால், பிற்கால மொழியியல் ஆய்வா ளர்கள், அம்மக்களை தனிக்குழுவாகவே கருதினர். வடக்கு நோக்கிப் புலம் பெயர்ந்த அக்குழுக்களில் ஒன்று நடு ஆசியப் பகுதியிலோ, கிழக்கு ஐரோப்பியப் பகுதியிலே வாழ்ந்திருந்தது, அக்குழுவினரே தென்கிழக்குத் திசைநோக்கி நகர்ந்து, பார சீகம் வழியே சிந்துவெளியை அடைந்த ஆரியர் என்பதாக, ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆரியருக்குத் தொடக்கத்தில் என்ன பெயர் வழக்கி லிருந்தது என்பது தெரியவில்லை. பிற்கால ஆய்வாளர்கள், ஆரியர்கள் என்ற பெயரைச் சூட்டினர். கிறித்துப் பிறப்பாண்டு களிலேயே, தமிழர் அம்மக்களை ஆரியர் என அழைத்தனர் என்பதை, கடைக்கழக இலக்கியங்கள் கூறுகின்றன. தமிழ் மூலத்தைக் கொண்டே, ஆரியா (Arya) என்றசொல், அம்மக் களுக்கு பிற்கால ஐரோப்பியரால் சூட்டப்பெற்றது. இந்திய ஆரியரின் மொழி பற்றிய செய்தி ஓரளவுக்கு இரிக்கு வேதத்தில் வெளிப்படுவதையுணர்ந்த ஐரோப்பியர், இருக்குவேத மொழி யும், இட்டிடைட் (Hittite) எனப்பட்ட தென்துருக்கி நாட்டின் அக்காலத்து மொழியும், கிரேக்க மொழியும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருப்பதை அறிந்து, இம்மூன்று குழுக்களும் பேசிய மொழியை, இந்திய- ஐரோப்பிய மொழியென (Indo - European) பிரித்தனர். இம்மொழிகள் பேசிய குழுக்கள் ஆரியர் எனவும் வகுத்தனர். இம்மக்கள், மெசபத்தோமியாவுக்கு வடக்கேயும், வடமேற்கேயும் வாழ்ந்திருந்த மக்களாவர்.

ஆரியர்கள் ஒருவாறு இனம் காணப்பட்ட நிலையில், மைய ஆசியப் பகுதியினின்றும் சிந்துவெளிக்கு வந்த மக்களை யும் ஆரியரே எனப் பதிவு செய்தனர். ஆரியர்கள் இந்தியா வுக்குள் நுழைந்த போது, அவர்கள் பேசிய மொழியும் ஆரியம் எனப்பட்டது. இந்த ஆரியமொழி, மெசப்பத்தோமிய மக்கள் பேசி வந்த மொழியின் (செமிட்டிக்) கிளைமொழியே ஆகும். செமிட்டிக் இன மொழிகளான அக்காடியம், அறமாயிக், ஈழம், கல்தேயம், எபிறேயம் போன்றமொழிகள், தமிழி னின்றும் கிளைத்த மொழிகளே என்பதை தற்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன என்பதால், மெசப்பத்தோமிய மொழியின் கிளைமொழியான ஆரியத்திலும் தமிழின் தாக்கங்கள் இருந்தன என அறியலாம்.

இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியரின் மொழி, (கிழக்கு) ஆரியம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அம்மொழி, இலக்கண மற்ற கொச்சை மொழியாக அறியப்பட்டிருந்தாலும், அம் மொழியில் தமிழின் தாக்கங்கள் இருந்தன என்பதை இரிக்கு வேதமே வெளிப்படுத்துகின்றது. பொதுவாக ஆரியம், சமற் கிருதம், வடமொழி என்றவாறு தமிழர்களால் அழைக்கப் படும் சொற்கள் ஆரிய மொழியையே குறிப்பதாகத் தவறாகக் கருதினர். ஆரியம், சமற்கிருதம், வடமொழி ஆகிய சொற்கள் ஒரு மொழியைக் குறித்தவையன்று. ஆரியமென்பது, ஆரியரின் பேச்சுமொழியாகும். சமற்கிருதம் என்பது தமிழினின்றும் திரிபுபட்ட மொழியாகும். பிற்காலத்தில் சமற்கிருதத்துடன் ஆரியச் சொற்களும் கலக்கப்பட்டன. சமற்கிருதம் ஆரியர்கள் தோற்றுவித்த மொழியுமன்று. தொடக்கத்தில் சமற்கிருதத் துக்கும் ஆரியத்துக்கும் எந்தத்தொடர்பும் இருந்திருக்கவில்லை. சமற்கிருத மொழியைப் பயன்படுத்தியவர்கள் சமணர்களும், புத்த சமயத்தாருமே எனலாம். சமற்கிருதம் பிற்காலத்தில் மேலும் திரிபுபட்டு பாலி மொழியாயிற்று. பாலி மொழிக்கு மாகதி (Maghado) என்ற பெயரும் உண்டு.

ஆரியமொழி, கிழக்கு மற்றும் வடக்கு ஐரோப்பியப் பகுதிகளில் பேசப்பட்டதாக, அறிஞர்கள் கருதுகின்றனர். உருசியாவின் தெற்கேயுள்ள த்டெப்பி (Steppe) புல்வெளிப் பகுதியின் மொழியே ஆரியம் எனப்பட்டது என்பர். இப்புல் வெளியே ஆரியர்களின் குடியேற்றத் தாயகம் எனப்படுகின்றது. இம்மொழி வடக்கு ஐரோப்பா, மைய ஆசியப் பகுதி, பால்க்

(Bactria), சோக்தியானா (Sogdiana) ஆகிய பகுதிகளிலும் சிற்சில மாற்றங்களுடன் பேசப்படுவதால், இப்பகுதியின் சில குழுவினரே இந்தியாவுக்கு வந்த ஆரியர் என்ற கருத்தும் சொல்லப்படுகின்றது.

ஆரியர்களைப் பற்றியும் அவர்களது வருகையைப் பற்றியும் பேசும் வரலாற்றாய்வாளர்கள் சமற்கிருதம் என்ற மொழியைப் பற்றிய செய்திகளை அறிவிக்கவில்லை. ஆரியமும் சமற்கிருதமும் ஒரு மொழிக்கான இரண்டு பெயர்களா என்பதையும் விளக்கவில்லை. சமற்கிருத மொழி ஆரியரின் தாயகத்தில் பேசப்பட்டதா என்பதையும் கூறவில்லை. சமற்கிருதம் என்பது, செம்மைப்படுத்தப்பட்ட மொழி (Perfectly constructed speech) என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். சமற்கிருதத்தைச் செம்மைப்படுத்தியவர்கள் யார் என்பதை எவரும் விளக்கமுன்வரவில்லை. இந்திய மொழிகளில் செம்மைப்படுத்தப்பட்டது என்றும், மேன்மையானது என்றும் கருதும் பொருளில், சம்த்கிரிதா (Sansrita) என்றும், மற்ற மொழிகள் செம்மைப்படுத்தப்படாதவை என்ற பொருளில் ப்ராகிருத (Prakrita) என்றும், சொல்லப்பட்டன. பிராகிருதம் எனப்படும் சொல், சமற்கிருதம் அல்லாத இந்திய மொழிகளைக் குறித்தது.

சமற்கிருத மொழியின் தோற்றம் பற்றிய தெளிவுபடுத்தாத நிலையில், அதன் நிலைப்பாடு குறித்த குழப்பமான சூழலை வலிந்தே உருவாக்கியுள்ளனர் எனக் கருத வேண்டியுள்ளது. இந்தியாவின் முதன்மொழி சமற்கிருதமே என்று கூறும் ஆய்வாளர்கள், அதன் காலத்தை மறைப்பது ஏன் என்ற கேள்வி எழுகின்றது. சமற்கிருதமே முதன்மொழியென்றும், சமற்கிருதக் குறியீடுகளே இந்தியாவின் முதல் வரிவடிவங்கள் என்றும் கூறும் ஆரியச் சார்பு ஆய்வாளர்கள், சமற்கிருதத்தின் காலத்தை உறுதிப்படுத்திவிட்டால், அக்காலத்துக்கு முன்பிருந்த மொழியையும் வரிவடிவங்களையும் காட்டி விடுவார்களோ என அஞ்சுகின்றனர். இருப்பினும் பேராசிரியர் பூஃலர் (Prof Buhler) என்பார், கி.மு. 500 ஆண்டுகளில் சமற்கிருத மொழி அறியப் பட்டிருக்கலாம் என்பார்.

சமற்கிருத மொழியைப் பற்றிக் கூறும் செர்மானிய ஆய்வாளர்கள், சமற்கிருதத்திலிருந்து தான் இந்தி, இந்துஸ்தானி, தமிழ் போன்ற மொழிகள் தோன்றியதாகவும், குறிப்பாகத் தமிழ் மொழி, சமற்கிருதச்சொற்களின் உதவியின்றித் தனித்தியங்க

முடியாது என்றும் கூறியுள்ளனர்.[7] வானியல், அறிவியல், இலக்கியம், கணக்கியல், மருத்துவம் போன்ற துறைகளில் சமற்கிருதத்தில் வடித்ததாகவும் கூறுகின்றனர். உலகின் அறிவுப் புதையலே சமற்கிருதம்தான் என்றும் சமற்கிருதத்தை யொட்டியே மேற்கித்திய மொழிகள் வளம்பெற்றன என்றும் கூறுகின்றனர்.

செர்மானிய அறிஞர்கள் கி.பி. 18, 19 நூற்றாண்டுகளில் சமற்கிருதத்தைக் கற்பதில் ஆர்வம் காட்டினர்.[8] சமற்கிருதத்தை உயர்த்திப் பிடிப்பதின் மூலம், செர்மானிய இனத்தை உலக அரங்கில் உயர்த்துவதே அவர்களது நோக்கமாயிருந்தது. இதே கொள்கையை அடிப்டையாகக் கொண்டே, செர்மானியரும் இந்திய ஆரியரும் ஓரினமே என்பதை பல்லாற்றானும் பதிவு செய்தனர். ஆரியரினும் உயர்ந்த குடிமக்கள் எக்காலத்திலும் இருந்ததில்லையென்றும் கூறிக் கொண்டனர். இந்தியக் குடிகளில் முதல்குடி ஆரியரே என்றும், அவர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்றும், அடிமைகளாய் எக்காலத்திலும் இருந்ததில்லையென்றும் கூறிக்கொண்டனர். இந்தியக் குடிகளில் ஆரியரே முதல் குடி என்றும், மற்றவர்கள் ஆரியர்களின் அடிமைகள் என்றும் நிலைநிறுத்திக் கொண்டதை, செர்மானியர் சுட்டிக் காட்டினர். இந்த அடிப்படையில்தான் இட்லர், செர்மானியரை உயர்த்திப் பிடித்து, உலக மக்களுக்கெல்லாம் அறைகூவல் விடுத்தனர்.

செர்மானியரின் கொள்கைப்ப்டி,

1. இந்திய ஆரியமே முதல் நாகரிகத்தையும் உலகிற்குக் கற்றுத் தந்தது.
2. அறிவு தொடர்பான அனைத்தையும் அறிமுகம் செய்தவர்கள் ஆரியரே.
3. சமற்கிருதம் ஆரியரின் மொழியாகவும், சமயமொழியாகவும் சொல்லப்பட்டது.
4. இந்திய மக்களில் ஆரியரே உயர்குடியெனப்பட்டனர்.
5. இந்திய மொழிகள் சமற்கிருதத்தினின்றும் கிளைத்தவைகளே.
6. இந்தியப் பழங்குடிகள் காட்டுமிராண்டிகள் என்றும் கல்வியறிவற்ற அடிமைகள் என்றும் சொல்லப்பட்டுள்ளனர்.
7. இந்திய ஆரியர் தம் இனத்தாரான கிரேக்கர் உள்ளிட்ட ஆசிய - ஐரோப்பிய இனத்தாரின் மொழிகளினின்றும் சமற்கிருதம் மேம்பட்ட மொழியென்பதை அறிவித்தனர்.

8. ஐரோப்பிய மொழிகளின் பாதுகாவலனாக சமற்கிருதம் சொல்லப்பட்டது.

9. உலக மொழிகளில் காணப்படாத இலக்கணவிதிகள் சமற்கிருதத்தில் உள்ளனவென்று கூறினர்.

10. வேதங்களைப் போன்ற இணையற்ற இலக்கியங்கள் உலகில் எங்கும் காணப்படவில்லை.

11. உலகின் முதல் இலக்கணவிதிகளைத் தொகுத்தவர் பாணினி என்பாரே எனக் கருதப்பட்டது.

12. மகாபாராதம் சமற்கிருதத்தின் பெரும் இலக்கியமாகவும், உலகில் எந்த இலக்கியமும் இதன் அளவில் (வரிகள்) மிக மிகச் சிறியனவாகவும் சொல்லப்பட்டது.

13. சமற்கிருதம் அக்காவாகவும், கிரேக்கம் தங்கையாகவும் கருதப்படுகின்றது.

14. போனீசியர்கள் அறிமுகம் செய்த எழுத்துச் சீர்திருத்தம், சமற்கிருத வரிவடிங்களைத் தழுவியதே. பிராமி எழுத்துமுறையையே போனீசியர்கள் பின்பற்றினர்.

15. சிந்துவெளி நாகரிகம் ஆரியருடையதே.

16. வேதங்களே உலகின் முதல் இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன.

17. சமற்கிருத இலக்கியங்களை ஒருமுறை படிக்க வாழ்நாள் போதாது

18. கடவுளருக்கு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பெயர்கள், சமற்கிருத மொழியில் மட்டுமே காணப்படுகின்றன.

19. வானியலையும் கணக்கியலையும் சமற்கிருத நூல்களே முதலில் வெளிப்படுத்தின.

20. யோகம் என்ற உடலோம்பும் கலையை உலகிற்கு அறிமுகம் செய்தவர் ஆரியரே.

இவ்வாறாக ஆரியரின் பெருமைகளும் சிறப்புகளும் உயர்த்திச் சொல்லப்பட்டன. சமத்கிருத (Sanskrita) என்ற சொல், சான்த்கிரிட் (Sanskrti) என்று ஆங்கிலப்படுத்தப்பட்டுள்ளது. சம்த்கிருத என்ற சொல்லுக்கு செம்மைப்படுத்தப்பட்ட மொழியென்பதே (perfectly consyructed speech) பொருளாகும். வேர்ச் சொல் (Root word) என்று அறியப்படுவதை,

தாது (dhatu) என்று சமற்கிருதத்தில் கூறுவர். பொதுவாக தாதுக்கள் 1750 என்றும், அவற்றில் பல ஒத்தொலிகளைக் கொண்டவைகளாகும். விரிவாக்கப்பட்ட தாதுக்கள் 2490 என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், சுருக்கப்பட்ட தாதுக்கள் 120 என்று அறியப்படும். இரண்டு தாதுக்கள் இணைந்தும் ஒரு சொல்லாகும். சுவத் (svad) என்ற சொல்லில், சு (Su) என்ற வேரும், (ad)என்ற வேரும் உள்ளன. சமற்கிருதத்தின் வேர்ச் சொற்கள் பிராகிருதத்திலும், இணைந்து காணப்படும்.[9]

தாது என்றசொல் சினை முட்டையைப் போல் அறியப் படும். இதன் வளர்ச்சியே சொற்களாக உருவெடுக்கின்றன.[10] தாது என்ற சொல்லும்கூட, தா (to give) என்ற தமிழ்ச் சொல் லின் திரிபாகவே காணப்படுகின்றது. ஒரு சொல்லை உருவாக் கத் தரப்படும் மூல ஒலி வேர் ஒலி என்று பொருள்படும். சமற்கிரு தத்துக்கும் தமிழுக்கும் வேறுபாடுகள் உள்ளனவென்றும், இரண் டும் வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்தவை என்றும் சொல் லப்பட்டாலும், தமிழில் அறியப்படும் இலக்கியவளம் (Matter) சமற்கிருதக் கருவியினின்றே பெறப்பட்டதாகக் கூறுகின்றனர். இந்த சிந்தனை, தமிழ்மொழியைப் பற்றியும், அதன் ஆழத்தைப் பற்றியும் அறியாதவர்கள் கொடுத்த விளக்கங்களாகும். சமற் கிருதச் சொற்களின் துணையின்றி, தமிழ்மொழி தனித்தியங்க முடியாது என்றும் கூறினர். இதுவும் அடிப்படையிலேயே தவறான கண்ணோட்டம் என்பதை, சமற்கிருதப் பண்டிதர்கள் அறிந்திருக்கவில்லை. தமிழ்மொழியை ஒரு வளமான மொழி யென்று அவர்கள் என்றுமே கருதியதில்லை.

ஆரியமொழிக்குடும்பத்தில் சமற்கிருதம் மூத்த அக்கை யாகவும் (Elder sister) ஆங்கிலம் கடைக்குட்டித் தங்கையாகவும் (younger sister) கருதப்படுகின்றது. இவ்விரு மொழிகளையும் ஈன்றெடுத்த தாய் யாரென்று தெரியவில்லையென்றும், அத் தாயை அறியப்படாத தாய் (unknown mother) என்றும் கூறினர். அத்தாயானவள் மைய ஆசியப் பகுதியில் அறியப்பட்டதாக வும் உறுதியாகக்கூற இயலாது என்பதும் அவர்தம் கருத்தா கும். ஆனால் பால்க் (Bactria) பகுதியில் அத்தாயின் இருப்பி டத்தைக் குறிக்கலாம் என்பர். ஆக்சத் (Oxus) ஆற்றிற்கு அருகி லேதான் ஆரிய நாகரிகம் உருவாயிற்று என்றும், அதன் நாகரி கத்தடங்கள், அவ்வாற்றைச் சுற்றிய இருபது கல் பரப்பளவில் காணப்படுவதாகவும் மோனியர் வில்லியம் என்ற ஆங்கில - சமற்கிருத அறிஞர் கருதுகிறார்.[11]

ஆரிய நாகரிகம் ஆசிய வழியிலும், ஐரோப்பிய வழியிலும் விரிவடைந்ததாகவும் சொல்லப்படுகின்றது.

ஆசிய வழி: இந்தியாவின் சமற்கிருதம், சமற்கிருதம் வழியில் பிராகிருதம், புத்தர்களின் மொழியான பாலி, சமணர்களின் மொழியான அர்த்த மகாதி (Ardha Magadhi) வட்டாரமொழியான இந்தி, மராத்தி,குசராத்தி, பெங்காலி, ஒரியா என விரியும்.

இரண்டாவதாக சண்ட் அல்லது செண்ட் (Zend) என்ற அக்கமேனிய மொழியும், பஃலவி, பார்சி, ஆர்மீனியன், புதுசு (Puzshtu) என விரியும்.

ஐரோப்பிய வழி: கெல்டிக் (Keltic), எல்லனிக் (Hellenic), இட்டாலிக் (Italic) தியூத்தானிக் (Teutonic), சுலோவோனிக் (Slavonic), இலித்துவேனியன் (Lithuanian) என விரியும்.

இந்த ஆரிய மொழிகளை, ஆசிய - ஐரோப்பிய நாடுகளின் மக்கள் பேசியதால், ஆரிய மொழியை, இந்திய- ஐரோப்பிய மொழி (Indo - European) என்றனர். இப்பெயர் கடந்த இரு நூறாண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்ட பெயராகும்.

செமிட்டிக் (Semitic)என அறியப்படும் மொழிக்குடும்பம் அசீரியன், எபிறேயம், அறமாயிக், அரபு, ஆமெட்டிக் மொழிகளடங்கியது. இவை நோவா என்பவனின் மகன் (செம் -sham) வழிப் பெயர்களான அசூர், அறம், அறப்பா போன்றோரின் மரபினர் பேசிய மொழிகளாகும். எபிறேயம் என்ற மொழி, ஈபர் (Eber) என்ற நோவா மரபினன் வழியில் பிறந்ததென்று ஒரு கருத்தும், ஆற்றுக்கு அப்பாலிருந்து வந்தவர்கள் பேசிய மொழியென்ற கருத்தும் சொல்லப்படுகின்றன. இவற்றில் பின்னதே ஏற்புடையதென்பதை, தற்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

செமிட்டிக் -ஆரியமொழிகள் வெவ்வேறானவை, இவற்றின் தாதுக்கள் (வேர்ச்சொற்கள்) வெவ்வேறானவை என்றும் சமற்கிருத அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்விரு மொழிகளிடையே காணப்படும் சில ஒற்றுமைகளைக் கருத்தில் கொண்டு, இவைகளை ஒருமைப்படுத்த இயலாது என்பதும் அவர்களது கருத்தாகும்.[12]

சமற்கிருத அறிஞர்களின் கருத்துக்கு மாறுபாடான செய்தியை, எபிறேய மொழி இலக்கியமான தோரா (Torah) கூறுகிறது. நோவா என்பானின் முதல்மகன் வழி மக்கள் பேசியது செமிட்டிக்

என்றும், இரண்டாம் வழி மகன் மரபு பேசியது ஆமெட்டிக் (கனானியம்) என்றும், மூன்றாம் வழி மகன் மரபினர்பேசியதே கிரேக்கம், அனதோலியம் (இந்திய- ஐரோப்பிய மொழியான ஆரியம்) என்றும் தோரா விளக்குகிறது.[13] இம்மூன்று மரபினரும் நோவா என்பவன் மரபினரே என்பதால், இம்மூன்று மொழிக்கும் மூலமொழியொன்று இருந்ததை (Pritiolanguage) தோரா உறுதி செய்கிறது. எனவே, செமிட்டிக் குடும்பத்துக்கும் இந்திய- ஐரோப்பிய குடும்பத்துக்கும் தொடர்பில்லை என்று கூறுவதை ஏற்க இயலாது என்பதும் சில ஆய்வாளர்களின் கருத்தாகும். (பிற்காலத்தில் சமற்கிருதம் போல் செம்மைப் படுத்தப்பட்ட கிரேக்க மொழியில் செமிட்டிக் மொழியினத்தின் தாக்கங்கள் பெருமளவில் உணரப்பட்டுள்ளன.)

மேற்கண்ட செய்திகளின்படி, சமற்கிருதத்தினின்றே வட இந்திய மொழிகளான இந்தி, மராட்டியம், வங்காளம் போன்ற மொழிகள் பிறந்ததாகக் கருதுவதும் தவறான சிந்தனையே. சமற்கிருதம் என்றமொழி அறியப்படுமுன்பே, வடஇந்தியப் பகுதிகளில் தமிழ்மொழியே பேசப்பட்டுவந்தது என்பதை தற்கால மொழி ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. ஈரானிய மொழிகளான செண்ட் என்பதும் கூட, சிந்து என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். பஃலவி மொழிக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்பு தற்போது விளக்கப்பட்டுள்ளது. செண்ட் பஃலவி ஆரிய மொழிகள் ஆரியக் குடும்பத்தோடு இணைக்கப் பட்டதும் தவறான கணக்காகும்.[14] சமற்கிருத மொழிக்கும் மூப்புடைய மொழி செண்ட் மொழியாகும்.

ஆரிய மொழிகளின் பிறப்பிடம் பால்க் பகுதியே என்பதும் தவறான கண்ணோட்டமாகும். வடக்கு மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்த செமிட்டிக் மற்றும் அனதோலிய மக்களே வடக்கு நோக்கிப் புலம்பெயர்ந்ததாக தற்கால ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். செமிட்டிக் அனதோலிய மக்கள் அடுத்தடுத்து வாழ்ந்திருந்தவர்களாவர். ஈத் (Heath or Heth) என்ற விவிலிய மாந்தன் வழியில் உருவாகிய மரபினை ஈத்தியர் (Hittite) என்றழைக்கின்றனர். இம்மக்கள் பற்றிய குறிப்புகள் கடந்த நூற்றாண்டில் அகழ்வாய்வுகள் வழியே வெளிப்பட்டன. ஈத்தியர் மொழிக்கும் சமற்கிருதத்துக்கும் பல்வேறு ஒற்றுமைக் கூறுகள் உள்ளனவென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஈத்தியர் ஆரியரே என்ற க்ருத்தையும் முன்வைக்கின்றனர். ஈத்திய-

செமிட்டிக் மொழிகளிடையே காணப்படும் ஒற்றுமைகள் காரணமாகவே, அம்மக்கள் நோவா மரபினர் என்று விவிலி யத்தை மேற்காட்டியும் சிலர் விளக்குகின்றனர். எனவே, மேற் கூறப்பட்ட அனைத்து மொழிகளிடையேயும் சில ஒற்றுமைக் கூறுகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளன.

மேலைநாட்டு மொழியியலார், ஆரிய மொழிக் குடும்பத் திலேயே சமற்கிருதம் மட்டுமே வியக்கத்தக்க சொல்வளத்தைப் பெற்றுள்ளதாகக் கருதுகின்றனர். கிரேக்கம், இலத்தீன், ஆகிய மொழிகளைக் காட்டிலும் சமற்கிருதம் முறையான இலக்கண இலக்கியச் செறிவுகளைக் கொண்டிருப்பதாகவும் கூறுகின்ற னர். ஏறக்குறைய *2000* வேர்ச் சொற்களை தாதுக்களைத் தரு கின்றனர் (Parent sterns) பிற மொழிகளுடன் ஒப்பிடும்போது, சமற்கிருத மொழியின் வேர்ச்சொல் (தாது), ஒற்றையொலி கொண்டதாகவும் (single mono - syllable), ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்மெய்களைக் கொண்டதாகவும் (Consonants), உயிர்மெய்யுடன் உயிரும் இணைந்தோ அல்லது உயிர் தனித்தோ காணப்படுவதாகவும் கூறுகின்றனர். இச் சிறப்பு சமற்கிருத மொழிக்கு மட்டுமே உரியதாகவும் கருதப் படுகின்றது. இந்த ஒற்றைச்சொல் (Mono- sylleble) நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை கொண்டதாகவும் கூறப்படுகின்றது. இச் சொற்கள் மேலும் மேலும் விரிந்து கொண்டு செல்வதையும், முன்னொட்டு - பின்னொட்டுகளையும், இணையொட்டுகளை யும் சேர்த்துக் கொள்வதாகவும் எடுத்துக் காட்டுகின்றனர்.

எடுத்துக்காட்டாக பூ (Bhu or Bhoo) என்ற வேர்ச்சொல் மூன்று காலங்களுடனும் தொடர்பு கொண்ட பொருளைத் தருவதாகும். (to be or to exist) எபிறேய மொழியில் யா (Yaa) என்ற வேர்ச் சொல் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. (Yaa = to be) பூ என்ற வேர்ச் சொல்லிலிருந்து விரியும் சொற்களாவன.[15]

1. பூ - பவ அல்லது பவன (Bhu - Bhava or Bhavana) = வாழ்ந்து கொண்டிருப்பது (Being).
2. பூ -பாவ (Bhava) = நிலைத்திருப்பது (Existance).
3. பூ - பாவ ன (Bhavin) = இருப்பதற்கான காரணம் (Causing to be).
4. பூ -பாவின் (Bahavain) = இருந்து கொண்டிருப்பது (existing).
5. பூ - புவன (Bhuvna) = இயங்கிக் கொண்டிருக்கும் ஞாலம் (World).

6. பூ அல்லது பூமி (Bhoo or Bhoomi) : உலகம் (the earth).

7. பூ - பூதர (Bhoo - dhara) உலகைக் காத்துக் கொண்டிருப்பவன், மலை.

8. பூ - பூ- தர- சா (Bhop- Dhara -ja)= புதியதாய்த் தோன்றும் மலை அல்லது மரம் (Mountain- born a tree)

9. பூ - பூப (Bhoo - Bhoo -Pa) : மன்னன் அல்லது உலகைக் காப்பவன் (King)

10. பூ - பூ - புத்ர (Bhoo - Putra) மன்னனின் மகன் அல்லது இளவரசன்

11. பூ - உத் பூ (Bhoo - Ud Bhoo) எழுதல் (to rise up)

12. பூ -பிரத் - யா- பூ (Preaty - a Bhoo) : அருகில் கைக்கெட்டும் அருகாமையில்

13. பூ -பிரோத் -பூத (Prodbhuta): நெருக்கம், அருகில் வருதல் (Come forth)

மேற்கண்ட சொற்கள், பூ என்ற ஒற்றைச் சொல்லிலிருந்து விரிந்தவைகளாகும். பூ (Bhoo) என்ற சமற்கிருதச் சொல், வேர்ச் சொல்லாகவும் அறியப்படுகின்றது. உண்மையில் பூ என்ற சொல் தமிழ்ச் சொல்லே.

1. பூ = மலர்தல் (Being).

2. பூ - பூப்பு = இருப்பதற்கான காரணம் (existance).

3. பூ = பூவாக =வாழ்ந்து கொண்டிருப்பது (causing to be).

4. பூ =பூவை = வாழ்ந்து கொண்டிருப்பது (exiting).

5. பூ = இயங்கிக் கொண்டிருக்கும் ஞாலம் (the world)

6. பூ = பூமெய் (பூமி) - இயற்கையை மேலாடையாகக் கொண்டிருக்கும் உலகம் (the earth)

7. பூ = பூ தாரன் = உலகின் காப்பாளன் (தா என்ற வேர்ச்சொல் நீண்டு தார் - தாரு- தாரன் என விரிந்தது.)

8. பூ = பூத்தல் = புதியதாய்த் தோன்றுதல் (Newly born).

9. பூ =பூபதி = மன்னன். பள் - படு -படி- பதி என்றவாறு நீண்டது. பதி = இணைந்திருத்தல். உலகை இணைத்துக் காப்பவன் பூபதி. இது தமிழ்ச் சொல்லே.

10. பூ = பூ போத்தன் =மன்னனின் மகன். போத்து என்ற தமிழ்ச் சொல் தந்தையைக் குறித்தது. போத்து -பித்ர என சமற்கிருதத்தில் திரிந்தது.

போத்தன்(மகன்)- புத்ர எனவும் திரிந்தது. போத்தன் என்ற சொல், இன்னும் மலையாள மொழியில் பயன்பாட்டில் உள்ளது.

11. பூ -உதிப்பூ = உள்+தீ (கீழிருந்து எழும் ஞாயிறு) உள்+தீ = உதீ -உதி என்றானது. உதி (to raise up) உதி- உத என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

சமற்கிருதம் கூறும் பூ (Bhoo) என்ற வேர்ச்சொல், தமிழ் வேர்ச் சொல்லே என்பது ஒரு புறமிருக்க, சமற்கிருதப் பூ விரியும் சொற்பொருளை, பூ என்ற ஓரெழுத்துச்சொல்லே தாங்கி நிற்கிறது. பூ என்பதற்கு உலகம், நிலம் என்று சமற்கிருதம் கூறுகிறது. தமிழில் விரிதல், பெரிதாகுதல், பரந்துநிற்றல் என்ற வாறே அறியப்படும்.

இவ்வுலகம் பரந்து காணப்படுவதால் அது பூ எனப்பட்டது.

தன்னிலே விரிவதால் மலர் பூ எனப்பட்டது.

கடல்நீரின் உள்ளுக்குள் இருந்து மலர்வது அல்லது வெளிவருவது, உள்+பூ, உப்பூ -உப்பு எனப்பட்டது. மால் (முகில்)பரந்து விரிவ தால்,அது மால் + பூ = மாற்பூ -மப்பூ - மப்பு எனப்பட்டது. நெருங்கினால் சுடும் பூ, நெருப்பூ எனப்பட்டது. அறுசுவை களின் பொருளை விளக்கும் சொற்கள் பூ என்றே முடிந்து, பு எனச் சுருங்கின.

பூ என்ற ஓரெழுத்துத் தமிழ்ச் சொல்லுக்கு,

மலர், அழகு, இலை, பொலிவு, கூர்மை, கண்புறை, நெருப்பு, நுண்பொடி, உலகம், பிறப்பு என்றவாறு மென் மேலும் பொருள் விரியும்.

பூக்கட்ட, பூக்காரன், பூக்காலம், பூக்குஞ்சு, பூக்குடலை, பூக்குறடு, பூக்கொய், பூக்கதிர், பூக் கரும்பு, பூக்கா, பூக்காரை, பூக்காவி, பூக்கொடி, பூக்கொத்து, பூக்கோரை, பூக்காவி, பூக்கொடி, பூக்கோரை, பூச்சட்டை, பூச்சாத்து, பூச்சேலை, பூச்சட்டி, பூச்சாயம், பூச்சிட்டு, பூநெய் பூந்தாது (தாது என்ற சொல்லை சமற்கிருதம் எடுத்துக்கொண்டு அது வேர்ச் சொல் லைக் குறித்தது) பூத்தார், பூத்தோட்டம், பூத்தேன், பூப்பந்தல், பூப்பறி, பூமடல், பூ மடை, பூ மழை, பூமாலை, பூப்பட்டு, பூப்பந்து, பூவந்தி, பூவரசு, பூவாளி, பூவிதழ் எனவிரியும்.

சமற்கிருதத்தில் பூ என்ற வேர்ச் சொல் விரியும்போது;[16]

பூவத் (Bhuvad) : வளமை சேர்த்தல் (giving wealth or Prosperity.)
பூ வாஸ் (Bhuvas) : பூ வுலகைச்சுற்றியுள்ள காற்று.
பூவி (Bhuvi) : உலகில் சுற்றியுள்ள காற்று.
பூதி (Bhuti) : ஆற்றல், வளமை (Well being, power, Prosperity)
பூமன் (Bhuman) உலகம்
பூமிய (Bhumaya) : எண்ணிக்கையை உயர்த்துதல் (increase)
பூமி (Bhumi) : உலகம்
பூம்யா (Bhumy) : உலகத்திற்குரிய (Belonging to the earth)
பூய (Bhuya) : வருகை (becoming)
பூயாசு (Bhuyas): பேராசை அல்லது ஒன்றின் மேலுள்ள அளவுகடந்த வேட்கை (a great desire)
பூ யோ (Bhuyo) : மென்மேலும் அறிதல் (Knowing more)
பூர் (Bhur) : நிலநடுக் கோட்டுக்குத் தெற்கிலுள்ள நாடு. (country south of equator)
பூரி (Bhuri): பொன் (gold)
பூவரி (Bhuvari) : பெண் கடவுள்
பூட்ணு (Bhushnu) : வளமையை விரும்புதல் (desiring properity).
பூனா (Bhuna) : பூனை (cat)
பூரித் (Bhurij) : நிலம் அல்லது உலகம்.
பூர்னி (Bhurni) : ஓய்வற்ற (restless)
பூட் (Bhush) : முயற்சி மேற்கொள்ளல்
பூடனா (Bhushana) : அணிசெய்தல் (decorating)

என்றவாறு மேலும்விரியும். பூ (Pu) என அழுத்தமாகச் சொல்லப்பட்ட தமிழின் ஒலி பூ (Bhu) என்றவாறு மென்மையாக சமற்கிருதத்தில் அறியப்படுகின்றது.

சமற்கிருதத்தில் மூல ஒற்றைச் சொல்லிலிருந்தே, சில உயிர்மெய்யின் துணையுடனோ அல்லது உயிரின் துணையுடனோ சொற்கள் விரியும் என்ற நிலைப்பாடு, தமிழ்மொழியியலார் கூறுவது, தமிழைப் பற்றிய செய்திகளை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது எனலாம்.

அரபுமொழியென்பது, தொடக்க காலத்திய செமிட்டிக் குடும்பத்தோடு இணைந்தது என்பது ஆய்வாளர்களின் கருத்து. அரபு மொழியின் வேர்ச் சொற்கள் மூன்று உயிர்மெய்களைக் கொண்டதாகக் கூறுவர். இந்த மூன்று உயிர்மெய்களும் மாறாத் தன்மை கொண்டிருக்க, மற்ற எழுத்துகள் இணைந்து, அச்

சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டும். தமிழைப் போலவே எபிறேய மொழியிலும் ஒற்றை வேர்ச்சொல் அறியப் படுகின்றது. அது உண்மையில் தமிழ் வேரே என்பதை தற்போது அறியமுடிந்துள்ளது. ஆரியம், செமிட்டிக் ஆகிய மொழிகளில் வேர்ச்சொற்கள், தமிழ் மரபை யொட்டியே அறியப்படுகின்றன.

அரபுமொழியில் க-த-ப (KTB) என்ற மூன்று உயிர்மெய்கள் இணைந்து ஒரு வேர்ச்சொல்லாகிறது. இச்சொல்லுக்கு எழுதுதல் (to write) என்பதே பொருளாகும். எழுதுதல், எழுத்துடன் தொடர்புடைய பல்வேறு வினைச் சொற்களும் இதனின்றே விரிகின்றன. இந்த மூன்று எழுத்துகளும் மாற்றம்பெறாமல் நிலையாக உள்ளன. இம்மூன்று எழுத்துக்களோடு இணையும் உயிரும் சேர்ந்து அச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுகின்றன. சமற்கிருதம் இந்த வகையில் காணப்படவில்லை யென்பர்.

கதப KTB = எழுது (to write)

இச்சொல்லில் K என்ற எழுத்து, கை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். அரபுமொழியில் கை என்ற சொல், க,சி, கா என்றவாறு மாறுபடுகின்றது. எழுதுவதென்பது கை செய்யும் பணியாகும். எழுதும்போது எழுத்துகளும் சொற்களும் நீண்டு செல்வதை, தாவுதல் என்றவாறும் குறிப்பிடலாம். கைத்தாவு என்பதற்கு தொடர்ச்சியான எழுத்துகள், சொற்கள், வாக்கி யங்கள் எனப் பொருள்விரியும். இச்சொல், ஒற்றை வேர்ச்சொல் என்று கருதப்பட்டாலும், உண்மையில் அது தமிழில் அறியப் படும் இரண்டு சொற்களால் அறியப்படுவதே. கை -தாவு என்ற இரண்டு தமிழ்ச் சொற்களும் இணைந்து, கதப (KTB) என்ற வாறு திரிந்தது. எப்படியிருப்பினும் கை என்ற தமிழ்ச் சொல், எழுதுவதில் உள்ள வினையின் சிறப்பு உறுப்பு என்பதும் தெளி வாகிறது.

கதப = எழுது (To write), நிகழ்காலம். (Singular, Third person, Present tense)

காதப : (KaTB) எழுதுவது (act of writing). இச்சொல் Ki Ta Bat என்றும் விரியும்.

காதிப : (Ka ti B) = எழுதுபவன் (Writer).

மா க து ப: (Ma K Tu B) = எழுதப்பட்டது (Written).

தா கதிப : (Ta KTib) = எழுதக் கற்பி (Teach to write.)

மு கா தா பத் (Mu Ka Ta Bat_ = ஒருவருக்கொருவர் எடுத்துப் பரிமாற் றம் செய்துகொள்வது. கடிதம் எழுதுவதைப் போன்று எனக் கருதலாம். (act of writing to one another)

மு த கா தி ப: (Muta Ka Tib) = எழுத்துப் பரிமாற்றம், தொடர்ச்சி யானது.

இ க தாப : (iK Ta B) =எழுதுவதற்காக சொல்லப்படுதல் (the act of dictating)

ம க தா ப: (Ma KTa B) = எழுதுமிடம் (Place of writing), பள்ளிக்கூடம்.

கி தா (Ki Ta B) = நூல் (Book) கித்தாப் (Kitab) என்று சொல்லப்படும்.

மேற்கண்ட சொற்கள் எழுத்து, எழுதுதல், எழுதப்படும் இடம், புத்தகம் ஆகியவற்றைக் குறிப்பன. இச்சொற்களில் KTB என்ற மூலச்சொல் மாறவே இல்லை. இச்சொல்லுடன் அல்லது எழுத்துடன் இணைந்த ஒலிக்குறிப்புகள், அச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுகின்றன.

Write என்ற ஆங்கில வினைச்சொல், Wrote - Written என காலங் களை விளக்குகிறது.

Writer : எழுதுபவன் அல்லது எழுத்தாளன்.
Writerly : எழுத்தாளனின் இயல்பு.
Write up : எழுதும் திறன் (Skill of Writing)
Writ : எழுதப்பட்ட ஆணை.

உலக மொழிகளில் காணப்படும் எழுத்து, சொல், வாக்கிய அமைப்புகள், சொற்கள் விரிதல், விரிந்த சொற்கள் பொருளை வேறுபடுத்திக் காட்டுதல் போன்ற இலக்கண நெறிமுறைகள் ஏறக்குறைய ஒன்றையொன்று தழுவியே காணப்படுகின்றன. மக்களினம் பேசிய முதன்மொழியில் காணப்பட்ட அனைத் துக் கூறுகளும் சிற்சில மாற்றங்களுடன், திரிபு மொழிகளில் காணப்படுகின்றன என்பதை அறியலாம். இந்த வகையில்,இம் மொழிகளுக்கெல்லாம் அடிப்படையாய் அமைந்த மொழியே சிறப்புகுரியதும், வழிகாட்டியுமாகும். இவ்வாறான வழிகாட்டு தல் மொழியாக சமற்கிருதமோ மற்ற மொழிகளோ இருப்பதற் கான வாய்ப்புகள் இல்லை. சமற்கிருதம் என்பது வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தில் தொகுக்கப்பட்ட மொழியென்ப தால், சமற்கிருதத்துக்கு முன்பு அறியப்பட்டிருந்த மொழி அல்லது மொழிகளின் தாக்கங்கள், சமற்கிருதத்தில் காணப்படுகின்றன என்ற அளவில், சமற்கிருதத்தில் பெருமைக்குரிய சில கூறுகள் உள்ளனவென்றால், அவை சமற்கிருதத்தின் மூலமொழி பெற்றி ருந்த சிறப்பையே எடுத்துக்காட்டும் எனலாம்.

2. சமற்கிருத மொழி பற்றிய மேற்கித்திய ஆய்வாளர்களின் கருத்து

சமற்கிருதம் என்ற செப்பம் செய்யப்பட்ட மொழி கி.மு. 1300 - 1000 ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. அம்மொழிக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாக எழுத்துவடிவம் அறியப்படவில்லை. அது வாய்மொழியாகவே சொல்லப்பட்டு, மக்களில் மிகச் சிலரால் மட்டுமே அறியப்பட்டிருந்தது. ஒவ்வொரு தலைமுறையைச் சார்ந்தவர்களும் புதுப்புது சொற்களை சமற்கிருதத்தில் இணைத்துக் கொண்டனர். மக்களிடையே பரவலாக அறியப் படாத அம்மொழியை, ஒரு சிலர் பயன்படுத்திய போது, ஒரு கவர்ச்சியைத் தோற்றுவித்தது. காலப்போக்கில் சமற்கிருதம் பேசுபவர்கள் அறிஞர்களாகவும், கல்வியாளர்களாகவும் கருதப் பட்டனர். சமற்கிருத மொழியை எந்த அரசும் ஊக்குவித்து வளர்த்ததாக வரலாறு கூறவில்லை.

ஆரியர்களின் வருகை கி.மு. 2000 ஆண்டுகள் என்று மேல் எல்லையாகவும், கி.மு. 1500 ஆண்டுகள் கீழ் எல்லையாகவும் கொண்டு, ஆய்வாளர்கள் குறித்தனர். ஆரியர்கள் தங்களிடை யே உரையாடிக் கொண்ட மொழிக்கும் சமற்கிருதத்துக்கும் வேறுபாடுகள் உண்டு. ஆரியம் என்பது, அவர்கள் வாழ்ந்திருந்த நடு ஆசியப் பகுதிகளில் பேசப்பட்ட ஈத்திய, உரிய (Hittite-Hurrian) மொழிகளோடு தொடர்புடையது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[1] இவ்விரு மொழிகளையும் மேற்கு ஆரியம் அல்லது இந்திய- ஐரோப்பிய மொழியினம் என்று ஆய்வா ளர்கள் பெயர்சூட்டினர். அண்மையில் கண்டெடுக்கப்பட்ட அகழ்வாய்வுகளில் ஈத்தியரின் பதிவுகள் வெளிக்கொணரப்பட் டுள்ளன. இன்றைய துருக்கி நாட்டின் போகற்கோய் (Boghaz-koy) நகரை, 1906 ஆம் ஆண்டு மேற்கித்திய குழுவொன்று அகழாய்வு செய்தபோது, 10000 க்கும் மேற்பட்ட ஆப்பு எழுத்துகள் வடிவிலான (Cunieform Plates) களிமண் தட்டுகள்

கண்டெடுக்கப்பட்டன. இதன் வழியே, கி.மு. 3000 ஆண்டுகளில் பேசப்பட்ட ஈத்திய மற்றும் உரிய மொழிகள் வெளிச்சத்துக்கு வந்தன.[2]

போகற்கோய் நகரின் அக்காலத்திய பெயர் அட்டுசற் (Hattusas) என அறியப்படுகின்றது. அந்நகரில் ஆரிய இனத்தைச் சார்ந்த ஈத்தியர்கள் வாழ்ந்திருந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வேறு சிலர் அம்மக்கள் செமிட்டிக் வழிவந்த மக்களே என விவிலியத்தை மேற்கோள் காட்டி மறுக்கவும் செய்தனர். ஈத்தியர்களின் மொழிச் சொற்களில் பல சமற்கிருத மொழியில் காணப்படுவதாகக் கண்டறிந்துள்ளனர். ஈத்திய மொழிக்கும் கிரேக்க மொழிக்கும் உள்ள தொடர்புகளையும் ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். இந்தத் தொடர்புகளையெல்லாம் கருத்தில் கொண்டே, ஈத்தியம் - கிரேக்கம் -உரியம் - சமற்கிருதம் ஆகிய மொழிகளை, இந்திய ஐரோப்பியம் அல்லது ஆரியம் என ஆய்வாளர்கள் வகுத்தனர்.

இந்த நான்கு மொழிகளும் செமிட்டிக் மொழியினத்தோடு பல்வேறு வகையில் தொடர்பு கொண்டிருந்ததை தற்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. இம்மொழிகளில் காணப்பட்ட பெரும்பான்மையான சொற்களின் வேரும் மூலமும் செமிட்டிக் மொழிகளில் காணப்படுகின்றன என்பதால், செமிட்டிக் அல்லது செமிட்டிக் மொழியின் மூலமொழியினின்றே மேற்கண்ட ஆரிய மொழி கிளைத்தது எனக் கருதலாம்.[3] விவிலியம், ஈத்திய மக்கள் செமிட்டிக் மரபினரே என்பதை உறுதி செய்கிறது. பல்வேறு சூழல்களில் மெசப்பத்தோமியாவினின்றும் பிரிந்து சென்ற மக்கள், புதுப்புதுச் சொற்களை உருவாக்கிக் கொண்டு, புதிய மொழிகளை உருவாக்கிக் கொண்டனர். செமிட்டிக் மொழியின் மூலமொழி (Proto - Language) இன்னதெனத் தெரியவில்லையென கடந்த காலத்தில் சொல்லப்பட்டாலும், அது தமிழ்மொழியே என்பதை தற்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. எனவே, செமிட்டிக் மற்றும் ஆரிய மொழிகளில் தமிழ்மொழியின் தாக்கங்கள் பெருமளவில் இருப்பதை அறியலாம்.

வடக்குநோக்கிச் சென்ற குழுக்கள் பேசிய ஆரியம் மேலும் திரிபுபட்டு, இன்றைய செர்மனி, தெற்கு உருசியா, பால்க் பகுதி மொழிகள் என மேலும் கிளைத்தது. இம்மொழிகள் பேசிய மக்களில் ஒரு குழுவினரே இந்தியாவுக்கு வந்த ஆரியர் என

கருதப்படுவதால், அம்மக்கள் பேசிய மொழியிலும் தமிழின் தாக்கங்கள் இருந்ததை மறுப்பதற்கில்லை. வடக்குப்பகுதிகளி லிருந்து ஆரியர் கொண்டுவந்த மொழியே ஆரியம் எனப்படும்.

சமற்கிருத மொழியைத் தோற்றுவித்தவர் யார் என்பதற்கு வரலாற்றில் தெளிவான விடைகள் கிடைக்கவில்லை. ஆரியர் கள் கொண்டுவந்த மொழி, சிந்து பகுதியில் அவர்கள் குடிய மர்ந்தபோது பேசப்பட்டது. ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தபோது, வடமேற்கு இந்தியா மற்றும் வட இந்தியப் பகுதிகளில் தமிழோ அல்லது தமிழினின்றும் திரிபுபட்ட மொழிகளோதான் பேசப்பட்டன. ஆரியர்களுடைய குழுவென் பது, இலக்கக் கணக்கான மக்களைக் கொண்டிருந்தது என்ப தும் ஒரு மாயத் தோற்றமே. எண்ணிக்கையில் மிகவும் குறை வான மக்கள் தொகையையே அக்குழு கொண்டிருந்தது. அம் மக்கள் சிந்துப் பகுதியில் தங்க நேர்ந்தபோது, அவர்களால் எந்தவகையான சமூக மாற்றங்களும் ஏற்பட்டுவிடவில்லை.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த காலத்தில் அல்லது அதற்கு முன்பின்னாக, இந்திய எழுத்துமுறைகளில் மாற்றங்கள் செய் யப்பட்டன. அவை, சிந்துவெளி எழுத்துகளை மக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், விரைவாக எழுதவும் படிக்கவும் ஏற்ற வகையிலும், அமைந்திருந்தன. அப்புதிய வரிவடிவ மாற்றமே, பிற்காலத்தில் பிராமி எனவும் சொல்லப்பட்டது. பிராமி எழுத் துகள் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, பழைய எழுத்து முறைகளையும் முற்றிலுமாக அவர்கள் நீக்கிடவில்லை. சில நூற்றாண்டுகள், சிந்துவெளி எழுத்துகளும், பிராமி எழுத்து களும் கொண்ட இரு வடிவச் சொற்கள் இணைத்தே எழுதப் பட்டன. இதற்கானச் சான்றுகளும்அண்மையில் வெளியிடப் பட்டுள்ளன.[4]

புதிய வரிவடிவம் தோற்றுவிக்கப்பட்ட நிலையில், அப் போது வடக்கிலிருந்து வந்தமொழியை அடிப்படையாகக் கொண்டு புதிய மொழியொன்று ஆய்வாளர்களால் தோற்று விக்கப்பட்டது. இம்மொழியின் சொற்கள், அப்போதைய மொழியின் சொற்களைச் சுருக்கிச் சொல்லப்பட்டன.

புதிய சொற்கள், பழைய சொற்களின் சாயலையும் பொரு ளையும் கொண்டிருந்தன. அப்போது வழக்கிலிருந்த மொழி தமிழே என்பதால் தமிழ்ச் சொற்களின் சுருக்கங்களாகவே சமற்

கிருதச் சொற்கள் உருவாக்கப்பட்டன. அச்சொற்களோடு பல நூற்றாண்டுகளில் பல்வேறு சொற்களும் இணைந்து ஒரு மொழிக்கான தகுதியை சமற்கிருதம் பெற்றது. எனவே, சமற் கிருதம் ஒரு நாளில்தோற்றுவிக்கப்பட்ட மொழியன்று. இம் மொழி தொடக்கத்தில் அரசியல் காரணங்களுக்காகவே பயன் படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்றது. மக்களும், மன்னரின் பகைவர்களும் அறிந்துகொள்ளக் கூடாத வகையில் அரசின் கமுக்கமான குறிப்புகள் சமற்கிருத மொழியில், பிராமி எழுத்து வடிவத்தில் பதிவு செய்யப்பட்டன. அப்போது சமற்கிருதத்துக் கென வரிவடிவங்கள் அறியப்படவில்லை. பாலி மொழியிலும் கூட சமற்கிருதச் சொற்கள் கலந்திருந்தன. முறையான எழுத்து வடிவங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே சமற் கிருதத்துக்கு அறிமுகம் செய்யப்பட்டன. வடக்கே அறியப் படும் எந்தப் பதிவுகளும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னதாக, சமற்கிருத வரிவடிவத்தில் காணப்படவில்லை.

நாள்தோறும் புதுப்புது சொற்களால் வளர்ந்துவந்த சமற்கிருத மொழி, கிரேக்கர்களின் வருகைக்குப்பிறகு, பல நூறு கிரேக்கச் சொற்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது. வடமேற்கு இந்தியாவில் பேசப்பட்ட செண்டு, பஃலவி போன்ற மொழிகளின் சொற்களும் இணைத்துக் கொள்ளப்பட்டன. தொடக்கத்தில் சமற்கிருதத்துக்கும் ஆரியர் களுக்கும் எந்தத் தொடர்பும் இருந்திருக்கவில்லை. சமற்கிருதம் பற்றி ஆரியர்களுக்கு எதுவுமே தெரியாது என்பதே வரலாற்று உண்மையாகும். சமணர்களும், புத்தர்களும் கையிலெடுத்துக் கொண்ட சமற்கிருதம், பிற்காலத்தில் அவர்களால் கைவிடப் பட்டு தங்களுக்கென தனித்தனியான மொழிகளை உருவாக்கிக் கொண்டபிறகே, ஆரியர்கள் சமற்கிருதத்தைக் கையில் எடுத் துக் கொண்டனர். இக்கால அளவில் ஆரியமும் சமற்கிருதத் தோடு கலந்தது. இவ்வாறு தமிழ்ச் சொற்களை அடிப்படை யாகக் கொண்டு, வட்டாரச் சொற்களையும் இணைத்துக் கொண்ட சமற்கிருதம், கிரேக்க மொழிச் சொற்களையும் தன்வயப்படுத்திக் கொண்டு இறுதியில் ஆரியச் சொற்களையும் இணைத்துக் கொண்டது.[5] இவ்வாறு தோன்றிய சமற்கிருதம் கிறித்து பிறப்பாண்டுகளில் செம்மைப் படுத்தப்பட்டது எனலாம்.

ஆரியர்கள் சமற்கிருதத்தைத் தங்களது சமயமொழி யாக்கிக் கொண்டது கி.மு. 400 ஆண்டுகளுக்குப் பிறகே என்று

ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[6] எனவே, சமற்கிருதம் என்பது ஆரியர்கள் கண்டுபிடித்த மொழியல்ல என்பதும், அது அக் காலத்தில் வட இந்திய அறிஞர்கள் உருவாக்கிய மொழியென் பதும் (Scribal language) வெள்ளிடை மலை. ஆனால் வரலாறு தவறாகத் திசை திருப்பப்பட்டது. ஆரியமொழி ஏற்கனவே செமிட்டிக் மொழியின் கிளைமொழியாக இருந்ததும், பிற் காலத்தில் கிரேக்கம் அதனுடன் இணைக்கப்பட்டதும், சமற் கிருதம் மேற்கித்திய மொழி போன்ற தோற்றத்தையும் பெற்ற தனால், சமற்கிருதத்தை ஆரியர்களே உருவாக்கினர் என்ற தவறான கருத்து மேற்கொள்ளப்பட்டது. ஒரு புதிய மொழி யை உருவாக்கவும், அதனைச் செம்மொழியாக மாற்றவும், ஆரியர்களுக்கு எப்போதும் அந்த உயர்வான அறிவுத் திறமை இருந்ததாகக் கருத முடியவில்லை. இதற்குச் சான்றாக இரிக்கு வேதத்தையே ஆய்வாளர்கள் காட்டுகின்றனர்.

கி.பி.1600 ஆண்டுகளில் இந்தியாவுடன் வாணிகம் செய் வதற்கான கிழக்கிந்தியக் குழுமம் இங்கிலாந்தில் தோற்றுவிக் கப்பட்டது. இக்குழுமம் மொகலாயர் காலத்தில் முறையான ஒத்துழைப்பையும் பெற்று, மேற்கு கடற்கரையில் தனது பணி களைத் தொடங்கியது. ஆங்கிலயேரைத் தொடர்ந்து மற்ற ஐரோப்பியரும் இந்தியா வந்தனர். தென்னாட்டில் ஏற்கனவே கி.பி. 1500 ஆண்டுகளில் போர்த்துக்கீசிரியர்கள் தங்கள் வணிகப் பணிகளைத் தொடங்கியிருந்தனர். போர்த்துக்கீசியக் கப்பல்களில் கிறித்துவத் துறவிகளும் ஏராளமானவர் தங்கள் சமயப் பணிக் கென தமிழகம் வந்தனர். போர்த்துக்கீசியர் வருகையின்போது, தமிழகத்தில் நிலவிய சூழ்நிலை, சமற்கிருதத்தையே முதன்மைப் படுத்தியதாக இருந்தது. சமற்கிருதம் கற்ற பிராமணர்களே அறிவின் மக்களாகப்போற்றப்பட்டனர். ஒருவருடைய அறிவுத் தகுதியை சமற்கிருதமொழியே வெளிக்காட்டியது எனலாம்.

இந்தச் சூழலில் தமிழகம் வந்த இராபர்ட் -டி-நொபிலி என்ற இத்தாலிக்காரர், கிறித்துவ சமயத்தைப் பரப்ப, சமற் கிருத மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார். தம்மை உரோமப் பிராமணர் என்று சொல்லிக் கொண்ட நொபிலி, சமற்கிருதத்தைக் கற்று, அம்மொழியிலேயே பல நூல்களை எழுதி, தனது சமற்கிருதப் புலமையை வெளிப்படுத் தினார். ஆரியர்கள் இயற்றிய யசூர் வேதநூல் தம்மிடம் உள்ள தென்றும், அதுவே மூலநூல் (Origina Text) என்றும் அறியப்

படுத்தினார். ஐரோப்பியர்கள் நொபிலியின் திறமையைக் கண்டு வியந்து போயினர். இலத்தீன் மொழியில் அதனை மொழிமாற்றம் செய்து வெளியிட்டனர். பிரெஞ்சு அறிஞரான வால்டேர் (Voltaire) இவ்வரிய நூலை, தமது நாட்டின் நூல் நிலையத்தில் பேணிப் பாதுகாத்தார். பிற்றை நாளில் அது உண்மையான யசூர் வேதமல்ல என்பது தெரியவந்தது. கோல் புரூக் (Cole Vrooke) என்பவரும்,நொபிலியின் யசூர் வேதநூலை உண்மை யானதென்றே நம்பினார்.[7]

நொபிலியின் இத்தகைய செய்கையால், வேதநூல்கள் என்று எவையுமில்லை யெனவும், செயற்கையாகத் தமது பெருமையை உயர்த்திக் கொள்ள இவ்வாறு செய்தனர் என்றும் ஐரோப்பியரிடையே பரவலான எண்ணங்கள் தோன்றின. கிரேக்கப் படையெடுப்புக்குப் பிறகு இந்திய ஆரியப் பிராமணர்கள், கிரேக்க மொழியையே தங்கள் விருப்பப்படி திரித்துக் கொண்டு, அதனை சமற்கிருதம் என அறிவித்துவிட் டனர் என்ற கருத்தும் ஐரோப்பாவில் சிலருக்கு ஏற்பட்டது. இன்றும்கூட, கிரேக்க மொழியின் அடிப்படைகளைக் கொண்டு இந்தியச் சூழலுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்ட மொழியே சமற்கிருதம் என்ற கருத்தினை, ஐரோப்பியரில் சிலர் கூறி வருகின்றனர். கனல் போலியர் (Colonel Polier) என் பார், நான்கு வேத நூல்களையும் திரட்டி, கி.பி. 1789 ஆம் ஆண்டில், இங்கிலாந்திலுள்ள (பிரிட்டிசு அருங்காட்சியகம்) மியூசியத்தில் சேர்ப்பித்தார். இதனைக் கூட, போலியானது என்றே சிலர் கருதினர்.[8]

கிரேக்கம், இலத்தீன் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிச் சொற்கள் பலவும் சமற்கிருதத்தில் இருப்பதைக் கண்ட ஐரோப்பியர், குறிப்பாகச் செர்மானியர், சமற்கிருதம் தங்கள் தங்கள் மொழியே எனக்கருதினர். வானியல், கணக்கியல், மருத்துவம், ஓகமுறைகள் எனப் பல்வேறு கூறுகளைத் தம் முள்ளே அடக்கியிருக்கும் வேதங்கள், ஐரோப்பாவினின்றும் இந்தியாவுக்குச் சென்றவைகளே என்றும் சிலர் கருதினர். தமது மொழியை இந்தியாவுக்கு எடுத்துச் சென்ற ஆரியர்கள், அங்கு அம்மொழியைச் செம்மைப்படுத்திக் கொண்டனர் என்றும் செர்மானியர் கருதினர். அது பற்றியே ஆரிய மொழிகளில் சமற் கிருதம் செம்மைப்படுத்தப்பட்ட மொழி என்றனர். பாணினி யின் அட்டத்யாயீ போன்ற இலக்கண நூல் மேற்கித்திய ஆரிய

மொழிகளில் அறியப்படாததால், சமற்கிருத மொழியே உயர்ந்தது என்றும் எண்ணினர்.

இரிக்கு, யசூர், சாம, அதர்வ வேதங்கள் இந்திய ஆரியரின் தகுதிகளை மேலும் உயர்த்தின. சூத்திரங்களும் உபநிடத்துக் களும் மேலை ஆரிய மொழிகளில் காணப்படவில்லை. வேத காலத்துக்குப் பிறகு இயற்றப்பட்ட மனுவின் சட்டங்கள், உலகின் முதல் சட்டநூலாகக் கருதப்பட்டது. அறுவகையான மெய் யியல் மற்றும் தத்துவநூல்கள், காப்பியங்கள், பாடல்கள், கவிதைத்தொகுப்புகள், நீதி சாத்திரங்கள், வானியல், கணக் கியல், மருத்துவம், உரைநடை போன்ற நூல்கள், பதினெட்டு புராணங்கள், துணைப் புராணங்கள், மந்திரமாய தந்திர நூல் கள் என ஒருவனுடைய வாழ்நாளில் கற்க இயலாத அளவுக்கு சமற்கிருதம் அளவற்ற கல்விச்செல்வத்தைப் பெற்றுள்ளதாகக் கருதினர். மேலை ஆரிய மொழிகளில் இந்த எண்ணிக்கையில் நூல்கள் அறியப்படவில்லையென்பதால், சமற்கிருதம் மிகவும் உயர்வான மொழியாகக் கருதப்பட்டது.

வர்சில் தனது கவிதைகளை 9000 வரிகளிலும் ஓமர் 12000 வரிகளிலும் ஒடிசி 15000 வரிகளிலும் எழுதியுள்ள நிலைகளில், மகாபாரதம் இரண்டு இலக்கம் (200,000)அளவில் எழுதப்பட் டுள்ளது. வியப்புக்குரிய செய்தியாகக் கருதப்பட்டது. மகா பாரதம் கி.மு. 500 ஆம் ஆண்டுகளில் தொகுக்கப்பட்டதாக வும், அது அப்போது 100 000 வரிகளைக் கொண்டிருந்ததாக வும் பேராசிரியர் பஃலர் கூறுகிறார். மேலும் கணக்கியலில், குறிக்கணக்கியலில், குறிக்கணக்கியல் (Algebra), பாழென் (Zero), கோணக் குறிப்புகள் (angles), புதவியல் (Botany), வான வியல் (Astronomy) போன்ற ஆரிய இலக்கியங்களின் உட் பொருளை முழுமையாக இன்றும் கூடப் பலர் அறிந்திருக்க வில்லை யென்றும், அவைகளை வெளிக்கொரண முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கருதினர்.

உலகில் அறியப்பட்ட மொழிகளில், சமற்கிருதமே மிக உயர்ந்த மொழியென்றும், அறிவுக் கலைகளை உலகிற்கு அளித்த மொழியென்றும், உலகின் பல்வேறு மொழிகளும் சமற்கிருதத்தினின்றே பிறந்தனவென்றும், கருதினர். இவ்வாறு அவர்கள் கருதியதற்கு, ஐரோப்பிய மொழிகளையே அளவு கோல்களாகக் கொண்டனர்.[9] இக்கருத்துகள் அனைத்தும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சொல்லப்பட்டவை

என்பதால், அக்கால அளவில் அதனை மறுத்துக்கூற சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. தமிழ்மொழி யென்பது, சமற் கிருதத்தின் கிளைமொழியே என முடிவு கட்டப்பட்டிருந்த தால், தமிழை அவர்கள் ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்க வில்லை. இருபதாம் நூற்றாண்டில், உலகின் பல்வேறு நகரங் களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளும், சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகளும், மொழிகள் பற்றிய விரிவான ஆய்வுகளும், பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கொள்கை களைப் புரட்டிப் போட்டன.

3. வேதங்களும் புராணங்களும்

வைதீக ஆரியக் கண்ணோட்டத்தின்படி இவ்வுலகில் காணப்படும் சமயங்கள் எட்டாக அறியப்படுகின்றன. அவை ஆரியம், புத்தம், சமணம், சைவம், வைணவம், சீக்கியம், இசுலாம், கிறித்துவம் எனப்படும். இவற்றில் முதலில் சொல்லப்பட்ட ஆறு சமயங்களும் வேதக் கொள்கையுடையவை என்றும், அடுத்த இரண்டு யூதக் கொள்கையை உடையவையென்றும் சொல்லப்பட்டன; என்றாலும் வேதக் கொள்கையும் யூதக் கொள்கையும் அடிப்படையில் ஒன்றே என்றும் கருதப்படுகின்றன. முன்னவை சமற்கிருத மொழியின் பாற்பட்டும், பின்னவை செமிட்டிக் மொழியின்பாற்பட்டும் எண்ணத்தக்கவை என்பதால், இவ்விரண்டு மொழிகளுக்குமான தொடர்பும், இச்சமயங்களின் வழியே வெளிப்படுகின்றது எனலாம்.[1] இவற்றில் யூத சமயம் என்பது, கி.மு. 1250 ஆண்டுகளில் மோசே என்பவனால் தோற்றுவிக்கப்பட்டது. ஆரிய சமயம் என்று சொல்லப்படுவது தனியாகப் பிரித்தெடுக்க இயலாத ஒன்றாகும். இச் சமயத்தை தோற்றுவித்தவர் யாரெனச் சொல்லப்படவில்லை. இருப்பினும் கி.மு. 1000 ஆண்டுகளில் ஆரியர்களின் வழிபாட்டு முறைகளையொட்டி அச்சமயம் அறியப்படுகின்றது.

கி.மு. 10000 ஆண்டுகளிலேயே அறியப்பட்ட சிந்துவெளி மக்கள், தங்களுக்கென ஒரு சமயத்தைக் கடைப்பிடித்து வந்தனர் என்பது தற்போது வெளிப்பட்டுள்ளது. அவர்தம் சமயத்தின் மூலக்கூறுகளை அடிப்படையாகக்கொண்டே, ஆரியம் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டது. புத்தமும் சமணமும் கி.மு. 800 ஆண்டுகளுக்குப் பிறகும், சைவம் - வைணவம் ஆகியவை கி.பி. 800க்குப் பிறகும் சீக்கியம் கி.பி. 1200 ஆண்டுகளுக்குப் பிறகும் தோற்றுவிக்கப்பட்டன, இசுலாம் யூத சமயத்தையொட்டி கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் அறியப்படுகின்றது. இச்சமயங்களில் ஆரியச் சமயமே முதற்சமயமாகவும், மற்றவை அதனைத் தழுவி தோற்றுவிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

சமயம் என்ற தகுதியைப் பெற பல்வேறு கூறுகள் அறியப் படவேண்டும். அனைத்து மக்களாலும் ஏற்கக் கூடிய கடவுள் கொள்கையும், வழிபாட்டு முறைகளும், மெய்யியல் விளக்கங் களும், அவ்விளக்கங்களைத் தரும் நூல்களும், அவ்வப்போது அச்சமயத்தை உயிர்ப்பிக்கத் தோன்றும் சமயத் தலைவர்களும், வழிபாட்டிடங்களும், ஆட்சியாளர்களின் அரவணைப்பும் கொண்ட ஒன்றே தகுதியான சமயமாக அறியப்படும். மற்றவை வணக்கமுறைகளையும் வழிபாட்டு நெறிகளையும் கொண்ட வைகளாகவே கருதப்படும். மேற்கண்ட சமயங்கள் என்று சொல்லப்படும் நெறிமுறைகள், வரலாற்றுக் காலத்தில் அறியப் பட்டவைகளே.

வரலாற்றுக் காலத்துக்கு அறியப்பட்ட இந்தியச் சமயம், தமிழருடைய சமயமே ஆகும். அச்சமயமே மேற்கண்ட சமயங் களுக்கெல்லாம் அடிப்படையாய் அமைந்திருந்ததை, அண்மைக் கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக நடைமுறையில் அறியப்பட்டிருந்த தமிழர் சமயத்தினின்றும் கிளைத்ததே பாபிலோனிய, சுமேரிய, யூத சமயங்கள் ஆகும். இந்தியச் சமயங்களில்ஆரியச் சமயமே முதல் தோற்றச் சமயம் என்பது போன்ற மயக்கத்தை பிற்கால ஆய்வாளர்கள் ஏற்படுத் திவிட்டனர். ஆரியர்களுடையது வழிபாட்டு முறைகளைக் கொண்டதேயன்றி, சமயமாகக் கருதப்படுவதற்கான இலக் கணங்கள் அதில் காணப்படவில்லை. பெரும்பான்மையான மக்கள் கூட்டம் அச்சமயத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. பெரும்பான்மையான மக்களின் உணர்வுகளை வெளிப்படுத் தும் கொள்கைகளையும் கொண்டிருக்கவில்லை. சமயம் என்பது மக்களை ஒற்றுமைப்படுத்தும் அலகாகக் கருதப்படும் நிலையில், மக்களைப் பிரித்துப்போடும் கொள்கையை ஆரியச் சமயம் கொண்டிருந்ததை மறுப்பதற்கில்லை. எந்த அரசும் ஆரியச் சமயத்தைப் போற்றவில்லை. ஆரியர்களுக் கென வழிபாட்டிடங்கள் எவையும் முறையாக அறியப்பட வில்லை. இருப்பினும் இந்தியச் சமயங்களின் முன்னோடிச் சமயமாக ஆரியம் பதிவு செய்யப்பட்டது.

ஆரிய தர்மம் என்பதற்குத் தரப்படும் விளக்கம் யாதெனில், ஆன்மாவை ஈடேற்றுவதே என்று சொல்லப்பட்டது. இக்குறிக் கோளை அடைய அறிவு வழியும் (ஞான மார்க்கம்) செயல் வழியும் (கர்ம மார்க்கம்) பின்பற்றப்பட்டன. இவ்விரு வழிகளில்,

தத்தம் வழியே சிறந்தது என்றும் கருதி அதற்கான கொள்கைப் போர்களும் நிகழ்ந்தனவென்று, ஆரியச் சமயத்தார் கூறுகின் றனர். அறிவு வழியைப் பின்பற்றியவரே தேவசாதியினர் எனக் கருதப்படும் ஆரியர் என்றும், செயல்வழியைப் பின்பற்றியவர், ஆரிய சாதியினின்றும் பிரிந்த அசுர சாதியினர் என்றும் சொல் லப்படுகின்றது. கொள்கை அடிப்படையில் ஒன்றாயிருந்தவர், ஆரியர் - அசுரர் எனப் பிரிந்ததாகக் கூறிக் கொண்டனர்.

அறிவு வழியைக் கடைப்பிடித்த தேவசாதி ஆரியரே இரிக்கு முதலான வேதங்கள் வழிபாட்டுமுறைகள், யாகம், ஓகம் போன்றவைகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. இருப்பினும் இவ்விரு கொள்கையின ரும் சிலவற்றில் ஒற்றுமையுடன் செயல்பட்டனர் என்றும் சொல்லப்படுகின்றது. ஆகமங்கள் எனப்படும் செயல்பாட்டு முறைகள், இருவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பர். இந்த ஆகமத்தை ஏழு வகையாகப் பிரித்து பாகங்களாக வகுத்தவர்கள் தேவசாதி ஆரியர் என்று கருதப்படுகின்றது.[2]

தேவசாதி ஆரியர்களுக்கு பிரகற்பதி, பிரகமணற்பதி, பிரசாபதி போன்றோர் ஆசிரியர்களாகவும் (குருக்கள்), அசுரர் களுக்கு பிகுரு, சுக்கிரன், துவட்டன், விசுவரூபன் ஆகியோர் ஆசிரியர்களாகவும் கருதப்படுகின்றனர். இவர்கள் யாவரும் வரலாற்று மாந்தர்களா அல்லது கற்பனையாகச் சொல்லப்பட்ட வர்களா என்பதுதெரியவில்லை. அசுரர்களே உயர்ந்தவர்கள் என்றும், அவர்களது கொள்கையே உயர்வானது என்றும் பாரசீகச் சமயமான அகுதமாற்தா (Ahuda Mazda) கூறுகிறது.[3] மாறாக, தேவசாதியினரே உயர்ந்தவர்கள் என்று ஆரியம் கூறுகிறது, இதன் அடிப்படையில் பார்க்கும்போது, இவ்விரு வரும் கொள்கை அடிப்படையில் வேறுபட்டவர்கள் அல்லர் எனவும், இன அடிப்படையில் முரண்பாடுகளைக் கொண்ட வர்கள் என்றும் கருதவேண்டியுள்ளது. செயல்வழிக் கொள்கை யில் சொல்லப்படும் தலைவர்களில் சிலர் மிகுந்த ஆற்றலுள்ள வர்களாகக் கருதப்படுவதால், அவர்களை வேறு இனத்தா ரோடு தொடர்புபடுத்த தேவசாதியினர் விரும்பவில்லை யென்றும், அதனால் தம்மிடமிருந்து பிரிந்து போனவர்களே அசுரர்கள் என்றும் கூறிக்கொண்டதாகவும் கருத இடமுண்டு.

செயல்வழித் தலைவர்களான அசுரர்கள் தாம் வழிபாட்டு முறைகளில் காவு கொடுப்பதும், சாதிப்பிரிவினை ஏற்றும்

செயல்பட்டனர் என்று தேவசாதியினர், அப்பழியை அசுரர் மீது சுமத்தினர். தங்களுடைய அறிவு வழியில் உயிர்ப்பலி கொடுப்பதும், சாதிப்பிரிவினை பார்ப்பதும் இல்லையென்றும் கூறிக் கொண்டனர். இந்த நிலைப்பாடு, பிற்காலத்தில் ஏற்பட்ட ஆரிய எதிர்ப்பினால் சொல்லப்படாதது என்பதே உண்மை நிலையாகும்.

உயிர்ப்பலி கொடுப்பதையும், சாதிப்பிரிவினையைக் கண்டித்தும் சமண புத்த சமயங்கள்கள் தோன்றின என்று சொல்லப்படுவதால், செயல்வழி (கர்ம மார்க்கம்)த் தலைவர்களால் தான் இத்தகைய கெட்ட பெயர் ஏற்பட்டது என்றவாறு கூறி, தேவசாதியினர் தப்பித்துக் கொள்ளவும் முயன்றனர். தேவசாதியினரும் அசுர சாதியினரும் சமற்கிருத மொழியையே பயன்படுத்தினர் என்றும், இவர்களுக்கு எதிர்ப்பாளர்களாக மாறிய சமண புத்த சமயத்தினரும் தொடக்கத்தில் சமற்கிருத மொழியையே பயன்படுத்தினர் என்றும், பிற்காலத்தில் தங்களுக்கென தனித்தனி மொழிகளைத் தோற்றுவித்துக் கொண்டனர் என்றும் சொல்லப்படுகின்றது. இதனால் வேத பாசைக்கு அல்லது தேவ பாசைக்குப் பின்னடைவு ஏற்பட்டதாகவும் ஆரியச் செய்திகள் கூறுகின்றன.

சமண சமயத்தார் உயிர்ப்பலி முறைகளை; கண்டித்ததால், அசுரர்களின் கொள்கை ஆட்டங்கண்டது என்றும், இதனைத் தூக்கி நிறுத்தவே மீமாம்சம் என்ற நூல் எழுதப்பட்டதாகவும் கருதப்படுகின்றது. புத்த சமயத்தின் தங்கள் கொள்கைகளை விளக்க எழுதப்பட்ட சாதகக் கதைகள் மக்களிடையே பரவலான வரவேற்பைப் பெற்றதைக் கண்ட தேவ சாதியினர், அவைகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் புராணங்களை எழுதினர் என்பர். இப்புராணக் கதைகளில் சொல்லப்பட்ட சில தேவ மாந்தர்கள், மக்களிடையே பேசப்பட்ட நிலையில், அம்மாந்தர்களைத் தலைவர்களாக அல்லது கடவுளர்களாகக் கொண்டு ஒரு சமயம் (பௌராணிக மதம்) தோன்றியது. இது தலைவலி போய் திருகுவலி கதையாயிற்று. இந்தப் பௌராணிக மதக்கொள்கைகளைச் சாடி, உபநிடத்துக்கள் தோன்றின. இந்த உபநிடத்துகளின் கொள்கைகளை விளக்குவதுதான் உத்தர மீமாசம்சம் எனப்பட்டது. இதனை வேதாந்தம் என்றும் கூறுவர். வேதாந்தம் தொடங்கிய காலமே வேத காலத்தின் முடிவு என்றும் கூறுவர்.

ஆரிய வழிபாட்டுமுறைகளும், வேதங்களும் காட்டிய வழியினின்றும் பிரிந்து சென்ற சிலர் வேதாந்தமே உண்மைவழி யென விளக்கம் தந்தனர். புத்த சமண சமயங்கள் தங்கள் சமயங்களைப் பரப்ப மேற்கொண்ட உத்திகளை வேதாந்தக் காரர்களும் பின்பற்றினர். ஆரியப் பழமையாளர்கள் நோக்கில் கூறுவதென்றால், “இவர்கள் சமயக் கொள்கைகளை மறந்து ஆள் கூட்டத்தில் நம்பிக் கொண்டு, தங்களுக்கென ஒரு கூட்டத்தை உருவாக்கிக் கொண்டனர். சைவம் என்றும் வை ணவம் என்றும் ஒன்றாயிருந்த கொள்கையை இரு கூறுகளாக்கி விட்டனர்”, என்று இரிக்கு வேதத்துக்கு உரையெழுதிய மகரிசி என்பார் கூறுகிறார்.[4] இவருடைய பார்வையில் சைவமே கிறித் துவமாகவும், வைணவமே இசுலாமாகவும் மாறின என்பார். சைவம், வைணவம், இசுலாம், கிறித்துவம் ஆகிய சமயங்கள் பற்றி மகரிசி கூறுவதாவது.

“இந்நான்கு மாற்றங்களுமே முன்னிருந்த ஆரிய தர்மங் களையும், அசுர தர்மங்களையும் தொலைக்கத் தலைப்பட்டன. பழைய காலத்திலிருந்த சுவர்க்க நரகங்களை மாற்றி கைலாசம், வைகுண்டம், பரமண்டலம் முதலிய சாசுவத லோகங்களை பின்னர்வந்த இம்மதங்கள் சிருட்டித்தன. வேத மதத்தில் காணப்பட்ட சமரச பாவனையையும் மோட்சத்தையும் இவை மறைக்கலாயின. இம்மதங்கள் கூறும் நித்திய லோகங்களில் நித்திய சேவை செய்வதே மோட்ச மெனக் கூறும் இவை, இப்போது லோகாயுத துல்லியமென அறிஞரால் மதிக்கப் பெறுபவை ஆகும்.” மேலும் கூறுகிறார்:

“சீவன் அல்லது சீவாத்மாவென்றும், ஈசுவரன் அல்லது பரமாத்வாவென்றும் சடம் அல்லது மாயை மூலப்பிரகிருதி யென்றும் மூன்று சாசுவதமான தனிப் பொருள்களைக் கற்பித்து, சீவன் ஈசுவரனை அடுத்து சடமாகிய மாயையை வெல்லுகிற தென்றும், அதன் பயனாக பௌலோக, சாமீப, சாரூப, சாயுஞ் யங்களைப் பெறுகிறானென்றும், இவற்றுள் சாயுத்யமாவது இறைவாது திருவடி நிழலில் ஒடுங்கி, ஆநந்தமய மாயிருப்பது தானென்றும் கூறத் தலைப்பட்டன. இத்தகைய மதானு சாரிகள் தமது கொள்கைகளுக்கு வேதமே இடங்கொடுப்ப தாகவும் கூறத் தொடங்கி, ஒரு சில வேத சூக்தங்களை புருச சூக்தம், சிறீ சூக்தம், தேவீ சூக்தம், பஞ்சசிருத்ரியம் என வலிந்து பொருள்படுத்திக் கூறித் தங்கள் மதங்களைப் பிடிவாத மாகச் சாதிக்கலாயினர்.”[5]

மேற்கண்ட செய்தி, படிப்பவர்களுக்குக் குழப்பத்தையே தோற்றுவிக்கும். இக்காலத்து இளைஞர்கள் மேற்கண்ட செய்தியை புரிந்து கொள்ளவே இயலாது எனலாம். மேற்கண்ட செய்தி யின் மூலம் மகரிசி சொல்வது என்னவென்றால், உண்மையான வேத அல்லது ஆரிய தர்மத்தைக் கடைப்பிடிக்காமல், வேதங் களில் கூறப்பட்டுள்ளவைகளுக்கு, தமக்கு ஏற்ற பொருளை கூறிக் கொண்டு, தவறான வழிக்கு மக்களை அழைத்துச் சென் றனர் என்பதாகும். இவ்வாறான தப்பும் தவறுமான விளக்கங் களால் எரிச்சலடைந்த சிலர், வேதமும் வேண்டாம், வேதாந் தமும் வேண்டாம் என உதறித் தள்ளிவிட்டு, திருமுறைகளையும் புராணங்களையுமே வேதாந்தமாகக் கொள்ளத் தலைப்பட்டனர்.

இத்தகைய கள்ளவேடம் அணிந்த சமயத் தலைவர்கள், வேதத்தை ஒப்புக்காக வைத்துக் கொண்டு, புதிய ஒழுக்க முறை களை அறிமுகம் செய்து, தங்களை வைதீக சைவர் வைதீக வைணவர் என்றும் கூறிக் கொண்டார்களாம்.

வேதங்களுக்கு சமய அறிஞர்கள் சொன்ன விளக்கங்களா வன:

1. இரிக்குவேதத்தில் சொல்லப்படும் தேவர்கள், தேவதைகளுக்கு உருவம் கொடுத்துப் பார்க்கக்கூடாது. அவர்களுடைய குணங் களை மட்டுமே அறியவேண்டும்.
2. தேவதைகளும் மிருகத் தேவதைகளும், இறைவனுடைய பல்வேறு நிலைகள் என அறிந்து கொள்ள வேண்டும்.
3. அக்கினி, வாயு, சோமன், அசுவினி, இந்திரன் ஆகியோர் இறை வனுடைய ஆற்றல்களின் வெளிப்பாடுகளே.
4. இவற்றை வணங்குவதென்பது, இறைவனையே வணங்குவதாகக் கருதப்படும்.
5. நெருப்புத்தன்மை கொண்ட தேவதைகளை, உருத்திரன் அல்லது சிவனாகக் கருதக்கூடாது.
6. நீர்த் தன்மை கொண்ட தேவதைகளை, நாராயணன் அல்லது விஷ்ணு என நோக்கவும் கூடாது.
7. இவையாவும் இறைவனுடைய வெளிப்பாடுகளே என உணர்தல் வேண்டும்.
8. கிறித்துவ இசுலாம் சமயக் கண்ணோட்டங்களில் வேதங்களைப் பார்க்கக்கூடாது.

ஆரியப் பிராமணர்கள், வேதங்களைப் படிக்கவும், ஓதவும், கற்பிக்கவும், வேள்விகளைச் செய்யவும் உரியவர்களாயிருந்தனர். பிராமணர்களுடைய கடமைகள் பற்றி, மனு நூல் விரிவாகப் பேசுகிறது. சிறந்த ஒழுக்கமும், தவ வலிமையும், கடவுளுக்கு அஞ்சி நடக்கும் குணங்களும், மக்களுக்கு வழிகாட்டுகின்ற தலைமையும் பிராமணர்களுக்கு இருக்கவேண்டும் என்றும் கூறுகிறது. வேதங்களைப் பிராமணர்கள் மட்டுமே படிக்கும் படி வலியுறுத்தப்பட்டுள்ளது. மனு நூலின் அறிவுரைப்படி, ஒவ்வொரு சாதியாருக்கும் உள்ள கடமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. அந்தக் கடமைகளை அச்சாதியார் மீறக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பிராமணர்கள், ஆட்சி செய்வதோ, வாணிகம் செய்வதோ, வேளாண்மையில் ஈடுபடுவதோ கூடாது என்றும் சொல்லப்பட்டுள்ளது. மற்ற சாதியார் வேதங்களைப் படிக்கவும், கற்பிக்கவும், வேள்விகளைச் செய்யவும் தடை செய்யப்பட்டுள்ளது. பிராமணன் சமூக நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட தொழிலாளிகளில் ஒரு பிரிவினன் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.[6]

பிராமணன் தனக்கு அளிக்கப்பட்ட கடமைகளிலிருந்து மாறுபடுவானாயின், மற்றவர் அக்கடமைகளைச் செய்வதில் தவறேதுமில்லை என்று பெரியோர்கள் கூறுகின்றனர். சமூகத்தில் சமய அறிவு பரவச் செய்வதற்கான தொழிலை பிராமணன் கைவிடுவானாயின், அதனைப் பிறர் செய்யத் துணிவதில் தவறேதுமில்லை என்பர். நக்கீரர், நம்மாழ்வார் போன்றோர் வேதங்கற்று அதனை மக்களிடையே எடுத்துரைத்ததையும் மேற்கோளாகக் காட்டுவர். ஆனால் தற்காலத்தில் பிராமணர் என்று சொல்லிக் கொள்பவர்கள், வருமானம் தரும் தொழில்களை நாடிச் சென்று கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்களைப் பிராமணர் என்று சொல்லிக் கொள்ளலாகாது என்பர். ஆனால் தமக்குச் சரியாகவும், வருமானத்துக் குரியதாகவுமுள்ளவற்றை அணுகும் பிராமணர்கள், மனு நூலை மற்றவருக்குக் காட்டி, தாமே உயர்ந்த சாதியினர் எனக் கூற மட்டும் தயங்குவதில்லை. மருத்துவம், சட்டம், ஆலைத்தொழில், கடல் கடந்து சென்று கணிணி தொழிலில் வருவாய் ஈட்டுதல் என்றவாறு, தற்காலத்திய பிராமணர்களின் தொழில் விரிவடைந்துள்ளது.

கடந்த மூவாயிரம் ஆண்டுகளில், பிராமணன் என்ற சாதியினர், மற்ற சாதியினரோடு கலந்து போய், ஆரியர் என்று

சொல்லும் தகுதியை அவர்கள் இழந்துவிட்டனர். இன்றும் தம்மை பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்வோறெல் லாம் சூத்திரச் சாதியைச் சேர்ந்தவர்களே. குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள பிராமணர்கள் அனைவரும், இடைக்காலச் சோழர்கள் காலத்திலும், இராமானுசராலும், பிராமணர் களாக மாற்றம் செய்யப்பட்டவர்களே. பட்டாச்சாரியார் களும், சிவாச்சாரியர்களும் தமிழர்களே. தங்களுடைய பிழைப் புக்காக வேண்டி, தம்மை இன்னும் பிராமணர்கள் எனச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தில்லைவாழ் அந்தணர்கள், கலிங்கத்தைச் சார்ந்த சூத்திரர்களே என்ற கருத்தும் உண்டு.

இரிக்கு வேதம் கி.மு. 100 ஆண்டுகளில் சொல்லப்பட்டது என்பதைச் சிலர் ஏற்கமறுத்து, கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற் பட்டதாக ஒரு கணக்கைக் கூறுகின்றனர். இன்றைக்கு ஐந்தா யிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஏற்கனவே சொல்லப்பட்டு, காற்றில் மிதந்து கொண்டிருந்த இரிக்கு வேதத்தை, சௌநகர் என்பார் தனது ஆற்றலால் உள்வாங்கிக் கொண்டு, அதனைத் தொகுத்ததாகக் கூறுவர். இரிக்கு வேத மந்திரங்களைத் தொகுத்து பாடல் வரிகளாக்கி, இரிக்கு வேதச் சம்கிதை (Rig vedha Samhita) என்றவாறு தொகுத்ததாகவும் கூறுவர். இன் றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்பு, காத்தியாயனர் என்பார் இரிக்கு வேதத்தை 64 தலைப்புகளாகப் பிரித்து, எட்டெட்டு தலைப்புகளை ஒரு அட்டகம் என்றவாறு ஓர் அட்டவணை யை வகுத்தார்.

இரிக்கு வேதத்துக்கு விளக்கம் தரும் வகையில் யாற்கர், காணகிரி போன்றோர் நிருக்தம் என்ற நூலை எழுதினர். மேலும் மாதவாச்சாரியார் எனப்படும் வித்யாரண்யரும் (கி.பி. 15ஆம் நூற்றாண்டு என்பர்), அவருக்குப்பின் சாயணரும் வேதத்துக்கு சமற்கிருதத்திலேயே உரை எழுதினர். சாயணருடைய காலம் கி.பி. 1387 என்றவாறும் சில செய்திகள் கூறுகின்றன. செர்மானி யரான மாக்சுமுல்லர் இரிக்குவேதத்துக்கு விரிவான விளக்கம் தந்த முதல் ஐரோப்பியர் ஆவார். கிரிப்பித் (Griffith) என்பார், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமிழில் சிவத்தியாநாந்த மகரிசி என்பார், கவிதை வடிவில் இரிக்கு வேதத்தை மொழி பெயர்த்தார். தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முதல்நூல் இவ ருடையதே. இவர் 1930களில் சென்னை, இராயப்பேட்டையில்

வாழ்ந்திருந்தவராவார். ஆங்கிலம், சமற்கிருதம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

இரிக்கு முதலிய வேதங்களை சூத்திரர்கள் படிக்கக்கூடாது என தடைவிதிக்கப்பட்டிருந்த போதிலும், சமற்கிருதம் கற்ற சூத்திரர்கள் கடந்த நூற்றாண்டுகளில் அறியப்பட்டிருந்ததால், வேதங்களில் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரியாமலே இருந்தனர். பிராமணர்கள் சொன்ன செய்திகளை அப்படியே நம்பிக் கொண்டிருந்தனர். அவை சரியா தவறா என்று ஒப்பிட்டுப் பார்க்கக்கூட அவர்களுக்கு சமற்கிருதம் தெரிந்திருக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறைமலை அடிகள் போன்றோர், வேதங்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் அளவிற்கு சமற்கிருதத்தில் புலமை பெற்றிருந்தனர். வில்சன் போன்ற ஆங்கிலேயர்கள் தந்த ஆங்கில விளக்க நூல்களைப் பலரும் படித்துப் புரிந்து கொண்டனர். வேதங்களைப்பற்றி அறிந்து கொண்ட தமிழர்கள், பெரும் ஏமாற்றத்தை அடைந்தனர் உலக இலக்கியங்களில் ஒப்பற்ற இலக்கியமாகக் கருதப்பட்ட வேதங்களில் ஒன்றுமேயில்லை என்பதை அறிந்த தமிழர்கள், இவைகளைத்தான் வேதங்கள் என்று சொன்னார்களாவென கேட்கத் துணிந்தனர்.

வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகள் வரலாற்று நோக்கில் அணுக இயலாதவாறு இருந்தபோதிலும், வரலாற்றுச் செய்திகள் பலவற்றையும் வேதங்கள் கொண்டிருந்தன. அவைகளைப் பற்றி அடுத்த தலைப்பில் காணலாம்.

அர்த்த சாத்திரம் அறிவியல் கலைகள் நான்கைப் பற்றிக் கூறுகின்றது. த்ரயீ எனப்படும் முதல் மூன்று வேதங்களும், வேளாண்மை - கால்நடை வளர்ப்பு (Anviksiki) என்ற அறிவியலும் சொல்லப்பட்டுள்ளன. அன்விக்டிக் என்ற அறிவியலே முதலில் சொல்லப்பட்டுள்ளது. இதில் சாங்கியம், ஒகம், லோகாய்தம் ஆகிய மெய்யியல் கொள்கைகள் கூறப்பட்டுள்ளன.[7]

சாங்கியம் என்பது கபிலர் என்ற அறிஞரால் நடத்தப்பட்ட பள்ளியாகும். யோகம் என்பது பதஞ்சலி முனிவரால் ஏற்படுத்தப்பட்ட பள்ளியில் கற்றுத்தரப்பட்ட நல்வாழ்வு முறையாகும். லோகாய்தம் என்பது இறைவனை மறுக்கும் கொள்கைகளையுடையது. வைசேடிகம் என்பது ஒழுக்கம், முறைமை, தத்துவம் போன்ற செய்திகளை அறிவிப்பது. வேதாந்தம் என்பது வேதக்கருத்துகளினின்றும் பிரிந்துசென்ற

குழு அதற்குப் புதிய விளக்கங்கள் கொடுத்துவந்த சிந்தனை களாகும். மீமாம்சை, பூருவம் - உத்தரம் என இருவகைப்படும்.

இரிக்குவேதம் என்ற தலைப்பில் ஆரியரின் தொடர்பற்ற வானியல் செய்திகள்பற்றியவை சொல்லப்படும். கி.மு. நான் காயிரம் ஆண்டுகளில் அறியப்பட்டிருந்த மெய்யியல் கொள்கை களைத் தாமே கண்டுபிடித்து உலகிற்கு அளித்ததாக ஆரியம் பறைசாற்றிக் கொண்டதை, ஆரியச் சார்புடைய ஆய்வாளர் களே ஏற்றுக் கொள்கின்றனர். கடவுள், யாகம், வேள்வி, சடங் குகள் என்று சொல்லிக் கொண்டிருந்த ஆரியர்கள், இவ்வுல கமும் பேரண்டமும் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவன் கடவுளே என்ற கொள்கையை அடியோடு மறுக்கும் லோகாய் தம் போன்ற கொள்கையினை, தாமே அறிவித்ததாகக் கூறுவது நகைப்பிற்கிடமானது. மேற்கண்ட சிந்தனைகள் எவையும் ஆரியரால் வெளிப்பட்டன என்று கூறுவதற்கு எந்தப் பின் புலத்தையும் ஆரியர்கள் பெற்றிருக்கவில்லையெனலாம்.

அறுசமயங்க ளென்பவாகி நையாயி கத்தோடு
உறையும் வைசேடிகம் மேலுளவு லோகாயு தந்தான்
குயிலு மீமாஞ்ச மென்றுகுறித்த வையின்றி நல்ல
நெறியுள வருக்கம் புத்தம் நீதியென் றோது மன்றே

– சூடாமணி நிகண்டு.[8]

ஆறுவகைச் சிந்தனைகள் அல்லது கொள்கைகளாக லோகாய்தம், வேதாந்தம், வைசேடியம், மீமாஞ்சம், அருக்கம் என்ற சமணம், புத்தம் ஆகியவற்றையே சூடாமணிச் சுட்டு கின்றது.

கணாதன் என்ற ஆசிரியரால் எழுதப்பட்டதாக வைசே டிகச் சூத்திரம் சொல்லப்படுகின்றது. கணாதன் என்ற பெயர் கணியன் ஒருவனைச் சுட்டும் பெயராகவே உள்ளது. கண்ணு வன், பிரசு கண்ணுவன், கணியாரா போன்ற பெயர்கள் சமற் கிருத இலக்கியங்களில் காணப்படுகின்றன. கணியாதன் (கணி + ஆதன்) என்ற பெயரே, கணாதன் என்று சொல்லப்பட்டுள் ளது. இவ்வகையில், ஆரியரின் வருகைக்கு முன்பே, சிந்து வெளியில் வாழ்ந்திருந்த கணியர்கள் ஆக்கித் தந்த நூல்களை யே, ஆரியர் தம்முடையதாகக் கூறிக்கொண்டு, மூலத்தை அழித்துவிட்டனர் எனக் கருத இடமுண்டு. ஆரிய மூளைக்கு அகப்படாத பல்வேறு செய்திகளை, கணியர்களே அறிவித்தி ருந்தனர்.

4. இரிக்கு வேதம்

வேதங்கள் இரிக்கு, யசூர், சாமம், அதர்வம் என நான்காகச் சொல்லப்பட்டதை, சில ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. வேதம் ஒன்றே எனவும், அது கிறித்துப் பிறப்பாண்டுகளுக்குப் பிறகு நான்காகப் பிரிக்கப்பட்டது என்றும் கருதுகின்றனர். தமிழில் அறியப்படும் நான்கு நிலங்களுக்கான கடவுளர்கள், வணக்க வழிபாட்டுமுறைகளைக் கண்டபின்னரே, வேதம் நான்காகப் பிரிக்கப்பட்டது என்று பாவாணர் கூறுகிறார். இந்த வேதங்களில் காலத்தால் பிந்தியது அதர்வ வேதமாகும். இது மந்திர தந்திர மாயங்களைப் பற்றிப் பேசுவதால், இதனை வேதமாகக் கூட ஆய்வாளர்கள் ஏற்க மறுக்கின்றனர்.

வேதங்களை இறைவனே சொல்லிவைத்தார் எனவும், அவை காற்றுமண்டலத்தில் நிறைந்திருந்தனவென்றும், செளநகர் உள்ளிட்ட பல முனிவர்கள் காற்றில் கலந்திருந்த வேதங்களை, தமது ஈர்ப்புச் சக்தியால் உள்வாங்கிக் கொண்டு அவற்றைத் தமது மொழியில் உரைத்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. மதுசந்தன், மதுசந்தனின் மகன் சேதா, கண்ணுவன், கண்ணுவனின் மகன் மேதாதிதி, சுநச்சேபன், ஆங்கீரசன், இரண்ய தூபன், கோரன், பிரசு கண்ணுவன், செவ்வியன், கோதமபுத்திரன், நோதகன், இராகுகணன், கோதமன், குத்சன், கட்சிபன், என்றவாறு பதினெட்டு பேருக்கும் மேலானவர்கள் வேதத்தைப் பாடியுள்ளனர்.[1]

கண்ணுவன், கணாதன், செவ்வியன், கோரன், கட்சீவன் போன்ற பெயர்கள் எல்லாம் தமிழ்த்திரிபுப் பெயர்களாகவே உள்ளன. கணியன் என்ற தமிழ்ச்சொல்லே, கண்ணுவன், கணாதன், பிரசுகண்ணுவன் என்றவாறு திரிந்துள்ளன. இந்த அளவில் வேதங்களைப் பாடியவர்கள் ஆரியர்களா தமிழர்களா என்ற கேள்வியும் உடன் எழுகின்றது. வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் பல செய்திகள் தமிழ்ச் சூழல்களிலும், தமிழ்நாட்டைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. வேதங்கள் பாடப்

பெற்ற காலத்தில் ஆரியர்களுக்குத் தமிழ்நாட்டைப் பற்றி எதுவும் தெரியாத நிலையில், வேதங்கள் எவ்வாறு தமிழ்நாட்டைப் பற்றிக் கூறுகின்றன என்ற கேள்வியும் எழுகின்றது.

ஆரியர்களிடையே பத்து மரபுகள் (கோத்திரங்கள்) இருந்ததாகவும், ஒவ்வொரு மரபின் தலைவனும் அவன் பெயராலேயே அழைக்கப்பட்டான் என்றும் சொல்லப்படுகின்றது. கண்ணுவர், அங்கிரர், அகத்தியர், அநகர், விசுவாமித்திரர், வத்திரி, வசிட்டர், காசியர், பதர்யாச்சுவர், சமதக்கினி என்ற முனிவர்கள் ஒவ்வொரு மரபிற்கும் உரியவராவர்.[2]

பிராமணன் என்ற சொல்லுக்கு வளர்ச்சி (Growth) என்பதே பொதுப் பொருளாகும். மேலும் விரிதல், உருவெடுத்தல், முன்னேற்றம், நெஞ்சத்திலிருந்து வெளிப்படும் உணர்வுகள் என்றவாறும் பொருள் கூறப்பட்டுள்ளன.

பிராமணன்: பிரம்மாவினின்றும் தோன்றியவன். ஆன்மீக அறிவை பிறருக்கு உரைப்பவன், வேதங்களை முற்றும் கற்றவன், சமயச் சடங்குகளுக்குத் தலைமை தாங்குபவன், பிரம்மாவின் தலையினின்றும் பிறந்தவன்.[3]

பிர (Bra) என்று சமற்கிருதத்தில் தொடங்கும் முன்னொட்டுச் சொல், பெரும் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்று பாவாணர் விளக்குகிறார்.

பெருமான் என்பதே பிரம்மா எனவும், பெரும் அமணன் என்பதே பிராமணன் என்றும் சொல்லப்பட்டன. அமணன் என்ற சொல்லுக்கு உயர்ந்தவன், முனிவன், துறவி, சமயம் சார்ந்தவன் என்றவாறு பொருள்விரியும்.

வேதம் என்ற சொல்லுக்கு அறிவு (Knowledge) என்பதே பொருளாகும். உண்மையான அறிவு, கடவுளைப் பற்றிய அறிவு, சமயங்களைப் பற்றிய அறிவு என விரியும். இரிக்குவேதமே முதன்முதலில் பாடப்பெற்றதாகக் கூறுவர். இதுவே வேதம் என்றும் சொல்லப்படும். யசூர், சாம, அதர்வ வேதங்கள், இரிக்கினின்றும் எடுக்கப்பட்ட பல பாடல்களைக் கொண்டவை என்பதால் இவை, இரிக்குவின் பிரிவுகளே என்ற கருத்தும் உண்டு.

யசூர்: தைத்திரியி சம்கிதை, வாசேசனேயி சம்கிதை என இரு வகையாய் பிரிப்பர்.

சாமம்: இரிக்கு, யசூர், சாமம் ஆகிய மூன்றினையும் த்ரயீ (Trayi) என்றும் கூறுவர். இதற்கு மும்முடியறிவு (three fold knowledge) என்றும் ஒரு பெயருண்டு.[4]

இரிக்கு வேதத்தின் காலம்:

இரிக்குவேதம் கி.மு. 1000 ஆண்டுகளில் இயற்றப்பட்டது என்பது ஆய்வாளர்களின் கணிப்பாகும். ஆனால் இரிக்கில் சொல்லப்பட்டுள்ள வானியல் தொடர்பான செய்திகள் கி.மு.4000 - 2500 ஆண்டுகளில், அதாவது ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன்னரே சொல்லப்பட்டவைகள் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆரியர்களுக்கும் வானியலுக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லையென்பது சமற்கிருத ஆய்வாளர்களே கூறும் செய்திகளாகும். குறிப்பாக செர்மானிய அறிஞர் மோனியர் வில்சன் இக்கூற்றை ஏற்றுக் கொள்கிறார். இக்கூற்றின்படி, சிந்துவெளியில் வாழ்ந்திருந்த தமிழர்கள் அறிவித்திருந்த வானியல் தொடர்பான செய்திகள்,இரிக்கு வேதத்தில் இணைக்கப்பட்டன என்பது கருத்து. இதனைப் புரிந்து கொள்ளாத பிற்கால ஆய்வாளர்கள், வானியலைக் கண்டு பிடித்தவர்கள் ஆரியர்களே எனத் தவறாகக் கருதிவிட்டனர்.

வானியல் தொடர்பாக இரிக்கு வேதம் சொல்லுகின்ற செய்திகள், பரிபாடலில் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். குறிப்பாக கோடை மழை பெய்யும் காலத்தில், வானத்தில் கோள்களும் மீன்களும் ஓரைகளும் நிலைபெற்றிருக்கும் இடங்களைப் பரிபாடல் விளக்குகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இந்நிலைகள் ஒன்றுகூடும்போது கோடைமழை பெய்வதாகப் பரிபாடல் விளக்குகின்றது. இச்செய்தியை, கங்கைப் புறத்திலோ அல்லது சிந்துவெளியிலோ மழைபெய்யும் வானியல் சூழலுடன் இணைத்து வேதம் பேசுகிறது என்றால், இந்த வானியல் உண்மைகளைத் தமிழரிடமிருந்து ஆரியர்கள் பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழர்களே இப்பகுதியை எழுதியிருக்க வேண்டும்.

இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ள கதைகளும் நடப்புகளும் கூட கோர்வையற்றே காணப்படுகின்றன. அக்கினி, இந்திரன், வாயு,வருணன், மித்திரன், அசுவினிகள், விசுவதேவர்கள், சரசுவதி, துவட்டன், பிரம்மசுபதி, சோமன் ஆதித்யன், பூதன், உருத்திரன், உசா, சூரியன், சிந்து, என்றவாறு பலரும் இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளனர். இந்திரன் பற்றி 200

க்குமேற்பட்ட பாடல்கள் உள்ளன. சிவனைப் பற்றியோ, திருமாலைப் பற்றியோ எந்தக் குறிப்புகளும் இல்லை. உருத்திரன், விஷ்ணு போன்றவர்களைப் பற்றிய செய்திகள் மிகவும் குறைவாகவே உள்ளன. இவர்களைச் சிவனுடனும் திருமாலுடனும் இணைத்துச் சொல்லப்பட்ட செய்திகள், பிற்காலத்தில் இணைக்கப்பட்டவைகளே. பிரம்மாவைப் பற்றி கூட இரிக்கு வேதம் எதனையும் கூறவில்லை. இரிக்குவேதத்தில் சொல்லப் பட்டுள்ள தேவர்களின் பெயர்களும் அவர்களது பின்புலமும் தமிழ்ச் சூழலிலேயே காணப்படுகின்றன.

இந்திரன்

இந்திரனை வேந்தன் என்றும் மருதநிலக் கடவுள் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. அறுவை எனப்படும் சித்திரை மீனின் (Spica) கூட்டத்தலைவனாக இந்திரனை இரிக்குவேதம் கூறுகிறது. (சித்திரை - சித்ரா என்ற சமற்கிருதச் சொல், சிற்றரை அதாவது சிறிய ஆடை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே) இந்திரனும் துவட்டனும் இணைத்தே கூறப்பட்டுள் ளனர். துவட்டன் (துவட்டா) என்பான் இந்திரனுக்கு வேல் வடித்துக் கொடுத்த தேவருலகக் கருமான் ஆவான். துவட்டுதல் என்பது தமிழ்ச்சொல்லே. மாழத்தை உலையில் இட்டுத் துவட்டி (காய்ச்சி)க் கருவிகள் செய்பவனை துவட்டன் என்றே அழைத்தனர். துவள் என்ற மூலச் சொல்லினின்றே துவட்டு என்ற சொல் விரிந்தது. விவிலியத்தில் காணப்படும் ஒரு கருமானை துவள் காயன் என்ற தமிழ்ச் சொல்லால் எபிறேய மொழி சுட்டுகிறது. துவள் - துவட்டு- துவட்டன் ஆகிய தமிழ்ச் சொற்கள் அக்காலத்தில் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்து இன்று மறைந்துவிட்டன எனக் கருதலாம்.

இந்திரன் என்பதற்குத் தலைவன் என்பதே பொருளாகும். மக்களில் சிறப்புடையவன், மன்னன், கடவுள் என்றவாறு இச்சொல் பொதுச்சொல்லாகவே அறியப்படும். பிந்த் (Bindh) என்ற மூலச்சொல்லிலிருந்தே, இந்திரா என்ற பெயர் விரிந்த தாக மாக்சு முல்லர் கூறுகிறார்.[5] பிந்த் என்பதற்கு நீர்த்துளி என்றும் பொருள் கூறுகிறார். வானின்று விழும் மழைத் துளியை விண்துளி என்றும் கூறலாம். விண்துளி- விந்துளி- விந்து என்றவாறு சொல்லப்பட்டது. விந்து என்பதற்கு நீர் (liquid state) என்பதே பொருளாகும். விந்து சிதறி விழுவதைச் சிந்து என்றனர். விந்து என்பது நீர்த்துளியையே குறித்துப்

பிற்காலத்தில் ஆணின் உயிரணுவாகவும் சொல்லப்பட்டது. விந்து என்ற சொல், இந்து என்றும் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

விந்து - சிந்து-இந்து ஆகிய சொற்கள் நீர்த்துளியுடன் தொடர்பு கொண்டவைகளாகும். சிந்து பிற்காலத்தில் ஆற்றைக் குறித்தது. சிந்து என்ற பெயருடன் இந்து என்ற பெயரும் அக் காலத்தில் சொல்லப்பட்டிருக்க வேண்டும். சிந்து ஆறு பாயும் பஞ்சாப் பகுதியை, இந் - தூ (Indoo) என்று எபிரேய மொழி கூறுகிறது.[6] பாரசீக மன்னன் அகசுரத் என்பானது ஆட்சியின் கிழக்கு எல்லையாக இந்தூ என்ற நாடு சொல்லப்பட்டுள்ளது. எனவே, சிந்து - இந்து ஆகிய பெயர்கள் வழக்கிலிருந்தன என்பது தெளிவாகின்றது. Indoo என்ற சொல்லின் நீட்சியாக வே India என்ற சொல் அறியப்பட்டது. சிந்து- இந்து - இந்தியா எனத் திரிந்ததாகச் சிலர் கருதினர்.

எனவே தமிழில் இந்து என்ற சொல் வழக்கிலிருந்ததையே இந்து+அரன் என்ற பெயர் விளக்குகின்றது. அரன் என்பதற்குத் தலைவன் என்றும், மன்னன் என்றும் பொருளுண்டு. சேய்+ அரன் சேரன் எனப்பட்டதை ஒப்புநோக்குக. திருவள்ளுவர் கூறும் இந்திரன், தலைவன் என்ற பொருளில் சொல்லப்பட்டவனே என்க. இந்திரன் மழையோடு தொடர்புடையவானக் கருதப்பட்டதால், மருதநிலத் தலைவனாவான். இந்திரனை மா +தளி என்று இருக்குவேதம் கூறுகிறது. இதற்கு மா மழை என்பதே பொருளாகும்.

மாமழை போற்றுதும் என்று சிலப்பதிகாரம் கூறும் செய்தியும், இந்திரவிழவூர் எடுத்த காதையும் இந்திரனைச் சிறப்பித்துத் தமிழர் எடுத்த விழாக்களாகும். பூம்புகாரில் கோடையில் நடைபெற்ற இந்திரவிழா பற்றி தமிழ் இலக்கியங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. மருதநிலத் தலைவன் இந்திரன் என்றும் வேந்தன் என்றும் சொல்லப்பட்டான். இந்திரனை தெய்வமாகக் கருதிக்கொள்ள ஆரியருக்கு எந்தப் பின்புலமும் இல்லை. தமிழில் அறியப்பட்ட சூழல்கள் மற்றும் பொருளிலேயே இந்திரன், இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளான்.

வேனில் முடங்கல் காலமான ஆனி ஆடித் திங்கள்களில் பெய்யும் தென்மேற்குப் பருவ மழையையும், கடுங்கோடையிடியும் மின்னலும் இந்திரனாக உருவகம் செய்யப்பட்டுள்ளன.

இப்பருவ மழைக்கு முற்றிலும் தொடர்பில்லாத ஆரியரது குறிப்புகள் இந்திரனைத் தமிழ்த் தலைவனாகவே சுட்டுகின்றன. தென்கோளரையில் அமைந்துள்ள அகி என்னும் பெரும்பாம்பை இந்திரன் வீழ்த்திய கதை, அய்ட்ரா (Hydra) என்னும் விண்மீன் கூட்டத்தைப் பற்றிய உருவகமாகும். Hydra என்ற கிரேக்கச் சொல், பாம்பைக் குறித்தது. இது, ஆடு+ அரா என்ற தமிழ்ச் சொற்களின் திரிபே. ஆடரா வென்பது, படமெடுத்தாடும் பாம்பைக் குறித்ததாகும்.

துளங்கொளியும் (Kettai or Antares) முடப்பனையும் (Anusham or Graffias) நளி (Vrichika or Scorpius) என்ற விண்மீன் கூட்டத்தில் அடங்கியவைகளாகும். இக்கூட்டம் தேளைப் போன்று தெரிந்ததால், நளியென்றே சொல்லப்பட்டது. இதன் கொடுக்குப் பகுதியை குருகு அல்லது மூலம் என்பர். இவ் விண்மீன் கூட்டத்தையே விருத்திரன் என்று இரிக்கு வேதம் கூறுகிறது.[7] விரித்திரன் கொடியவன் என்றும், ஆரியர்களை அச்சப்படுத்தி வந்தவன் என்றும், ஆரியருடைய ஆநிரையெல் லாம் கவர்ந்து சென்றவன் என்றும் வேதம் கூறுகிறது. இவன் சிந்துவெளியை ஆண்ட சிறப்புமிகு மன்னனாகக் கருதலாம். விருத்திரனை வீழ்த்த ஆரியர் இந்திரனைத் துணைக்கழைத் தனர். இந்திரனுக்கு விருந்து வைத்து (யாகம் செய்து) அவனை மகிழ்வித்தனர். முதலில் விருத்திரனை எதிர் கொள்ளத் தயங்கிய இந்திரன், ஆரியர்களின் வற்புறுத்தலுக்கிணங்க ஒப்புக் கொண்டான். விசுவகர்மா என்ற துவட்டன் வடித்துக் கொடுத்த வேலையைக் கொண்டு (thunder bolt) விரித்திரனை விலாவில் தாக்கிக் கொன்றான். அப்போதும் இந்திரனுக்கு அச்சம் தொற்றிக் கொள்ளவே, விரித்திரன் உயிர்பெற்று தன்னைக் கொன்றுவிடுவானோ என அஞ்சி கலுழனிலும் விரைவாக அவ்விடத்தைவிட்டுப் பறந்துபோனான் என்று இரிக்கு வேதம் கூறுகிறது. விருத்திரன் இந்திரன் போர் என்பது, தமிழர் -ஆரியர் போராகவே வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது எனலாம்.

இந்திரன் பற்றி சமற்கிருத இலக்கியங்கள் கூறும் செய்தி களாவன:

இந்து (Indu):

துளி (to drop) என்ற சொல்லிலிருந்தே இந்த்ரா என்றசொல் பிறந்தது. இந்து = நீர்த்துளி; ரா (Ra) = வெற்றியாளன் (Conqueror according to S.T. Muir). ரா = அரி என்ற தமிழ்ச் சொல்லின்

திரிபு. அரிசன் - அரசன் என்றானது. ராசன் என்று பிரெஞ்சு மொழியில் சொல்லப்பட்டுள்ளது. Syand = to drop. இந்திரன் வளிமண்டிலத்துக்கும் வானத்துக்கும் தலைவனாக (atmosphere and sky)ச் சொல்லப்படுகிறான். சுரேந்திரன், இராசேந்திரன், பர்வதேந்திரன் என்றும் அறியப்படுகின்றான். முக்கடவுளருக்கு அடுத்த இடத்தில் (Subordinated to the Triad) வைக்கப்பட்டுள்ளான். இருப்பினும் 200க்கும் மேற்பட்ட பாடல்களால் இந்திரன் போற்றப்படுகிறான். இரிக்குவேதம், இந்திரன் பெயரையே பெருமளவில் பயன்படுத்துகிறது. இந்திரன் வலது கண்ணாகவும் (right pupil) இந்திராணி இடது கண்ணாகவும் சொல்லப்பட்டுள்ளனர்.

இந்திரன்[8]: 14 சூரியர்களில் ஒருவன்; மருத்துவன்; ஒரு நச்சுச் செடி (Wrightia Antidysenterica); இருபத்தாறாவது ஓகம்; 23வது விண்மீன் கூட்டமாகிய நாழி அல்லது பூரட்டாதி (Pagasi); இரவு; மாந்த உடலில் உள்ள ஆவி (Spirit); சம்புத்திவின் ஒன்பது பகுதிகளில் ஒன்று; காளை; உலகம் (earth).

மேற்கண்டவற்றிற்கெல்லாம் இந்த்ர என்ற பெயர் காணப்படுகின்றது. இதற்கான தொடர்புகள் பற்றிய விளக்கங்கள் தெளிவாக இல்லை. ஆனாலும் சமற்கிருதப் பண்டிதர்கள் மேற்கண்டவற்றை இந்த்ர என்ற சொல்லோடு தொடர்புபடுத்துகின்றனர்.[9]

அசுவினி:

அசுவினி என்பதற்குப் புரவி என்பது பொருளன்று. அசுவினி இருவராகச் சொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் வானுலகத்தின் மருத்துவர்கள் எனப்படுகின்றனர். அசுவினி என்பது ஒரு மீன் கூட்டமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அது புரவியின் தலைபோலக் காணப்படுவதால், அசுவினியைப் புரவி என்றனர். அசுவினிகளைப் பற்றி இரிக்குவேதம் சொல்லும் செய்தியாவது: சரண்பு என்பவள் ஞாயிற்றை மணந்தாள். இவர்களுக்கு யாமனும் யாமியும் பிறந்தனர். யாமன் பகலென்றும், யாமி இரவென்றும் சொல்லப்படுகின்றனர். ஞாயிறு தோற்றுவிக்கும் இயற்கையின் மாற்றங்கள் இவ்வாறு கதையாகச் சொல்லப்பட்டது. ஞாயிறு சரண்யுவை அடிக்கடி பாலியல் தொல்லைகள் செய்துவந்தான். இதனின்றும் தப்பிக்க, சரண்யு தன் நிழலையே தன் உருவமாக மாற்றிவிட்டு, புரவி வடிவம் கொண்டு வெளியேறிவிட்டாள். சாயை என்றறியாத ஞாயிறு

அந்நிழலைப் புணர்ந்து மனு என்பவனைப் பெற்றெடுத்தாள். சாயை தன் மனைவியின் நிழல் என்பதை அறிந்த ஞாயிறு, சரண்யுவைத் தேடினான். அவள் புரவி உருவில் இருப்பதை அறிந்து தானும் புரவியாக மாறி, சரண்யுவைப் புணர்ந்தான். இவர்கள் வழியே அசுவினி என்ற இரட்டையர்கள் பிறந்தனர். இவர்களைப் பற்றிய குறிப்பை இரிக்கு வேதம் கூறுகிறது.

மித்திரன்:

ஞாயிற்றின் உருவமாகவே மித்திரன் சொல்லப்படுகின்றான். முடப்பனை என்ற அனுட மீனின் தலைத்தெய்வமாக மித்திரன் கருதப்படுகின்றான். ஞாயிற்றுக்கு ஒளியைக் காட்டுபவனும்,[10] இருளைப் போக்குபவனும்[11] மித்திரனே. ஞாயிறாகிய மித்திரன் மிக உயரத்தில் உள்ளதால், வானத்தின் தென் கோளரையையும் (Southern hemisphere) வடகோளரையையும் அவனால் காண இயலும்.[12] இவை முறையே திதி, அதிதி என்று சொல்லப்படும். மித்திரனையும் வாரணனையும் இணைத்தே இரிக்குவேதம் பேசுகிறது. இருப்பினும் இவ்விருவரும் எதிரெதிரானவர்களாவர்.

பாரசீகத்தின் பண்டைக்கால தெய்வமாக மித்திரன் வணங்கப்பட்டான். அவனை மித்திராசு என்று அவர்கள் அழைத்தனர். ஞாயிறு மகரக் கோட்டை தொடும் நாளை, மித்திரனின் பிறந்தநாளாகக் கருதினர் (திசம்பர் 21) இந்நாளையொட்டியே, இயேசு பிறந்த நாளும் குறிக்கப்பட்டது. உண்மையில் இயேசு திசம்பர் 25 ஆம் நாளில் பிறக்கவில்லை என விவிலிய ஆய்வாளர்களே கூறுகின்றனர். பாரசீக நாட்டின் தலைத் தெய்வமாக மித்திரன் வணங்கப்பட்டான். மித்திர வணக்கம் உரோமை வரையிலும் சென்றது. உரோமர்களில் சிலர் மித்திரனை வழிபட்டனர். மித்திரன் ஒரு காளையைக் கொன்று, அதன் குருதியினால் இவ்வுலகின் பாவங்களை அகற்றினான் என்ற கதையின் அடிப்படையில், கிறித்துவ சமயம் இயேசுவின் பாடுகளை உருவகப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மித்திரனை இரிக்குவேதம் புகழ்ந்து பேசுகிறது.[13]

மித்திரன் அல்லது மித்ரா என்ற சொல்லுக்கு நண்பன், துணைவன், உடனிருப்போன் என்று இரிக்குவேதம் கூறுகிறது. மித்ரா - வருணா ஆகியோருக்கிடையே நிலவும் நட்பையும் இச்சொல் குறிக்கிறது. இரிக்கு வேதத்தில் 59 இடங்களில் மித்திரன்

பெயர் சொல்லப்பட்டுள்ளது. பிற்காலத்தில் முடப்பனை (அனுராதா) அல்லது அனுடம் என்ற விண்மீன் கூட்டத்தோடு மித்திரன் தொடர்புபடுத்தப்பட்டான்.[14]

மை (Mi) என்ற தமிழின் வேர், கண்ணுக்குத் தெரியாத இருட்டைக் குறிப்பது. அதே போல் இருவரிடம் தோன்றும் நட்பும் கண்ணுக்குத் தெரிவதில்லையாதலால், மை என்ற சொல்லை நட்புக்குரியதாக சமற்கிருதம் எடுத்துக் கொண்டது. மை - மையல் - மாயம் என்ற சொற்களை ஒப்புநோக்குக. மை +இரா = மைத்ரா அல்லது மித்ரா எனப்பட்டது. இரா என்பதும், இருளை விளக்கும் தமிழ்ச்சொல்லே. விசுவாமித்திரன் என்ற சொல்லுக்கு மிக உயர்ந்த நண்பன் என்பதே பொருளாகும். விசு = வானம், விசும்பு என விரியும். வானத்தைப்போல உயர்ந்தவன் என்பது பொருளாகும். மைத்திரன், மைத்ரேயி ஆகியவைகளும் கருமையை விளக்கும் சொற்களே.

அக்கினி:

நெருப்பு என அறியப்படும் வேள்வியில் உண்டாக்கப் படும் நெருப்பு. கார்க பத்யா (Garha Patya), ஆகவனியா (Ahavaniy), தக்ழனா (Dakshina) என்று மூவகை நெருப்பைக் குறிப்பிடுவர். இம்மூன்றும் கதிரவன் தன் சுற்றுப்பாதையில் நிலைகொண்டிருக்கும் இடங்களை அடிப்படைகளாக வைத்துச் சொல்லப்பட்டவைகளாகும். நெருப்புக் கடவுள் உண்ட உணவு செரிமானம் ஆவதற்காக இரைப்பையில் உண்டாகும் நீர் (gastric fluid) அக்கினியை வைத்தே வேள்விகள் நடத்தப் பட்டன. தீயைக் கடவுளாகத் தமிழரும், பாரசீகரும் வழிபட்ட செய்தி வரலாற்றில் தெளிவாக்கப்பட்டுள்ளன. அக்கி என்பது வட்டமான திட்டு அல்லது, வட்ட வடிவிலான குறி எனப் படும். கொழுந்துவிட்டு எரியும், தீயின் நாவில் தோன்றும் கரும்புள்ளியை அக்கி என்றனர். மை பொதி விளக்கு எனத் தமிழ் இலக்கியங்கள் விளக்குகின்றன. வெப்பம் மாந்தனுக்குத் தேவையான ஒன்றெனஅறியப்படுவதால், வெப்பம் சார்ந்த அனைத்தும் அக்கினியென்றே சொல்லப்பட்டன. அக்கினியைப் பற்றிய கதைகளும் நிறைய உண்டு. கதிரவனின் உருவகமாகவே அக்கினி வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.[15]

சோமன்:

நிலவையே இச்சொல்லால் குறித்தனர். பண்டைத் தமிழர்கள் நிலவை அடிப்படையாகக் கொண்டே காலத்தைக் கணித்தனர்.

நிலவு தண்மையான கதிர்களை வீசுவதால், அவ்வொளி மக்களுக்கு மகிழ்வைத் தந்தது. நிலவொளி மயக்கத்தைத் தருவ தால் அல்லது மதியை மயக்குவதால், நிலவையே மதி என்றனர். சோம்பு என்ற சொல்லுக்குத் தமிழில் மயக்கம் என்ற பொருளும் உண்டு.

சோம்பிக் கிடப்பது பிற்காலத்தில் வேலையில்லாமல் இருப்பது என்ற பொருளில் அறியப்பட்டது.

சோம்பு : மயக்கம்; சோமன் =நிலவு; சோமசுந்தரன் = மதியைச் சூடியுள்ள கடவுள்.

இரிக்குவேதம் சொல்லும் சோமா என்ற கடவுள், மயக்கத்தைத் தரும் மதுவைக் குறித்ததாகும்.

சோமச் செடியானது (Asclepias acida or sacrostemma viminalis indica) புளிச்சைக் கீரைச் செடியைப்போன்றது. இச் செடியில் உள்ள பட்டைகளில் நீர் சேர்த்திருக்கும். அந்நீர் வெள்ளுவாக் காலத்தில் (முழுநிலவு) மேலும் ஊறி நிற்கும் என்பர். இப்பட்டையினின்றும் எடுக்கப்படும் நீரைக் காய்ச்சி வடித்து மதுவகையொன்றை உருவாக்கினர். முழுநிலவு நாளன்று பட்டைநீர் நிறைந்து காணப்படுவதால், அந்நாளிலேயே அதனை வெட்டி எடுப்பர். நிலவுக்கும் பட்டை நீருக்கும் உள்ள தொடர்பு இயற்கையானது. மது மயக்கம் தருவது என்பதாலும், மதியாகிய நிலவும் மயக்கம் தருவதென்பதாலும், இம் மதுவுக்கு சோமம் என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்த சோமக்கள், ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன்னரே சிந்துவெளியில் அறியப்பட்டிருந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதுவரை கண்டிராத சோமக்கள்ளை இந்தியாவில் குடித்துப் பார்த்த ஆரியர்கள் அக்கள்ளுக்கு அடிமையாகினர் எனலாம். ஆரியரின் அன்றைய வாழ்வில் உணவைப் போலவே சோமக்கள்ளும் இடம்பெற்றது. வேள்வியின் போது களைப்பு தெரியாமல் இருக்கவும் உரத்த குரலில் மந்திரங்கள் ஓதவும், சோமக்கள் ஆரியருக்குத் துணைபுரிந்தது. தாம் பெற்ற மகிழ்வை, கடவுளுக்கும் தரும் வகையில், சோமக்கள் ஆரியருக்குத் துணைபுரிந்தது. சோமக்கள் வேள்வியின் போது படைக்கப்பட்டது.

சோமச்செடியை அம்மியில் வைத்து (Adri) நசுக்கி, அதன் சாற்றை ஒரு கலத்தில் (Pavitra) நிரப்புவர். பின்னர் காய்ச்சி

வடித்து பெரிய சாடிகளில் (Kalasa) ஊற்றி வைப்பர். வெண்ணெய், மாவு ஆகியவற்றுடன் கலந்து கடவுளுக்குப் படைப்பர். தனியாகவும் குடிப்பர். முழுநிலவு நாளன்றே சோமக்கள் இறக்கப்படுவதாக இரிக்குவேதம் கூறுகிறது. மூசாவத் (Muja - vat) என்ற மலையில் சோமச் செடி விளைந்தது. வானுலகத்தில் கந்தர்வர்கள் சோமக் கள்ளை அருந்திக் கிடப்பர். அவர்களே சோமச் செடியை பிறருக்குக் காட்டாமல் வைத்திருந்தனர். கலுழன் (Falcon) ஒன்று வானுலகத்திலிருந்து சோமச் செடியை கந்தருவருக்குத் தெரியாமல் திருடிக் கொண்டு வந்துவிட்டது. அதனால் சோமச் செடிக்கும் கடவுள் தன்மை கொடுக்கப்பட்டது.[16] இரிக்கு வேதத்தில் சோமனைப்போற்றி 114 பாடல்கள் உள்ளன. சோமன் நிலவுடன் தொடர்புபடுத்தப்பட்டான். நிலவுக்கு இந்து என்ற பெயரும் உண்டு. தண்மையைச் சிந்துவதால் அது இந்து என்றும் அழைக்கப்பட்டது. இந்து நீருடன் தொடர்புடைய சொல்லாதலால், சோமநீரையும் இந்து என்றனர். சோமா என்ற சொல்லைக் கொண்டு சோமகா, சோமன், சோமனா, சோமின், சோமியா போன்ற சொற்களும் அறியப்படுகின்றன.[17]

வருணா:

நீர், கடல் ஆகியவற்றோடு தொடர்புடைய கடவுள் (relating to the sea, water, ocean, aquatic etc.) நீரோடு தொடர்புடைய அனைத்துப் பணிகளும் வருணனின் பணிகளாகவே கருதப்படும். கால்வாய் வெட்டும்போதும், கிணறு தோண்டும் போதும் வருணனை வழிபடுதல் வேண்டும். வருணனுடைய பெண் ஆற்றல் வருணி எனப்படும். கடலைக்கடைந்த போது, இந்த ஆற்றல் வெளிப்பட்டதாகக் கூறுவர். வாரணமித்திரன் இரட்டையர்கள்.[18]

வருணா என்று சொல்லப்படும் கடவுள், நெய்தல் நிலக் கடவுளான வாரணனே எனலாம். வருணனையும் ஞாயிற்றுக் கடவுளாக இரிக்குவேதம் கூறுகிறது. கதிரவனுக்கு ஒளியைச் சேர்த்து இருளை அகற்றுபவனாக வருணன் சொல்லப்படுகின்றான். கடலின் தொலைவில் நீரினின்று எழும் ஞாயிறு, கடலின் ஆழத்திலிருந்தே எழுவதாகக் கருதினர் என்பதால், கதிரவன் மேலெழ, வருணனே காரணமானான் என்றும் சொல்லப்பட்டது. ஆண்டு, மாதம், நாள் பற்றிய கணக்குகளை வருணன் அறிந்திருந்தான்.[19] வருணனைப் பற்றிப் பல்வேறு

கதைகள் உண்டு. மித்திரனும் வருணனும் தங்கள் விந்துகளை ஒரு குடத்தில் பெய்தனர். அதனை ஊர்வசி தன்னுள் ஏற்றுக் கொண்டு அகத்தியனையும் வசிட்டனையும் பெற்றெடுத்தாள் என்பதும் ஒரு கதையாகும். சமற்கிருதத்தில் சொல்லப்பட்ட முனிவர்கள் அறிஞர்கள் எல்லோரும் முறையான தாய் தந்தை யருக்குப் பிறந்ததாகச் சொல்லப்படவில்லை.

பிரம்மனுக்கும் அவன் மகளான ரூப்பசி என்பவளுக்கும் பொருந்தாத புணர்ச்சியில் பிறந்தவனே வசிட்டன் என்றொரு கதையுண்டு. பிரம்மன் மற்றொரு சக்கிலியப் பெண்ணை வலிய வன்புணர்ச்சியில் ஈடுபடுத்தி பராசரனைப் பெற்றெடுத்தான். அவனும்கூட ஒரு வேடப் பெண்ணை மணந்து வேத வியா சனைப் பெற்றான். இவ்வாறு சொல்லப்பட்ட கதைகளில் வரும் பெண்கள் அனைவரும் சூத்திரப் பெண்களாகவே அறியப் படுவதால், அக்காலத்து முனிவர்களும் ரிசிகளும் தமிழ் அறிஞர்களான கணியர்களாகவே அறியப்படுகின்றனர்.

இரிக்குவேதம் மூலநூல் அன்று:

மேலே சொல்லப்பட்ட தேவர்களைப் பற்றிக் கூறப்படும் செய்திகள் இருக்கு வேதத்தில் விலாவாரியாகச் சொல்லப்பட் டுள்ளன. இவர்கள் அனைவரும் வரலாற்று மாந்தர்களா அல்லது கற்பனையாகச் சொல்லப்பட்டவர்களா என ஆராய்ந்தால், தமிழ்க் கணியர்கள் அறிவித்த வானியல் செய்திகளின் உருவகங் களாகவே தெரிகின்றன. இரிக்குவேதம் முழுவதுமே வானியல் தொடர்பான கதைகள் தாம் காணப்படுகின்றன. இந்த வானியல் செய்திகள் யாவும் ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன்னரே, அதாவது கி.மு. 4000 ஆண்டுகளிலேயே இந்தியாவில் அறியப் பட்டிருந்தன என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். அவ்வாறெனில் இரிக்குவேதம் என்பது ஏற்கனவே சொல்லப் பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு தங்களது கற்பனையில் மேலும் சிலவற்றை இணைத்துக்கொண்டு உருவாக் கப்பட்ட கதைகளே என அறியலாம். பல்லாயிரம் ஆண்டு களாகக் காற்றில் மிதந்திருந்த செய்திகளே, சௌநகன் போன்ற வர்களால் தொகுக்கப்பட்டன என்று சொல்லப்டுவது, ஏற்கன வே சொல்லப்பட்டிருந்தவைகளையே சௌநகன் போன்றோர் எடுத்துக் கொண்டனர் எனக் கருதத் தோன்றுகிறது.

ஒன்றாயிருந்த இரிக்குவேதத்தைப் பின்னர் மூன்றாகப் பிரித்துக் கொண்டனர். அர்த்தசாத்திரம் என்ற நூல் (கி.மு.300)

இரிக்குவேதத்தின் மூன்று நூல்களையே குறிப்பிடுகின்றது. நான்காவது நூலான அதர்வவேதம், கிறித்துவப் பிறப்பாண்டு களுக்குப் பிறகே தொகுக்கப்பட்டது எனலாம். இந்நான் காவது நூலை, வேதநூலாக ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. இரிக்குவேதத்தைத் தொகுத்தவன் வியாசன் என்று கூறுவர். வியாசன் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தி ருந்தவன் என்பர். பாணினிக்குப் பிறகே அறியப்பட்டவனா வான். வியாசன் தொகுத்த வேதத்திலும் பல செய்திகள் சேர்க் கப்பட்டன. அதன்பின்னர் நூற்றாண்டுகள் தோறும் பல்வேறு செய்திகளும் இணைக்கப்பட்டன.

இரிக்கு வேதத்தின் பத்தாவது சூக்தமாகிய புருச சூக்தம் என்பது, கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குப் பிறகே இணைக்கப் பட்டதாக, டாக்டர் அம்பேத்கர் கருதுகிறார்.[20] ஏற்கனவே சொல்லப்பட்ட இரிக்குவேதத்தில் உலகப்படைப்பு பற்றியோ, நால்வகைச் சாதிகள் பற்றியோ, அந்நால்வகைச் சாதிகளில் பிராமணனே உயர்ந்தவன் என்பது பற்றியோ, பிரம்மாவைப் பற்றியோ எந்தக் குறிப்புகளும் இல்லை. தங்களை உயர்ந்த சாதியாகக் காட்டிக்கொள்ள வேதத்தினின்றும் எடுத்துக்காட் டுகளைக் கூறவும், அதன்வழியில் மக்களை நம்பவைக்கவும், புருசசூக்தத்தை எழுதித் திணித்துவிட்டனர் என்று அம்பேத் கர் கூறுவது உண்மையென்றே கருதப்படுகின்றது.

எவ்வாறெனில், பத்தாவது சூக்தம் ஒருவகையான சமற் கிருத நடையைக் கொண்டிருப்பதாகவும், அதற்கு முந்திய சூக்தங்கள் வேறு நடையை (Style) க் கொண்டிருப்பதாகவும் அம்பேத்கர் கருதுகிறார். மனு என்பவன் எழுதியதாகச் சொல் லப்படும் சட்டத்தொகுப்பும் பிற்காலத்தில் இணைக்கப்பட்ட தே. இந்த மனுநூலின் மூலத்தை யாருமே பார்க்கவில்லை என்பதாக செய்திகள் உள்ளன. மனுவின் சட்டங்களும் வாய் மொழியாகச் சொல்லப்பட்டு, புதுப்புது இடைச் செருகல் களும் அவ்வப்போது நிகழ்ந்துள்ளன.

கிழக்கிந்தியக் குழுமம் வங்காளத்தில் ஆட்சிப் பொறுப் பேற்றபோது, சர்.வில்லியம் ஜோன்சு என்பவர் நீதித்துறைத் தலைவராகவும் பொறுப்பேற்றார். கிறித்துவர்களுக்கு விவிலியம் மற்றும் திருச்சபை சட்டங்கள் படியும், இசுலாமியருக்கு குர் ஆன் சட்டங்கள் படியும் நீதி வழங்க அவருக்குத் தடையேதும் இல்லை. ஆனால் இந்தியர்களுக்கு எந்தச் சட்டத்தின் அடிப்

படையில் நீதி வழங்குவது எனச் சிந்தித்தார். பிராமணப் பண்டிதர்களை அழைத்து இந்தியர்களுக்கு என்ன சட்டங்கள் உள்ளனவென்று கேட்டார். இந்தியர்களுக்கு மனுநீதிச் சட்டத் தொகுப்பைத் தம்மிடம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அப்படியொரு நூல் அவர்களிடம் இல்லையென்பது ஜோன்சுக்குத் தெரியாது.

உடனடியாக பிராமணப் பண்டிதர்கள், தாங்கள் ஏற்கனவே அறிந்திருந்த சட்டங்களோடு, இன்னும் எவையெவை தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் எனக் கருதினார்களோ அவற்றையெல்லாம் இணைத்து, ஒரு புதிய நூலை உருவாக்கி, இதுவே மனுநீதி நூல் என அளித்தனர். அதனை இந்துச் சட்டம் (Hindu Laws) என்று ஜோன்சு பெயரிட்டார். இந்து என்ற சொல்லை, அரசு ஆவணங்களில் முதலில் அறிமுகம் செய்தவர் சர் வில்லியம் ஜோன்சு என்ற ஆளுநரே எனலாம்.[21]

மனுநீதி நூல் இந்தியாவில் யாரிடமும் இல்லையென்பதை பிராமணர்கள் அறிந்திருந்தார்கள். அதனாலேயே புதிதாக ஒரு தொகுப்பை உருவாக்கி அளிக்க முன்வந்தனர். இவ்வாறாக புதுப்புது இடைச் செருகல்களுடன் ஆங்கிலச் சட்டத்தில் மனுநூல் புகுத்தப்பட்டது. விடுதலை பெற்ற இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டக் குழுவில் பிராமணர்களே பெரும்பான்மையோர் இருந்ததால், மனுச்சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் ஏற்கப்பட்டது. அம்பேத்கர் அக்குழுவில் உறுப்பினராயிருந்தாரென்றும், அவரது வேண்டுகோள்கள் புறந்தள்ளப்பட்டன. என்னால் இந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்யமுடிந்தது இவ்வளவுதான் என்று, உள்ளம் குமறி அம்பேத்கர் கூறியதாக செய்திகள் உள்ளன.

எனவே, இரிக்குவேதம் தொடங்கி, இன்றைய இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையிலான அனைத்து நிலைகளிலும், ஆரியப் பிராமணர்களின் இடைச் செறுகல்கள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. இந்த திணிப்புகளை மூடிமறைப்பதற்கான பல்வேறு முயற்சிகளையும் அவர்கள் எடுத்துள்ளனர். வேதங்கள், புராணங்கள், துணைப்புராணங்கள் என விரிந்து பரந்துள்ள ஆரிய இலக்கியங்கள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

புராணங்கள் என்ற சமற்கிருதச் சொல்லுக்கு பழங்கதை அல்லது தொன்மக் கதை என்பதே பொருளாகும். புராணங் களில் பதினெட்டு வகையானவை சொல்லப்பட்டுள்ளன. அவை கள் சமற்கிருத மூலத்தில் எழுதப்பட்டவைகள் என்றும், அதனைத் தழுவியே இந்தியமொழிகளில் தமிழ் உட்பட எழுதப்பட்டன என்றும் கூறுகின்றனர். உண்மையில் அப்புரா ணக் கதைகளுக்கான பின்புலங்கள் பல ஆண்டுகளாகச் சொல் லப்பட்டு வந்தவைகளாகவே அறியப்படுகின்றன. கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே பல்வேறு புராணங்கள் எழுதப்பட் டுள்ளன. ஏற்கனவே அவைகள் தமிழ்மொழியிலேயே எழுதப் பட்டவைகளாகும். அதனை தப்பும் தவறுமாகக்கூட சமற்கிரு தத்தில் மொழிபெயர்துள்ளனர் என்பர். பதினெட்டு புராணங் களாவன:

1. சிவபுராணம் : சிவன் தமிழ்க் கடவுளே என்பதால், தமிழில் அறியப்பட்டிருந்ததே இந்நூல் எனலாம்.
2. கந்த புராணம் : முருகனும் தமிழ்க் கடவுளே. அவனை கந்தன், சுப்பிரமணியன், கார்த்திகேயன் என்றவாறு பெயர் மாற்றம் செய்துவிட்டனர்.
3. கலிங்கபுராணம் : இலிங்க வழிபாட்டை எதிர்த்தவர்கள் ஆரியர் கள் என்று செய்திகள் கூறுகின்றன.
4. கூர்மப் புராணம் : கூர்மை என்பது தமிழ்ச் சொல்லே.
5. வாமனப் புராணம் : சேரநாட்டில் நிகழ்வுற்றதாகும்.
6. வராகப் புராணம் : இதுவும் தமிழ்நாட்டில் அறியப்பட்டதே.
7. பவுசிகப் புராணம் : எதிர்காலம் பற்றிக் கூறப்பட்டுள்ளது (Prophetic) சமயக் குரவர்கள் பற்றியது.
8. மத்சியப் புராணம் : கடல்,நீர், மீன் ஆகியவைகளைக் கண்டு அஞ்சியவர்கள் ஆரியர்கள் என்பது வரலாறு.
9. மார்க்கண்டேயப் புராணம் : தமிழ்நாட்டில் அறியப்பட்டது.
10. பிரம்மாண்டப் புராணம் : பிரம்மாவைப் பற்றிக் கூறினாலும், இது சிவபுராணமே என்றும், பிரம்மாவின் மேல் ஏற்றிச் சொல் லப்பட்டது என்று சதுரகராதி கூறுகிறது.
11. நாரதர் புராணம் : நாரதன் கைவீணையும், மூவுலகு என்பதும், தமிழ்ச் சூழல்களில் அறியப்படுவதே. சேர,சோழ, பாண்டிய நாடுகளைச் சுற்றிவந்த நரன் என்றே அறியப்படுகிறான்.

12. பாகவதப் புராணம் : திருமாலின் பத்துப் பிறப்புகளைக் கூறும் நூல்.

13. கருடப் புராணம் : இதுவும் ஒரு வைணவ நூலே.

14. வைணவப் புராணம்: வைணவம் தமிழ்நாட்டில்தான் தோற்றுவிக்கப்பட்டது.

15. பிரம்ம புராணம் : பிரம்மனைப் பற்றியது

16. பத்ம புராணம்: இதுவும் பிரம்மனைப் பற்றியதே இவையிரண்டும் பிரம்ம புராணங்கள் எனப்படும்.

17. பிரம்ம கைவர்த்தப் புராணம் : கண்ணன்கதை, பிரம்மாவுக்கு ஏற்றிச் சொல்லப்பட்டது.

18. அக்கினிப் புராணம் : தீயைப் பற்றியது.

மேற்கண்ட புராணங்கள் அனைத்தும் தமிழில் எழுதப் பெற்றிருந்தவைகளே. இவற்றின் தமிழ்மூலங்கள் திட்டமிட்டே அழிக்கப்பட்டன. இவையன்றி துணை புராணங்கள் தல புராணங்கள் என அறியப்பட்டியல் நீளும்.

சென்ற நூற்றாண்டில், சென்னை பார்த்தசாரதித் திருக் கோயிலில், தமிழில் எழுதப்பட்ட ஆகமநூல் ஒன்று கிடைத்தது. ஆகமங்கள் தமிழில் இல்லை என்பதை, இந்நூல் பொய்யாக் கிற்று. இந்நூலை ஒருவர் சமற்கிருதத்தில் மொழிபெயர்த் துள்ளார். அம்மொழி பெயர்ப்பும் அந்த ஆகம நூல் கட்டிலே யே காணப்பட்டது. தமிழ்மூலத்தையும், சமற்கிருத மொழி பெயர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, தவறான மொழி பெயர்ப்பை யுணர்ந்தனர். இந்த மொழி பெயர்ப்பைச் செய்த வர் தன் பணியை முடிக்குமுன்னரே இறந்துவிட்டார் என்று கருதப்படுகின்றது.[22] இவ்வாறு இடையில் இறந்துபோனதால், தமிழ்மூலத்தை அழிக்காமல் விட்டுவிட்டார் எனக் கருது கின்றனர். அவர் உயிரோடிருந்து அப்பணியை முடித்திருந் தால், பணிமுடிந்த கையோடு, தமிழ்மூலத்தை அழித்திருப்பார். இவ்வாறுதான் பதினெட்டு புராணங்களும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன எனலாம். தமிழ்மூலத்தில் தரப்பட்டிருந்த பல நல்ல செய்திகளையெல்லாம் சமற்கிருதத்தில் திரித்து கூறி யிருப்பார்களோ என்ற ஐயம், பார்த்தசாரதிக் கோயில் குறிப் பின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

5. மேற்கித்திய எழுத்து முறைகள்:

மொழியின் ஒரு பகுதி எழுத்துகளாகும். எழுத்துகளற்ற மொழிகள் நிலைத்திருப்பதில்லை. உலகின் பல மொழிகளுக்கு எழுத்துகள் இன்மையால் அழிந்துபட்டன. தற்போதும் பல மொழிகள் வேற்றுமொழியின் எழுத்துக்களாலேயே எழுதப் படுகின்றன. ஒருமொழி இயற்கையாகவோ, செயற்கையாக வோ அறியப்பட்டால், அம்மொழி பேசும் பகுதியின் சூழல் களுக்கு ஏற்பவே சொற்கள் உருவாகும். அச்சொற்களை உருவாக்கும் எழுத்துகளும் அப்படியே. எழுத்துகளே ஒரு மொழியின் வரலாற்றைப் பறைசாற்றுவன. ஒரு நாட்டின் சூழலில் உருவான குறிப்பிட்ட ஒரு சொல்லுக்கான ஒலியைத் தரும் எழுத்து, மற்ற மொழிகளில் அறியப்படாமல் இருக்க லாம். அவ்வாறு அறியப்படாத மொழியின் எழுத்துகளைத் தம் மொழிக்குப் பயன்படுத்துவோர், சில ஒலிப்புகளைப் பிழையாகவே எழுத வேண்டி இருக்கும். எடுத்துக் காட்டாக, மலாய் மொழியில் ஆங்கில எழுத்துகளையே தற்காலத்தில் பயன்படுத்துகின்றனர். மலாய் மொழி தமிழினின்றும் கிளைத் ததே. தமிழ்ச்சொற்களை, ஆங்கில எழுத்துகளில் எழுதுவதென் பது ஒலிவேறுபாடுகளை உருவாக்கும்.

தமிழில் அறியப்படும் வெற்றி என்ற சொல்லை, அதன் சரியான ஒலிப்புடன் ஆங்கிலத்தில் எழுத இயலாது. அது போல, சகா (Shaha), சகர (Jaha) ஒலிகள் தமிழில் அறியப்படாத தால், சமற்கிருத மற்றும் ஆங்கிலச் சொற்களுக்கு சரியான ஒலிப்பைத் தமிழில் பெற இயலாது. இத்தனித் தன்மைகள் ஒவ்வொரு மொழிக்கும் உண்டு. தமிழைப் போலவே, செமிட் டிக் மொழிகளிலும் ஜகர, ஷகர, ஒலிப்புகள் அக்காலத்தில் ஒலிக்கப்படவில்லை. இந்திய - ஐரோப்பியம் எனப்படும் ஆரிய மொழியினம், இவ்வொலிப்புகளைக் கொண்டுள்ளது. தமிழில் அறியப்படும் ஒலிகள், தொண்டைக்கு வெளியிலேயே ஒலிக்கப் படுபவைகளாகும். ஆரிய இனத்தின் ஒலிகளில் பல அடிவயிற்

றினின்றும் பெறப்படும் ஒலிகளாகும். இன்றைய அறிவியல் முறையில் மொழிகளின் ஒலிப்புகளையும் அவைதரும் அதிர்வு களையும் ஆய்வு செய்தால், தமிழ் ஒலிப்புகள் குறைந்த அதிர்வு களையும், சமற்கிருத ஒலிப்புகள் மிகுந்த அதிர்வுகளையும் தருவதை அறியலாம். ஒருமணிநேரம் தொடர்ந்து சமற்கிருதம் பேசும் ஒருவருக்கு, களைப்பு மிகும் என்பதும் தெளிவு.

மேலை, கீழை ஆரிய மொழிகளுக்கு அக்காலத்தில் வரி வடிவங்கள் அறியப்பட்டிருந்தன. அவைகள் செமிட்டிக் மொழி யின் வரிவடிவத்தையே பெற்றிருந்தன. சில வரிவடிவங்கள் அறியப்படாமல் இருந்தன. மேற்கித்திய மொழியியலார் தரும் தகவல்களின்படி, மேற்கே எழுத்துகளை அறிமுகம் செய்தவர் கள் சுமேரியர்கள் என்ற கருத்துண்டு. சுமேரியர்களது எழுத்து முறைகளின் காலம் 3500 -2500 என்பர். சிந்துவெளியில் அறியப் பட்ட எழுத்துகள் சுமேரியரின் எழுத்துமுறைகளுக்கும் பிறகே உருவானவை என்ற கருத்து தொடக்கத்திலிருந்தது. ஏனெனில் சிந்துவெளி நாகரிகம், கி.மு. 3000 - 1800 என்றவாறு கணக் கிடப்பட்டிருந்தது. அண்மைக்கால கண்டுபிடிப்புகள் (In Pak. a site older than Mohenjo - daro - Times of India) லாக்கியன் சோதா ரோ என்று அறியப்பட்டுள்ள (2009)1 இடத்தில் இந்நகரம் கி.மு. 9000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக, குலாம் முகதபா சார் என்ற ஆய்வாளர் கூறுகிறார். எனவே,சுமேரிய வரிவடிவத் தினும் மூப்புடைய எழுத்துமுறை, சிந்துவெளியில் அறியப்பட் டிருந்தது எனலாம். சுமேரிய - சிந்துப் பகுதி வரிவடிவங்களுக் கிடையே அறியப்பட்ட ஒருமைப்பாடுகள் தனி ஆய்வுக்குரிய தலைப்புகளாகும்.

“அதனால் நான் குறிப்பிடவிரும்புவது என்னவென்றால், தற்போதைய ஐரோப்பிய மொழிகளின் எழுத்துகள், குறிப்பாக கிரேக்க -உரோமானிய எழுத்துகள், ஐரோப்பியர்களால் கண்டுபிடிக்கப்பட்டவை யன்று எனவும், இவைகளின் மூலம் ஐரோப்பியரிடம் இல்லையெனவும், அவை உண்மையில் கிழக் கித்திய ஆசியர்களிடமே உள்ளதெனவும் முடிவு செய்துள் ளேன்” என்று சமற்கிருத மொழியறிஞர் மோனியர் வில்லியம்சு கூறுகிறார்.[2] இவ்வாறு குறிப்பிடும் வில்லியம்சு, மேற்கித்திய எழுத்துமுறைகளின் மூலம், ஆரிய நாகரி எழுத்துமுறையினின் றே தோன்றியது என்கிறார். தேவ நாகரி (Divine Nagari) எனப் படும் வரிவடிவ முறைகளை இந்தியாவின் ஆரியர்களே செய்த

தாகக் கூறுகிறார். நாகரி எழுத்துகளே, சிற்சில மாற்றங்களுடன், போனீசிய எழுத்துகளாக மாற்றப்பட்டன என்றும் கருதுகிறார்.

மிகப்பெரிய அறிஞர்களாகக் கருதப்படும் மொழியியலார் கூட, சில அடிப்படை உண்மைகளைக் கவனத்தில் கொள்ளத் தவறிவிடுகின்றனர். ஆரியருடைய இந்திய வருகை, கி.மு. 2000 என்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இக் காலத்துக்கு முன்பு அறியப்பட்டிருந்த இந்தியாவின் எழுத்து முறைகளை யார் கண்டுபிடித்தது என்பதை எவரும் கவனத்தில் கொள்வதில்லை. இது பெரிய முரண்பாடாகத் தெரிந்ததால், பிற்கால ஆய்வாளர்கள், சிந்துவெளி மக்கள் ஆரிய மக்களே என்று கூறத் துணிந்தனர். ஏனெனில் அவர்கள் முன்வைக்கும் கருத்துகளுக்கு வலு சேர்க்கப்பட வேண்டும் என்றால், சிந்து மக்களை, ஆரியர்கள் என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை. அதனாலே ஐம்பதாண்டு காலம், சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமே எனத் திரும்பத் திரும்பக் கூறிவந்தனர்.

அடுத்தடுத்து வெளிக் கொணரப்பட்ட ஆய்வின் முடிவுகள், சிந்துவெளிக்கும் ஆரியர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென உறுதி செய்யப்பட்ட நிலையில், தற்போது தங்களுடைய அழுத்தங்களைக் குறைத்துள்ளனர். 2002 ஆம் ஆண்டில் கண்ட்லா பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கப்பல் ஒன்றிலிருந்த மரக்கட்டையொன்று கண்டெடுக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்த சகானி நிறுவனம், அப்பொருள் கி.மு. 7500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறிவித்தது.[3] இதனைச் செய்தியாளர்களுக்கு அறிவித்த அன்னாள் மாந்தவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் மனோகர் ஜோசியிடம் செய்தியாளர்கள் அடுக்கடுக்கான கேள்விகளைத் தொடுத்தனர். சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமா அல்லது ஆரிய நாகரிகமா எனக் கேட்ட செய்தியாளர்களிடம், அது இந்திய நாகரிகம் என்று அமைச்சர் கூறினார். ஆரிய நாகரிகம் என்று கூற சான்றுகள் இல்லாமையாலும், திராவிட நாகரிகம் என்று கூற மனமில்லாமையாலும், அது இந்திய நாகரிகம் என்றார்.

எனவே, இந்தியாவில் எழுத்துமுறை, கி.மு. 10000 ஆண்டுகளிலேயே அறியப்பட்டிருந்தது என்பது தற்கால ஆய்வுகளால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 19 ஆம் நூற்றாண்டில் செர்மானிய மற்றும் ஆங்கில அறிஞர்கள், தேவ நாகரி

எழுத்துகளே, உலகின் முதல் வரிவடிவங்கள் என்றும், போனீ சியர்கள் அம்முறையை மேலைநாடுகளில் பரப்பினர் என்றும் கூறினர். இக்கருத்தில், போனீசியர்களைப் பொறுத்தவரை உண்மையிருப்பினும், தேவ நாகரி என்று பெயரிடப்பட்ட எழுத்துமுறை ஆரியர்களுடையதல்ல என்ற உண்மை அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. முறையான சமற்கிருத வரிவடிவங்களும், எழுத்துமுறைகளும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில்தான் அறியப்பட்டன என்பதும் தற்போது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேவ நாகரி என்ற சொல்லும் தமிழ்ச்சொல்லே என்பதை அறிதல் வேண்டும். நகர் என்ற மூலச் சொல்லிலிருந்தே, நாகரி என்ற சொல் பிறந்தது. இதற்கு நகர்ப்புறத்து அறிஞர்கள் பயன் படுத்திய எழுத்துமுறை என்பதே பொருளாகும். ஆரியர்கள் தங்களைக் கடவுளின் மக்கள் என்று அடிக்கடி கூறிக் கொள் வதால், தேவ என்ற சொல்லையும் இணைத்துக் கொண்டனர்.

எண்களைக் கூட ஆரியர்களே கண்டுபிடித்தனர் என்றும், அராபியர்கள் அந்த எண்முறைகளை மேலைநாடுகளில் அறிமுகம் செய்தனர் என்றும் கூறப்படுவதிலும் உண்மையில்லை. ஆரியர் களுக்கு முன்பே இந்தியாவில் எண்கள் அறியப்பட்டிருந்தன. எண்களின் மதிப்புகளும் தெளிவாக்கப்பட்டிருந்தன. எண் களைப் பற்றிய அறிவு இல்லாதிருந்தால், உலகம் போற்றும் மிகச் சிறந்த நாகரிகத்தை சிந்துவெளியில் உருவாக்கியிருக்க முடியாது.[4] வடிவமைக்கப்பட்ட தெருக்களும், கட்டிடங் களும், எண்கணித அறிவு அம்மக்களுக்கு இருந்தது என்பதை மெய்ப்பித்தன. கி.மு.3000 ஆண்டுகளில், ஊர் நகரத்துடன் மேற்கொள்ளப்பட்ட வணிகப் பரிமாற்றங்களில்,எண்கள் மற்றும் எடையளவுகள், எடைக் கற்கள் போன்றவை அறியப் பட்டிருந்தன. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட அளவுகோல் (Scale), அதில் குறிக்கப்பட்டிருந்த அளவுகள் ஆகியவை எண் கள் பற்றிய தெளிவு அம்மக்களுக்கு இருந்ததை உறுதிப்படுத் துகின்றது.[5] ஊர்நகரில் அகழ்வாய்வுகளில் கிடைத்த எடைக்கற் களும் மேற்கண்ட செய்தியை உறுதிப்படுத்துகின்றன.

பாபிலோனியர் 1, 3, 7,9, 12,60 போன்ற எண்களின் (odd numbers) சிறப்பை உணர்ந்திருந்தனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.[6] வானியல் அறிவு பாபிலோனியரிடையே அறியப் பட்டிருந்தது. மீன்களின் இருப்பிடத்தை அளக்கவும், அதன்

நகர்வுகளைக் கண்காணிக்கவும், பாகைக் கணக்குகள் பயன் பட்டன என்பதும் தெளிவு. ஆரியர்களுக்கு முன்பே அராபி யர்கள் எண்களைப் பற்றி அறிந்திருந்தனர். அராபியரின் இந்திய வருகை கி.பி.7 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே பெரு மளவில் உணரப்பட்டுள்ளது. அராபியர்கள் குடியேற்றத் தமிழ் மக்களே என்பதாலும், அரபு நாட்டு வழியாகவே வணிகம் நடைபெற்றது என்பதாலும், சிந்துவெளிமக்கள், ஊர் நகரத் தார் அறிந்திருந்த எண் கணித முறையை அராபியர்களும் அறிந்திருந்தனர் எனலாம். ஆரியர்களைப் பற்றி மேற்கித்திய ஆய்வாளர்கள் கொண்டிருந்த எண்ணங்கள் அனைத்தும் கருது கோள்களின் அடிப்படையில் சொல்லப் பட்டவைகளே.

போனீசியர்:

கி.மு. 1500 ஆண்டுகளில், மேற்கே அறியப்பட்டிருந்த எழுத்துமுறைகளை மாற்றி, புதிய எழுத்துமுறையை உருவாக் கினர். போனீசியர்களைப் பொருத்தவரை அவர்கள் மொழி யியல் வல்லுநர்களாகவோ அறிவியல் அறிஞர்களாகவோ கருத இடமில்லை. உலகின் தலைசிறந்த வணிகர்களாக அறியப்பட் டிருந்தனர். தங்களுடைய வணிகத்தைப் பெருக்கவும், வணிகம் தொடர்பான செய்திகளைப் பரிமாறிக் கொள்ளவும் அப்போ திருந்த எழுத்துமுறை பயன்படக்கூடியதாக அமைந்திருக்க வில்லை. வணிகர்கள், அறிஞர்களாக இருக்க வாய்ப்பில்லை என்பதால், பொதுமக்களும் எழுதப்படிக்க அறியும் வகையில் ஒரு புதியமுறைக்கு அடித்தளமிட்டனர். இம்முறையை போனீ சியர்கள் கண்டுபிடிக்கவில்லையென்றும், கிழக்குநாட்டில் அறியப்பட்டிருந்த ஒருமுறையை அப்படியே இவர்கள் எடுத் துக் கொண்டு, தாங்களாகவே கண்டுபிடித்ததாக அறிவித்து விட்டனர் என்ற கருத்தும் உண்டு.[7] இருந்தாலும் இப்புதிய முறை போனீசியர்களுடையதே என்று வரலாறு பதிவு செய்துவிட்டது.

போனீசியர்கள் உலகம் சுற்றிய கடலோடிகள் என்பதால், நடுத்தரைக் கடலைச் சுற்றியிருந்த நாடுகளில், குறிப்பாக கிரேக்க நாட்டில், தங்களது புதிய எழுத்துமுறையை அறிமுகம் செய்தனர். காட்மசு என்ற வணிகரே, கிரேக்கத்தில் இதனை அறிமுகம் செய்தார் என்று கூறப்படுகிறது.[8] எபிறேய மொழி யியலாரும் இம்முறையை ஏற்றுக் கொண்டனர். இக்கால அள விற்குப் பிறகு எபிறேய மொழியில் மாற்றங்கள் தோன்றின. குறிப்பாக எழுத்துமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. விவிலியம்

என்ற சமய நூல் இப்புதிய எழுத்துமுறையிலேயே எழுதப்பட்ட தாகக் கூறுவர். எபிரேயம்- போனீசியம் ஆகிய இருமொழி களிடையே பெரிய வேறுபாடுகள் இன்மையால், இப்புதிய முறை எபிரேய மொழிக்கும் பொருந்துவதாயிற்று.



பாலத்தீனத்தில் கி.மு. 1000 ஆண்டுகளில் தாவீது மன்னனும் அவனுக்குப் பிறகு அவனது மகன் சாலமனும் அரசாண்டனர். இவர்களுக்குட்பட்ட பல சிற்றரசுகளும் அங்கே இருந்தன. அவற்றில் மோ ஆப் (Moab) என்ற பகுதியும் ஒன்று. (இது மூப்பு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். மூப்பு =தொன்மை. மூப்பு என்ற சொல், மெம்பிசு (Memphis) என்று எகிப்திய மொழியில் திரிந்தது) இங்கு மேடம் அல்லது மேழம் என்ற பெயரில் (Mesha) ஒரு சிற்றரசன் இருந்தான். இவனது காலம் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டு என்பர்.

மேழம் (ஆடு) என்ற மன்னன் காலத்திய குறிப்புகள், போனீசியர்களின் புதிய எழுத்துமுறையில் எழுதப்பட்டன. அக்குறிப்புகளில் சில திபோன் (Dibon) என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டன (எருசேலம் நகருக்கு வடகிழக்கிலுள்ளது.) இக்குறிப்புகளில் காணப்படும் எழுத்துகளும், அசோகனுடைய கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளும் ஒன்று போலுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[9]

உண்மையில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துமுறைகளையே (தேவநாகரி என்று ஆரியச் சார்பாளர்கள் கூறிக் கொள்கின்றனர்) போனீசியர்கள் திருடிச் சென்று விட்டதாகவும் கூறுவர். உண்மையில் போனீசியர்கள் இப்புதிய முறையைக் கண்டுபிடித்தவர்களா என்று அறிஞர்கள் வினாக்களைத் தொடுக்கின்றனர்.[10] (Do you really mean to imply that India's admirably perfect Deva Nagari alphabet, which they hold to be a divine gift, was borrowed from the imperfect alphabet of a nation of mere money making traders, like the Phoenicians? It is not the Case that the earliest elements of civilization and enlightenment have always originated in the East, and spread from the East to the West - nor from the West to the East? And if, as is generally admitted, the symbols for numbers, which were as essential to the world's progress as letters, originated in India and passed through Semitic countries into Europe, why should not alphabet have had the same origin and the same course?)

செமிட்டிக் மொழிகள் வழியே இந்திய எண்முறையும் எழுத்துமுறையும் ஐரோப்பாவில் அறியப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கி.மு.600 களில் எழுதப்பட்ட வசிட்டரின் தர்மசூத்திரம், மனுநூல் (காலம் இறுதி செய்யப்படவில்லை),

கி.மு. 400களில் எழுதப்பட்ட பாணினியின் அட்டத்யாயீ ஆகிய நூல்கள் பிராமி எழுத்துமுறைகளில் எழுதப்பட்டவைகளே என்றும், அதற்குப் பிறகு அசோகனின் நாடறிந்த கல்வெட்டு களும், இந்தியாவில் ஐயத்திற்கிடமில்லாத வகையில், எழுத்து வடிவங்களுக்குச் சான்றுகளாக உள்ளன.[11] கி.மு. 600 க்கு முன்பு எழுத்துவடிவிலான இலக்கியங்கள் எவையும் சுட்டப்பட வில்லை. மேற்கித்திய ஆய்வாளர்கள், வடக்கே அறியப்பட்ட வரலாற்றையே திரும்பத் திரும்பக் கூறினரேயன்றி, தமிழ்நாட் டைப் பற்றிய செய்திகள் எவற்றையும் கூறவில்லை அல்லது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. கி.மு.1000-700 ஆண்டு களில் எழுதப்பட்ட தொல்காப்பியமே இந்தியாவில் கிடைக்கப் பெற்ற முதல் நூலாகக் கருதப்படல் வேண்டும். ஆனால் தொல் காப்பியம் பற்றிய செய்திகளை மேலைநாட்டவர் குறிப்பிடவே யில்லை.

போனீசியர்கள் தங்கள் வணிக நலனுக்காகவே எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார்களேயன்றி, மொழியை வளர்ப்ப தற்கன்று என்பதை உணர்தல் வேண்டும். 30 எழுத்துகள் கொண்ட தமிழ் பிராமி எழுத்துகளை 22 ஆகச் சுருக்கிக் கொண்டனர். இதனால் போனீசியர்களின் எழுத்துமுறை யிலும் குறைபாடுகள் இருந்தனவென்பர். இக்குறைகளைக் கவனித்த கிரேக்கர்கள், இக்குறைபாடுகளை நீக்கி, போனீசிய முறையோடு தங்களது அறிமுகத்தையும் இணைத்து,கிரேக்கத் துக்கென புதிய வரிவடிவம் கொடுத்தனர்.

போனீசியரின் எழுத்துநடையும் போக்கும் வலது-இடது என்றவாறு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் கிரேக்கர்கள், இடது-வலது முறையைப் பின்பற்றினர். இதுவொரு மாறுபா டான செயலாகும். கிரேக்கர்கள் கொடுத்த இம்மாற்றம் தான் பிற்காலத்தில் அறியப்பட்ட இலத்தீன் மற்றும் ஐரோப்பிய மொழிகளும் கூட இடது-வலது முறையில் எழுதப்பட அடிப் படையாய் அமைந்தது எனலாம். இந்தியாவில் எழுதப்பட்ட தமிழ் பிராமி இடது - வலதாகவே இருந்தது. அதனையொட் டிப் பிறந்த சமற்கிருத எழுத்துகளும் இடம் -வலமாகவே அறியப்பட்டன.

சிந்துவெளிக் குறியீட்டு எழுத்து மற்றும் சொற்களில் சில வலது - இடதாகக் காணப்படுவதாகவும் கூறுகின்றன.[12] வலது - இடது (இன்றைய அராபியர் முறை) முறையை ஊக்குவிப்ப

வர்கள், வலது கைப்பழக்கம் உடையவருக்கு இம்முறையே எளிதானது என்பர். சிலையைச் செதுக்கும் சிற்பி, உளியை வலது - இடதாகவே நகர்த்துவான் என்பதும் அவர்களது கருத் தாகும். வலது - இடது என அறியப்படும் சில சிந்துவெளிச் சொற்கள், பின் எவ்வாறு இடது -வலதாக மாற்றப்பட்டன என்பதற்கான காரணங்கள் தெரியவில்லை. எக்காலம் தொட்டு அம்மாற்றங்கள் நிகழ்வுற்றன என்பதற்கும் சான்றுகள் இல்லை. இன்று இந்தியமொழிகளில் உருதுமொழி வலம் - இடமாக எழுதப்படுகின்றது.

கிரேக்கர்கள் தங்களுக்கென மாற்றியமைக்கப்பட்ட எழுத்துமுறையை கி.மு. 800 ஆண்டுகளில் அறிமுகம் செய் தனர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். புதிய எழுத்து முறையை ஏற்றுக் கொண்ட பிறகே கிரேக்க மொழியில் முன் எப்போதும் இல்லாத விரைவான வளர்ச்சி அறியப்பட்டது. அதன்பிறகே ஏராளமான கிரேக்க இலக்கியங்கள் தோன்றின. டெமாக்ரடீசு, எரடோட்டசு, அரிசுடாடில் தாலமி போன் றோர், புதிய கிரேக்க எழுத்துமுறைகளில் தங்களது கருத்து களை வெளியிட்டனர். பின்னர் அறியப்பட்ட அரசியல் எழுச்சி, கிரேக்கர்களை உலக வரலாற்றில் ஒப்பற்ற மக்களாக அடை யாளம் காட்டியது.

கி.மு. 300 ஆண்டுகளில் ஏராளமான கிரேக்கர்கள் இந்தி யாவிற்கு வந்தனர். தமிழகத்தில், அலெக்சாந்தர் வருகைக்கு முன்பே கிரேக்கர்கள் அறியப்பட்டிருந்தனர் எனலாம். கடைக் கழக இலக்கியங்கள் கூறும் யவனர்கள், கிரேக்கர்களே. கிரேக் கர்களுக்கு முன்பே யூதர்களும், போனீசியரும் தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்தனர். அலெக்சாந்தருடைய வருகைக் குப் பிறகு, அரசியல் உறவுகள் இருநாடுகளுக்குமிடையே தோன்றின. குறிப்பாக வடஇந்தியாவில் கிரேக்கர்களின் வருகை மதிப்புடன் உணரப்பட்டது. கிரேக்கத்தின் கட்டிடம் மற்றும் சிற்பக் கலைகள், இந்தியக் கலையுடன் கலந்தது. கிரேக்க மொழியின் செல்வாக்கும் சமற்கிருதத்தில் உணரப்பட்டது. திரிபுபடாத பல கிரேக்கச் சொற்கள், சமற்கிருதத்தோடு கலந் தன என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

யாவன் என்ற தமிழ்ச்சொல், யவன் என்று தமிழ்நாட்டில் தவறாக உணரப்பட்டது. யாவன் என்பது எபிரேயச் சொல் என்று விவிலியம் கூறுகிறது. இதற்குத் தெற்கித்தியான் என்ற

வாறும் பொருள்சொல்லப்பட்டுள்ளது. யாவன் என்ற சொல், யவன் என்று தமிழகத்தில் சொல்லப்பட்டதுபோலவே, யவன் என்று பாணினியால் குறிக்கப்பட்டுள்ளது. காத்யாயனர் என்ற புலவர் (இவர் புறநானூற்றுப் புலவர் பக்குடுக்கை நன்கணியாரே என்று சில ஆய்வுகள் கூறுகின்றன), கிரேக்க எழுத்துகளையும் சொற்களையும் தெளிவாக அறிந்திருந்தார் என்பர். யாவன் (யவன்) என்ற சொல்லுக்குப் பெண்பாற் சொல்லாக (femininex) "யவனானி" (Yavanaani) என்ற சொல்லை, பாணினி பயன்படுத்தியதாகக் குறிப்புகள் கூறுகின்றன.[13] கிரேக்கச் சொற்களைத் தாங்கிய ஏராளமான காசுகள் இந்தியாவின் வட, தென் பகுதிகளில் புழக்கத்திலிருந்தன. சமற்கிருத மொழியில் காணப்படும் வானியல் தொடர்பான கலைச் சொற்கள் பல, கிரேக்க மொழியினின்றும் பெறப்பட்டதாகவே கருதப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக ஓரா (Hora) என்ற கிரேக்கச் சொல், ஓரா (Hora) என்றே சமற்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ளது. இச் சமற்கிருதச் சொல்லே, ஓரை என்று தமிழில் சொல்லப்பட்டதாகவும், உண்மையில் அது கிரேக்கச் சொல்லே என்றும் வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார். எண் ஏழைக் குறித்த செப்த (Septa) என்ற கிரேக்கச் சொல்லே, சாப்த் - சாத் என சமற்கிருதத்தில் சொல்லப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நொவம் (Novem) என்ற கிரேக்கச் சொல், நவ என்று சமற்கிருதத்தில் சொல்லப்பட்டதாகவும் கூறுவர்.

தற்காலத்திய சொல்லாய்வுகள், ஓரை, செப்த, நொவம் ஆகிய சொற்கள் எவ்வாறு தமிழ்மூலத்தினின்று கிரேக்கத்துக்குச் சென்றன என்பதை மெய்ப்பிக்கின்றன. தமிழினின்றும் சமற்கிருதம் ஏற்றுக்கொண்டு, அதன் வழியே கிரேக்கம் அச் சொற்களைப் பயன்படுத்தியதாகவும் சிலர் கூறுவர். எப்படியிருப்பினும் கிரேக்க -சமற்கிருத மொழிகள், சொற்களைப் பரிமாறிக் கொண்டன என்பதில் கருத்து மாறுபாடு இல்லையெனலாம். (ஓர் என்ற தமிழ்மூலத்தினின்றே ஓரை என்ற சொல் விரிந்தது பற்றிய விளக்கத்தினை நூலாசிரியர் விளக்கியுள்ளார். தொல்காப்பியர், ஓரை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் நோக்கத் தக்கதாகும்.)

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, மோஆப் (Moab) நாட்டு மேழம் (Mesha) என்பான் (கி.மு. 850) தன்னுடைய அரசாணைகளில் பதிவு செய்திருந்த போனீசிய எழுத்துமுறைகள், அதன்

வடிவங்கள், அசோகனுடைய கல்வெட்டுகளில் காணப்படுவ தாக, பேராசிரியர் வெபர் (A. Weber) என்ற பெர்லின் நகரத்து ஆய்வாளர், தனது நூலான Indische Palaeographie யில் குறிப்பி டுகின்றார்.[14] இந்நூல் வியன்னாவின் பேராசிரியர் பஃலர் (Prof. Buhler of Vienna) என்பவரால் *1896* ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது.

அசோகனுடைய கல்வெட்டில் காணப்படும் சொற்கள், அவைகளைத் தாங்கிய எழுத்துகள், பகுதிக்குத்தக்கவாறு மாறுபட்டுள்ளன. அவை கரோட்டி (Kharoshthi) என்ற எழுத்து முறையையும், பிராமி என்ற முறையையும் தழுவி பொறிக்கப் பட்டுள்ளன. இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் காணப் படும் அசோகனின் குறிப்புகள் கரோட்டியில் உள்ளன. கரோட்டி என்ற எழுத்துமுறை, கி.மு. *500* ஆண்டுகளில், பாரசீகத்தில் வழக்கிலிருந்ததாகக் கூறுவர். அக்கமேனியப் பேரரசு காலத் தில் (Akhamanian), அறமாயிக் மொழி அறிஞர்களை (Scribes) அப்பேரரசு பயன்படுத்திக் கொண்டதாகக் கூறுவர். அவர்கள், அறமாயிக் நடையிலேயே (Style) காரோட்டி முறையைக் கையாண் டுள்ளனர். இம்முறை, செமிட்டிக் அல்லது போனீசிய வழக்குப் படி வலது இடதாக அறியப்பட்டுள்ளது. இந்த எழுத்து முறையிலும் பிராமி எழுத்துகள் (போனீசிய எழுத்துகள் வழியே) அறியப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும் அது இந்திய எழுத்துமுறையே எனலாம். இந்தப்போனீசிய முறையில், கிரேக்க எழுத்து வடிவங்களும் இணைக்கப்பட்டு, அது கரோட்டி எனப் பட்டது. பேராசிரியர் பஃலர், கரோட்டியைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். இதற்கு மேற்கித்திய அறிஞர்கள், அரினோ பாலி (Arino pali) பாக்ட்ரோ பாலி (Bactro Pali) இந்திய - பாக்டிரியன் (Indo -Bactrian), வடக்கு அசோகன் (Korth Asoka) என்றவாறெல்லாம் பெயரிட்டுக் குறிப்பிட்டுள்ளனர். சர் கன்னிங் காம் (Sir. A. Cunningham) என்பவர் இதனைக் காந்தாரியன் என்கிறார். பண்டித கௌரி சங்கர் என்பார், தனது நூலான ப்ராசின லிபி மாலா (Pracina Lipi mala) என்ற இந்தி நூலில், இம்முறையை காந்தார லிபி (Gandhara - lipi) என்கிறார். வேறு சிலர் கரோட்டி முறையில் முறையே பிராமி, கிரேக்கம், போனீ சியம், மோஆப் ஆகிய மொழிகளில் பயன்படுத்தப்பட்ட எழுத்துகள் காணப்படுகின்றன என்பது தெளிவு.

பிராமி எழுத்துமுறை:

பிராமி எழுத்துமுறையை அறிமுகம் செய்தது யார் என்பதில் பல்வேறு உண்மைகள் புதைக்கப்பட்டுள்ளன என்றாலும், பொதுவாக அம்முறை பற்றிய செய்திகளைக் காணலாம். இந்தியாவின் தொன்மையான எழுத்துமுறையே பிராமி எனப்படுகின்றது. (இதுவும் கூடத் தவறான சிந்தனையாகும்) பிராமி முறையைக் கண்டுபிடித்தவர்கள் யாராயிருப்பினும், அம்முறையிலுள்ள இக்குறைகளைக் களைந்தவர்கள் பிராமணர்களே என்று பிராமணர்கள் பயன்படுத்துவதற்கென்றே உருவாக்கிக் கொடுத்த எழுத்து முறையே பிராமி எனப்படுவதாக, பிராமணர்கள் கூறுகின்றனர். பிரம்மா என்ற சொல், வரலாற்றுப் பதிவுகளில் மிகவும் பிற்காலத்திலேயே அறியப்படுகின்றது. இரிக்குவேதம், பிரம்மா என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. பிரசாபதி, பிராமணாத்பதி போன்ற பெயர்கள் பிரம்மனைக் குறிப்பதாகவே பின்னர் விளக்கமளித்தனர். பிராமி எழுத்து முறை, அரப்பா நாகரிகம் அழிந்த காலத்தில், வடக்கேயிருந்த அறிஞர்கள் ஒன்றுகூடி உருவாக்கினர் என்று சொல்லப்படுகின்றது.

கி.மு.1500 ஆண்டுகளில் பிராமி எழுத்துமுறை வழக்கிற்கு வந்ததாகக் கருதுவர். சிந்துவெளியில் அறியப்பட்ட எழுத்து முறையைக் கையாள்வதில் பல சிக்கல்கள் இருப்பதைப் பலரும் உணர்ந்தனர். மொழியின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு மொழியின் எழுத்துகளும், காலப்போக்கில் மாறி மாறி வந்திருப்பதைக் காணலாம். தவறுகளைக் களைதல் என்ற முறைப்படி (Trial and error method) ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் எழுத்து வடிவங்கள் மாறுபட்டு வந்துள்ளன. இந்தியாவின் முதல் எழுத்து முறை சிந்துவெளியிலேயே அறியப்பட்டிருந்ததை இன்றைய ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. சிந்துவெளி எழுத்துகளின் அடுத்த அறிவியல் வளர்ச்சியாக பிராமி தோன்றியது.

பிராமி எழுத்துமுறை கி.மு. 1600 ஆண்டுகளில் தோன்றியிருக்கலாம் என்பர். ஆரியசார்புடைய ஆய்வாளர்கள் கி.மு. 600 என்பர். இக்காலத்தில் எழுதப்பட்ட சமற்கிருத நூல்கள், பிராமி முறையில் எழுதப்பட்டன என்பர். வசிட்டனின் தர்ம சூத்திரம், பாணினியின் அட்டத்யாயீ, மனுவின் நீதிநூல் ஆகியவை பிராமி எழுத்தில், சமற்கிருத மொழியில் எழுதப்பட்டன என்பர். கி.மு.600 களில், சமற்கிருதத்துக்கு எழுத்துமுறை இருந்திருக்க

வில்லை என்பது தெளிவாகின்றது. ஆனால், பிராமி முறையே சமற்கிருத எழுத்துகளின் முன்னோடி முறையென்றும், பிராமியை சமற்கிருதம் என்றே கூறலாம் என்பதும் சில ஆய்வாளர்களின் கருத்தாகும். பிராமி எழுத்துகள் போனீசியரின் எழுத்து முறைகளைப் பின்பற்றியதே என்பது சிலரின் கருத்தாகும்.

இந்தியாவின் முதன்மொழி சமற்கிருதம் என்பதும், அதற்கான மூல எழுத்துவடிவம் பிராமிமுறையில் கி.மு. 600 ஆண்டுகளிலேயே அறியப்பட்டது என்பதும், அதுவும் கூட மேற்கித்திய எழுத்துமுறைகளைத் தழுவியே உள்ளனவென்பதும், சமற்கிருத மொழிபற்றிய முரண்பாடான செய்திகளாகும். இந்த அடிப்படைகளையெல்லாம் மறந்துதான், சமற்கிருதம் இந்தியாவின் மூத்தமொழி, முதன்மொழி என்றனர். பேராசிரியர் பஃலர் வெளியிட்டுள்ள எழுத்துமுறைகளின் தோற்றம் பற்றிய பட்டியல், எழுத்துவரலாறு இடையிலிருந்தே தொடங்கப் பெற்றுள்ளது என்பார். இந்திய எழுத்துமுறைகளும், மேற்கித்திய போனீசிய முறைகளும் எவ்வாறு சிந்துவெளி எழுத்துகளிலிருந்து உருவாயின என்பதை விளக்கப்படத்தில் காணவும்.

இசுலாமிய மரபுப்படி, அல்லாவே எழுத்தைச்சொல்லிக் கொடுத்தார் (God tanght the use of the pen) என்று குர்ஆன் கூறுகிறது. குர்ஆன் என்ற நூல் வானத்திலேயே அரபுமொழியில் எழுதப்பட்டு, அப்படியே நபிகள் நாயகம் வழியே இறக்கப்பட்டது என்பது இசுலாமியர்களின் நம்பிக்கையாகும்.[16] அரபு எழுத்துகளே உலகில் தோன்றிய முதல் எழுத்துவடிவங்கள் என்று இசுலாம் கூறுகிறது. இதனை கிறித்துவர்களும் மற்றவர்களும் ஏற்றுக் கொள்வதில்லை. விலிலியத்தின் தொடக்க அதிகாரத்தில் காணப்படும் செய்தியின்படி, கடவுள் தாம் படைத்த பொருட்கள் மற்றும் உயிரினங்களுக்கெல்லாம் பெயர் வைக்குமாறு ஆதாமைப் பணித்தார் என்ற செய்தியின் அடிப்படையில், ஆதாமுக்கு மொழியையும், அம்மொழியைப் பதிவு செய்யும் எழுத்துகளையும் கடவுளே ஆதாமுக்குக் கற்பித்தார் என அறியலாம். அது எம்மொழி என்பதுபற்றியும், எழுத்துக்கள் எவ்வாறிருந்தன என்பது பற்றியும் விவிலியத்தில் விளக்கம் இல்லை.

தங்கள் பங்கிற்கு பிராமணர்கள், தங்கள் கடவுளான பிரம்மாவே எழுத்துகளை உருவாக்கிக் கொடுத்தார் என்பதால்,

அவை பிராமி எனப்பட்டதாகக் கூறுகின்றனர். ஆக, எல்லாச் சமயங்களும், எழுத்தையையும் மொழியையும் உருவாக்கித் தந்தவர் கடவுளே என்ற கருத்தின் அடிப்படையில் ஒன்றுபடு கின்றன. இறையனாரே புலவராக வந்து தமிழை ஆய்வு செய்த கதைகள் தமிழரிடையேயும் உண்டு. மனிதன் தான் கண்டு பிடித்த எழுத்து வடிவத்தை, கடவுளே கற்பித்ததாகத் தன்னடக் கத்துடன் சொல்லிக் கொண்டான் போலும்.

தமிழ் எழுத்துகளில் தோன்றிய மாற்றங்கள்




தமிழ்
அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ
க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

இந்தியாவின் பழமையான எழுத்துமுறை சிந்துவெளியில் காணப்படுகின்றது. சிந்துவெளிக் குடியேற்றம் கி.மு. 10000 ஆண்டுகளில் நிகழ்வுற்றிருப்பதற்கானச் சான்றுகள் கிடைத் துள்ளன. இக்குறியீடுகள் படவெழுத்து முறையல்லவென்றும் சொற்களால் ஆனவை என்றும், ஒவ்வொரு சொல்லும் ஒரு பொருளைத் தரக்கூடியதாக அமைந்துள்ளது என்றும் ஆய்வா ளர்கள் கருதுகின்றனர். ஆனால் சிந்துவெளி எழுத்துகளுக்குப் பிறகு அறியப்பட்ட எழுத்துமுறையில் பல, படவெழுத்து, கருத்தெழுத்து முறையில் காணப்படுகின்றன. தொடக்கத்தில் சிந்துவெளி எழுத்துகளும் படவெழுத்து கருத்தெழுத்து முறை யில் தோன்றிப் பின்னர் சொற்களாக உருப்பெற்றன. சொற்கள் எழுதப்படும் முறையானது, எழுத்து வரலாற்றில் முதிர்ச்சியான நிலையாகும். உலகின் பல்வேறு நாகரிகங்களில் காணப்படும் எழுத்துமுறைகள் பற்றிய செய்திகளும் இன்று வெளிக்கொண ரப்பட்டுள்ளன.

1. சுமேரியம் -ஆப்பெழுத்து - மெசப்பத்தோமியா -கி.மு. 4000 - 3000
2. எகிப்தியம் - படவெழுத்து - எகிப்தியம் -கி.மு. 3000.
3. ஈழம் - ஆப்பெழுத்து -ஈழம் (பாபிலோன்) - கி.மு. 3000.
4. கிரீட் - கோட்டெழுத்து -கரட்டுத் தீவு (கிரேக்கம்) - கி.மு. 2000.
5. ஈத்தம் - படவெழுத்து மற்றும் ஆப்பெழுத்து - அனதோலியா - கி.மு. 1500.
6. சீனம் - கருத்தெழுத்து -சீனம் - கி.மு. 1500.
7. உகாரியம் - ஆப்பெழுத்து - சிரியா - கி.மு. 1500.
8. போனீசியம் - ஆப்பெழுத்து பின்னர் புதியமுறை - இலெபனான் - கி.மு. 1500.
9. செமிட்டிக் - ஆப்பெழுத்து - மெசபத்தோமியா - கி.மு. 1500.
10. மாயன் - இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை - மெக்சிக்கோ - கி.மு. 1500.
11. சிந்துவெளி - கண்ணெழுத்து, கோலெழுத்து - பஞ்சாப் - கி.மு. 7500.
12. தமிழ் - சிந்துவெளிக்குரியதே. இருப்பினும் பிராமி கி.மு. 1500 களில் அறியப்பட்டது.

சிந்துவெளியிலும் சில படவெழுத்துகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு படமும் ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டது. பார்ப்பவனும் படிப்பவனும் அப்பொருள் பற்றித் தெரிந்திருந்தாலொழிய அப்படவெழுத்தைப் புரிந்துகொள்ள இயலாது. எகிப்தில் காணப்படும் சிற்ப எழுத்துகள் படவெழுத்து முறையைச் சார்ந்ததே. நடப்பதற்குக் காலையும், உண்பதற்கு வாயையும், கடிப்பதற்குப் பல்லையும், அடிப்பதற்குக் கையையும் காட்டவேண்டும். இப்படவெழுத்துமுறையில் தெளிவும் கிடைப்பதில்லை. கையைக் காட்டினால் அதன் வினையை, பல்வேறு வகைகளில் ஊகம் செய்யவும் இயலும்.

படவெழுத்து முறையின் அடுத்த முன்னேற்றம் கருத்தெழுத்து முறையாகும். நீர்குடிப்பதை பானை, செம்பு, கையென்று வரைந்து காட்டுவதால், பானையிலிருந்து செம்பில் நீரை எடுத்துக் குடிப்பதாகக் கருதலாம். செம்பிலிருந்து நீரைப் பானையில் ஊற்றுவதையும் மேற்சொன்னவாறுதான் வரைந்து காட்டமுடியும்.

படவெழுத்து, கருத்தெழுத்து முறைகளின் வளர்ச்சியே, எழுத்துகளைக் காட்டி சொற்களை எழுதும் முறையாகும். சிந்துவெளியில் சொற்களால் விளக்கப்படும் எழுத்துமுறை காணப்படுகின்றது. இம்முறையில் எந்தப்படமும் இருக்காது. ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு எழுத்தைப் பயன்படுத்தி சொற்கள் உருவாக்கப்படும். இச்சொல் முறையே தமிழி என்று அறியப்பட்டது. தமிழி என்ற முறை தமிழில் அறியப்படும் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இதனை உருவாக்கினர் என்று கூறுவதைவிட, இயற்கையிலேயே உருவான முறையை செம்மைப்படுத்தினர் என்றும் கூறலாம்.

சிந்துவெளி எழுத்துகளின் தொடர்ச்சியாக தமிழி முறை அறியப்பட்டது எனலாம். இதன் அடிப்படையில் வடஇந்தியாவிலும் தென் இந்தியாவிலும் பல்வேறு எழுத்துமுறைகள் தோன்றின. அவை பதினெட்டு வகையாக அறியப்படுகின்றன. அவைகளுக்குள் பெரிய வேறுபாடுகள் காணப்படவில்லையென்பதால், அவை ஒரு மூல எழுத்து முறையினின்றே கிளைத்தவை எனக் கருத இடமுண்டு. இம்முறைக்கு பிராமி என்று பிற்காலத்தில் பெயரிடப்பட்டது. கி.மு. 600 ஆண்டுகளில்தான் பிராமி என்ற பெயர் சூட்டப் பட்டிருக்க வேண்டும். இதன்

அடிப்படையில் தமிழி எழுத்துகளை, தமிழ்ப்பிராமி அல்லது தென்னிந்தியப் பிராமி என்றும் அழைத்தனர்.

கி.மு. 1500 ஆண்டுகளில் வடக்கில் வாழ்ந்திருந்த அறிஞர்கள் ஒன்றுகூடி, சிந்துவெளி எழுத்துகளில் மாற்றம் தேவைப்படுவதை உணர்ந்தனர். அதன் விளைவாகவே புதிய எழுத்துமுறையை உருவாக்கினர். இப்புதிய முறை மக்களைச் சென்றடையும் வரையிலும், பழைய சிந்துவெளி எழுத்துகளையும் கூடவே புதிய எழுத்துகளையும் பயன்படுத்தி வந்துள்ளனர். இவ்வழக்கு சில நூறாண்டுகள் தொடர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு இரு எழுத்து முறைகளிலும் எழுதப்பட்டவை இந்தியாவிலும், இலங்கையிலும் கண்டறியப்பட்டுள்ளன.[17]

கி.மு. 1500களில் வடிவமைக்கப்பட்ட புதிய எழுத்துமுறையையே, போனீசியர்கள் தங்கள் சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டனர் எனலாம். சில ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போல் இப்புதிய முறை சமற்கிருதத்தில் மூல எழுத்துமுறை என்ற கண்ணோட்டமும் தவறானதாகும். இப்புதிய எழுத்துமுறை, பிற்காலத்தில் பல்வேறு எழுத்துமுறைகளாகக் கிளைத்தது. அவற்றில் ஒன்றாக சமற்கிருதத்தையும் இணைத்துக் கொள்ளலாம். உண்மையில், புதியமுறையில் வடிவமைக்கப்பட்ட எழுத்துமுறைகளில் சமற்கிருதமும் ஒன்றாகும். (விளக்கப்படம் காண்க)

தொல்காப்பியர் காலத்திய தமிழ் எழுத்துமுறைக்கும், கடைக்கழகக் காலத்திய முறைக்கும் வேறுபாடுகள் இருந்தன எனலாம். தொல்காப்பியம் புதிய எழுத்து முறையிலும், கடைக்கழக இலக்கியங்கள் தமிழி முறையிலும் எழுதப்பட்டவைகளாகும். இலக்கியங்களைப் பதிவு செய்த ஓலைக் சுவடிகளின் காலம் 200 ஆண்டுகள் எனக் கணக்கிட்டுள்ளனர். அந்த 200 ஆண்டுக்கால இடைவெளியில், புதிய எழுத்து மாற்றங்கள் கூட நிகழ்வுற்றிருக்கலாம். இப்புதிய பழைய முறைகளை அறிந்த ஒருவர் அவ்விலக்கியத்தையும் படியெடுத்திருந்தால், அது அடுத்த தலைமுறைக்குச் செல்லும். இல்லாவிடில் அது மக்கி, மறைந்து போகும். இவ்வாறு படியெடுக்கப்படாமல் மக்கி மறைந்துபோன தமிழ் இலக்கியங்கள் ஏராளம் ஏராளம்.

எடுத்துக்காட்டாக, கி.மு. 1000-700 ஆண்டுகளில் எழுதப்பட்ட தொல்காப்பியம், பல்வேறு தலைமுறையினரால், புதிய எழுத்து வடிவத்தில் படியெடுக்கப்பட்டு வந்ததால், இன்றும்

வாழ்ந்து கொண்டிருக்கிறது. கடைக்கழக இலக்கியங்கள், தமிழி முறையில் எழுதப்பட்டதாகக் கூறுவர். தமிழி முறை, படிப்பதற்கும் எழுதுவதற்கும் மிகவும் எளிமையானது. படத்தைப் பார்க்கவும் தமிழி பல்வேறு மாற்றங்களைப் பெற்று வளர்ந்து தற்போதைய தமிழ் எழுத்துகளாக உருமாறி உள்ள நிலையி லும், தற்காலத் தமிழ் எழுத்துகளையும் கணினிக்கேற்றவாறு மாற்றம் செய்யவேண்டும் என்ற வலியுறுத்தல்கள் எழுந்துள் ளன. தற்காலத் தமிழ் எழுத்துக்களை, தமிழி முறையில் காணப் படும் கோடுகளைப் பயன்படுத்தி, மிகவும் எளிமையாக்கி விடுவதோடு, 36 எழுத்துகளில் தமிழின் அனைத்து ஒலிப்பு களையும் கொண்டு வந்து விடமுடியும். ஆங்கிலத்தில் 26 எழுத் துகளே உள்ளனவென்பர். அதுவும் கூடத் தவறான சிந்தனை யே. a என்ற எழுத்து A என்றவாறும் a என்றவாறும், A என்றவா றும் எழுதப்படுவதை நோக்குக. ஓரொலிக்கு ஓரெழுத்தே இருக்க வேண்டும். அதைவிடுத்து நான்கு எழுத்துகளில் எழுது வதும், சொல்லுக்கு முதலெழுத்தை Capital எனக் கூறுவதும், இயற்கையான வழக்கின் பாற்பட்டதன்று.

தமிழில் எழுத்துகளைக் கூட்ட, அதே ஒலிகளில் சொற் கள் பிறக்கும். ஆனால் தமிழில் இல்லா புதிய ஒலிகளான ஜ,ஜா, ஜே,ஷ, ஸ, போன்ற ஒலிகள் இந்திய- ஐரோப்பிய மொழிகளில் சேர்க்கப்பட்டன. இவைகளைக் கூட அந்தந்த ஒலிப்புகளில் அம்மொழியாளர்கள் பயன்படுத்துவதில்லை. சமற்கிருதத்தில் ஜ என்ற எழுத்தும் கிரேக்கத்தின் J என்ற எழுத்தும் ஓரொலி யைக் கொண்டவை என்றாலும், இவ்விரு எழுத்துகளும் எழுதுபவரின் விருப்பம் போல், எழுதப்படுவதோடு,அதற்கான முறையான விதி வகுக்கப்படவில்லை. ஜ என்ற ஒலியைத் தரும் G என்ற எழுத்தும் கிரேக்கத்தில் உண்டு. J, G ஆகிய எழுத்து களில் ஒலிப் பயன்பாடுகளும் குழப்பமானவைகளே.

ஜைனர் என்பதை Ginar அல்லது Jinar என்று எழுதலாம். எது சரியானது? சப்பான் என்பதை Gapan அல்லது Japan என்று எழுதுவதில் எது சரியானது? ஆங்கிலத்தில் மேலும் பல குழப்பமான ஒலிப்புகளை உருவாக்கிவிட்டனர். Ch என்ற ஒலிப்பை, ச என்றும், க என்றும் இடத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்கின்றனர்.

Chest - Chemistry என்ற சொற்களில் உள்ள ஒலிப்பு வேறு பாடுகளை நோக்குக. Ch என்ற ஒலிப்பை க என்றவாறு ஒலிக்க

வேண்டும் என்றால், Punch - Punk - என்றும் Pinch - Pink என்றும் Catch- cak Cin - என்றும் Jest - gest எனவும் ஒலிக்கப்படல் வேண்டும். சைனா என்பதை China என்று எழுதுகின்றனர். அது கினா அல்லது கைனா Kina என்றே ஒலிக்கப்படும்.

மேற்கண்ட குழப்பங்களைக் கொண்ட சமற்கிருதமும் அதன் வழிவந்த கிரேக்கமும் மூலமொழிகளாக இருந்திருந் தால், இவ்வாறான குழப்பங்கள் தோன்றியிருக்காது கிளைத்த மொழிகளே என்பதாலும், கடன்பெற்ற எழுத்துமுறைகளைக் கொண்டவைகளே என்பதாலும்தான் பல்வேறு ஒலிக் குழப் பங்கள் அம்மொழிகளில் காணப்படுகின்றன. தமிழில் அவ்வா றான ஒலிக்குழப்பங்கள் இல்லையென்பதே தமிழை மூலமொழி யாகக் காட்டும் எனலாம்.

தமிழில் அறியப்படும் க,ச,ட,த,ப என்ற எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வரும்போது ஓரொலியையும், இடையில் வரும் போது சற்றே மாறுபட்ட ஒலியையும் தரும்.

கர்கம் - காக்கை, படம் - பப்படம் - செம்மை - அச்சம், ஆதி- ஆத்தி, என்றவாறு விரியும்.

இதன் ஒலிப்பைப் புரிந்துகொள்ள இயலாதவர்கள், குறிப் பாக ஆரியர் இவ்வொலிகளைப் பிரித்துக் காட்டும் எழுத்து களை உருவாக்கிக் கொண்டனர்.



தற்போது தமிழில் அறியப்படும் எழுத்துகளின் அமைப்பை விட, சங்க காலத்தில் எழுதப்பட்ட எழுத்துமுறை எளிமை யாகவும், பழகிவிட்டால் விரைவாகவும் எழுதுகின்ற முறை யைக் கொண்டுள்ளது.

செம்மொழித் – 

தமிழாய்வு – 

மத்திய – 

நிறுவனம் – 

நன்றாகச் – 

செயல்பட்டுக் – 

கொண்டிருக்கிறது – 

மேற்கண்ட எழுத்துகளில்தான் சங்க இலக்கியங்கள் யாவும் எழுதப்பட்டன. ஆங்கிலச் சொற்களைக் கூட மேற்கண்ட எழுத்துமுறையில் எழுத இயலும்.

Doctor K. Rama Samy :
Professor Mark William :
Prof. Annie Thomas :



தமிழுக்கே உரிய ழ,ள,ற,ன ஆகிய நான்கு எழுத்துகளும் பிறமொழிகளில், ஒலிக்கப்படுவதில்லை. குறிப்பாக ழகரம், உலகின் எம்மொழியிலும் காணப்படவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்கள், தங்களுடன் ழகரத்தையும் எடுத்துச் சென்றனர். தொடக்க கால செமிட்டிக் மொழியில் ழகரம் பயன்படுத்தப் பட்டதற்கான சொற்கள் கிடைத்துள்ளன. அவ்வாறே சுமேரிய, அக்காடிய, எபிரேய மொழிகளிலும் தொடக்கத்தில் ழகரம் பயன்படுத்துப்பட்டுள்ளது. அரபுமொழியும் கூட ழகரத்தை யும் பயன்படுத்தியது எனக் கருத இடமுண்டு. இம்மொழி களில் காணப்படும் சொற்கள் பற்றி ஏற்கனவே விளக்கப்பட் டுள்ளது.

மேற்கண்ட மொழிகளை ஆய்வு செய்த தற்காலத்தின் ஆய்வாளர்கள், அம்மொழிகளில் உள்ள ழகர ஒலிப்பைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ழகரம் பயன்படுத்தப்பட்ட சொற்களை எவ்வாறு ஒலிப்பது என்பதையும், ஆங்கிலத்தில் அதனை எவ்வாறு எழுதுவது என்பதையும் அறியாமல் குழம் பினர். ஒரு சிறுகோடு சொல்லின் ஒலிப்பை மாற்றிவிடும் என லாம். சங்ககாலத்தில் எழுதப்பட்ட தமிழ் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம்.

தமிழ் =

தமழ் =

தமுழ் =



தமிழ் என்ற சொல்லுக்கும, தமுழ என்ற சொல்லுக்கும் உள்ள வேறுபாட்டை இரண்டு சிறுகோடுகள் விளக்கி நிற்கின் றன. இச்சிறு வேறுபாடுகளை அறியாத தற்கால ஆய்வாளர் கள் அவர்கள் தமிழைப் பற்றி எதுவும் அறியாதிருந்ததால், மேற்கித்திய செமிட்டிக் மொழியிலுள்ள தமிழ்ச்சொற்களை தங்கள் விருப்பம்போல் ஒலித்துவிட்டனர். செமிட்டிக் மொழி யில் தவறாக அடையாளம் காட்டப்பட்ட தமிழ்ச் சொற்களே மிகுதியாக உள்ளன.

தமிழ் என்ற பாபிலோனியச் சொல்லை, Tammuz என்று எழுதிக் காட்டியுள்ளனர். ழகர ஒலிப்பை அவர்கள் அறியாத தால், ழகரத்தை Z என்ற ஆங்கில எழுத்தால் குறித்துள்ளனர். காழ் என்ற தமிழ்ச்சொல், சுமேரிய மொழிகளில் காணப்படு கின்றது. அதனை KAZ என்று பதிவு செய்துள்ளனர். அழர் என்ற தமிழ்ச் சொல், அரபுமொழியில் Azar என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

தமிழுக்கே உரிய ழகரம்தான் தமிழரல்லாதவர்களைக் குழப்பிய எழுத்தாகும். மேலைநாட்டவரும் குறிப்பாக ஆரிய ரும் ழகரத்தை ஒலிக்க இயலாமல் திணறிப் போயினர். செமிட் டிக் மற்றும் இந்திய - ஐரோப்பிய மொழிகள், பெரும்பாலான தமிழ்ச் சொற்களின் மூலத்தினின்றும் கிளைத்தவை என்பதா லும், பிற்காலத்தவர் தமிழின் ழகரத்தை ஒலிக்க இயலாமல் போனதாலும், தங்கள் மொழிகளில், ழகரத்தை ஈடு செய்யவே, ச,ஸ என்ற ஒலியைப் புகுத்திக் கொண்டனர். சமற்கிருத மொழியில் காணப்படும் ஷ என்ற ஒலிப்பு ழகரத்துக்கு மாற் றாக சேர்க்கப்பட்டதாகும்.

பூழ்ப்பு என்ற தமிழ்ச் சொல்லுக்கு விரிதல், பரவுதல், மலர்தல் என்பதே பொருளாகும். இச்சொல்லை சமற்கிருதத் தில் எடுத்துக் கொண்ட ஆரியர்கள் பூஷ்ப அல்லது புஷ்ப என ஒலித்தனர். பூழ்ப்பூ என்ற தமிழ்ச் சொல்லுக்கு மலர்ந்துள் பூ என்பதே பொருளாகும். இச்சொல்லே புஷ்ப எனத் திரிந் துள்ளது.

ஒரு செயல் அல்லது வினை தன் போக்கில் செல்லாமல் எதிர்வினையாக மாறும்போது, அதனைப் பிறழ்வினை என லாம். அதனையே சிக்கல் என்றும் கூறுகிறோம். பிறழ் வினை என்ற தமிழ்ச் சொல்லை ஒலிக்க இயலாத ஆரியர்கள், அதனை பிரஷ்ண என்றனர். இதுவே மூலச் சொல்லெனக் கருதிய தமிழர் அச்சொல்லை, பிரச்சினை என்று தமிழ்ப் படுத்தினர். நல்ல தொரு தமிழ்ச்சொல், சமற்கிருதத்தில் திரிபுட்டு, அதுவே வேறொரு சொல்லாகத் தமிழில் புகுந்தது. இன்றைய தொலைக் காட்சி ஒன்றில், பிரச்சினை என்ற சொல்லுக்கான தமிழ்ச் சொல் எதுவென்று கேட்டு, சிக்கல் என்று பதில் கூறுகின்றனர். பிரச்சினை என்பதற்கு சிக்கல் என்பதுதான் பொருளே தவிர, பிரச்சினை என்ற சொல்லுக்கான தமிழ்மூலம் எங்குள்ளது என்பதை அத்தொலைக்காட்சி கூறவில்லை.

கிழி என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஒன்றை இரண்டாக்கு என்று பொதுப் பொருளாகக் கூறுவர். கிழி என்பதற்கு பகிர்வு என்ற பொருளும் உண்டு. பொருளைக் கிழித்துக் கொடுப்பது, பொருளைப் பலருக்கும் கொடுப்பது என்ற பொருளைத் தரும். பொருட்கிழி, பெருஞ்செல்வம் பலருக்கும் பகிர்ந்தளிக் கப்படுதல். பொற்கிழி, பொன்னைப் பகிர்ந்தளித்தல். அக்கா லத்தில் மன்னர்கள், புலவர்களுக்கு பொன்னையும் பொருளை யும் வாரிக் கொடுத்தனர். அதனைப் பொற்கிழி என்றனர். பொற்கிழி, பகிர்ந்தளிக்கப்பட்ட செல்வம். பொற்கிழி என்ற சொல்லே, பொக்கிஷ என்று சமற்கிருதத்தில் திரிந்துள்ளது. கிஷ அல்லது கிழி என்ற சொல் மூலத்தைக் கொண்டே Cash என்ற ஆங்கிலச் சொல் பிறந்தது.

தமிழி என்ற எழுத்துமுறையைக் கூட ஒலிக்க இயலாத ஆரியர்கள், அதனை தக்சன் பிராமி என்றனர். தெற்கு+ அணம் = தெக்கணம். தெற்கே அறியப்படும் உயர்ந்த நாடு.

தெக்கணம், தக்சிண என்றவாறு திரிந்தது. தக்சன் என்று அறியப்படும் தொன்மக்கதை மாந்தன் (சிவனுக்கு மாமன்) தெக்கன் என்ற பெயரால் அழைக்கப்பட்டவனே.

தமிழில் சிறப்புக்குரிய ழகரம் வெளி நாட்டவரையும், வேற்று மொழிக்காரர்களையும் என்ன பாடுபடுத்தியது என்பதை கடந்த கால மொழியியல் வரலாறு கூறுகிறது. தமிழ்நாடு என்று சொல்லவியலாத ஆரியர்கள், தமிழ்நாட்டைத் திராவிடம் என்று கூறினர். திராவிட என்ற சொல், கி.பி. 5ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகே அறியப்பட்டுள்ளது.

பஞ்சாபில் குடியேறிய ஆரியர்கள், இந்தியாவுக்கு வரு முன்பு கடலைப் பார்த்ததே இல்லை. கடல் என்றால் எப்படியிருக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. முதன்முதலாக, இன்றைய குசராத் பகுதியில் கடலைக் கண்ட ஆரியர்கள், அதன் ஆர்ப்பரிக்கும் அலைகளைக் கண்டு அச்சம் கொண்டனர். கடலோடிய அக்காலத் தமிழர்களைக் கண்டு வியந்தனர். கடல் என்றாலே அச்சவுணர்வு கொண்ட ஆரியர்கள், கடலில் அல்லது கடல்தாண்டி எந்த ஆரியரும் செல்லத் தடைவிதித்தனர். பிராமணர்கள் கடல் கடந்து செல்லக்கூடாது என்ற விதி, சென்ற சில நூற்றாண்டுகளாகவே மீறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பற்றிக் கேள்விப்பட்ட ஆரியர்கள், அது மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது என்றும், கடலுக்கு நடுவே தமிழ்நாடு உள்ளதென்றும் கருதினர். அதனால் தொடக்கத்தில் தெற்கே வர ஆரியர்கள் அச்சப்பட்டனர். இச்செய்திகளின் அடிப்படையில், தமது முன்னோர் தென்கடலில் மூழ்கி இறந்து போயினர், அவர்களே பித்ருக்களாக மாறி ஆண்டுக்கொருமுறை வந்து போகின்றனர் என்றவாறு கதைகளைக் கற்பித்துக் கொண்டனர்.

தமிழ்நாடு என்பது கடல் நடுவே உள்ள தரை நாடு என்றே ஆரியர்கள் கருதினர். அதனால் தரை என்றே தமிழ்நாட்டை அழைத்தனர். தரை என்ற தமிழ்ச் சொல்லே, த்ர என்று சமற்கிருதத்தில் திரிந்துள்ளதைக் காணலாம். முசுகுந்த புராணம் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) தமிழ்நாட்டை, த்ர என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது. த்ர - த்ரவிட் - த்ரவிட என்றவாறு விரிந்து, தமிழ்நாட்டைக் குறித்தது. தமிழ்நாடு என்று சொல்ல இயலாமற் போனதால் தான், திரவிட் என்ற சொல்லை, ஆரியர்கள் பயன்படுத்தினர். திரவிட் என்ற சொல்லின் மூலம் தமிழில் இருந்தாலும், ஒலிப்பதற்கு இயல்பாய் அவர்களுக்கு இருந்தது.

தமிழ் - தமிழர் - த்ரமிளர் - திராவிடர் என்று திரிந்ததாக யாரோ ஒரு அரைகுறைப் புலவர் சொன்னதே உண்மையென

நம்பி, கடந்த நூற்றாண்டுகளில் பல தமிழறிஞர்கள் மேற் கோள் காட்டுகின்றனர். தரை -தமிழ் ஆகிய இரண்டும் வெவ் வேறான சொற்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வில்லை. தரையிடம் (கடலின் நடுவே உள்ள நாடு) என்பதே திராவிடம் என்று ஆரியரால் சொல்லப்பட்டது. பிற்காலத்தில் தமிழகத்துக்கு வந்த ஐரோப்பியரும் தமிழ் என்ற சொல்லை ஒலிக்க இயலாமல் திணறிப் போயினர். அப்போது ஆரியர்கள் அறிமுகம் செய்த திராவிடம் என்ற சொல், ஐரோப்பியர் களால் ஒலிக்கப்படும் அளவுக்கு எனிமையாயிருந்ததால், தங்கள் ஆவணங்களில் திராவிட என்ற சொல்லையே பதிவு செய்துவிட்டனர். இருப்பினும் தமிழை, Tamil - Tamilicus - Tamilicous - Tamilae என்றவாறும் குறிப்பிட்டுள்ளனர்.

மேல்நாட்டவரையும் வேற்றுமொழிக்காரர்களையும் மிரள வைத்த எழுத்து ழகரம் ஆகும். இந்த ழகரம் தமிழரின் தனிச் செல்வமாகும். இந்த ழகரத்தை எத்துணைத் தமிழர்கள் சரியாக ஒலிக்கின்றனர் என்பது பெரியவினா. தமிழறிஞர்கள் என்று சொல்லிக் கொண்டு, பல்கலையிலும் கல்லூரிகளிலும் பணியாற்றுகின்ற பல தமிழ்ப் பேராசியர்களுக்கு, தமிழ் என்று சரியாக ஒலிக்கத் தெரியவில்லை அல்லது இயலவில்லையென் பது, தமிழுக்கே தலைகுனிவை ஏற்படுத்துவதாகும். தமிள் என்றே சிலர் வகுப்புகளில் கூட பாடம் நடத்துகின்றனர். மூன் றாம் வகுப்பு மாணவர்களுக்காக சொல்லப்படும் ஒரு சொற் றொடர்.

"வியாழக்கிழமை, ஏழைக்கிழவன், வாழைப் பழத்தோலில், வழுக்கி விழுந்தான்."

மேற்கண்ட சொற்றொடரை, தமிழைக் கற்பிக்கும் ஆசிரி யர்கள், பேராசிரியர்கள், தமிழறிஞர்கள் ஆகியோர் ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

எழுத்துகள் தோன்றியமுறையை அடியிற்கண்ட வாறு[18]



வட்டெழுத்தும் சமற்கிருத எழுத்தும் (லிபி) இணைந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு உருவானதே தெலுங்கு எழுத்து வடிவங்களாகும். அதன் வழியில் கன்னடம், மலை யாள எழுத்துகளும் தோன்றின.

வட்டெழுத்து:

கடைக்கழகக் காலத்தில் அறியப்பட்ட தமிழி என்ற எழுத்துமுறை, கடைக்கழகம் மருவிய காலத்தில், வட்டெ ழுத்து - தமிழ் எழுத்து என்ற இருவகையாகப் பிரிந்தது (தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி பற்றிய படத்தைக் காண்க) தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி போன்றே, வட்டெழுத்து முறையும் வளர்ந்து கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரையில் நிலைத்திருந்தது எனலாம். வட்டெழுத்தின் வளர்ச்சியை, கி.பி. 3-8 நூற்றாண்டு கள் வரையிலான காலத்தை முதல்கட்ட வளர்ச்சியாகவும், கி.பி. 8 - 13 இரண்டாம் கட்டமாகவும், கி.பி. 13-17 மூன்றாம்

கட்டமாகவும் கருதலாம் என நடன. காசிநாதன் குறிப்பிடு கிறார். இவை இராமநாதபுரம், வேலூர், தருமபுரி மாவட்டங் களில் காணப்படும் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன. இவை முதல்கட்ட எழுத்துகளாகும். வேள்விக்குடி, தளவாய் புரம், சின்னமனூர் ஆகிய ஊர்களில் கிடைத்த செப்பேடுகள் இரண்டாம் கட்ட வளர்ச்சி எழுத்துகளாகும்.

தமிழ் எழுத்து:

கடைக்கழக காலத்து எழுத்து முறையின் மற்றொரு பிரிவு வளர்ச்சி தமிழ் எழுத்துமுறையாக உருப்பெற்றது. இது வட்டெழுத்தைவிட எளிமையானது. தமிழ் எழுத்துமுறையில் காணப்படும் தெளிவான எழுத்துகள் தஞ்சைப் பெருவுடை யார் கோயிலில் செதுக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வெளி யிடப்பட்ட பல்லவ மன்னன் சிம்மவர்மன் வெளியிட்ட பள்ளன் கோயில் செப்பேடு, முதன்முதலாக அறியப்பட்டது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ளோர், தமிழ் எழுத்துமுறையைப் பயன்படுத்தியதை அறிய முடிகின்றது. கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் போன்ற புலவர் பெருமக்கள் தமிழ் எழுத்துமுறையையே கையாண்டனர். வட்டெழுத்து முறையில் ஆர்வம் கொண்டிருந்த பாண்டிய நாட்டவரும் கி.பி.12 நூற்றாண்டுக்குப்பிறகு, தமிழ்முறையி லேயே எழுதத் தொடங்கினர்.

கி.பி.15 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு நாயக்கருடைய ஆட்சியில் கிரந்தம் மற்றும் சமற்கிருதம் கலந்த தமிழ்நடை அறிமுகமாயிற்று. இடைக்காலச் சோழர்கள் காலத்து தமிழ் நடை, நாயக்கர் காலத்தில் மாறிப்போனது. அரசாணைகள் தமிழில் இருந்தாலும் அவை கலப்புமொழி நடையிலேயே அமைந்திருந்ததோடு, சில கையொப்பங்கள், தெலுங்கில் இடப் பட்டிருந்தன. நாயக்கர்கள் காலத்தில் தெலுங்கு மொழிச் சொற்கள் தமிழோடு கலந்தது போலவே, தஞ்சை மராட்டியர் காலத்தில் மராட்டியச் சொற்களும் தமிழில் கலந்தன. கி.பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சமற்கிருதம், தெலுங்கு, மராட்டியம் கலந்த தமிழ்நடையோடு, ஆங்கிலமும் போர்த் துக்கீசியம் இணைந்து கொண்டன.

1811 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் தரும சபையில் (Court) அளிக் கப்பட்ட தீர்ப்புகளில் ஒன்று.[19]

"வாதி சுந்தர சாசுதிரி; பிரதிவாதி அயம் சாசுதிரி; "பிரகீர்ண பதத்தில் சேர்ந்த விவகாரத்துக்குப் பிரதிவாதி புனர் நியாயத்திற் காகக் கொடுத்த விசுடு (List) முழுவதும் முன்னால் விசார ணைக்கு ஆதாரம், முத்ரித சபையிலிருந்து வந்தது. அதைப் பார்த்து விசாரணை செய்த இடத்தில் முன்னால் சபையில் வாதியினுடைய பிரியாதியில் (petition) தெரிவிக்கப்பட்ட நாங் கெல்லையில் கிழக்கு மேற்கு 10 காலடிகள் அகலமான பொதுச் சந்தில் பிரதிவாதி போட்டுள்ள சுவர் கதவு நான்கு மூலை, ஒரு கட்டுக்கோப்பு வகையறா பிரதிவாதி இடித்து மாமூல்படி குளத்திற்கும் வடவாற்றுக்கும் மக்கள் தாராளமாக நடமாடக் கிழக்கு மேற்கு 10 காலடிகள் அகலமான சந்தைச் சுத்தம் செய்ய வேண்டுமென்று தீர்ப்பாகியுள்ளது"

குறிப்பு: பிரகீர்ணக பதம் என்பது, பொதுச் சொத்துக் களை எடுத்துக் கொள்ளுதல் (encroachment) எனப் பொருள் படும். இவ்வாறே,

ரிணாதானபதம் = கடன் பற்றிய வழக்கு

சாகச பதம் = வன்முறை (சிறு குற்றங்கள்) பற்றிய வழக்கு,

நீஷ பதம் = ஏழையாய் இருப்பவன் பற்றிய வழக்கு.

நிட்சேப பதம் = எதிர் மனுதாரருக்கு (பிரதிவாதிக்கு) உரிய பிணை (சாமின்) பற்றியது.

சுதேய பதம் = காலவரம்பை நீட்டித்துத் தர வேண்டுவது,

பூர்வீக சொத்துப்பதம் = முன்னோர்களின் சொத்து பற்றியது,

அர்த்த சம்பந்திக பதம் = அசையா சொத்துகள் (immovable properties) பற்றியது, என விரியும்.

கிழக்கிந்தியக் குழுமத்தின் நடுவர்கள் குடந்தைக்கு வந்து போனதற்காக, அவர்களது பாதுகாவலர்களுக்கு வழங்கப் பட்ட ஊதியம் அல்லது படி பற்றிய ஒரு கடிதம்.[19]

"கும்பகோணம் ஜில்லா கோர்ட் ஜட்ஜ் மேஸ்தர் (Mister) மெண்டாஸ் பாண்டு, மேஸ்தர் ரிசிடெண்ட் (Resident) கிண்டர் சிலி ஹூஜூருக்கு (Huzur)ப் பேட்டிக்கு வந்ததற்கு அவர்களுடைய தலையாத்து சேவகர்களுக்கு இனாம் 23¼ரூ.

மேலும் ஒரு கடிதம்:[19]

"ரிசிடெண்டு சர்க்கீலுக்கு (Resident Circle) எழுதியது: 1845 டிசம்பர் 8, மெரோண்டம் (Memorandunn) கிடைத்தது. சாளுவ

நாயக்கன் பட்டணம் அல்லது எந்த இலாகாவிலும் கிரிமினல் விஷயம் விசாரணை செய்யும் அதிகாரம் கும்பனி உத்தியோகஸ்தர்களுக்குத்தான் என்று தெரிவிக்கப்பட்டது."

1792 ஆம் ஆண்டு மராட்டிய மன்னன் அமர்சிங்கிடம் வலுக்கட்டாயமாக வற்புறுத்தி வாங்கப்பட்ட ஒப்பந்தம்.[19]

"மக்லோட் ஆனவர் ஒரு உடன்படிக்கை - கும்பினியின் தொகைக்காகப் பாப நாசம், மன்னார்குடி, மாயவரம் ..... விட்டுவிடுகிறது. மூன்று வருஷத்து ஒருமுறை கணக்குத் தீர்ப்பது. கும்பகோணம் சுபா பட்டுக் கோட்டை வரிகள் வகையறாக்களை விபஷி ஆனவர் வைத்துக் கொண்டு காலம் கழிக்கிறது. அதிலிருந்து வருஷத்து 60000 வராகன் கடனுக்குச் செலுத்துகிறது. இந்தப்படி சம்மதித்தால் கையொப்பம் போட்டுக் கொடுங்கள். இல்லாவிட்டால் சிவராயரிடத்தில் ஒப்புவித்து விடுங்கள் என்று எழுதினார். உடனே சாயங்காலம் 4,5 தடவை சொல்லியனுப்பி இராத்திரி 9 மணிக்கு மிஸ்டர் மாக்லோட் கோட்டையின் வாசலை மூடி, ரிஜிமெண்ட் மிஸ்தர் ராமன் வீட்டுச் சமீபம் கொண்டுவந்து வைத்துப் பட்டாளம் முழுமையும் திட்டி வாசலுக்கு அருகில் கொண்டு வந்து வைத்து... சாமாதானக் கையொப்பம் இட்டுக் கொடுத்தால் நலம்; இல்லாவிட்டால் கும்பினியின் விரோதம் உண்டாகும் என்று சொன்னார். பிறகு விபஷி ஜப்தி செய்யப்பட்ட 3 தலைகளின் கடுதாசியில் கையெழுத்து இட்டுக் கொடுத்தார்."

திருவிடை மருதூரில் உள்ள ஒரு தேர் பழுதுபட்டிருந்ததும், அது சரி செய்யப்பட்டதும் பற்றிய ஒரு கடிதம்.[19]

"18.10.1862, கவர்ன் மெண்டுக்கு, 1838 - 1840 இல் திருவிடை மருதூர்த்தேரை இராஜா பிரதாப சிங்ஜீ அவர்கள் தயார் செய்ததைப் பற்றி சிவாஜிராஜா அவர்கள் ஆக்ஷேபணை செய்தாற்போல அத்தேரின் வேலையைப் பற்றிய கரஸ்பாண்டென்ஸிம் ஏதாவது இருக்கிறதா என்று சொன்னபடி தேடினதில் இதுவரை அகப்படவில்லை."

மேற்கண்டவாறு பல்வேறு கடிதங்கள், தமிழைச் சிறுமைப் படுத்தி எழுதியுள்ளவற்றைக் காணலாம். தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் என்ற நூலில் ஏராளமான சமற்கிருதம், தெலுங்கு, மராட்டியம், மற்றும் ஆங்கிலச் சொற்கள் தமிழோடு கலந்து எழுதப்பட்ட செய்திகள் உள்ளன. இந்நடைமுறை 19 ஆம் நூற்றாண்டிலும், இருப

தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலும் கூடத்தொடர்ந்தது. மறைமலையடிகள், திரு.வி.க. தேவநேயப் பாவாணர், பாரதிதாசன் போன்ற அறிஞர் பெருமக்களால், பிறமொழிகளிலிருந்து தமிழ் ஓரளவுக்கு மீட்கப்பட்டுள்ளது எனலாம். எனினும் தற்காலத்தில் ஆங்கில மொழிகள் தாக்கம் தமிழில் படர்ந்துள்ளதை மறுப்பதற்கில்லை. ஆங்கில மொழி பற்றி எதுவுமே தெரியாத தமிழ்நாட்டின் படிப்பறிவில்லாத நாட்டுப்புறத்தானும் ஒரு நாளில், குறைந்தது 20 ஆங்கிலச் சொற்களையாவது பயன்படுத்துகிறான் என்று ஒரு புள்ளிக் கணக்கு கூறுகிறது.

6. ஆரியரும், கிரேக்கரும், தமிழரும்

வடக்கு மெசபத்தோமியாவினின்றும் மேற்கேயும் வடக்கேயும் பிரிந்து சென்ற இனமே ஆரியர்கள் என ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர் என்பது பற்றி ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளது. ஆரிய இனம் ஐரோப்பாவின் கிழக்குப் பகுதிகள், வடக்குப் பகுதிகள், உருசியாவின் தெற்குப் பகுதிகளில் பல வாறாக அறியப்பட்டாலும், இந்தியாவுக்கு வந்த ஆரியருக்கும் கிரேக்கருக்குமிடையே ஆன தொடர்புகள் விரிவாகப் பேசப் படுகின்றன. செர்மானியரும் ஆரிய இனத்தோடு இணைக்கப் பட்டாலும், தொடக்ககால உலக வரலாற்றில் செர்மானியரின் பங்களிப்புகள் எவையுமில்லை. பிற்கால செர்மானியர்கள், இந்திய ஆரியர்களைத் தாங்கிப் பிடிப்பதின் மூலம், தங்களையும் உயர்த்திக் கொள்ளலாம் என்று கருதியே அதற்கான விளம்பரங்களில் ஈடுபட்டனர். இட்லர் விடுத்த அறைகூவல், செர்மானிய இனமே ஐரோப்பாவின் உயர்ந்த இனம் என்றது, நாடுகளின் எல்லைக் கோடுகளை அளவுகளாகக் கொண்டதேயன்றி, செர்மனிக்கு அருகில் வாழ்ந்திருந்த நாடுகளின் மக்களும் ஆரிய மரபைச் சார்ந்தவர்களே என்பதை கூறாமல் விட்டு விட்டார். குறிப்பாக, இங்கிலாந்தைத் தனது பகை நாடாகக் கருதிய இட்லர், இங்கிலாந்து மக்களும் செர்மனியிலிருந்து குடிபெயர்ந்தவர்களே என்பதையும் மறைத்துவிட்டார். சமற்கிருதம் மூத்த அக்கையென்றும், ஆங்கிலம் சிறிய தங்கையென்றும் மொழியியல் அறிஞர்களால் சொல்லப்படுவதால், ஏறக்குறைய ஐரோப்பியர் அனைவரும் (பாறக் குடிகள் நீங்கலாக) ஆரிய மரபினரே என்பதை ஆய்வாளர்கள், ஏற்றுக் கொள்கின்றனர்.

அறிவுசார்ந்த அனைத்துக் கலைகளையும் இந்திய ஆரியமே உலகிற்கு அளித்தது என்பதை ஐரோப்பியர்கள் வலியுறுத்துகின்றனர். அதே வேளையில் கிரேக்கர்களின் பங்களிப்புகளும் இந்திய ஆரியத்துக்கு இணையாகப் பேசப்படுகின்றன.

ஒரு சில ஆய்வாளர்கள், கிரேக்கர்களின் தொடர்பினாலேயே இந்திய ஆரியர்கள் பல்வேறு அறிவியல் தொடர்பான செய்தி களை வெளிப்படுத்தினர் என்ற கருத்தையும் கொண்டுள்ளனர். குறிப்பாக சமற்கிருதம் - கிரேக்கம் ஆகிய மொழிகளிடையே காணப்படும் ஒற்றுமைக் கூறுகளால், யார் எவற்றை முதலில் கண்டுபிடித்தார்கள் என்ற குழப்பங்களும் உண்டு.

ஆர்யா என்ற சொல்லுக்கு நம்பிக்கைக்குரிய உயர்ந்த மக்கள் (respectable, honourable or faithful) என்று பொருள் கூறப்பட்டுள்ளது. ஆரியவர்த்தம் என்ற வடநாட்டுப் பகுதியில் வாழ்ந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது. ஆரியவர்த்தத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சமயத்தில் பற்று கொண்டவர்கள் என்பதும் பொருளாகும். இவையன்றி தலைவன் (Master), முதலாளி (Owner), நண்பன் (friend) என்றும் சொல்லப்பட் டுள்ளதை அறியலாம்.

ஆர் என்ற தமிழ்வேர், ஆரியா என்று சமற்கிருதத்திலும், ஆரியன் என்று தமிழிலும் சொல்லப்பட்டுள்ளதைக் காண லாம். ஆர் +ஐயா என்ற இருசொற்களின் காட்டாகவே ஆர்யா என்ற சமற்கிருதச் சொல் திரிந்தது. பாலிமொழியில் அய்யோ (Aayo) என்றும் ஆரியோ (Ariyo) என்றவாறும் அறியப்படும் சொற்கள், நான்கு உண்மைகளை (Four truth) உணர்த்தும் புத்த சமயத்தின் துறவி (Pirest) என்றவாறு பொருள் கூறப்பட்டுள் ளது. அய்யோ- ஆரியோ என்ற பாலி மொழியென்பது, கி.மு. 600 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட மொழியே. தமிழும் ஆரிய ரும் கலந்த சமற்கிருதம், மேலும் அப்பகுதி வட்டார மொழி களின் கலப்பினால் உருவாக்கப்பட்டதே பாலி மொழியாகும். பாழி என்ற தமிழ்ச் சொல்லே, பாலி என்று ஒலிக்கப்படுகின்றது.

பாழ் என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஒன்றுமில்லாமை, வெறுமை என்று பொருள்கூறலாம். வெற்றெண்ணை (Zero) பாழ் எண் என்று பரிபாடல் கூறுகிறது. தங்களுக்கென எதுவுமில்லா மலும், எப்பொருளின் மீதும் அவாவுறுதல் வெறுப்பதும் புத்த சமயம் கூறும் உண்மைகளாகும். பாழி என்ற தமிழ்ச்சொல், இப்பொருளையே விளக்குகின்றது. பிற்காலத்தில் தமிழகம் வந்த சமணர் வாழிடங்கள் கூட, சமணப் பாழிகள் எவையும் இல்லாமையால், வெற்றிடத்தைக் குறிக்க, பாழி என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. பாலி (Pali) என்ற சொல்லின் மூலம் தமிழில் உள்ளதைப் பலரும் அறியவில்லை. ஆர்யா- ஆர்யோ

என்ற சமற்கிருத மற்றும் பாலிச் சொற்கள், செர்மானிய மொழியில் ஈரா (Rra) என்றும், புதிய செர்மானிய மொழியில் ஈரே (Ehre) என்றும், ஐரி மொழியில் ஈரின் (Rin) என்றும் திரிந்துள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[1]

தமிழர்கள், ஆரியன் என்ற சொல்லை உயர்வானவர்கள் அல்லது மேன்மையானவர்கள் என்ற பொருளிலேயே பயன் படுத்தினர். ஆரியர்கள் வடக்கிலிருந்து தமிழகம் வந்ததால், வடநாட்டையும் ஆரிய நாடு என்றே பொதுவாக அழைத்த னர். ஆர்யா என்ற முன்னொட்டுச் சொல், பல சொற்களைச் சமற்கிருதத்தில் உருவாக்கியுள்ளது.

ஆர்ய குமார, ஆரிய குல்ய, ஆரிய கிரிதா, ஆரியதா, ஆரிய தேச, ஆரியதேவ, ஆரிய புத்ர, ஆரிய பால, ஆரிய பிராமண, ஆரியமார்க், ஆரிய யுவ, ஆரியவர்ம என விரியும்.[2]

கிரேக்கர்களின் வரலாற்றை இதுவரையில் எவரும் தெளி வாகக் குறிப்பிடவில்லை. கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பிறகான கிரேக்கவரலாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதேயன்றி, அதற்கு முந்திய காலவரலாறு தெளிவுபடுத்தப்படவில்லை. கிரேக்கம் என்பது ஒரு நாடு என்பதைவிட, பல தீவுகளின் கூட்டம் என்பதே சரியான சிந்தனையாகும். கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு தீவும் அல்லது நகரமும் தனித்தனியான ஆட்சிக்குட்பட்டிருந்தன. கிரேக்கர்கள் என்ற உணர்வு அம் மக்களிடையே காணப்படவில்லை. தாய்நாடு, தாய்மொழி, தாய் நாட்டுப்பற்று என்றவாறு, அம்மக்களிடையே எந்த உணர்வும் இருந்திருக்கவில்லை.

காடும் மலையும் கொண்ட வறண்ட நிலங்களைக் கொண்டிருந்த அத்தீவுகளில் வாழ்ந்திருந்தோர் ஏழ்மையில் சிக்கித் தவித்தனர். அன்றாட உணவுக்கும் பலர் அல்லல்பட்ட னர். இச்சூழலில் கிழக்கேயிருந்த பாபிலோன், பாலத்தீனம், மெசபத்தோமியப் பகுதிகள் சிறந்த நாகரிகம், பொருளியல் அடிப்படையில் வளமையும், முறையான ஆட்சிமுறைகளும் சட்டங்களும் கொண்டிருந்தன. போனீசிர்கள் உலகப் புகழ் பெற்ற வணிகர்களாக விளங்கினர். அடுத்தடுத்து இருந்த நாடு களில் மேற்கே வறுமையும், கிழக்கே வளமையும் பெற்றிருந்த இப்பகுதிகள், பொருளியல் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டி ருந்தன.

கி.மு.500 ஆண்டுகளில், கிரேக்கர்கள் என்று பிற்காலத்தில் சொல்லப்பட்ட பல தீவு மக்கள், தங்களது வாழ்க்கையை வளப் படுத்திக் கொள்ள, கிழக்கு நாடுகளை நோக்கிக் குவிந்தனர். அக்கால அளவில் பாபிலோன், பாலத்தீனம், சிறிய ஆசியா, போனீசியா போன்ற நாடுகளில், தொழில் திறனற்ற பணியா ளர்களாக (Unskilled labours) தங்களை ஈடுபடுத்திக் கொண் டனர். அம்மக்கள் பேசிய மொழிகளும் கொச்சையான இலக் கண வளமற்ற மொழிகளாகவே இருந்தன.

இன்றைய அரபு நாடுகளுக்குப் பிழைப்பைத் தேடிச் செல் வோரைப் போன்று, கிரேக்கர்கள் கிழக்கு நாடுகளில் குடிய மர்ந்தனர். அங்கே அவர்கள் கேட்ட மொழிகளும், நாகரிக வளர்ச்சிகளும், நகரஅமைப்புகளும், கல்விக்கூடங்களும் முற்றி லும் அவர்களுக்குப் புதுமைகளாகத் தோன்றின. நாளடைவில், கிழக்கு நாட்டு மக்களோடு இணைந்தே போயினர். அவர்கள் பேசி வந்த மொழிகளில், ஏராளமான செமிட்டிக் மொழி களின் சொற்கள் இணைந்தன. கிரேக்கர்களில் பலர், கிழக் கித்திய பள்ளிகளில் கற்றனர்.

உயரமான தோற்றமும், வலுவான உடலும், எப்பணிகளை யும் செய்யவல்ல ஆற்றலும் கொண்டிருந்த கிரேக்கர்களை, கிழக்குநாடுகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டன. போர்ப்படையிலும் பல்லாயிரம் கிரேக்கர்கள் பணியாற்றினர். இவ்வாறு ஓரின மக்களை, நாகரிக மக்களாகவும், கல்வியறிவு பெற்றவர்களாகவும் கிழக்குநாடுகள் மாற்றிக் கொடுத்தன. பாபிலோனியர்களுக்கு இணையாக கல்வியும், போனீசியர் களுக்கு இணையாக கடலோடவும் கிரேக்கர்கள் கற்றுத் தெரிந்தனர். சுருக்கமாகக் கூறுவதென்றால், ஒரு புதிய கிரேக்க நாட்டை கிழக்கித்திய நாடுகள் உருவாக்கிக் கொடுத்தன என லாம். பிற்காலத்தில் கிரேக்கர்கள் அடைந்த உயர்வும் பெரு மையும், கிழக்கித்திய மக்களால் அளிக்கப்பட்ட கொடை களே எனக்கூறுவது மிகையன்று. இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்களை, இந்தியத் தொன்மக்குடிகள் எவ்வாறு மாற்றிக் காட்டினார்களோ, அதே போன்று கிரேக்கர்களை மேற்கே உருவாக்கித் தந்தனர். இந்திய ஆரியமும், மேற்கித்திய கிரேக்க மும் கி.மு. 1000 ஆண்டுகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்டவை களே எனலாம்.

வரலாற்றின் தந்தையெனப் போற்றப்படும் எரடோட்டசு, மெய்யியல் கொள்கையின் முன்னோடியாகக் கருதப்படும்

எம்பிடாக்கல்சு, அணுவியத்தின் தந்தையெனப்படும் லியூசிப் பசு அணு ஆய்வைத் தொடர்ந்த அவரது மாணவர் டெமாக் ரடிசு, அறிவுலக மேதையெனப்படும் சாக்ரடீசு போன்றோர், தங்கள் இளமைக் காலங்களில் பாபிலோனில் வாழ்ந்திருந்த வர்களே. இறுதியாக வானியலின் முன்னோடி, தந்தையெனப் படும் தாலமியும் பாபிலோன் கல்விக்கூடத்தில் பயின்றவரே. மேற்கண்ட மாமேதைகளை உருவாக்கிய நாடு பாபிலோன் என்பதை வரலாறு கூறுகின்றது.[3]

கிரேக்கர்களை யவன அல்ல யவ்வன (Yabana) என்ற சொல்லால் சமற்கிருத மொழி குறிப்பிடுகின்றது. யாவன் என்ற எபிறேயச் சொல், கிரேக்கர்களைக் குறித்தது என்பதை ஏற்க னவே விளக்கியுள்ளோம். தமிழ் இலக்கியங்கள் பதிவு செய் துள்ளதைப் போன்றே யகர ஒற்றில் சமற்கிருதம் யவன என்றே பதிவு செய்துள்ளதால், யாவன் என்ற சொல், யவன் என்ற கிரேக்கர்களாலேயே அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதவும் இடமுண்டு. கிரேக்கர்கள் தங்களை யாவன் என்று அழைத்துக் கொள்ளவில்லை. கிரேக்கமொழியில் காணப்படும் இயோன் (Ion) என்ற சொல், யாவன் என்ற எபிறேயச் சொல் லின் திரிபே என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இயோன் என்ற சொல்லை, வேறு எவரோ கூறி அழைத்திருக்க வேண் டும். இயோன் என்ற சொல்லிலிருந்து யாவன் என்ற சொல் திரிவுபடவில்லை யென்பதை, விவிலியப் பதிவுகள் தெளிவு படுத்துகின்றன. விவிலியத்தில் இயோன் என்ற சொல் காணப் படவில்லையென்பதால், பாபிலோனியர்கள் அக்காடிய மொழி யில் இயோன் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

மிகவும் பிற்காலத்தில் அராபியர்களையும் யவன என்ற சொல்லால் வட இந்தியர்கள் அழைத்துள்ளனர். வெளிநாட்டி னர் எவராயினும் அவரைக் குறிக்கும் சொல்லாக இது பயன் படுத்தப்பட்டுள்ளது. யவன என்ற சொல்லுக்கு காட்டுமிராண் டிகள் (Barbarian) என்ற பொருளும் சமற்கிருதத்தில் காணப் படுவதால், கிரேக்கர்களைத் தம்மோடு ஒத்த இனமாக ஆரியர் கள் கருதவில்லையென்பதும் தெளிவாகின்றது. ஆரியர்களைக் காட்டிலும் கட்டான உடலும், போர்த்திறமையும் கொண்டி ருந்த கிரேக்கர்கள், ஆரியர்களைப் போன்று அறிவாளிகளா கக் கருதப்படவில்லை. தங்களை உயர்த்திக் கொள்ளவும் மற்ற வரைத் தாழ்த்தவும் ஆரியர்கள் என்றுமே தயங்கியதில்லை.

இந்தியத் தொன்மக் குடியினரான சிந்துவெளி மக்கள், ஆரியரைக் காட்டிலும் அறிவிலும் நாகரிகத்திலும் மேம்பட்டு இருந்தனர். நகரிய நாகரிகத்தில் வாழ்ந்திருந்த அம்மக்களை, நாட்டுப்புற நாகரிகத்தை மேற்கொண்டிருந்த (rural civilization) ஆரியர்கள், தாசர்கள் என்றும், இராக்கதர்கள் என்றும் அழைத்தனர். பிற்கால ஆரியர்கள், அவர்களைச் சூத்திரர் என்றும் அழைத்தனர். ஆரியர்கள், சிந்துவெளி மக்களை அசுரர் என்றும் அழைத்தனர் எனலாம். ஆனால் பின்னால் வந்த ஆய்வாளர்களில் சிலர், அசுரரும் ஆரியரே என்ற பொருந்தாத விளக்கத்தை அளிப்பவராயினர்.[4]

யவன தேசம் என்ற நாடு எதுவென்பதில் சமற்கிருத மொழியாளர்களிடையே பிற்காலத்தில் முரண்பாடுகள் காணப்பட்டன. சிலர் இயோன்நாடு என்றும், சிலர் கிரேக்கம் என்றும், மேலும் சிலர் பாக்ட்ரியா என்றும், அண்மைக் காலத்தவர் அரேபியர் என்றும் குறித்துள்ளனர். யவனர்களை கிரேக்கச் சோதிடர்கள் (astrologers) என்றவாறும் சில குறிப்புகள் கூறுகின்றன. காத்யா யனர் (Katyayana) என்ற மெய்யியல் அறிஞர் (காக்சாயனா என்றவாறும் சில குறிப்புகளில் காணப்படுகின்றன) யவனானி என்ற சொல்லுக்கு, கிரேக்க நெடுங்கணக்கு (Greek alphabet) என்று பொருள் கூறுகிறார். பாணினி, யாவன் அல்லது யவன் என்ற சொல்லுக்கான பெண்பாற் பெயராகக் குறிப்பிடுகின்றார்.

சமற்கிருத இலக்கியங்களில் காணப்படும் வானியல் தொடர்பான பல கலைச் சொற்கள், கிரேக்க மொழியிலும் காணப்படுகின்றன. இச்சொற்கள் யாவும், கிரேக்கத்தினின்றே சமற்கிருதம் பெற்றுக் கொண்டு பதிவு செய்ததாக சில ஆய்வாளர்கள் கருதியதால், யவனரைச் சோதிடர்கள் என்றும் கூறத் துணிந்தனர். கிரேக்க - சமற்கிருத இலக்கியங்களை நோக்கும் போது, வானியல் மற்றும் எண்ணியல் தொடர்பான பல கலைச் சொற்கள் இரண்டு மொழிகளிலும் ஒரு சொல்லாகவே காணப்படுவதை அறியலாம். ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள் இருமொழிகளிலும் ஒரே ஒலிப்பைப் பெற்றுள்ளன. எம்மொழியிலிருந்து எம்மொழி கடன் பெற்றது என்பதில் ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் காணப்பட்டாலும், அவைகளுக்கான மூலச் சொற்கள் அவ்விரண்டு மொழிகளிலும் இல்லையென்பதும், அவை தமிழ்மூலத்தையே கொண்

டுள்ளன என்பதும் தற்கால ஆய்வுகளால் மெய்ப்பிக்கப்பட் டுள்ளன.

யவன சாடகா (Yavana Jataka) *: உப்பு.* (Salt from saline soil).

யவன புரா (Yavana Pura)*: யவனபுரி அல்ல யவனர்களின் குடியிருப்பு கள். குறிப்பாக எகிப்திலுள்ள அலெக் சாந்திரியாவை, யவனபுரா என்று சமற்கிருதம் குறிப்பிடுகின்றன.*

யவன முண்டா (Yavana Munda) *: மொட்டைத் தலைவன். கிரேக்கர் களில் சிலர் தங்களது தலையை மழித்துக் கொண்டிருந்தனர்.*

யவனாச் சார்யா (Yavana charya) *: கிரேக்கச்சோதிடன்.*

யவனே டா : (Yavaneshta)*: யவனர்கள் இட்டப்பட்ட (விருப்பப்பட்ட) பூண்டு, வெங்காயம் -* Azadirachta Indica; *மிளகு முதலியவற் றைக் குறித்து (ஆரியர்கள் பூண்டைப் பயன்படுத்துவதில்லை)*

இந்திய அறிவியல் என்பது ஆரியரின் அறிவியலே எனப் பதிவு செய்யப்பட்டுவிட்டதால், இந்தியாவில் அறியப்பட்ட அறிஞர் பெருமக்கள் யாவரும் ஆரியரென்றே சொல்லப்படு கின்றனர். அவ்வாறு அறிஞர்களாகக் கருதப்படும் பலருடைய பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.

கணியாரா, கணாதன், காயவன் (காசிபன்), விசுவாமித்தி ரன், சுநகன், வியாசன் ஆகிய பெயர்கள் யாவும் தமிழ்மூலத் தைக் கொண்டவைகளே. இவர்களையெல்லாம் அசுரமுனிவர் கள் என்றே கூறிவைத்துள்ளனர். இவர்களுடைய பிறப்புக் கதைகளையெல்லாம் பார்க்கும்போது, மிகவும் தாழ்ந்த குலத் துப் பெண்களே, இப்பேரறிஞர்களைப் பெற்றெடுத்தவர்கள் என்று சமற்கிருதச் செய்திகள் கூறுகின்றன. இவர்கள் தமிழர் களே என்பதை மறைக்க பலவாறும் கதைகள் பின்னப்பட் டுள்ளன. அதுபற்றியே, சமற்கிருதத்தில் சொல்லப்படும் பழ மொழி, நதிமூலம் ரிசிமூலம் பார்க்கக்கூடாது என்பதாகும். ரிசி மூலம் பார்த்தால் அவர்கள் தமிழர்களே என்பதைச் சுட்டும். இந்த ரிசிகள் சொன்னவற்றை ஏற்றுக் கொண்ட, ஆரியர்கள் தங்களது கண்டுபிடிப்புகளாக உலகிற்கு அவற்றை அறிவித் துள்ளனர்.

நாடோடிகளாக இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்களுக்கு ஒரு மொழியை உருவாக்கவோ, இலக்கியங்களைப் படைக்க வோ, அறிவியல் கண்டுபிடிப்புகளை ஆராய்ந் தெடுக்கவோ, அவர்களது மரபினரின் அறிவு சொல்லிக் கொள்ளும்படி

இருந்திருக்கவில்லை என்பதை, அவர்களது இலக்கியங்களே சொல்லாமல் சொல்கின்றன. இந்நிலையில் உலகிற்கு எவ்வாறு அறிவுக் கொடைகளை அளித்தனர் என்பதை இது நாள் வரையிலும் எந்த ஆய்வாளரும் அறிவியல் நோக்கில் மெய்ப்பிக்க முன்வரவில்லை.

டெமாக்ரடீசு என்ற அறிவியலாளர்தான், முதன்முதலில் அணுவியத்தைப் பற்றிக் கூறியவர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரது காலம் கி.மு. 460 - 370 என்பர். இவரது குருவான லியூப்சிசு தொடங்கிவைத்த பணியை டெமாக்ரடீசு வெற்றிகரமாக முடித்தார் என்பர். வேறு சிலர் டெமாக்ரடீசுக்கு எவரும் ஆசிரியராக இருந்திருக்கவில்லை யென்றும், அவர் தன்னிலே கற்று அணுக் கொள்கையை அறிவித்தார் என்றும் கூறுவர். டெமாக்ரடீசு, எகிப்திலுள்ள சமயத் தலைவர்களிடம் வானியல் தொடர்பான செய்திகளையும், பாரசீக மற்றும் கல்தேயத்து அறிஞர்களிடம் உலகியலைக் கற்றதாகவும் செய்திகள் கூறுகின்றன. அணுவியல் தொடர்பான தனது ஐயப்பாடுகளை, இந்தியத் துறவி ஒருவரே தீர்த்து வைத்ததாகவும், டெமாக்ரடீசு இந்தியாவுக்கு வந்து போனபிறகே, அணுவியல் தொடர்பான தனது கொள்கையை அறிவித்தார் என்றும் கூறுவர்.[4] அணுவியத்தை இந்தியாவில் அவருக்குக் கற்றுத்தந்த துறவி ஓர் ஆரியரே என்று பிற்கால சமற்கிருதச் சார்புடையவர்கள் கூறுகின்றனர்.

உண்மையில், அரைகுறை ஆடையுடன் இருந்த ஒரு துறவியிடமிருந்தே அணுவியம் பற்றிய தகவல்களை டெமாக்ரடீசு கேட்டறிந்தார் என்றும், அத்துறவியை Gymno sophist என்னும் மேற்கித்திய செய்திகள் பதிவு செய்துள்ளன. கார்ல் மார்க்சு கூட, இச்செய்தியை மேற்கோள் காட்டிக் குறிப்பிட்டுள்ளார்.

Gymno அல்லது Gumno என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஆடையற்ற (Nude) என்பதே பொருளாகும். பிற்காலக் கிரேக்க ஆய்வாளர்கள், கோவணம் போன்ற சிறுதுணி ஆடையை மேற்கோள் காட்டுகின்றனர். ஆடையில்லாத என்ற பொருளும், சிறு ஆடை என்ற பொருளும் Gymno என்ற சொல்லுக்கு அளிக்கப்படுவதால், சிறு ஆடைக்குரியவர் ஆரியரே என்றும் ஆடையில்லாதவர் சமணத் துறவியே என்றும் கூறிக் கொள்கின்றனர். உண்மையில் அணுவியத்தின் வேர் கிரேக்கத்தில் இல்லை, அது இந்தியாவிலேயே உள்ளது என வில்லியம்

பிளெமிசு என்பாரது குறிப்பைக் காட்டி, தமிழறிஞர் தாமோ தரன் விளக்குகிறார். அதை அரைகுறை ஆடைத்துறவி ஆரிய ரோ அல்லது சமணரோ அல்லர் என்றும், அவர் தமிழ்க் கணியரான பக்குடுக்கை நன் கணியனாரே என்றும், முனைவர் க. நெடுஞ்செழியன் குறிப்பிடுகின்றார்.[5] இக்கூற்றை விளக்கும் சான்றுகளையும் விரித்துக் கூறியுள்ளார்.

Gymno என்ற சொல்லுக்கு (Nude) என்பதே பொருளாகும். அரைகுறை ஆடையென்றும் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. அமணர் என்ற சொல், சமணர்களைக் குறித்துச் சொல்லப்பட்டதாகக் கூறுவர். அமணர் என்ற சொல்லே, சமணர் என்று திரிந்திருக்க வேண்டும். சமணர் என்ற பெயரில் எந்தத் தீர்த்தங் கரரும் அறியப்படவில்லை. சேய்ன் (Jain) என்ற சொல், சமணம் என்று திரிபுபட்டிருக்க வாய்ப்பில்லை. சேய்ன் என்பது, வெற்றி யாளர் என்ற பொருளைத் தருவதாகும்.

அம் + அணர் = அமணர் என்றானது. அணம்- அணர் - அணா போன்ற தமிழ்ச்சொற்கள் உயர்வான மேன்மையான என்ற பொருளைத் தருவன. அணார் - அண்ணார் என்றும் சொல்லப்பட்டது. அம் என்ற சொல் தண்மையைக் குறித்தது. அச்சம், அவா, வெகுளி போன்றவைகளை அடக்கி, பொறு மையாய் எதனையும் நோக்கும் மேலோர்களைத் தண்மையான வர்கள் என்று கூறுவர். அம் =தண்மை. அமணர் என்போர் உயர்ந்தோர் என்ற பொருளில் துறவிகளையும் குறித்தது. அத் துறவிகள் (அக்காலத்துத் துறவிகள் கணியர்களே) அரைகுறை ஆடையுடன் திரிவதால் அவரை அமணர் என்றனர். அவருடைய தோற்றத்தைக் கொண்டு அமணம் என்ற சொல் உருவாயிற்று. அமணம் பிற்காலத்தில் அம்மணமாயிற்று.

அமணம் என்ற தமிழ்ச் சொல்லே, Gymno என்று கிரேக் கத்தில் திரிந்துள்ளது. உடற்பயிற்சி செய்பவர்கள், அரையில் மட்டும் ஒரு சிற்றாடையை அணிந்து கொண்டு பயிற்சியில் ஈடுபடுவதால், Gymno என்று ஆடையைக்குறித்த சொல்லே, Gymnastics என்று விரிந்தது. Gumnosticos என்பது கிரேக்கச் சொல்லாகும்.

டெமாக்ரடீஸ் சந்தித்த துறவியை Gymnosophist என்று குறிப்பிட்டுள்ளனர். இவர் பக்குடுக்கையாரே என்பது ஆய்வா ளர்களின் கருத்து. பக்குடுக்கை என்பது மரவுரி அல்லது மர

ஆடை என்றே சொல்லப்படும். மரப்பட்டையினுள் காணப்படும் நார்போன்று, கரடுமுரடான துணியை இடுப்பில் ஆடையாக அணிந்திருந்ததினால், அவர் பக்குடுக்கையார் எனப்பட்டார். பக்குடுக்கையார் அல்லது அவரைப்போன்ற கணியமுனிவர் ஒருவரே டெமாக்ரடீசுக்கு அணுவியத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தவர் என்று செய்திகளை மேற்கோள்காட்டி, காரல்மார்க்சு குறிப்பிட்டுள்ளார். அந்தத் துறவியை ஆரியத் துறவி அல்லது இந்துத்துறவி (Hindu Priest) என்றவாறு பதிவு செய்துவிட்டனர். இதனைப் பிடித்துக் கொண்ட ஆரியச் சார்பு ஆய்வாளர்கள், அணுவியல் பற்றிய கொள்கையை ஆரியரே உலகுக் களித்தனர் எனக் கூறினர்.

உண்மையில் அணு பற்றிய தெளிவான சிந்தனை தமிழருக்கு இருந்தது எனலாம். அணுவியம் என்பது இயற்பியல் சார்ந்த அறிவியலாகும். அணுவைப் பற்றிய சிந்தனை தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இருந்தது என்பதை தொல்காப்பியம் கோடிட்டுக் காட்டுகிறது. இவ்வுலகில் காணப்படும் அனைத்துப் பொருட்களும் நிலம், நீர்,தீ, வளி என்ற நான்கு பிரிவுகளில் அடங்கிவிடும் என்பதை தமிழர்கள் உணர்ந்திருந்தனர். ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மைகளும் இருந்தன இருக்கின்றனவென்பது தமிழர் கூற்று, இத்தனித்தன்மையை, பால் என்றனர்.

> **நினையுங் காலைத் தந்த மரபின்**
> **வினையோ டல்லது பால்தெரி பிலவே** – தொல்காப்பியம்.[6]

> **வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்** – தொல்காப்பியம்.[7]

இந்நான்கு வகையான பிரிவுகளையும் பூதங்கள் என்றனர். வானத்தையும் இறுதியில் இணைத்து ஐம்பூதங்கள் என்றனர். பூதம் என்பது தமிழ்ச் சொல்லே. பூத்து விரிவடைதல் என்ற பொருளையும், பூ என்ற வேரையும் கொண்டதாகும். பூதம் - பூத என்றவாறு சமற்கிருதத்தில் திரிந்தது.

> **வளியென வரூஉம் பூதக் கிளவியும்** – தொல்காப்பியம்[8]

அகத்தியத் தருக்க நூற்பாக்கள் காட்டும் அணுவியம், தொல்காப்பியச் சிந்தனைகளின் தொடர் ஓட்டமாகக் கருதப் படல் வேண்டும்.

தமிழரின் அணுக் கொள்கைக்கும் கிரேக்கர்களின் கொள்கைக்கும் வேறுபாடுகள் உள்ளன. நான்கு வகையாகப் பிரிக்கப்

பட்ட நிலம், நிலம், தீ, வளி ஆகியவை தனித்தன்மைகள் கொண்டவையென தமிழர் அணுக்கொள்கை கூறுகிறது. கிரேக்கர்கள் சொன்ன டெமாக்ரடீசின் அணுக்கொள்கை, நால்வகை அணுக்களும் ஒன்றுபோலவே உள்ளன என்று கூறு கிறது. எப்படியிருப்பினும் தமிழர் கூறிய நான்கு வகையான அணுக்களை கிரேக்கர்கள் ஏற்றுக் கொண்டனர். இங்கு தமிழர்கள் கூறியதாக அறியப்படும் அணுக்கொள்கையை, ஆரியக்கொள்கையாகப் பதிவு செய்துள்ளனர். பகுதகாச்சா யனர் என்ற அறிவியலார் ஆரிய மரபைச் சார்ந்தவர் என்றும், அவரே அணுவியத்தின் தந்தை என்றும் சொல்லப்படும் செய்தி களை முனைவர் க. நெடுஞ்செழியன் மறுப்பது பற்றி ஏற்கன வே சொல்லப்பட்டுள்ளது. மேலும் பேராசிரியர் பே.க. வேலா யுதம் பகுத காச்சாயனர் என்று கூறப்படுவர், பக்குடுக்கை நன் கணியாரே என்று மெய்ப்பிக்கின்றார்.

கணியன் என்ற சொல்லிலுள்ள கண் என்ற தமிழ்ச் சொல், அக்சம் என்று சொல்லப்பட்டது. கணியன் -அக்சன் ஆனது. ஷ என்ற ஒலி, ச்ச என்று பின்னர் சொல்லப்பட்டது. காக்சாயனார் - (காக்ஷி) என்பது காண்பது என்றும் பொருள் விரியும்) காச்சாயனார் எனப்பட்டது. பக்கு (டுக்கை)- பகுத ஆனது. பகுத காச்சாயனர் என்ற சொல்லின் மூலச்சொல் பக்கு நன் கணியார் என்பதே என, டாக்டர் நெடுஞ்செழியன் விளக்கு கிறார். காச்சாயனரின் காலம் பாணினிக்கு முற்பட்ட கி.மு. 6ஆம் நூற்றாண்டு என்பர். இந்த காச்சாயனர் வழிவந்த கணியத் துறவி ஒருவரிடம்தான் டெமாக்ரடீசு அணுவியத்தைக் கற்றார் என்று மேற்கித்திய பதிவுகளைக்காட்டி காரல் மார்க்சு கூறுகி றார்.

தமிழரின் அணுக்கொள்கை பற்றி மணிமேகலை விரி வாகப் பேசுகிறது. மணிமேகலையில் கூறப்பட்டுள்ள அணுக் கொள்கைக்கான விளக்கம்போல், வேறெந்த இலக்கியங்களி லும் காணப்படவில்லை. இந்த கொள்கையை விளக்கும் வரி களை சரியான பொருளோடு உரையெழுத இயலாமல் உரை யாசிரியர்கள் தடுமாறியுள்ளனர். சிலப்பதிகாரதித்தில் கூறப் படும் இசை நுணுக்கங்கள் பற்றிய வரிகளுக்கு (இதுவரையி லும் கூட) விளக்கம் தர இயலாமற் போனது போலவே, மணி மேகலை கூறும் அணுவியக் கொள்கைகளுக்கும் உரையாசிரி யர்களால் விளக்கம் தர இயலவில்லை.

கடந்த காலங்களில், மணிமேகலை நூலிலிருந்து மாண வர்களுக்கு பாடப்பகுதிகள் அனைத்தும், மாணவர்களுக்குத் தொடர்பில்லா பகுதிகளாகவே அமைந்திருந்தன. உதயகுமா ரன் மாதவியைத் துரத்துவதை பள்ளி மாணவர்களுக்குப் பாட மாக வைத்தனர். பாடநூல் பகுதிகளை உருவாக்கிய தமிழ்ப் புலவர்கள் என்ன நோக்கத்தில் இப்பகுதியை இணைத்தனர் என்பது புரியவில்லை. மணிமேகலையில் சிறப்பான பகுதிகள் பல இருக்க உதயகுமாரன் காதலை முன்னிலைப்படுத்திய தற் காலப் புலவர்களை எப்படிச் சாடுவதென்றே தெரியவில்லை. அணுக்கொள்கை பற்றி இதுவரையில் பாடநூலில் இடம் பெறவேயில்லை. அப்பகுதியைச் சேர்த்தால் அதற்குச் சரியான பொருள் கூற வேண்டியிருக்கும் என்பதாலோ, அப்பொருள் பற்றிய விளக்கம் அவர்களுக்குத் தெரியா என்பதாலோ, அணு வியல் பற்றிய பகுதியை எவரும் தொடவேயில்லை.

மணிமேகலைக்கு உரையெழுதிய உ.வே.சா. அவர்கள் கூட, மேலழுந்த வாரியாகவே உரையெழுதியுள்ளாரே தவிர, அதன் உட்பொருளை அவர் விளக்கவில்லை.

வரம்பி லறிவ னிறைநூற் பொருள்கள் ஐந்தும் – மணிமேகலை[8]

ஆசீவகச் சமயத்தார்க்கு கடவுள் மற்கலி என்றும், சமய நூல் நவகதி யென்றும் சொல்லப்படுகின்றது. மற்கலி என்பவர் வரலாற்று மாந்தனா அல்லது கடவுள் தன்மை பெற்றவனா என்பது தெரியவில்லை. "மற்கலி தானே யிறையினி" என்று நீலகேசி கூறுகிறது. தமிழரின் அணுவியல் கொள்கைக்கும் மற்கலியின் கொள்கைக்கும் சில முரண்பாடுகள் தெரிகின்றன. மற்கலிதான் முதன்முதலில் அணுக்களைப் பற்றிச் சொன்னார் என்பதுங்கூடத் தவறான செய்தியாகும். வரம்பிலறிவன் என்ப வன் மற்கலியே என்று உரையெழுதப்பட்டுள்ளது.[9] ஆசீவகம் என்பது சமணர்களின் நெறியே என்ற கருத்து மறுக்கப்பட்டு, ஆசீவகர்கள் என்று சொல்லப்படுவோர் தமிழ்க் கணியர்களே என்றும், வடநாட்டில் அறிவுப்புரட்சியை உருவாக்கி, ஐந்திறப் பள்ளிகளை நடத்தியவர்களும் அவர்களே என்றும், முனைவர் க. நெடுஞ்செழியன் கூறுகிறார். ஆசீவகர்கள், மற்கலிக்கு முந்தி யவர்கள் என்றும், அவர்களது காலம் சிந்துவெளி நாகரித் தோடும் தொடர்புடையதாய் இருக்கலாம் என்றும் பாசம் என்ற ஆய்வாளர் கருதுகிறார்.

மேலே கூறப்பட்ட மணிமேகலையின் வரி நிலம், நீர், தீ, வளி, உயிர் என்றவாறு ஐந்து பூதக் கொள்கைகளை விளக்கு கின்றது. உலகிலுள்ள அனைத்து பொருட்களுமே ,அவை உயிருள்ளவையாயினும், உயிரற்றவையாயினும், நான்கு அணுக் களால் ஆனவையே என்பதை,

எல்லையில் பொருள்களில் எங்கும் எப்பொழுதும்
புல்லிக் கிடந்து புலப் படுகின்ற —மணிமேகலை,[10]

என்ற வரிகளால் அறியலாம்.

உயிர் என்பது என்ன? அது ஒரு பொருளா? அதனைக் கண் ணால் கண்டு, கையால் வருடிப் பார்க்க முடியுமா? என்பன போன்ற கேள்விகள் அக்காலத்திலேயே ஆராயப்பட்டன. தமிழருடைய கொள்கையின்படி உயிர் என்பது ஒரு பூதமாகக் கருதப்படவில்லை. மேற்கண்ட நான்கு அணுக்களையும் பிரித் தறிந்து உணரக்கூடிய ஒன்றே உயிர் என்று தமிழர்களால் சொல் லப்பட்டது. நிலமும் நீரும் தீயும் வளியும் தொட்டுணர்ந்து அறியக் கூடியவைகளாகும். இவ்வணுக்கள் பலவும் சேர்ந்து பொருள்களாகின்றன. அவை பிரியவும் கூடவும் உள்ளன என்ப தால், அப்பிரிவு அப்பொருளின் உருவத்தை மாற்றிவிடும். கை யிலெடுக்கக் கூடிய பனிக்கட்டி நீராகவும், அந்நீர் காற்றாகவும், அக்காற்று மீண்டும் நீராகவும் செய்யும். பொருட்களின் உரு வங்கள் மாறினாலும் அதன் மூலப்பொருட்கள் மாறுவதில்லை. எப்பொருளின் மூல அணுவை எவராலும் அழிக்க இயலாது. அவ்வணுக்கள் மலை, மரம், உடம்பு என உருவத்தில் மாறு படும். இவைகளையெல்லாம் அறிவது உயிர் என்று சொல்லப் படும்

அவ்வணு உற்றும்கண்டு உணர்ந்திடப்
பெய்வகை கூடிப் பிரிவதும் செய்யும்
நிலநீர், தீ, காற்றென நால்வகையின
மலை,மரம், உடம்பு எனத் திரள்வதும் செய்யும்
வெவ்வேறாகி விரிவதும் செய்யும்
அவ்வகை அறிவது உயிர் எனப் படுமே —மணிமேகலை,[11]

மேற்கண்ட வரிகளின் கருத்தை எம்பிடாக்கல்சு ஏற்றுக் கொள் கிறார்.

சேர்தல்
↓
பொருளாதல்
↓
பிரிந்துபோதல்
↓
மீண்டும் சேர்தல்

என்றவாறு இடையறாது இவ்வியக்கம் நிகழ்வுற்றுக் கொண்டிருப்பதாகத் தமிழ்க் கணியம் கூறுகிறது. இவ்வாறு இணைதலும் பிரிதலும் என்ற அணுவின் இயக்கத்தை, சமய நோக்கில் பலர் விளக்கியுள்ளனர். சேர்தல்- பிரிதல் அறிவியல் உண்மை. இதனையே இன்பமும் துன்பமும் என்று மெய்யியலாக விளக்கம் தந்தனர்.

இன்பமும் துன்பமும் இவையும் அணுவைத் தரும் - மணிமேகலை,[12] இன்னும் ஒருபடி மேலே சென்ற சமயச் சிந்தனை, அவைகளைப் புண்ணியம் - பாவம் நன்மை - தீமை, ஆகூழ் - போகூழ் என்றவாறெல்லாம் விளக்கியது. பாவ புண்ணிய நடப்புகள் கூட,அறிவியல் கருத்தைத் தழுவியே சொல்லப்பட்டன என்க.

அணுவைப் பிளக்க முடியுமா? முடியும் என்கிறது தற்கால அறிவியல். ஆல்பர்ட் ஐன்சுடீனின் ஒப்புமைத் தத்துவம் உலகில் அதுவரை சொல்லப்படாத அறிவியல் நிகழ்வு. அணுவை உடைத்து அழிவுகளை ஏற்படுத்திய இரண்டாம் உலகப்போர், உலக வரலாற்றில் கறைபடிந்த பக்கங்களைக் கொண்டது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழரின் கொள்கை அணுவை உடைக்க முடியாது என்பதே. இக்கொள்கையை உடைப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. அணுவை சுத்தியலால் தட்டி உடைக்க முடியாது. உரலில் இட்டுக் குத்தினாலும் அது உடையாது. உடையாவிட்டாலும் பரவாயில்லை, அது அவலைப்போல் போல் தட்டையாகிப் போகுமா என்றால் அவ்வாறும் நிகழாது. அணுவை நீட்டவோ, குறுக்கவோ, கம்பி போல் வளைக்கவோ முடியாது என்பதைத் தமிழர்கள் தெளிவுபடுத்தியிருந்தனர்.

ஆதியில்லாப் பரமா ணுக்கள்
தீதுபற்றி யாவதுஞ் சிதைவது செய்யா

புதிதாய்ப் பிறந்தொன்றிற் புகுதா
முதுநீரணு நிலவணுவாய்த் திரியா
ஒன்றிரண்டாசிப் பிளப்பதுவும் செய்யா
அன்றியும் அவல்போல் பரப்பதுஞ் செய்ய — மணிமேகலை,[13]

தொல்தமிழரின் இயற்பியல் (Physics) எவ்வாறு சொல்லப் பட்டுள்ளது என்பதை மணிமேகலை விளக்குகிறது. இந்தவாறு சமற்கிருத மற்றும் கிரேக்கமொழிகளில் அணுவியல் விளக்கங் கள் கூறப்படவில்லை. நிலம், நீர், தீ, வளி ஆகிய நான்கு அணுக்களும், அனைத்துப் பொருட்களிலும் உள்ளன. ஒன்று - முக்கால் - அரை கால் என்றவாற இணைந்து ஒரு பொருளா கின்றன. எப்பொருளில் பெரும்பான்மையான அணுக்கள் உள்ளனவோ, அப்பெயராலேயே அப்பொருள் அழைக்கப்படு கின்றது. எடுத்துக்காட்டாக நிலவணுக்கள் கூடுதலாக உள்ள பொருள் கல் எனப்படும். அவ்வாறே ஒவ்வொரு பொருளும் அறியப்படும். இக்குணங்களை அவை அடைவதால், நிலம்-நிலமாகவும், நீர் - நீராகவும், தீ - தீயாகவும், வளி - வளியாகவும் உள்ளன. அவை கட்டாந்தரையாகவும், வழிந்தோடும் நீராக வும், சுடுகின்ற நெருப்பாகவும், வீசுகின்ற காற்றாகவும் உள்ளன. இவ்வாறு நிலை பெற்றே தத்தமக்குரிய தொழிலைச் செய் கின்றன.

நிறைந்த இவ்வணுக்கள் பூதமாய் நிகழில்
குறைந்தும் ஒத்தும் கூடா வரிசையின்
ஒன்று முக்கால் அரை காலாய் உறும்
துன்று மிக்க அதனால் பெயர் சொல்லப் படுமே
இக்குணத்தை அடைந்தால் அல்லது நிலனாய்ச்
சிக்கென்பதுவும் நீராய் இழிவதும்
தீயாய்ச் சுடுவதும் காற்றாய் வீசலும்
ஆய தொழிலை அடைந்திட மாட்ட —மணிமேகலை,[14]

மிகவும் சரியான அறிவியல் விளக்கத்தை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மணிமேகலை தெரிவிக்கின்றது. இதனைச் சாத்தனாரின் கண்டுபிடிப்பு என்று கூறமுடியாது. பன்னெடுங்காலமாய்ச் சொல்லப்பட்டு வந்த அறிவியல் செய் தியை, சாத்தனார் பதிவு செய்திருக்கிறார் என அறியலாம். சாத் தனார் எந்நூலிலிருந்து இப்பகுதிகளைக் கற்றார் என அவர் குறிப்பிடவில்லை. ஆனாலும் இது என்னுடைய கண்டுபிடிப்பு எனக் கூறவுமில்லை.

தமிழர்கள் அறிவியலை ஆய்வு செய்து அதன் உண்மைகளை வெளிக் கொணர்ந்த வேளைகளில், அவ்வுண்மைகளை மறுத்தும் புதிய செய்திகளும் சொல்லப்பட்டன. ஆசீவகம் என்ற தமிழ்க் கணியம் கூறிய பல செய்திகளை, மற்கலியின் கூற்றுகள் மறுக்கின்றன. புதிய விளக்கங்களையும் கொடுக்கின்றன. ஆசீவகத்தை எள்ளி நகையாடுகின்றன. இவைகளையும் புறந்தள்ள வேண்டியதில்லை. ஓர் அறிவியல் உண்மையை, தமிழ்க் குழுக்கள் எவ்வாறெல்லாம் நேர்முனைகளிலும் எதிர்முனைகளிலும் நின்று ஆராய்ந்து பார்த்திருக்கின்றன என்றே நாம் கொள்ள வேண்டும். இக்குழுக்கள் எல்லாம் சமயம் என்ற நிலையிலிருந்து தங்களை முரண்படுத்திக் கொண்டன.

மேற்கண்ட செய்திகளின்படி, நீரிலும் கூட தீயின் அணுக்களும், நிலவணுக்களும், காற்றின் அணுக்களும் கலந்துள்ளன; என்றாலும் நீரணு மிகுந்து மற்றவை குறைந்து அறியப்படுவதால் அது நீரின் இலக்கணத்தைப் பெற்றுள்ளது எனலாம்.

பண்டைத் தமிழரில் ஒரு குழு, மக்களின் பிறப்பை ஆறு வகையாகப் பிரித்துப் பார்த்தது. அவை நிறங்களால் விளக்கப்பட்டன. கரும்பிறப்பு, கருநீலப் பிறப்பு, பச்சைப் பிறப்பு, செம்மைப் பிறப்பு, பொன்பிறப்பு, வெண்மைப் பிறப்பு எனப்படுவனவாகும். இவற்றில் பிறப்பு என்பது ஒவ்வொரு முறையும் பிறத்தலைக் குறிப்பதுவன்று. ஓருயிர் இவ்வுலகில் பல்வேறு புறத்தாக்குதல்களை எதிர்கொள்ளும்போது, நல்லவற்றை உட்கொண்டு, தீமைகளைக் களைதல் என்பதே பிறப்பு என்று விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு நிலைகளையும் கடந்து, மாசுமருவற்ற வெள்ளை மனத்தினனாய் மாந்தன் மறைவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை நிறங்கள் கூறும் செய்தி வெளிப்படுத்துகின்றது.

கரும்ம் பிறப்பும் கருநீலப் பிறப்பும்
பசும்ம் பிறப்பும் செம்ம் பிறப்பும்
பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பும்
என்றிவ் வாறு பிறப்பினு மேவிப்
பண்புறு வரிசையிற் பாற்பட்டுப் பிறந்தோர்
சுழிவெண் பிறப்பிற் கலந்துவீ டணைகுவர்
அழியல் வேண்டா ஏதுவுறற் பாலார்
இது செம் போக்கி னியல்பிது தப்பும்
அது மண் டலமென் றறியல் வேண்டும். —மணிமேகலை,[15]

இறுதியில் அடையும் வெண்மை நெறியை செம்போக்கு நெறி என்று மணிமேகலை கூறுகிறது. அதனை அடைய இயலாதவர்களை மண்டல நெறியாகக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு அணுவியம், பிறப்பியம், வாழ்வியம், மாந்த வியம் போன்ற அறிவியலோடு கலந்த வாழ்க்கை நெறிகளை அக்காலத் தமிழர் வகுத்திருந்தனர். இவ்வளவு ஆழமான அறிவு சார்ந்த மெய்யியல் கொள்கைகளை, ஆரியமோ கிரேக்கமோ அறிவிக்கவில்லையென்பதை அறிதல் வேண்டும்.

7. கிரேக்க – ஆரிய வானியல்

வானியலைக் கண்டுபிடித்தது ஆரியரே என்றும், அதனை மேலை நாடுகளில் பரப்பியவர்கள் கிரேக்கர்கள் என்றும் மேற்கித்திய நூல்கள் தெரிவிக்கின்றன. அங்கிருந்து இங்கு வந்த சில மேற்கித்திய ஆய்வாளர்கள், ஆரியம் கூறும் வானியல் தொடர்பான செய்திகள் யாவும், ஆரியர் இந்தியாவுக்கு வரு முன்னரே, அதாவது கி.மு.4000 ஆண்டுகளிலேயே, இந்திய மக்களிடம் காணப்பட்டதாகக் கூறுகின்றனர். ஆரியம் கூறும் வானியல் என்பது, இந்தியாவின் தொன்மக் குடியினர் சொல்லி வைத்த செய்திகளின் தொகுப்புகளே என்பதையும் விளக்கியுள் ளனர். இரிக்கு முதலிய வேதங்களை மட்டுமே படித்து, இந்திய வரலாற்றை அறியாத மேற்கித்திய ஆய்வாளர்களில் சிலர்தான், வானியலை ஆரியமே கண்டுபிடித்ததாகக் கூறி வைத்தனர்.

ஆரிய வானியல்:

ஓகம் என்ற உடலோம்பும் கலையைப் போல், வானியல் அறிவும் வேதகால முனிவர்களுக்குக் காட்சிகளாகத் தெரிந்த தாகவும், அக்காட்சிகளின் அடிப்படையிலேயே வானியல் பற்றிய உண்மைகளை அவர்கள் எழுதி வைத்தாகவும் கூறப்படு கின்றது. இத்தகைய முனிவர்கள் எப்போது வாழ்ந்திருந்தனர் என்றால், மனித நாகரிகம் தோன்றிய காலத்தே அவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பர். அவர்கள் கண்டுபிடித்த வானியல் பற்றிய செய்திகள் பல்லாயிரம் ஆண்டுகளாக தலைமுறை களுக்கு வாய்வழிச் செய்திகளாக எடுத்துச் செல்லப்பட்டன. இந்த வேத அறிவியலை (Vedic science) அவர்கள் எம்மொழி யில் உரைத்தார்கள் என்றால், தேவலோக ஒலிகளைக் கொண்டு, மந்திரம் என்ற மொழியால் உரைத்தனர் என்கின்றனர்.

“ஓம்'என்ற ஒலியிலிருந்தே மந்திரங்கள் தோன்றின என்பர். உலகின் அனைத்து ஒலிகளும், ஒலிகள் வழிவந்த மொழிகளும் ஓம் என்ற ஒலியிலிருந்தே தோன்றின. இந்த மந்திர மொழியை முனிவர்கள் பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தினர். அறிவு

(Knowledge) சார்ந்த துறைகளான ஓகம், தத்துவம், வானியல், கணக்கியல், மருந்தியல், கவிதை, காப்பியங்கள் மற்றும் இசை சார்ந்த கலைத்துறைகள் ஆகியவற்றில் மந்திரமொழி பயன் படுத்தப்பட்டது."[2]

மைத்திரியானி உபநிடதம் கூறும் செய்தியின்படி, கதிர வன் என்பது புற ஆற்றல் என்றும், உயிர் என்பது உள் ஆற்றல் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த உள்ஆற்றலைக் கொண்டு புறஆற்றலை அளவிட இயலும் என்றும் அறியப்பட்டது. இந்த உள் ஆற்றல், ஓகம் முதலிய பயிற்சிகள் வழியே கிடைப் பது எனவும், பயிற்சியின் பயனாக மனக் கண் திறக்கப்பட்டு, கதிரவனும் வானத்திலுள்ள அனைத்து விண்மீன்களும், கோள் களும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் காணவியலும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த உத்தியின் வழியேதான், முனிவர்கள் வானியலை அறிந்துகொண்டனர் என்றும் அந்த உபநிடதம் கூறுகிறது.[3]

இந்த உள் ஆற்றலை அல்லது உள் அறிவை,"ஆத்ம வித்யா" (Adma Vidya) என்று சமற்கிருதத்தில் கூறுவர்.[4] தன்னை அறிந்த, அவ்வறிவின் வழியே வானத்தை அறிவதே, வேத அறி வியலாகும். உள் ஆற்றலின் வழியே உணரப்பட்டவைகள் தான் மந்திரங்கள் எனப்பட்டன. இந்த மத்திர மொழியால் பாடப் பெற்றதே இரிக்கு வேதமாகும். இந்த வேதமே வானியலை உலகிற்கு முதன்முதல் அறிவித்த நூலாகும். வேத மந்திரங்கள் ஆன்மீக அறிவைக் கொண்டு, வேதத்தின் உட்பொருளை அறிய உதவுகின்றன. உட்பொருள் அறியப்பட்டால், உலகியலைச் சார்ந்த அனைத்து அறிவும் (Knowledge of the universe) வெளிப் படும்.

வானியலை மையமாகக் கொண்டு அறியப்பட்டதே சுடரியம் எனப்படும் சோதிடமாகும். சோதி என்ற சமற்கிருதச் சொல்லினின்றும் விரிந்த சொல்லே, சோதிடம் (Jyotish) எனப் பட்டது. வானியலை முதன்முதல் அறிந்து சொன்னவன் வசிட் டனே என்பது ஒரு கருத்து. வசிட்டன் வேதகாலத்து முனிவன் என புராணங்களும், தந்திரக் கதைகளும் கூறுகின்றன. இவ னுடைய பெயரனான பராசரன் என்பவனே, இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ள வானியல் தொடர்பான உட்பொருளை அறிந்தவன் எனப்படுகின்றான். பராசரனின் பிரிகத் பராசர ஹோர சாத்திரா (Brihat Parasara Hora Sastra) வானியலைப் பற்றியும், சோதிடக் கலைபற்றியும் தெளிவாகப் பேசுகிறது.[5]

வேதகால வானியல் எக்காலத்தில் தோன்றியது என்பதை பலரும் பலவாறாகக் கூறினாலும் வேதங்கள் தொகுக்கப்பட்ட காலத்துக்கு (1500 +3000) முன்பாக, அதாவது கி.மு. 4500 ஆண்டுகளிலேயே, வானியல் பற்றிய செய்திகள் அறிவிக்கப்பட்டன.6 இந்தச் செய்திகளை வேதங்கள் உள்வாங்கிக் கொண்டு, மக்களுக்கு அறிவித்தன. மேழ ஓரையில் கார்த்தீயின் இருப்பிடமும் அல்லது விடை ஓரையின் தொடக்கமும் கி.மு.2500 ஆண்டுகளில் அறியப்படுகின்றது. (The vernal equinox in the Pleiades or the beginning of Taurus). இதற்கு முன்னதாக, பல்லாயிரம் ஆண்டுகளில் (கி.மு. 4000), ஆடவை- ஓரையன் காலத்தில் (Gemini - Orion), மேழம், மரைமானில் (the vernal equinox in Mrigashira) இருந்த காலமும், மேழ ஓரை, கற்கடகத்தில் நுழைந்த காலமும் (The equniox in Punarvasu) கணக்கிடப்பட்டன. பின்னது கி.மு. 6000 ஆண்டுகள் என்பர்.

வேதத்தின் வானியல், வான்வெளியை 12 ஓரைகளாகவும், 360 பாகைகளாகவும் பிரித்திருந்தது. திங்களை மையமாகக் கொண்ட நாட்காட்டி பற்றி இரிக்கு வேதத்தில் குறிப்புகள் உள்ளன. கதிரவன் ஏழு புரவிகள் பூட்டிய தேரில் வருவதாகச் சொல்லப்பட்ட செய்தி, ஏழு கோள்களைக் குறித்ததே. திங்கள் பெயர்ச்சியில் அறியப்படும் 27 விண்மீன்கள் கூட்டங்களைப் பற்றியும் இரிக்கு வேதம் தெளிவாகப் பேசுகின்றது. வேதகாலத்துத் தேவர்கள், வானில் காணப்படும் அனைத்து செய்திகளையும் அறிந்திருந்தவராதலால், பிற்காலத்தில் அவர்களது பெயர்களே விண்மீன்களுக்குச் சூட்டப்பெற்றன. விண்மீன் கூட்டங்களுக்கென அறியப்படும் பெயர்கள் அனைத்தும் வேதத்தில் சொல்லப்பட்ட வேதக்கடவுளர்களின் பெயர்களே ஆகும்.[7]

வானத்தில் அறியப்படாத சில கமுக்கமான முடிச்சுகளையும் இரிக்குவேதம் அவிழ்த்துவிட்டுள்ளது. தேவர்களின் அறிவு (Cosmic knowledge) எனப்பட்ட கமுக்கமான அறிவை மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில், இரிக்கு வேதம் வெளிப்படுத்தியுள்ளது. கடவுளின் உருவம் பற்றிய செய்தி, கணக்கியல் உருவகமாகச் சொல்லப்பட்டுள்ளது. நான்கு கொம்புகளும் (four horns) மூன்று கால்களும், இரண்டு தலைகளும், ஏழு கைகளும் கொண்ட ஆதிமுதல்வன், என்றும் நிலையானவன் என்றும் வேதம் கூறுகிறது.[8]

வேதம் அளித்துள்ள சோதிடம் பற்றிய அறிவு, இந்திய ஆரியம் கண்டுபிடித்ததே. இதனை தொடக்கத்தில் ஆரியர்களே வெளிப்படுத்தினர். அவர்களைத் தொடர்ந்து புத்த சமயத்தாரும், சமண சமயத்தாரும் இக்கலையை வளர்த்தனர். இக்கலை, இந்தியாவுக்கு வெளியிலும் பரவத் தொடங்கியது. பாரசீகம், ஆப்கானிசுதானம், உருசியா, நடு ஆசியா போன்ற நாடுகளும் இக்கலையை அறிந்துகொண்டன. புத்த சமயத்தின் தாக்கங்களைப் பெற்ற திபேத், இலங்கை, பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் ஆரியச் சோதிடக் கலை எடுத்துச் செல்லப்பட்டது. மேற்கே பாபிலோன், எகிப்து, கிரேக்கம் போன்ற வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டு அறியப்பட்ட நாகரிகங்களிலும் ஆரியரின் வானியல் அறியப்பட்டிருந்தது. குறிப்பாக, பாபிலோனியர், ஆரியரின் வானியலை அப்படியே ஏற்றுக் கொண்டனர்.

வேதகால வானியலை ஆரிய வானியல் (Hindu astronomy) என்றும், சோதிடக் கலையை ஆரியச் சோதிடம் (Hindu astrology) என்றும் கூறுவர்.

திறனாய்வு:

மேற்கண்ட செய்திகள், இரிக்குவேதம், புராணங்கள், உபநிடதங்கள் ஆகிய ஆரிய இலக்கியங்கள் சொல்லப்பட்டுள்ள செய்திகளின் சுருக்கமாகும். இச்செய்திகள் பற்றிய உண்மைத் தன்மைகள் ஒருபுறம் இருக்க, அனைத்து அறிவியல் கலைகள் தொடர்பான கண்டுபிடிப்புகளையும் ஆரியர்களே அறிவித்தனர் என்ற செய்தி,எந்த அடிப்படையும் இல்லாததாகும். வரலாற்றாய்வாளர்கள், இரிக்குவேதத்தில் காணப்படும் வானியல் தொடர்பான செய்திகள், இந்தியாவின் தொன்மக் குடியினரால், கி.மு. 4000 ஆண்டுகளில் சொல்லப்பட்டவை என்பதை ஒப்புக் கொள்கின்றனர். ஆரிய இலக்கியச் செய்திகளின் அடிப்படையில்,அவைகளுக்கு விளக்கம் சொல்லும் அதன் ஆய்வாளர்கள், கி.மு.6000 -2500ஆண்டுகளிலேயே வானியல் தொடர்பான செய்திகள் அறியப்பட்டிருந்தன என்பதை உறுதி செய்கின்றனர். இச்செய்தியின் அடிப்படையில் பல்வேறு புராணக் கதைகளையும் இணைத்துள்ளனர்.

ஓம் என்ற ஒலியிலிருந்தே மொழி தோன்றி, வேதங்களைப் படைக்க உதவியதாகவும் கூறுகின்றன. ஓம் என்ற சொல்,

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன்னரே, சிந்துவெளியில் அறியப்பட்டிருந்ததை, தற்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. எபிறேய மொழியிலும் ஓம் என்ற சொல் அறியப்பட்டு பாலத் தீனக் குகைகளில் அக்குறியீடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வானியல் தொடர்பான செய்திகள், கி.மு. 6000 - 2500 ஆண்டு களில் சொல்லப்பட்டன என்ற அறிவிப்பின் வழியே, ஆரிய இனம் அக்கால அளவிலேயே இந்தியாவில் இருந்தது என்பதை நிறுவ முயன்றுள்ளனர். ஆரியரின் வருகை, மேல் எல்லையாக கி.மு. 2000 என்றும், கீழ் எல்லையாக கி.மு.1500 என்றும் ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், கி.மு. 6000 ஆண்டுகளில் அறியப்பட்ட வானியலுக்கும் ஆரியர்களுக்கும் எந்தத்தொடர்பும் இல்லை என்பது தெளிவாகின்றது. வேதங் கள் அக்காலத்திலேயே எழுதப்பட்டன என்பதையும் ஆய்வா ளர்கள் மறுக்கின்றனர். வேதங்கள் அல்லது இரிக்கு வேதம் கி.மு. 1000 ஆண்டுகளில்தான் சொல்லப்பட்டது என்பதையும் ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். முன்னர் அறியப்பட்ட வானியல் தொடர்பான செய்திகளை சௌநகனும், பின்னர் வியாசனும், இரிக்குவேதத்தில் இணைத்துள்ளனர் என்பதை யும் ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். சௌநகன் கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலும், வியாசன் கிறித்துப் பிறப்பாண்டுகளில் வாழ்ந்திருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. எனவே, இரிக்கு வேதம் கூறும் வானியல், ஆரியருடையதன்று என்பது தெளி வாகின்றது.

வசிட்டனும் பாராசரனும் வரலாற்றுக் காலத்திலிருந்த வர்களே என்றும் கூறப்படுகின்றது. இவர்களும் தங்கள் பங்கிற் குச் சில வானியல் தொடர்பான செய்திகளை இணைத்துள்ள னர். மீன்களை 12 ஓரைகளாகவும், 27 கூட்டங்களையும், வான் வெளியை 360 பாகைகளாகவும் ஆரியரே வகுத்தனர் என்பதற் கான சான்றுகளை ஆரியச் சார்புடையவர்கள் அளிக்க முன்வரவில்லை. ஆனால் சிந்துவெளிச் செய்திகளில் வானியல் தொடர்பான சொற்கள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள், குறிப்பாகப் பரிபாடல், வானியல் தொடர் பான செய்திகளைத் தெளிவாக விளக்குகின்றது.

பாபிலோனியருக்கும் எகிப்தியருக்கும்கூட, வானியலைக் கற்றுத் தந்தவர்கள் ஆரியர்களே என்பது, வரலாற்றுப் பொய் யாகும். பாபிலோனியர் வானியலில் சிறந்திருந்த கி.மு.3000

ஆண்டுகளில், ஆரியர்கள் இந்தியாவின் தொன்மக்குடிகள் என்ற செய்தியை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தனர். ஆனாலும் அச்செய்தியும் மறுக்கப்பட்டு, ஆரியர்கள் இந்தியாவின் தொன்மக் குடிகள் அல்லர் என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

வானியல் தொடர்பாக ஆரிய இலக்கியங்கள் கூறும் கலைச் சொற்கள் அனைத்தும் தமிழ்மூலத்தையும் வேரினையும் கொண்டுள்ளதை தற்கால மொழியியல் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. தமிழ்மொழியில் சொல்லப்பட்ட கலைச் சொற்களை, சுருக்கியும் விரித்தும், திரித்தும் கூறியுள்ளனர். திரித்துக் கூறப்பட்ட அச்சொற்களும் தமிழ்ப் பொருளையே கொண்டுள்ளன எனலாம். தமிழில் அறியப்பட்டிருந்த விண்மீன்கள், கோள்கள், 12 ஓரைகள், 27 விண்மீன் கூட்டங்கள், அவைகள் இடம்பெற்றிருந்த பாகைக் கணக்குகள், தமிழராலேயே அறிவிக்கப்பட்டிருந்தன. (விளக்கப்படத்தைக் காண்க) தமிழில் சொல்லப்பட்டிருந்த கலைச் சொற்களை, வியாசனே சமற்கிருதத்தில் திரித்துக் கூறியிருக்கவேண்டும். அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட சில பெயர்களும்கூட, சமற்கிருதத்தில் பொருள் அறியப் படாததால், தமிழ்ப் பெயர்களையே கொண்டுள்ளன. சமற்கிருதம் குறிப்பிடும் 27 விண்மீன் கூட்டப் பெயர்களுக்கும் தமிழ் மூலம் காட்ட இயலும். பூசம், புணர்பூசம் போன்ற பெயர்கள், தமிழ்ப்பெயர்களே. சமற்கிருதம் கூறும் மாதங்கள், நாள் பெயர்கள் கூடத் தமிழ்மூலத்தைக் கொண்டவைகளே. கோள்கள் விண்மீன்களின் பெயர்களும் தமிழ்மூலத்தைக் கொண்டவைகளே. (இவைகள் பற்றிய விளக்கங்கள், ஆசிரியரின் வானியலும் தமிழரும் என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளன.)

சோதிடம் சார்ந்த நம்பிக்கைகள் தமிழரிடையே பரவலாக அறியப்பட்டிருந்தன. கோள்கள் திசைமாறுவது, எரிகொள்ளிகள் வீழ்வது, கோள்களின் நிறங்கள் மாறுபட்டுத் தெரிவது, வானியல் மாற்றங்களைக் கதைகளாகத் தமிழர் வடித்திருந்தனர். இத்தொன்மைக் கதைகள் மேலும் விரிவு படுத்தப்பட்டு சமற்கிருத மொழியில் புராணம் கதைகளாக உருவெடுத்தன. தமிழர்கள் குடியேறிய மேலைநாடுகளிலும் நாள்கோள் பார்த்து வருங்காலத்தை யுரைப்பது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இச்செய்திகள், ஆரியர்களின் சோதிடநூல் அறியப்படுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோனில் அறியப்பட்டிருந்தன. எகிப்தியர்கள், சோதிடத்தை ஒரு கலையாகவே வளர்த்திருந்தனர்.

தமிழில் நாள் கோள்களை அறிந்து வருங்காலம் உரைப்ப வனை, பார்ப்பான் என்று அழைத்தனர். பார் என்ற தமிழ்மூலச் சொல் (See), வானிலுள்ள மீன்களை, கோள்களைப் பார்த்து அறிதல் என்ற பொருளில் சொல்லப்பட்டதே. பார் என்ற தமிழ் மூலச் சொல், பாபிலோனில் நாள் கோள் பார்ப்பவனுக்கு பாரு (Baru) என்று சொல்லப்பட்டிருந்தது. எகிப்தில் சமயத் தலைவனை பாரோ (Pharoah) என்றனர். இவன் பிற்காலத்தில் ஆட்சித் தலைவனாகவும் அறியப்பட்டபோதும், அப்பெயரே நிலைத்தது. எனவே, சோதிடக்கலையென்பது, ஆரியர்கள் கண்டுபிடித்த ஒன்றல்ல என அறியலாம். பிற்காலத்தில் ஆரியர்கள் தமக்குச் சார்பாக சோதிடக் கலையை மாற்றிக் கொண்டனர். வருவாயைத் தரும் தொழிலாக சோதிடம் கருதப்பட்டது. பதிவு செய்யப்பட்டுள்ள பாபிலோனிய இலக்கியங்களில், தமிழரின் காலம் குறித்த கணக்கீடுகளே அறியப்படுகின்றன. எண் கணிதத்துக்கும் ஆரியத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்பதை அண்மைக்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

ஆரியரின் காலக்கணக்கு:

ஆரியரின் சோதிடக் குறிப்புகளின்படி, பொன் - வெள்ளி - செம்பு - இரும்புக் காலங்களாக கடந்த காலத்தைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. மனு என்ற உலகின் மாபெரும் சட்டத் தொகுப்பாளர் கி.மு. 12000 ஆண்டுகளில் வாழ்ந்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது.[9] இந்த 12000 ஆண்டை ஓர் எல்லையாக ஆரியச் சோதிடம் கூறுகிறது. நான்கு யுகங்களும், அவற்றிற்கான கால அளவுகளும் கற்பனைக் கெட்டாத அளவில் உள்ளன. எடுத்துக்காட்டாக இராமன் த்ரேதா யுகத்தில் வாழ்ந்திருந்தான் என்பர். திரேதா யுகம் முடிவடையும் காலத்தில் (8,68,000 ஆண்டுகள்) இராமன் வாழ்ந்திருந்தான் எனவும், அவனது காலம் சிறீ யுக்தேசுவர கணக்குப்படி கி.மு. 6700 -3100 என்று சொல்லப்படுகின்றது. இந்த காலத்துக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் இராமன் வாழ்ந்திருந்தான் என்பர். கலியுகம் (4,32000) கி.மு. 3100 இல் தொடங்கியதாகும். இது முடிய இன்னும் நான்கு இலட்சம் ஆண்டுகளாகும்.

யுகம் என்ற சொல், பல இலக்கம் ஆண்டுகளைக் கொண்டது. உலகம் தோன்றியது, உயிர்கள் தோன்றியது, மாந்தஇனத் தோற்ற வளர்ச்சி போன்ற நிகழ்வுகள் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறிவியல் கூறுகிறது. ஆரியரின் கூற்றும் யுகக்

கணக்கும் ஏறக்குறைய அதனை ஒட்டியதே. ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். ஆரியச் செய்திகள் அனைத்தும் வரலாற்றுக் காலத்தில் (கி.மு.1000) சொல்லப்பட்டவையே என்பதால், ஆரியர் கூறும் தகவல்கள் அனைத்தும், அவர்களுக்கு முன்பிருந்த மக்களால் வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்தவைகளே என்பதில் ஐயமில்லை.

ஆரியக் கணக்கில், கி.மு.12000, கி.மு.3100 ஆகிய இரு பகுதி ஆண்டுகள் பற்றித் திரும்பத் திரும்ப கூறப்படுகின்றது. மனு முந்திய கணக்கில் இருந்ததாகவும் சொல்லப்படும் செய்தி முற்றிலும் தவறானதாகும். பாணினிக்குப் பிறகே மனு என்பவன் அறியப்படுகிறான். பிந்தியக் கணக்கு கலியுகத் தொடக்கம் என்று சொல்லப்பட்டுள்ளது. கி.மு. 12000 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் வாழ்ந்திருந்ததாக அறிவியல் கூறுகிறது. ஆரியக் கணக்கு அவ்வாண்டிலிருந்து பொற்காலம் (Golden age) தொடங்குவதாகக் கூறுகிறது.[10] இந்தச் செய்தியும் ஆரியர்களுக்கு முன்பிருந்த இந்தியத் தொன்மக்குடியினரால் சொல்லப்பட்டிருக்க வேண்டும். கி.மு. 18000- 12000 ஆண்டுகளில் உலகில் நிகழ்வுற்ற இயற்கையின் பேரழிவுகள், உலகின் வரைபடத்தையும், உலக மக்களின் வாழ்விடங்களையும் மாற்றிப் போட்டன என்று அறிவியலார் கூறுகின்றனர். கி.மு. 12000 என்பது, குமரிக்கண்ட அழிவையும்,சிந்துவெளி மற்றும் மேற்கித்திய நாடுகளில் தமிழரின் குடியேற்றங்களையும் குறிக்கும் ஆண்டாகக் கருத இடமுண்டு. கி.மு. 3100 என்பது கலியுகத் தொடக்கம் என்று கூறுகின்றனர். இக்கால அளவிலும் ஏதோவோர் குறிப்பிடத்தக்க நிகழ்வு நடந்திருக்கலாம்.

சரசுவதி நாகரிகம் பற்றி இன்றைய ஆரியச் சார்புடைய அறிஞர்கள் அடிக்கடி பேசிவருகின்றனர். சிந்து ஆற்றுக்கு முன்பே, சரசுவதி என்ற பேராறு பஞ்சாப் - இராசசுதான் பகுதிகளில் ஓடியதாகவும், அந்த ஆற்றங்கரை நாகரிகமே ஆரிய நாகரிகம் என்றும், இது சிந்துவெளி நாகரிகத்துக்கு முற்பட்டது எனவும், சரசுவதி நாகரிகம் (அதாவது அப்பேராறு அழிந்து போனது அல்லது திசைமாறிப் போனது) முடிவுற்றதின் தொடர்ச்சியாகவே சிந்துவெளி நாகரிகம் அறியப்பட்டது என்றும் கூறிவருகின்றனர். எப்படியிருப்பினும் கி.மு. 12000 ஆண்டுகளுக்குப் பிறகே சரசுவதி ஆறு அறியப்பட்டிருக்க வேண்டும்.

சரசுவதி ஆற்று நாகரிகம் என்று ஒன்று இருந்ததா என்பது பற்றி, ஆய்வாளர்கள் உறுதி செய்யவில்லையென்றாலும், அந்த நாகரிகம் ஆரியருடையே என்பதை ஏற்க இயலாது. ஏனெனில் ஆரியர் வருகை, கி.மு. 2000 ஆண்டுகளுக்குப் பிறகே என்பது திட்டவட்டமாகத் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதால், சரசுவதி நாகரிகம் என்று ஒன்று இருந்திருந்தால், அதுவும் இந்தியச் தொன்மக் குடியினரின் நாகரிகமே எனக் கருதலாம். சர்-சர - சருக்குதல் அல்லது ஓடுதல் என்ற பொருளையே அறியப்படும் சரசு என்ற சொல், தமிழ்மூலச் சொல்லே, வதி-பதி என்ற சொற்களும் தமிழ்ச் சொற்களே என்பதால், சரசுவதி என்பது தமிழ் மூலத்தினின்றும் திரிந்த சமற்கிருதச் சொல்லே என்க.

சரசுவதி நாகரிகம், சிந்துவெளிக்கு முற்பட்டது என்று ஆரியச் சார்புடையவர்கள் கூறிவருவதால் ஆரியர் -தமிழர் முரண்பாட்டுக் கண்ணோட்டத்தில், தமிழர்கள் சரசுவதி நாகரிகத்தை ஏற்க மறுக்கின்றனர். சரசுவதி நாகரிகம் இருந்தது உண்மையே என ஏற்கப்பட்டால், அதுவும் தமிழர் நாகரிமே எனக் கருதுவதில் தவறில்லை. , கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்திய நிகழ்வுகள் எவற்றோடும் ஆரியர்களுக்குத் தொடர்பில்லை என்பது திட்டவட்டமான உண்மையாகும். ஆகவே, ஆரியருடைய நாகரிகமே இந்தியாவின் முதல் நாகரிகம் என்பது, ஆரியர்கள் தங்களது தொன்மையை இந்தியாவில் நிலைநிறுத்தக்கூறப்படும் ஓர் உத்தியே எனக் கருதுவது சரியானதே என்க.

கி.மு. 3100 ஆண்டை ஆரியக் கணக்குகள் வலியுறுத்திக் கூறுவதால், அந்த ஆண்டில் ஏதோவொரு சிறப்பான நிகழ்வு நடந்திருக்கவேண்டும். சிந்துவெளி, ஆற்று வெள்ளத்தால், முதல் முறையாக பேரழிவைச் சந்தித்திருக்க வேண்டும். அப்பேரழிவின் காரணமாக, சிந்துவெளி மக்கள் பெருமளவில், மேற்கே புலம் பெயர்ந்திருக்க வேண்டும். அப்பேரழிவினால் மக்கள் பலரும் மாண்டு போயிருக்க வேண்டும். சுமேரியர் என அறியப்படும் மக்கள், சிந்துவெளியிலிருந்து போயிருக்க வேண்டும். சுமேரியர் என அறியப்படும் மக்கள், சிந்துவெளியிலிருந்தே மேற்கே சென்றனர் என்ற கருதுகோள் வலுவாக உள்ளதால், சுமேரியருடைய புலப்பெயர்ச்சியை அவ்வாண்டு குறித்ததா என ஆராய்ந்தால், அக்கால அளவுக்கு முன்னரே சுமேரியர் தங்கள் நிலையை பாபிலோனில் உறுதிப்படுத்தியிருந்தது

தெளிவாகின்றது. கி.மு. 3000 ஆண்டுகளில் சுமேரிய நாகரிகம் பாபிலோனில் அறியப்பட்டிருந்தது என்பதால், அக்கால அளவில் புலம் பெயர்ந்தோர் சுமேரியர் அல்லர் எனக் கருதலாம்.

தற்கால வரலாற்று ஆய்வாளர்கள், எபிறேயர் என்ற இனத் தார், தைகிரீசு ஆற்றுக்குக் கிழக்கேயிருந்து வந்து, படன் அறம் **(Paddan Aram)** என்ற ஆற்றுப் பகுதியில் குடியேறினர் என்பதை உறுதி செய்கின்றனர். இம்மக்கள் கி.மு. 2500 ஆண்டுகளில், பாபிலோனில் அறியப்பட்டிருக்கவேண்டும் என்பதே ஆய்வா ளர்களின் முடிவுகளாகும். எனவே, சிந்துவெளியில் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவும்,அதனைத் தொடர்ந்து மேற்கே உணரப் பட்ட புலப்பெயர்ச்சியும், கி.மு. 3100 ஆண்டுகளில் நிகழ்வுற்றன எனக் கருத இடமுண்டு கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மெசபத்தோமிய - பாபிலோனிய வரலாறுகளில், இப்புதிய மக்கள் பற்றிய செய்திகள் இல்லை. கி.மு. 3500 - 2000 ஆண்டு களில் நிலைபெற்றிருந்த சுமேரியர் ஆட்சியில், இப்புலம் பெயர்ந்த மக்களைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன." மேலும் இவ்விரு மக்களின் மொழியும் ஏறக்குறைய ஒன்றே எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சுமேரியர் என்ன காரணம் பற்றி மேற்கே புலம் பெயர்ந்தனர் என்பது பற்றிய விளக்கங்கள் இல்லை. இருப்பினும் தங்களது கடல்வணிகத் துக்கு இடையூறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும்,இந்திய - பாபிலோனிய வணிக நடைமுறைகள்,அப்பகுதியிலுள்ளோ ரால் தடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருத இடமுண்டு. இடைக்காலத்தில் இதே காரணத்துக்காக, இராசேந்திர சோழன் கிழக்கு நாடுகள் மீது கடல்கடந்து சென்று போர் தொடுத்த நிகழ்வை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

ஆரியருடைய வேதங்கள், புராணங்களில் சொல்லப்பட் டுள்ள வானியல் தொடர்பான செய்திகள் ஆரியருக்கு முன்பே, தமிழர்களால் அறியப்பட்டிருந்தன என்பதை உறுதியாகக் கூறலாம். 27 விண்மீன் கூட்டங்களைப் பற்றியும், அவைகளை 12 குறிகளாகப் பிரித்திருந்த கணக்கு பற்றியும், கதிரவன் மற்றும் நிலவின் பெயர்ச்சிகளைக் கொண்டு, நாள்காட்டி அறியப்பட் டிந்தது பற்றியும் தெளிவான குறிப்புகள் தமிழரிடத்தில் இருந் தன. வானத்தில் கண்ணுக்குப் புலப்படும் அனைத்து விண்மீன் களுக்கும் தமிழர் பெயர் சூட்டியிருந்தனர். அப்பெயர்கள், சற்றே சிறிய மாற்றங்களுடன் சமற்கிருதத்தில் திரிபுபட்டுள்ளன.

(பட்டியலை ஒப்பிட்டுப் பார்க்க) வானத்தை 360 பாகைகளாகத் தமிழர் பிரித்திருந்த செய்தியும் தெளிவு படுத்தப்பட்டுள்ளதை அறியலாம் (படம் பார்க்க). எனவே, ஆரியர்களின் வானியல் என்பது, அவர்களுக்கு முன்பே அறியப்பட்டிருந்த தமிழரின் வானியல் கண்டுபிடிப்புகளே என்பதை உறுதியாகக் கூறலாம். ஆரியர்கள், பிறருடைய அறிவுச் செல்வங்களைத் தம்முடையன போல் மாற்றிக் கொள்ள எடுத்த முயற்சிகள் மட்டுமே அவர்களது வெற்றிகளாகக் கருதலாம். மற்றபடி எந்தப் புதிய தடத்தையும் ஆரியர்கள் பதிக்கவேயில்லை என்பது தெளிவு.

12 ஓரைகளும் அதனைச் சார்ந்த 27 விண்மீன்களும்



8. கிரேக்கர்களின் வானியல்

பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ்க் கணியர்களால் உன்னிப் பார்த்து, உணர்ந்து, அறிந்து வெளியிடப்பட்ட தமிழரின் வானியலை, தங்களது கண்டுபிடிப்புகளாக ஆரியர்கள் அறிவித்துக் கொண்டதுபோலவே, பாபிலோனியரின் வானியல் குறிப்புகளைத் தம் வயமாக்கிக் கொண்டு, தாமே அவற்றைக் கண்டுபிடித்ததாகக் கூறிக் கொள்வதே கிரேக்க வானியலாகும். வரலாற்றில் கிரேக்கர்களும் ஆரியரும் ஒரு மரபைச் சார்ந்தவர்களே என்பது ஒருபுற மிருந்தாலும், இருவருக்கும் இருந்த மிகப் பெரிய ஒற்றுமை யாதெனில், பிறருடைய அறிவுச் செல்வங்களை எவ்வாறு தம்முடையதெனக் கூறிக் கொள்வதில் இருவரும் ஓரினமாகக் கருதப்பட வேண்டும். வரலாற்றில் கிரேக்கருக்கும் ஆரியருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்றில் இவர்கள் அறியப்படவில்லை. இருவரும் கொச்சையான இலக்கணமற்ற மொழிகளையே பேசிவந்தனர். நகரிய நாகரிகம் பற்றி இருவருக்குமே தெரியாது. ஆரியர்களை அறிவாளிகளாகத் தமிழர்கள் உருவாக்கியது போல், பாபிலோனியர்கள் கிரேக்கர்களை உருவாக்கினர். கிரேக்கர்கள் உடலுழைப்பில் திறமையானவர்கள். ஆரியர்கள் உடலுழப்பையே விரும்பாதவர்கள்.

பாபிலோனியருடைய வானியல், தமிழருடைதே என்பதைப் பல்லாற்றானும் நிறுவ இயலும். பாபிலோனியருக்கு, சுமேரியரே வானியலை அறிமுகப் படுத்தியிருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சுமேரிய மொழிப் பெயர்களையே பாபிலோனியக் கடவுளர்களும் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நகரத்துக்கும் ஒரு காவல் தெய்வத்தை சுமேரியரும் பாபிலோனியரும் உருவாக்கிக்கொண்டனர். அக்காவல் தெய்வங்களை சுமேரியரும் பாபிலோனியரும் உருவாக்கிக் கொண்டனர். அக்காவல்தெய்வங்கள் கதிரவன், நிலவு, விண்மீன்கள், கோள்கள் ஆகியவைகளே. இன்னினா (Innina) என்ற மின்னும் இனமான

விண்மீன்கள், அசுதார் (Astar) எனப்பட்ட (தார் - விண்மீன்) மீன்கள், உடு என்ற கதிரவன் (Utu -உடு தமிழ்ச்சொல்லே), செமசு (Shemes -செம்மை) என்ற கதிரவன், சின், (Sin) என்ற சின்னக் கடவுளான நிலவு, இவையின்றி நபு (Nabu) என்ற புதன், இசுதான் என்ற வெள்ளி, நெர்கல் என்ற செவ்வாய், மருதுக் என்ற வியாழன், நின்னூர்த் என்ற சனி ஆகிய பெயர்களும் கடவுளர்களாகச் சொல்லப்பட்டுள்ளன. (The Greeks borrowed from the Babylonians this custom of naming heavenly bodies, especially planets after the gods, the Romans took it from the Greeks and Roman (Latin) names of the gods are still the names of planets today. The months of the year are also named after the gods - Histroy of religion)[1]

பாபிலோனியருடைய வானியல் முற்றிலும் சமயம் சார்ந்த ஒன்றாகும். பாபிலோனியர் வழிபட்ட பல கடவுளரும், ஏதோவொரு வானியல் உருவமாகவே உள்ளனர். விண்மீன், கோள், கதிரவன், நிலவு ஆகியவற்றைச் சுற்றியே, பாபிலோனியக் கடவுளரின் பெயர்கள் உள்ளன. பாபிலோனியச் சமயமே வானியல் சார்ந்த சமயமாகும். சமயத் தலைவன் பாரு (Baru) என அழைக்கப்பட்டான். பாபிலோனியர்கள், தங்கள் சமயத்தின் அடிப்படையிலேயே நாள் காட்டியையும் உருவாக்கியிருந்தார்கள். இந்த நாள்காட்டி முறையையே கிரேக்கர்கள் உள்ளிட்ட ஐரோப்பியர்கள் அப்படியே எடுத்துக் கொண்டனர். (The astral orientation of Babylonian religion also influenced the creation of the Calendar, the twelve month system, that was later adopted by the Greeks and followed by the Europeans)[2]

பாபிலோனியருடைய எண் கணக்கு முறைகளும் சமயத்தோடு தொடர்புடையதே. வான்வெளிக்கும், காலத்துக்கும் (Time and space) உள்ள தொடர்புகளை பாபிலோனியர் உணர்ந்திருந்தனர். 3, 7, 12, 60 (5x12) போன்றவை தெய்வீக எண்களாகக் கருதப்பட்டன. இந்த எண் கணக்கு முறையையும் கிரேக்கர்கள் எடுத்துக் கொண்டனர். கிரேக்கர் வழியில் ஐரோப்பியரிடம் சென்றது. எண்களால் கடவுளர்களையும் கட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்று பாபிலோனியர் கருதினர். மேற்கண்ட எண்களுக்கு அவ்வாறான ஆற்றல் இருந்ததாகவும் எண்ணினர். பாபிலோனியரிடம் காணப்பட்ட மாய ஆற்றல் (Cosmic Power) பற்றிய நம்பிக்கை கிரேக்கர்களிடம் காணப்பட்டது.

மொத்தத்தில் வானியல், கணக்கியல் தொடர்பான அனைத்துத் துறைகளிலும், பாபிலோனியரையே கிரேக்கர்கள் பின்பற்றினர். (The wisdom of Babylonians was borrowed by the Greeks and by the European peoples. P. 204) இந்நிலையில் வானியலின் தந்தையென கிளாடியசு தாலமி (Cladius Ptolemy) பதிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர் (கி.மு. 168 - 100) என்று கருதப்படுகின்றார்.[3] இவருடைய உலகை மையப்படுத்திய கொள்கை, கோப்பர் நிக்கசால் மறுக்கப்பட்டது.[4]

தாலமி இயற்கையிலேயே வானத்தின்பால் ஈர்ப்பு கொண்டிருந்தவர். அத்துடன் கணக்கியலிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. இரண்டு வேறுபட்ட கணக்கீடுகளைக் கொண்டு, விண்மீன்களின் நகர்வுகளை அவர் கணக்கிடத் துணிந்தார். ஒன்று, அவை ஒரு நேரத்தில் இருந்த இருப்பிடத்தைக் கணக்கிடுவது. மற்றொன்று, சிறிது காலத்துக்குப் பிறகு அவை நகர்ந்து காணப்படும் இருப்பிடத்தைக் கொண்டு கணக்கிடுவது. இவ் விடைவெளிகளின் தொலைவு எவ்வளவு எனக் கணக்கிட்டு; அவைகளின் நகர்வு வேகத்தை அறிவது. இவ்வாறு ஒவ்வொரு விண்மீனையும் அவர் கணக்கிடும்போது, அவைகளின் நகர்வுகளின் வேகம் மாறுபடுவதையும் கண்டறிந்தார். இவ்விரு புள்ளிகளுக்கிடையேயான தொலைவை அல்லது நீளத்தைக் கணக்கிட்டு, அம்மீன்கள் எவ்வளவு உயரத்தில் இருக்கின்றன என்பதையும் கண்டறிய முற்பட்டார்.[5] தாலமிக்கு முன்பிருந்தவர்கள் நிலவின் நகர்ச்சியையும் அது வடக்கே அல்லது தெற்கே இடம் பெயர்வதையும் கணக்கிட்டும், நிலவு கிழக்கே தோன்றும்போது, அதன் அருகே அல்லது தொலைவில் காணப்படும் விண்மீன்களின் இருப்பிடத்தைக் கணக்கிட்டும், விண்மீன்களின் நகர்வுகளைக் கணக்கிட்டு வந்தனர். தாலமி புதிய முறையில் அதன் நகர்வுகளைக் கணித்தார். (இப்புதியமுறை மேற்கித்தியர்களுக்கே புதிய முறையென்றாலும், தொல்தமிழர் கணியர்கள், அந்நகர்வுகளைத் துல்லியமாகக் கணக்கிட்டிருந்தனர்).

தாலமி கண்டுபிடித்த புதிய முறையிலான கணக்கீடு அவருக்கே நிறைவைத் தரவில்லை. இப்புதிய முறைப்படி கடினமான உழைப்பும், நீண்டகால உற்றுநோக்கலும் (Observation) தேவைப்பட்டன. இம்முறையை மற்றவர்களுக்குச் சொல்லி விளங்க வைக்க தாலமியால் இயலவில்லை; எனவே,

இதனினும் புதிய முறையைக் கண்டுபிடிக்க தாலமி முயன்றார். எனவே, விண்மீன்களின் ஒளி அளவைக் கொண்டு (Sixth Magnitude), நகர்வுகளைக் கணக்கிட முற்பட்டார்.[6]

இம்முறை அவருக்கு எளிதாக இருந்தது. வடமுனையில் 23.5 பகையளவு கிழக்கே தள்ளி ஒரு புள்ளியை நோக்குமாறு ஒரு கருவியை செய்துகொண்டார். அப்புள்ளியின் வழியே குறிப்பிட்ட ஒரு விண்மீனை நோக்கினார். அம்மீனின் சாய்வையும் (Ecliptic) கணக்கிட்டார்.

தனது கருவியின் வழியே அவ்விண்மீனை நோக்கி, அதன் சாய்வுக் கோணத்தை (latitude) அளந்தார். அச்சாய்வுக் கோணம் என்பது நிலநடுக்கோட்டைக் குறுக்காக வரைந்தால், அதனின்றும் சாய்ந்து காணப்படும் புள்ளியாகும். (The angular distance of a place north of the equator). இம்முறையில் 1022 விண்மீன்களை அளந்தார். இவை பற்றிய செய்திகளை Al- magest என்ற நூலில் விளக்கியுள்ளார்.[7]

இம்முறை அடுத்து வந்த வானியலாருக்கு மிகவும் உதவியது. இம்முறையைச் சோதிடர்களும் கைக் கொண்டனர். ஒரு குறிப்பிட்ட விண்மீன் எழும், மறையும் (risings culminations and settings) காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட் இம்முறை உதவியது. இத்துடன் சோதிடர்கள் தங்கள் முறைகளையும் இணைத்துக்கொண்டு (அவை சரியானவைகளா என்பது வேறு செய்தி) தங்களுடைய தொழிலை வளப்படுத்திக் கொண்டு, சோதிடம் என்றும் அறிவியலே என்று தாலமியையும் முன்னிலைப்படுத்தினர். தாலமி வெளியிட்டது வானியல் நூலேயன்றி (Astronomy) சோதிட நூலன்று (Astrology) என்பதைப் பல சோதிடர்கள் மறைத்துவிட்டனர். தாலமியின் அல் மாககூட் நூல், யாருக்குப் பயன்பட்டதோ இல்லையோ, சோதிடர்களுக்கு மிகவும் பயனுள்ள செய்திகளைத் தந்தது.

இப்புதிய முறைகூட, தாலமி கண்டுபிடித்ததன்று எனவும் சிலர் கருதுகின்றனர். ஏற்கனவே, கி.மு. 379 ஆம் ஆண்டில், பெயர் தெரியாத ஒரு வானியலார் கொடுத்த "நிலையான ஒளி மீன்கள்" (The Treatise on Bright Fixed Stars) என்ற கண்டுபிடிப்பின் புதிய வடிவமே தாலமியுடையது என்றும் கூறுவர்.[8] தாலமிக்கு முந்திய இந்தக் குறிப்புகளை இன்றும் கூட வானியலார் பயன்படுத்துகின்றனர் என்பதை, அந்தப் பெயர் தெரியாத ஆய்வாளருக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

சாய்ந்த பாகை வழியே (Projected Ecliptical degrees) நோக்கும் தாலமியின் முறையை PED என்று சுருக்கமாகக் குறிப்பிடுவர். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் தாலமியின் முறையே வானியர்களால் பின்பற்றப்பட்டு வந்தது. பிற்காலத்தில் மங்கோலிய துருக்கி நாடுகளை ஆண்ட மன்னனும் வானியல் அறிஞருமான உலுக் பெக் (Ulugh Beg 1394 - 1449) என்பார், புதிய முறையொன்றைப் புகுத்தினார். இவர் நிலநடுக்கோட்டின் முனையை அடிப்படையாக வைத்து (தாலமியின் சாய்வு முறையைத் தவிர்த்து), தாலமி குறித்த 1022 விண்மீன்களையும் அளந்தார். இவருக்குப் பின் வந்த அல்பிரட் தியூர் Albrecht Durer, 1471 - 1528) பெக்கின் முறையையே பின்பற்றினார்.[9] இம்முறையில் கண்டறியப்பட்ட நகர்வுகள், சரியாக இருந்தன. அதுமுதற்கொண்டு மேற்கண்ட இருவரின் முறைகளையே தற்காலத்தவரும் பயன்படுத்தி வருகின்றனர்.

தாலமி பயன்படுத்திய முறையிலுள்ள ஒரு குறையாதெனில், ஒரு விண்மீன் கிழக்கில் கண்ணுக்குத் தெரிவதற்கு முன்பே, அது தொடு வானத்தைத் தொட்டிருக்கும் என்பது தான். இவ்விரு முறைகளில் காணப்படும் குழப்பத்தை படம் 2 விளக்குகிறது. படம் ஒன்று தாலமி, மற்றும் உலுக்பெக் ஆகியோருடையது.



படம்-1.



படம் 2.

படம் இரண்டில் காட்டப்பட்டுள்ள மேழத்தின் உடுவான பரணி, தொடுவானில் 24 பாகை மீனத்தில் தோன்றுகிறது. இதுவே அதன் வழக்கமான தோற்ற இடமாகும். இருப்பினும் ஒரு கற்பனையான கோட்டை, நிலநடுக்கோட்டுக்குக் குறுக்கே வரைந்தால் (கோடிட்டவை), அதாவது தாலமியின் முறைப் படி வரைந்தால், பரணி 5 பாகை விடைக் குறியில் தெரியும். (PED 5^0 in Taurus). கணக்குப்படியும், கண் பார்வைப்படியும் அது சரியாக இருக்கும். ஆனால் சிறிது நேரத்துக்குப்பிறகு பார்த் தால், மீனத்தில் 24 பாகை உயர்ந்து காணப்படும். இருவேறு இடங்களில் தோன்றுவதாக அறியப்படும் குழப்பம்தான், தால மியின் முறையில் அறியப்படுவது. பெக்கின் புதியமுறை, இக் குழப்பத்தை நீக்கியது.

பாபிலோனியர்கள், கோள்களையும் விண்மீன்களையும் கடவுளரின் உருவகங்களாக மாற்றியதுபோலவே, பாபிலோனி யரின் வானியலைக் கற்றவர்களும், தங்கள் தங்கள் தெய்வங் களாக்கிக் கொண்டனர். பழைய கிரேக்க ஐரோப்பியக் கடவுள் கள் அனைவரும் வானில் அறியப்பட்ட கோள்கள் மற்றும் விண்மீன்களின் உருவகங்களே. ஆண்ரமேடா என்ற விண்மீன் கூட்டம், பெண் கரடிக் கடவுளாகவும், ஓரியன் நீதியின் கடவு

ளாகவும், அக்ரோ நாவிசு எகிப்தியர்களின் கப்பலாகவும், அறியப்பட்டன.

தாலமியின் அல்மாககுட்:

அல்மாககுட் என்ற கிரேக்கச் சொல்லுக்கு, இரவு நேரத்து வானம் என்பதே பொருளாகும். இந்நூலில் 1022 விண்மீன் களின் பெயர்களையும் அதன் நகர்வுகளையும் பற்றி தாலமி விளக்கியுள்ளார். தாலமி குறிப்பிட்டுள்ள விண்மீன்கள், கோள் கள்,மற்றும் வானியல் தொடர்பான கலைச்சொற்களை, அவரே உருவாக்கினாரா அல்லது வேறு எந்த மொழியிலிருந்தவாறு எடுத்துப் பயன்படுத்தினாரா என்பதற்கான விளக்கங்கள் எதுவு மில்லை. ஆனால் தாலமி பயன்படுத்திய பெயர்களும், கலைச் சொற்களும், பாபிலோனிய மொழியிலிருந்துதான் எடுக்கப் பட்டவையென்பதை, செமிட்டிக் மொழிகளில் காணப்படும் கலைச் சொற்கள் மெய்ப்பிக்கின்றன. இக்கலைச்சொற்களை மேலும் உன்னித்துப் பார்த்து ஆராய்ந்தால், அவை தமிழின் வேரினையும் மூலத்தையுமே கொண்டுள்ளன எனலாம்.

அல் என்ற தமிழ்ச் சொல் இரவையும் குறித்ததாகும். இச் சொல்லையே தனது நூலின் பெயராகவும் தாலமி குறித்துள் ளார். மாககுட் என்ற கிரேக்கச் சொல், வானத்தையும் வானத்தை ஆய்வு செய்யும் வானியலாரையும் குறிக்கின்றது. மாகி (Maggie) என்ற கிரேக்கச் சொல்லுக்கு வானியல் அறிஞர் என்பதே பொ ருளாகும். மாகம் என்பது சரியான தமிழ்ச் சொல்லாகும். இது கருமை என்ற பொருளைக் குறிப்பதாகும். சமற்கிருதத்தில் கிருட்ண பட்சத்தின் (தேய்பிறை) 13ஆவது நாளைக் குறிக்கும்.[10] (13th day in the dark half).

மாகம், வானம் மற்றும் காற்று என்றவாறும் பொருள் படும். மாக என்பது இரண்டு சொற்களாக உள்ளன எனக் கருத லாம். சிந்துவெளியில், மா +க (Ma +Ka) ஆகியவை தனித்தனிச் சொற்களாக அறியப்படுகின்றன. மா என்பது பெரிய (Big) என்ற பொருளையும், க (Ka) என்பது கடவுளையும் (God, gaurdian, protector, chieftain) என்றவாறு பொருள் கொள்ளப் பட்டுள்ளது. மாக என்ற இரண்டு சொற்களுக்கும் கடவுள் பெரியவர் என்றவாறு பொருள் கொள்ளப்படும். கடவுள் வானத்தில் இருப்பதாகக் கருதப்பட்டதால், வானத்தையும் மாக என்றனர். அது மாகம் என்றும் சொல்லப்பட்டது. வானம்

நீலம் அல்லது கருமையாய்த் தோன்றுவதால், மாகம் என்ற சொல், கருமையையும் குறித்தது. மாக விசும்பு = கரியவானம்; இரவு நேரத்து வானம். மாகம் என்ற தமிழ்ச்சொல், கருமை யைக் குறித்தது. அதுவே மக (Magha) என்று சமற்கிருதத்தில் திரிந்து கருமை திறத்தையே குறித்தது. மகம் என்ற விண்மீனை யும் (tenth lunar) குறித்தது.

மாகம் கருமையைக் குறித்ததால், மேய்ந்திருக்கும் அல்லது இவ்வுலகை மூடியிருக்கும் முகில் கூட்டங்களும் மேகம் எனப் பட்டன. மா + க = மாகம்; மே (ய்)+ க= மேகம். மேகம் என்பது மேக (Megha) என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

தமிழ், சமற்கிருத மொழிகளில் அறியப்பட்ட மாகம் என்ற சொல், கிரேக்க மொழியிலும் கருமை என்ற பொருளிலேயே சொல்லப்பட்டுள்ளது. Magg: கருநிறவானம்: இரவு நேரத்து வானம். Maggie: வானத்தை ஆய்வுசெய்யும் வானியலார். கருமை என்ற பொருளில் Magest என்ற சொல் அறியப்பட்டிருந்ததால், Maggie என்ற சொல் பேயை மாயம் செய்யும் மந்திரவாதி களையும் குறித்தது. இருட்டை அல்லது இரவில் வரும் அல்லது கரியநிறமான ஆவியைத் தமது மந்திர வேலைகளுக்குப் பயன் படுத்துவதால், மாகி என்ற சொல், மந்திரவாதியையும் குறித்தது. இந்த மை மாய வித்தையைக் கற்றதால்தான், பிறருக்குத் தெரி யாத விண்மீன்களின் நகர்வுகளையும், விண்மீன்களைப் பற்றிய செய்திகளையும் இவர்களால் அறியமுடிகிறது என்றும் மக்கள் கருதினர்.

இயேசு பிறந்த போது, மூன்று வானியல் அறிஞர்கள்,கிழக்கு நாட்டிலிருந்து, மேற்கே சென்று இயேசுவை வணங்கியதாக விவிலியம் கூறுகிறது. இந்த வானியல் அறிஞர்களை மாகி என்றே விவிலியம் குறிப்பிடுகின்றது. இயேசு பிறந்தபோது, வானில் ஒரு வால்மீன் தோன்றியதாகவும், அவ்வால்மீனைத் தொடர்ந்து சென்ற அறிஞர்களை, அம்மீன் இயேசுவிடம் சேர்ப்பித்ததாகவும் விவிலியம் கூறுகிறது. ஆனால் இயேசு பிறந்தபோது அப்படியொரு வால்மீன் தோன்றியதற்கான வானி யல் குறிப்புகள் எவையும் காணப்படவில்லை. கி.மு. 6ஆம் ஆண்டில் (கி.மு. 0006) சனியும் வியாழனும் முதன்முறையாக மீனக்குறியில் நுழைந்ததாக வானியலார் கூறுகின்றனர். இது வோர் அரிய நிகழ்வு என்பதால், கிறித்து பிறப்பை, வால்மீனு டன் தொடர்புபடுத்தி எழுதிவிட்டதாகவும் கூறுவர்."

தாலமி குறித்துள்ள விண்மீன்களின் பெயர்களில் பெரும் பாலானவை, தமிழ்மூலத்தையே கொண்டுள்ளன. தமிழ்ப் பொருளின் திரிபுச் சொற்களாகவே அவை காணப்படுகின்றன. இச்சொற்களில் பல சமற்கிருதத்திலும் சொல்லப்பட்டுள்ளன என்பதால், தமிழினின்றும் பெரும்பாலான பெயர்களை, சமற் கிருதமும் கிரேக்கமும் எடுத்துக் கொண்டதாகத் தெரிகின்றது.[12]

A few star names.

Antares	Hamal	Pleione
Aquila	Heliades	Pollux
Aries	Horus	Ra
Bear	Ishtar	Raven
Cancer	Jupitor	Saturn
Canopus	Leo	Scorpio
Capricorn	Lyra	Serpentarius
Centaurus	Magi	Sun
Crux	Mars	Taurus
Delphinus	Mercury	Thing
Diana	Mithra	Toliman
El	Nile	Umblicus Andremeda
Eridamus	Olympus	Uramus
Gemini	Paran	Venus
Geidi	Pisces	Yima
		Yoni
		Zeus.

மேலே குறிப்பிட்டுள்ள சொற்கள், அல் மாகசுட் என்ற தாலமியின் நூலில் காணப்படும் விண்மீன்களில் சிலவற்றின் பெயர்களாகும். இச்சொற்களை மேலெழுந்தவாரியாகப் பார்க் கும்போத, அவை வேற்றுமொழிச் சொற்கள் போல் தோன்றி னாலும், அவை தரும் பொருளும் ஒலிப்பும் தமிழ்மூலத்தையே சார்ந்து நிற்கின்றன. பொதுவாக தாலமியின் பெயர்களில், Al என்ற முன்னொட்டுச் சொல், சில விண்மீன்களுக்குக் குறிப்பிட் டுள்ளது.

Al - Arthafar, Al -Dhib Al - Chiba, Al - Minliar, Al -Nair - Al - Nasl.

Al - Rescha, Al - Sharasif, Al - Suhail, Alp - Addin, Al - Bireo, Al - Cyone, Al - Deberan, Al - Deranusi, Al -Gedi, Al - Geiba, AC - Genib, Al - Gol

என மேலும் பல சொற்கள் உள்ளன.[13]

அல் (Al) என்ற தமிழ்ச்சொல், இரவையும் இரவு நேரத்து வானத்தையும் குறிப்பதாகும். அல் என்ற சொல், அரபுமொழி யிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட் டாக Al - addin என்ற சொல், இரவு நேரத்துக்குப் பயன்படும் விளக்கைக் குறிப்பதாகும். அல் -அதீன் என்ற சொல், அரபு மொழியில் அலாவுதீன் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதீன் என்ற சொல், தீ என்ற நெருப்பை அல்லது ஒளியைக் குறித்த தாகும்.

Al என்ற சொல், கிரேக்கத்தில் இரவையும் அரபுமொழியில் The என்ற ஆங்கிலச் சொல்லுக்கான பொருளையும் குறித்தது.

9. தொல்தமிழரின் வானியல்

தொல்தமிழர் அறிந்திருந்த 27 விண்மீன் கூட்டங்களைச் சுற்றியே, இன்றைய உலகத்தாரின் வானியல் சுழன்று வருகின்றது. தமிழில் அறியப்பட்டிருந்த 27 மீன் கூட்டங்களுக்கான பெயர்களை, நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஆரியம் எடுத்துக் கொண்டது. சமற்கிருதத்தில் அறியப்படும் அம்மீன் கூட்டங்களுக்கான சொற்களில் தமிழில் வேரும் மூலமும் பொருளும் உள்ளதை அறியலாம். இந்தச் செய்திகளையெல்லாம் அறியாத மேலைநாட்டவர், சமற்கிருத மொழியில் சொல்லப்பட்டுள்ளவைகளைத்தான் தமிழ்மொழியில் எடுத்துக் கொண்டனர் என்று தவறாகக் கருதிவிட்டனர். தமிழரின் வானியல் பற்றிய செய்திகளை அவர்களுக்கு அப்போது எவரும் அறிவிக்கவில்லை. தமிழரில் பலரும் கூட, ஆரியம்தான் வானியலைத் தந்தது என்றும் நம்பிக்கொண்டிருந்தனர். இன்றும் கூட, தமிழறிஞர்களில் எத்துணை பேர், தமிழில் கூறப்பட்டுள்ள பெயர்களைப் பற்றி அறிந்திருக்கின்றனர் என்பது கேள்விக்குறியே. தமிழரே தமிழரின் வானியலைப் பற்றி அறியாதிருந்திருக்கையில் மேலைநாட்டவர் அறியாதிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

தென்னாட்டில் அறியப்பட்டிருந்த வானியல் தொடர்பான செய்திகளை அறிந்து, அவற்றைத் தமதுநோக்கில் திரித்துக் கொள்ள, சமற்கிருதப் பண்டிதர்களுக்கு வாய்ப்புகள்இருந்தன. ஆனால் தாலமி போன்ற கிரேக்க அறிஞர்களுக்கு அந்த வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆனாலும் பாபிலோனிய மொழியில் அறியப்பட்டிருந்த சொற்களில் பலவற்றை எடுத்துக் கொண்டார். பாபிலோனிய மொழியில் கண்டுபிடிக்க முடியாத சில சொற்களை, அவ்விண்மீன்கள் தொடர்பு கொண்டுள்ள முதல் மீன்களோடு இணைத்து, மீன் ஒன்று,மீன் இரண்டு (காமா, பீட்டா, அயோட்டா) என்றவாறு பெயர்களை வைத்தார்.

தமிழில் சொல்லப்பட்டுள்ள 27 மீன்களுக்குமான விண்மீன் பெயர்களை கிரேக்க மொழியில் எவ்வாறு கூறியுள்ளனர் என்று

கண்டறிய முற்பட்டபோது, தெளிவான விளக்கங்கள் கிடைக்கவில்லை. நூல் நிலையங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இறுதியாக, பெரியார் கோளரங்கத்தின் இயக்குநர் திரு. அய்யம்பெருமாள் அவர்களை அணுகிக் கேட்டபோது, உடனடியாக எடுக்க இயலாது; முகவரி கொடுத்துவிட்டுப் போங்கள்; அனுப்பிவைக்கிறேன் என்றார். அதன்படி, ஒருவாரத்திற்குள், கிரேக்கர்கள் பதிவுசெய்துள்ள 27 விண்மீன்களின் பட்டியலை அனுப்பிவைத்தார்.

அப்பட்டியலைப் பார்த்தபோது, அதில் 13 மீன்களுக்கு மட்டுமே பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. மீதியுள்ள 14 மீன் கூட்டங்களுக்கும் அவை அறியப்படும் குறிகளின் (Sign - ராசி) பெயர்களையே ஒன்று இரண்டு என்றவாறு பதிவு செய்துள்ளனர். இதன்படி, அந்தப் பதினான்கு மீன் கூட்டங்களுக்கானப் பெயர்களும், தாலமியால் பதிவு செய்யப்படவில்லையென்பதை அறியமுடிந்தது. பிற்காலத்தவரே, அம்மீன் கூட்டப் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர் என அறியலாம்.

தாலமியின் காலத்துக்கு முன்பே, 27 விண்மீன் கூட்டங்களுக்கும் தமிழ்க்கணியம் பெயர்களைப் பதிவு செய்திருந்தது. பட்டியலில் காணப்படும் தமிழ்ப் பெயர்கள் அனைத்தும் கடைக்கழக இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பெயர்களைத் தழுவியே சமற்கிருத - கிரேக்கச் சொற்களும் அறியப்படுகின்றன.

1. புரவி – அசுவினி –Hamal:

புரவியென்பது உலகெங்கும் அறியப்பட்டிருந்தாலும், அதன் பயன்பாடு, கி.மு. 1600 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகே வழக்கிற்கு வந்தது. போருக்கும், பயணத்துக்கும் அதன்பின்னரே, புரவிகள் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்திலும், சிந்துவெளியிலும் கூட புரவிகள் இருந்திருக்கலாம். ஆனால் அவை காட்டுவிலங்குகளாகக் கருதப்பட்டு, பயன்பாட்டுக்கு உதவாமல் இருந்திருக்கலாம். இதனால் சிந்துவெளியில் புரவிகளே வாழந்திருக்கவில்லையெனக் கூறுவதும் சரியான கண்ணோட்டமாகாது. ஆரியருடன் தொடர்புடைய இக்கோசு (Hyksos) என்ற மரபினரே[1], புரவிகளை முதன்முதலில் போருக்கும், பயணத்துக்கும் பயன்படுத்தினர் என்பதால், இந்தியாவுக்கு வந்த ஆரியரும் புரவியைப் பயன்படுத்தினர் எனலாம்.

புரத்தல் என்பது, காத்தல் என்ற பொருளில் அறியப் பட்டு, மன்னர்களாலும், செல்வர்களாலும் காக்கப் பெற்ற விலங்கு புரவி எனப்பட்டது. குதித்து ஓடுவதால் குதிரை எனப் பட்டது. பரி என்றசொல்லுக்கு வழி யென்ற பொருளுமுண்டு. உயரம், விரைவு என்றவாறும் பொருள் கொள்ளப்படும். இவையாவும் பிற்காலச்சொற்களே எனலாம். தமிழர்கள், முதல் மீன்கூட்டத்தை புரவியாக உருவகம் செய்யவில்லை. இரவை அல்லது ஏறு என்ற பெயர்களே அதற்குச் சூட்டப் பெற்றிருந்தது. இரவையென்பது மான் எனவும், ஏறு என்பது கோ, அரிமா, எருமை, மான், மரை, கவரிமான் எனவும் பொருள் கொள்ளப்படும். பிற்கால ஆரியர், இதனைப் புரவியெனப் பதிவு செய்துள்ளனர். தங்களுடைய விருப்ப விலங்கான புரவி யை ஆரியர்கள் தேர்ந்துகொண்டது வியப்பான செய்தியு மன்று.

சுவ- சுவம் என்ற சமற்கிருதச் சொல்லுக்கு, உரிமை என்ப தே பொருளாகும். புரவி என்பது, தேவர்களுக்கு உரிமை யானது என்றும், மக்களுக்கு அது உரிமையற்றது என்றும் ஆரியர்கள் கூறினர். சுவம் - உரிமையுள்ளது; அசுவம் உரிமை யற்றது. எதிர்மறையான பொருளைத் தருவது. அசுவம் என்ற சமற்கிருதச் சொல், நேரிடையாகப் புரவியைக் குறிப்பதன்று. சுவசுத என்ற சமற்கிருதச் சொல், உடல்நலம் என்ற பொரு ளைக் குறிப்பதாகும். தமிழில் கூட சொசுத - சொசுதம் என்ற வாறு இடைக்காலத்துக்குப் பிறகு இச்சொல்லை இணைத் தனர். தேவருலகத்தைச் சார்ந்த மருத்துவர்கள் புரவியின் மீதமர்ந்து வருவதாக நம்பப்பட்டு, அம்மருத்துவர்களையே அசுவம் என்றவாறு கூறினர். அசு = புரவியென சமற்கிருத அகரமுதலி கூறுகிறது.[2]

தமிழில் சே என்ற சொல் பலவாறான பொருளைத் தருவ தாகும். அவற்றில் ஒன்று தொலைவு என்ற பொருளைத் தருவ தாகும். கடவுளையும் குறிப்பதாகும். தொலைவிலுள்ள வானத் தில் குடியிருக்கும் கடவுளை சே என்றே தமிழர்கள் அழைத் தனர். சே என்ற சொல்லே, சுவ என்று சமற்கிருதத்தில் திரிந்தது என்க. சுவ - சுவாமி என்றவாறு நீண்டு, கடவுளையே குறித்தது. சுவ மற்றும் சுவயம் (சுயம்) என்ற சொற்களும், சே என்ற சொல் லின் திரிபுகளே. சுவய என்பது, யாராலும் தோற்றுவிக்கப் படாத, தன்னிலே நிலைபெற்றிருக்கும் பரம் பொருளாகும். இதனைச் சுயம்பு என்று தமிழ்ப் படுத்தினர்.

சே =சுவ, சுவம், சுவயம், அசுவம் போன்ற சமற்கிருதச் சொற்களாகத் திரிந்தன.

எகிப்திய வரலாறு இக்சோசு (Hyksos) என்றமன்னர் மரபைச் சுட்டுகின்றது. இவர்கள் எகிப்தியர்கள் அன்று. வடக்கு மெசப்பத்தோமிய மரபைச் சார்ந்தவர்களாவர். இவர்களது பெயரில் உள்ள சோசு (Sos) என்ற சொல், புரவியைக் குறிக்கின்றது. சுசு (Sus) என்ற எபிறேயச் சொல், புரவியைக் குறிப்பதே. எபிறேய மக்கள், கி.மு. 1600 ஆண்டுகளுக்கு முன்பு புரவிகளைப் பயன்படுத்தியதாகச் செய்திகள் இல்லை. மோசே காலத்தில் கூட (கி.மு. 1250) புரவிகளை எபிறேய மக்கள் பயன்படுத்தவில்லை. அடுத்துவந்த தாவீது, சாலமன் மன்னர்கள், புரவிகளைப் பயன்படுத்திய செய்திகளை விவிலியம் கூறுகிறது.[3]

தொல் தமிழகத்தில் உயரமான விலங்குகளுக்கு சே என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதனையொட்டியே, எபிறேய மொழியில் சோசு எனவும், வடக்கு மெசபத்தோமியாவில் சாசு எனவும், சமற்கிருதத்தில் அசுவ[4] எனவும் சே என்ற தமிழ்ச் சொல் திரிந்தது எனலாம்.

இரிக்குவேதம், புரவிகளைப் பற்றிப் பேசுவதால், மேற்கே புரவியின் பயன்பாடு உரைபட்ட காலத்துக்குப் பிறகே, (கி.மு. 1600) ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்திருக்க வேண்டும். இரிக்குவேதமும் இந்த கால அளவுக்குப் பிறகு எழுதப்பட்டது எனலாம். இரிக்குவேதம் கி.மு. 5000, 3000 ஆண்டுகளில் சொல்லப்பட்டதாகக் கூறப்படும் செய்திகள் உண்மையற்றவை என்பதை, புரவிகள் பற்றிய இரிக்கு வேதம் செய்தியே வெளிப்படுத்துகிறது.[5] வேத காலத்தில் அசுவம், அசுவமேத யாகம் போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.[6]

ஏறு என்ற சொல், காளையையும் குறிப்பதாகும். முதல் மீன் கூட்டமாகச் சொல்லப்படும் ஏறு, காளையை முன்னிறுத்திச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். ஏறு என்பது தொடக்கம் அல்லது முதல் என்ற பொருளிலும் அறியப்படும். ஏறு - ஏற்று - ஏற்றிவைத்தல் என்பது, தொடங்கி வைத்தல் என்றவாறும் அறியப்படும்.

முதல் மீன் கூட்டமான ஏறு, இரலை, சென்னி, யாழ், முதனாள், மருத்துவர், நாய் என்றும் தமிழில் அறியப்படும்.[7]

ஏறிப் பயணம் செல்வதால், புரவிக்கும் ஏறு என்ற சொல் வழக்கிலிருந்திருக்கலாம்.

> பரி எனும் பெயரே பாதுகாத்தலும்
> பருத்தியுஞ் சுமத்தலுங் குதிரையும் பெருமையும்.
>
> – வடமலை நிகண்டு,[8]

ஏறு என்ற பெயர், கிரேக்க மொழியில் Hamal என்று சொல்லப் பட்டுள்ளது.[9] அதற்கான பொருள் தெளிவாகச் சொல்லப்பட வில்லை. இச்சொல், அரபுச் சொல்லின் திரிபாக இருக்கலாம் என்ற கருதுகோள் உண்டு. Hama - al, Hama என்ற அரபுச் சொல் லுக்கு, உயர்வான இடம் அல்லது மன்னன் அமரும் கோயி ருக்கை (Throne) என்றவாறு பொருள் கொள்ளப்படும். ஏறு என்ற சொல்லின் பொருளை Hama என்ற சொல், அரபுமொழி யில் தருவதால், அல் என்ற இரவைக் குறித்த சொல்லையும் இணைத்து Hamal என்று குறித்திருக்க வேண்டும். இச்சொல், அரபுமொழியினின்றே கிரேக்கத்துக்குச் சென்றதாகக் கருத இடமுண்டு. அமர் - அம எனத் திரிந்தது என்க.

மேற்கித்திய சோதிடம், Hamal ஒரு தீமையின் குறியாக மதிப்பிடுகிறது.

2. அடுப்புக்கொண்டை – பரணி [10] – Sharatan:

மூன்று மீன்கள் அடுத்தடுத்து காணப்படுவதால், இக் கூட்டத்தை அடுப்புக் கொண்டை என்றனர். இருப்பினும் இதற்குச் சரியான பெயரை வைக்க இயலாத ஆரியம், இம் மீனைப் பரணி என்றது. பரணி என்பதும் சரியான தமிழ்ச் சொல்லே. பரணி என்பது சமற்கிருதச் சொல்லென மயங்கிய தமிழரில் சிலர், இதனை அடுப்புக் கொண்டை என்றனர். பரணி என்றே தமிழிலும் குறிப்பிடலாம்.

பர என்ற வேர்ச்சொல், பரத்தல் என்று விரியும். இதற்கு விரிதல், உயர்தல் என்றே பொருள் கொள்ளப்படும். பர உலகம் என்பதே பரலோகம் எனப்பட்டது. பர = உயர்ந்த. மிக உயர்ந்த இடத்திலுள்ள இம்மூன்று மீன்களும், பரணியென அழைக்கப் பட்டன. பர அணி - பரணி.

(வீட்டில் உயர்வான) பரண் என்ற சொல்லுக்கு உயர்வு என்பது பொருளாகும். பகுதியொன்றை உருவாக்கி, அவற்றில் சில பொருட்களைப் போட்டுவைப்பது தமிழரின் வழக்காகும்.

இந்த உயர்வான இடத்தை பரண் என்றும் பரணி என்றும் அழைப்பர். திணைப்புனம் காப்பவர், உயர்ந்த மேடையை அமைத்துக் கொள்வர். இம்மேடையும் பரண் என்றே அறியப் படும். எனவே, பரண் என்பது உயர்வான இடத்தைக் குறித்த தமிழ்ச் சொல்லே. இதற்குச் சரியான சொல் சமற்கிருதத்தில் கிடைக்கவில்லையாதலால், பரண் என்ற தமிழ்ச் சொல்லையே எடுத்துக் கொண்டனர்.

பரணி, மேழக் குறியில் உள்ள இரண்டாவது மீன் கூட்ட மாகும். இதனை சோறு, அடுப்புப்பாகு, கிழவன், முக்கூட்டு நாள், போதம் (முட்டிக்கொண்டிருப்பது), தாழி, காடு,அடுப் புக் கொண்டை என்றும் அழைப்பர்.[11]

கிரேக்க மொழியில் பரணியை சரட்டன் (Sharatan) என்பர்.[12] ஆட்டின் முகமாக ஒரு விண்மீனையும், இரண்டு கொம்புகளாக (Sharatan and Mesarthin) இரண்டு உடுக்கள் சொல்லப்பட்டுள் ளன. சரடு என்பதற்கு வரிசை என்ற பொருளும் தமிழில் உண்டு. அடுக்கி வைக்கப்பட்ட மூன்று கொண்டைகள் போல் தெரியும் பரணியை, சரடு என்றும் கூறலாம்.

சரடு, செரட்டன் எனத்திரிந்தது என்க. இது புரவி மீனி னும் ஒளி குறைந்தது. மற்றொரு மீனாகிய Mesarthin என்ற சொல்லின் முதற்பகுதி (Mesa) மேழம் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்க.

3. ஆரல் – கார்த்திகை (Pliades):

ஆரல் என்ற சொல்லுக்கு மிகுந்த ஒளி என்பதே பொரு ளாகும். நீண்ட ஒளியென்றும் கொள்ளலாம். மழைக்காலத்தில் சுடர்விட்டுத் தெரியும் மீன் கூட்டத்தை, கார்த்தீக் கூட்டம் என்பர். தீ என்ற சொல், உடுவையும் குறிக்கும். கோள்களைத் தவிர்த்த கதிரவன், விண்மீன்கள் தீக்கள் என்றே சொல்லப்பட் டன. கார்காலத்துத் தீ, கார்த்தீ எனப்பட்டது. கார்த்திகா என்று சமற்கிருதத்தில் சொல்லப்பட்டது. தீ என்ற எழுத்து, தி என்று குறிலாக்கப்பட்டது; தவிர, வேறெந்த மாற்றத்தையும் சமற்கிருதம் செய்யவில்லை.

கார்த்தீ கூட்டத்துடன் முருகன் தொடர்புபடுத்தப் பட்டதால், அவனைக் கார்த்தீயன் என்றனர். முருகனை கார்த் திகேயா என்று சமற்கிருதம் திரித்துக் கொண்டது. கார்த்தீயன்

அல்லது கார்த்திசேயன் என்பதே, கார்த்திகேயா எனத்திரிந்தது என்க. கார்த்தீ, எரிநாள், நாடன் அளக்கர், அறுவாய், தழல், இறால், ஆரல், அளகு, அறுமீன் என்றவாறு கார்த்தீக் கூட்டத்தைத் தமிழில் கூறினர்.

கார்தீக் கூட்டத்தை பிளியட்சு (pleades) என்று கிரேக்க மொழி கூறுகிறது. இம்மீன்களைப் பெண்களாகவே (கார்த்தீப் பெண்டிரைப் போலவே) மணிலுசு (Manilus) என்ற கிரேக்கக் கவிஞர் கூறுகிறார்.[13] உண்மையில் இது ஒரு ஏழு மீன்களைக் கொண்ட கூட்டமென்றாலும், ஒரு மீன் ஒளிகுறைவாக உள்ள தால், இதனை ஆறு என்ற கணக்கில் வைத்தனர். சில உலக நாகரிகக் குறிப்புகள், இக்கூட்டத்தை ஏழு மீன்களாகவும் குறித் துள்ளன.[14] சீனத்து வானியல், ஏழு உடன்பிறந்த பெண்களாக இம்மீனைச் சுட்டுகிறது.[15] சேயுசு என்ற கடவுளை ஏழு புறாக் களாகக் கருதப்படும் பெண்கள் வளர்த்ததாக ஒரு கிரேக்கக் கதை கூறுகிறது.[17] முருகனை வளர்த்த பெண்டிர் கதையை இங்கு ஒப்பு நோக்குக. மற்றொரு கதையில், ஒரு பெட்டைக் கோழி, தன் குஞ்சுகளுடன் இருப்பதாகக் கற்பனை செய் துள்ளது. இக்கற்பனை தமிழ் மக்களுடையது எனலாம். இன்றும் கூட தமிழ்நாட்டின் நாட்டுப்புறங்களில், இந்த ஆரல் மீனை "அஞ்சு குஞ்சுத்தாய் பெட்டை" என அழைப்பதைக் கேட்க லாம். சேயன் என்ற கார்த்திகேயனாரை ஆறு பெண்கள் வளர்த்த கதையைப் போலவே கிரேக்கக் கதை இருந்ததால், சேயுசு கடவுளை சில ஆய்வாளர்கள் முருகனோடும் ஒப்பிட்டுக் கூறினர்.

Pleades என்ற கிரேக்கச் சொல், ஒளிவுடு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க. பாபிலோன் நாட்டில், இவ்வுடு உச்சி யில் தோன்றும். கார்காலத்திலேயே ஆண்டுத் தொடக்கமும் கொண்டிருந்தனர். தமிழ்நாட்டிலும் கார்காலத்தில், குமரிநாட் டுப் பகுதிகளில், ஆண்டுத் தொடக்கமாக இருந்துள்ளது.[18] வரும் அடை (மழை)யைக் குறித்த சுருக்கமான சொல்லே, வருடை என்பதாகும். வருடை, மழையைக் குறித்து, சமற்கிரு தத்தில் வருசு என்றாகி, ஆண்டையும், வருசி என்பது மழையை யும் குறித்தன.

செல்தியர்கள் (Celts), இம்மீன் கூட்டம் ஒளிரும் நவம் பர்த் திங்களில்,தங்களது இறந்துபட்ட நண்பர்களை நினைவு கூர்வர். இந்த வழக்காறு கிறித்துவ சமயத்திலும் ஏற்றுக் கொள் ளப்பட்டு, நவம்பர் இரண்டாம் நாளன்று இறந்தவர்களின்

நாள் (All souls day) கடைப்பிடிக்கப் படுகிறது.[19] தமிழகத்துக் கிறித்துவர்கள் இரங்கல் தெரிவிக்கும் கல்லறைத் திருநாளும் இதுவே. Pleades எனப்படும் கார்த்தி மீன் கூட்டம் பற்றிய உலகச் செய்திகள் அனைத்தும் தமிழ் வழக்காறுகளைப் பின் பற்றியவைகளாகவே உள்ளன.

4. சகடு – உரோகிணி – Aldebaran:

சகடு என்ற விண்மீன் கூட்டம் விடைக்குறியில் முழுமை யாக இடம் பெற்றுள்ளதாகும். கார்த்தியும் மறி மானும் (மிருக சீரிடம்) குறைந்த பாகைகளைக் கொண்டு, விடையில் இடம் பெற்றுள்ளன. உரோகணம் என்ற சமற்கிருதச் சொல்லுக்கு வட்டம் அல்லது சக்கரம் என்பதே பொருளாகும். சகடு என்பதும் சக்கரத்தைக் குறித்த தமிழ்ச் சொல்லே. உருள், உருளி என்ற தமிழ்ச் சொல்லே,ரோகிணி அல்லது உரோசிணி எனத் திரிந்துள்ளது. உருள், சகடு, பண்டி, வையம், ஊற்றால், தேர், சகடம், உருளி, அயநாள் என்ற பெயர்களும் இம்மீன் கூட்டத் துக்கு உண்டு.[20]

தக்கன் என்பான் தனது 27 பெண்களையும் (மீன் கூட்டங் கள்) திங்களுக்கு மணமுடித்து வைத்தான். நாளும் ஒரு பெண் ணிடம் கூடி வாழவேண்டும் என்ற கட்டளையை மறந்து, திங்கள் உரோகிணியின் அழகில் மயங்கி, அவளிடமே வாழ்ந் ததாக ஒரு தொன்மக் கதையுண்டு. பத்மபுராணம் இக்கதை யைக் கூறுகிறது. உரோகிணி பற்றி இன்னும் ஏராளமான கதைகள் உண்டு.

அல்-தென் பரண் என்ற தமிழ்ச் சொற்களே Aldebaran எனத் திரிந்தது என்க.[21] தெற்கே தெரியும் ஒளிமிக்க உடு இது வாகும். தாலமி, இது செவ்வாயைப் போன்றே காணப்படுவ தாகக் கூறுகிறார். பாரசீகர்கள், இம்மீனை அரசு மீனாக (Royal star)க் கருதினர். பாரசீகத்தின் கிழக்கெல்லைக்குக் காவலாக இம்மீன் கூட்டம் கருதப்பட்டது. பாரசீகத்தின் புகழ்பெற்ற கடவுளான மித்திரன் (Mithras), இவ்விண்மீனாகவே கருதப்படு கின்றான். விடையாகிய காளையைக் கொன்று, அதன் குருதி வழியே மக்களுக்கு மீட்பளித்ததாக ஒரு கதையுண்டு.[22] விடைக் குறியின் சகடு, இவ்வுருவகமாகச் சொல்லப்பட்டது.

இங்கிலாந்தின் எட்டாம் எட்வர்டு மன்னர், அறிவியலார் கலிலியோ, பெர்னார்டோசா, அரசியல் அறிஞர் மாக்கிய

வல்லி கியோர், சகடு மீனில் பிறந்தவர்கள் என்று மேற்கித்திய சோதிடம் கூறுகிறது.

5. மான்தலை – மிருக சீரிடம் –Bellatrix:

விடைக் குறியில், மீதம் உள்ள பகுதிகள் ஆடவை யிலும் அறியப்படும் மீன் கூட்டம் இதுவாகும். மரை என்ற தமிழ்ச்சொல், பொதுவாக விலங்குகளைக் குறித்தது. மர்- மரு- மரை =விலங்கு; மர் - மரு- முரு = விலங்குத்தன்மை. மரை என்ற சொல்லே, ம்ரு - ம்ருக என சமற்கிருதத்தில் திரிந்தது. விலங்கைக் குறித்தது மான்தலை - மிருக சீரிடம் எனப்பட்டது. கெட்டி யான நீர் நிலையிலுள்ள பொருள், சீழ் அல்லது சீழம் எனப் படும். சீழம் என்ற சொல் சமற்கிருதத்தில் பால்,நெய் ஆகிய வற்றைக் குறித்தது. வெண்ணிறமான மான்றலை மீனை, மிருக சீரம் என்றனர்.

இந்திரன், வெய்யோன், மான்றலை, மும்மீன், நரிப்புறம், மாழ்கு, மார்கழி, பாலை, பேராளன், மதிநாள், ஐந்தானம் என்பவை மற்ற பெயர்களாகும். பசவின் கொடையான பால், வெண்ணெய், நெய், மோர், தயிர் ஆகிய ஐந்தும், ஆனைந்து எனப்படும். இச்சொல்லே ஐந்தானம் என்று சொல்லப்பட் டுள்ளது. விலங்கின் தலையும், பாலின் வெண்மையும் கருதி மிருகசீரிடம் என்ற பெயர் சமற்கிருதத்தில் அறியப்படுகின்றது.

வலதுபுறம் என்ற தமிழ்ச்சொல்லே, பெல்லாதிரிக்சு எனத் திரிபுபட்டிருக்க வேண்டும். தாலமி இம்மீன் கூட்டத்தின் பெல்லாத்திரிக்கை செவ்வாயின் வலதுபுறமாகவும் அல் -நிலம் (பெயரே தமிழ்ச் சொல்லாக உள்ளதை நோக்குக) - Al nilam[23] இடதுபுறமாகவும் உள்ளதாகக் கற்பனை செய்கின்றார். இம்மீனைக் குறியாகக் கொண்டவர்கள், புகழின் உச்சத்துக்குச் செல்வாரென்றும், அவர்களது இறப்பு பேரிழப்பாக அமையு மென்றும், மேற்கித்திய சோதிடம் கூறுகிறது. ஆலிவுட் நடிகை மர்லின் மன்றோ, சர். அலெக் சாந்தர் பிளெமிங் போன்றோர் இவ்விண்மீன் நாளில் பிறந்தவர்களே என்பர்.

6. ஆதிரை – ஆருத்திரா – Betelguese:

பார்வை குன்றியவர்களுக்கும் தெரியும் விண்மீன் ஆதிரை யாகும். முதன்முதலில் அறியப்பட்ட விண்மீன் இதுவே எனவும் சிலர் கூறுவர். இம்மீன் சிவனோடு தொடர்புபடுத்தப்பட்ட தால், இதற்கு ஆதிரை என்று பெயர் சூட்டினர். திரையென்

பதற்கு மூப்பு, பழமையென்று பொருளாகும். ஆ என்பது, தொடக்கத்தைக் குறிக்கும் சொல்லாகும். ஆதிரையான், தொடக்கத்திலிருந்து வாழ்ந்துவரும்; அல்லது தொடக்கம் தெரியப்படாமலே வாழ்ந்துவரும் தொன்மையானவன் என்ற வாறு பொருள் விரியும்.

திரையன் என்ற சொல்லை, ருத்திரன் என்று சமற்கிருதத்தில் கூறினர். ருத்திரனைப் பற்றிச் சில பாடல்கள் இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் பிற்காலத்தில் ருத்திரனைச் சிவனாக மாற்றிவிட்டனர். ருத்திரனுக்கும் சிவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்பதை ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. எனவே, தமிழில் ஆதிரையான் என்று சொல்லப்பட்ட பின்பே, அச்சொல் ஆருத்திரன் என்று மாற்றிக்கொண்டனர் என்பது தெளிவாகின்றது. ஆ என்ற சொல்லுக்கு அங்கே பொருள் விளக்கப்படவில்லை. பனிக்காலத்தில் சுடர்விட்டுத் தெரியும் ஆதிரை மீன் நாளை, சிவனுடையதாகத் தமிழர் போற்றினர்.

திருவாதிரை, மூதிரை, யாழ், செங்கை போன்ற பெயர்களும் உண்டு.[24] கடைக்கழக இலக்கியங்கள் ஆதிரை மீனைக் குறிப்பிடுகின்றன. கிரேக்கர்கள் தமிழகத்தில் அறியப்படும் வெற்றிலையுடன் இம்மீனைத் தொடர்பு படுத்தி Betelguese என்றனர்.[25] வெற்றிலை மேலைநாடுகளில் அறியப்படாதது. வெற்றிலையுடன் ஏன் இம்மீனைத் தொடர்பு படுத்தினர் என்பதை அவர் விளக்கவில்லை. செங்கை என்ற பொருளில், கையின் உருவகமாக வெற்றிலையைக் கூறியிருக்கலாம்.

7. கழை – புணர்பூசம் (Pollux):

ஆடவையில் பெரும்பகுதியை அடைத்துக் கொண்டிருக்கும் மீனே கழையாகும். கழி என்றவாறு அறியப்படுவதே, கழை எனப்பட்டது. இம்மீனின் தோற்றம் ஆண் குறியைப் போலவே தெரிவதால், இதனைக் கழை என்றனர். அதிதிநாள், ஆவணம், புணர்தம் கழை, எரி, பாலை, பிண்டி, கரும்பு என்ற வேறு பெயர்களுமுண்டு.[26] அதிதி என்பவள், காயவன் (காசிபன்) என்பவனை வலியச் சென்று புணர்ந்த நாளையே அதிதிநாள் என்றனர். தமிழில் சொல்லப்பட்ட ஆண்குறியின் விளக்கமாகவே, சமற்கிருதத்தில் இதனைப் புணர்பூசம் என்றனர். பூசம் என்பது உப்பிப் பெருத்திருக்கும் ஆண்குறியை (Errectus Penis)க் குறிக்கும் சொல்லாகும். பூ என்பதற்கு விரிதல் என்பது

பொருள். பூச்சு, பூசு போன்ற சொற்கள் பெருத்திருத்தலை விளக்கும் தமிழ்ச் சொற்களாகும். எலும்பும் தோலுமாயிருந் தவன், இப்போது பூசி மெழுகினாற்போல் காணப்படுகிறான் என்றவாறு சொல்லப்படும் வழக்கை நோக்குக. பூசு என்பதற்கு உப்புதல் என்பதே பொருளாகும். பூசு -பூசம் எனப்பட்டது. புணர்பூசம் என்ற இரு தமிழ்ச்சொற்கள், அப்படியே சமற் கிருத மொழியில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இச்சொற் களுக்கு புணரும் நிலையில் உள்ள ஆண்குறி என்பதே பொரு ளாகும். சமற்கிருதத்தில் இவ்விரு தமிழ்ச் சொற்களுக்கும் இணையான சொற்கள் கிடைக்கவில்லையெனத் தெரிகின்றது.

கிரேக்க மொழியில் இம்மீனை, பொலக்சு (Pollux) என்ற னர். இச்சொல்லின் முன் சொல்லான பொல் (Poll) என்பது தமிழ்ச் சொல்லே.பொல் என்ற தமிழ்ச் சொல்லுக்குப் புணர் தல் என்பதே பொருளாகும். பொலிதல் என்பது புணர்தலையே குறிக்கும். பொலிகாளை என்ற சொல்லை ஒப்புநோக்குக. பொல் லாதவன் என்பதற்கு, மிகையான காதற் களியாட்டங்களில் ஈடுபடுபவன் என்பதே பொருளாகும். பிற்காலத்தில் கெட்ட வன் என்ற பொருளிலும் உணரப்பட்டது. Pollux என்ற சொல் லுக்கு பொலிதல் என்பதே பொருளாகும்.[27]

தாலமி பொலக்சு மீனை எர்குலிசு என்பவனோடு உருவகப்படுத்தினார். ஆடவையின் இரட்டை மீன்களான Castor, Pollusx ஆகிய இரு மீன்களும் இரட்டையர்களாகச் சொல் லப்பட்டனர். காசுடர் கெட்டவனாகவும், பொலக்சு நல்லவ னாகவும் கூறப்படும். தமிழில் அறியப்படும் காமன் என்ற பாலுணர்வைத் தூண்டும் கடவுளை, பொலக்சு மீனோடு ஒப்பி டுவர். அவனது உடன்பிறப்பாக சாமன் என்பவனைக் குறிப்பி டுவர். காமனும் சாமனும் இரட்டையர்கள் என்பது தமிழரின் தொன்மக் கதையாகும். பொலக்சு மீன் ஒளிமிகுந்தது என்ப தால், காமனை சிவன் எரித்த கதை சொல்லப்பட்டது. ஆடவை யின் இம்மீன் நாளில் பிறந்தவர்கள் பாலுணர்வு கொண்டவர் களாக இருப்பர் என்று சோதிடம் கூறுகிறது.

8. காற்குளம் – பூசம் – Auruga:

குளம் என்பது, கதுப்பு என்ற பொருளிலும் அறியப்படும். கன்னம் உப்பியிருக்கும் (Jaw) நிலையை, கதுப்பு என்பர். பூச மீன் கடகக்குறியில் காணப்படுவதாகும். எகிப்தியர்கள் இக்

குறியை வண்டு (Beetle) என்றே கூறினர். சால்தியர்கள் (Chadeans) அதனை நண்டு என்றனர்.[28] நண்டு கற்கடகம் என்றும் சொல்லப்படும். நண்டு பக்கவாட்டில் நகர்வது போல், இம்மீனின் நகர்ச்சி காணப்படுவதால் சால்தியர்கள் இம்மீனை நண்டு என்றனர். Cancer என்ற சொல், Kankar என்ற கிரேக்கச் சொல்லின் திரிபாகும். கற்கட என்ற சொல்லே, Kankar எனத்திரிந்தது.

தமிழர்கள் இம்மீனை வண்டு என்றே கூறினர். அதனைப் பின்பற்றியே எகிப்தியர்களும் வண்டு என்றனர். வண்டின் முதுகுப் பகுதி (Shell) உப்பிப் படுத்திருப்பதைக் கருத்தில் கொண்டே, காற்குளம் (காற்கடம் - கற்கடம்) என்றும் சொல்லப்பட்டது.

பூசு என்ற தமிழ்ச்சொல், புசய என்ற சமற்கிருதத்தில் திரிந்தது. பூசன் ஒரு தேரோட்டியாக சமற்கிருதத்தில் உருவகப் படுத்தப்பட்டுள்ளான். தனது இடது தோளில் ஒரு ஆட்டைத் தூக்கியபடி, முழங்காலில் நிற்கும் தேரோட்டியாக, இவன் உருவகப்படுத்தப்பட்டுள்ளான்.

குளமீனோடுந் தாட் புகையினும் – புறநானூறு,[29] 395 : 55.

காற்குளம், கொழறு, தைவண்டு என்ற பெயர்களும் சொல்லப்பட்டுள்ளன.[30]

9. கட்செவி – ஆயில்யம் – Aeucens:[31]

தமிழர்கள் இம்மீனைப் பாம்புடன் உருவகப்படுத்தினர். கண்ணும், காதும் என்ற பொருளில் இணைக்கப்பட்ட சொல்லே, கட்செவி என்பதாகும். பாம்புக்குக் கண்ணும் காதும் ஒருருப்பே என்பதை தொன்மைக் காலத்திலேயே தமிழர்கள் அறிந்திருந்தனர். பாம்புக்கு, தனித்தனியான உறுப்புகளாக கண்ணும் காதும் இல்லை. பாம்பு தரையில் தன் தலையை வைத்துள்ள போது, அவ்வுறுப்பு செவியாகவும், தலையைத் தூக்கிப் பார்க்கும்போது அதே உறுப்பு கண்ணாகவும் செயல்படும். படமெடுத்தாடும் பாம்புக்கு அந்த நிலையில், எந்த ஒலியையும் அதனால் கேட்க இயலாது. மகுடி ஊதுவதால் பாம்பு ஆடுகிறது என்பது பொய்யான தகவலாகும். மகுடியின் ஒலிக்கு பாம்பு ஆடுவதில்லை. மகுடியை பாம்பாட்டி அசைப்பதால், அந்த கை அசைவிற்கேற்றவாறு ஆடுகிறது. மகுடி ஊதுவது மக்களுக்காகவேயன்றி பாம்புக்காக அன்று.

ஆயில்யம் என்ற சமற்கிருதச் சொல்லும் பாம்பைக் குறித்ததே. அயில் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நீண்ட, நெடிய என்பதே பொருளாகும்.

அயில் : நீண்ட கலப்பை, நீண்ட கோரைப்புல், நீண்டவேல் என விரியும். நீண்ட கழியையும் அயில் என்பர்.

அயில் என்ற சொல்லே, அயில்யா எனத் திரிந்தது. இதற்கு பாம்பு என்பது நேரிடையான பொருள் சொல்லப்படவில்லை. நீளமானது பாம்பு என்பதால், அயில்யா என்ற சொல் பாம்பையும் குறித்தது.

கௌவை (நீண்ட கம்பு), பாம்பு, அரவுநாள் போன்ற பெயர்களும் தமிழில் உண்டு.[32] எர்குலிசு என்பான் அய்ட்ர (Hydra) என்ற பாம்பைக் கொன்ற கதை, கட்செவி மீனுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. தென்பாம்பு எனப்படும் அய்ட்ரா, ஆடு +அரா என்ற தமிழ்ச் சொற்களின் திரிபே. ஆடு அரா என்பதே அய்ட்ரா எனத் திரிந்துள்ளது என்க.

10. கொடு நுகம் – மகம் – Regulas:

நீட்சியைக் குறிக்கும் சொல்லே கொடுநுகம் எனப்படும். வாய்க்கால், வேட்டுவன், வேள்வி, மாசி என்ற வேறு சில பெயர்களும் இதற்குண்டு.[33] இறந்துபட்ட முன்னோர்களுடன் இம்மீன் தொடர்படுத்தப்பட்டுள்ளது. ஒருக்கால் இம்மீன் உயர்வடைந்திருந்த நாளில், குமரிக்கண்ட அழிவு நிகழ்ந்திருக்கக் கூடும். எனவே அந்நாளை கருப்புநாளாக (Black day)க் கருதினர் போலும். மாகம் என்பது கருமையைக் குறித்தது.

மாக நாளில் இறந்துபட்ட முன்னோர்கள், காக்கை உருக்கொண்டு இவ்வுலகிற்கு வந்து போவதாக ஒரு நம்பிக்கையுண்டு. காக்கையும் கருமைநிறம் கொண்டிருப்பதால், மாக நாள் காக்கையுடன் தொடர்படுத்தப்பட்டது. இந்த நம்பிக்கையை ஆரியர்களும் மேற்கொண்டனர். அவர்களும் தங்கள் முன்னோர் தெற்கே மாண்டுபோயினர் என்று கூறினர். மக்களுக்கு நாகரிகத்தையும் கல்வியையும், அறிவையும் தந்தவர்கள் அம்முன்னோர்களே என அவர்களும் கூறினர்.

நீண்ட கோட்டைப் போல் இம்மீன் கூட்டத்தோற்றம் இருப்பதால், இது கொடு நுகம் எனப்பட்டது. நுகம் என்பது நுகத்தடி என்றவாறு தற்போது வழக்கிலுள்ளது. இந்த மீன் கூட்டத்தை பிதிர்கள் என்று சமற்கிருதம், மீன் அல்லது மானசு (Manes) என்று கிரேக்கமும் கூறுகின்றன. கிரேக்க நம்பிக்கைகளும், Raven என்ற காக்கையுடன் தொடர்பு கொண்டுள்ளன. Re என்ற ஒலிப்பு இர - இரா என்ற தமிழ் மூலத்தினின்றும்

திரிந்ததாகும். கருமை - இராவன் என்பதே, ரேவன் என்று திரிந்துள்ளது. இதே ஒலிப்பில் Reguals என்றவாறு இம்மீன் அழைக்கப்பட்டது.[34]

இராகுல் (Rahul) என்ற சமற்கிருதச் சொல்லுக்கு, கருமைக் குலம் அல்லது கரிய நிறமுடைய இனம் என்பதே பொருளாகும். இதே பொருளில், Regulus என்ற சொல் திரிந்திரிந்தது. மக மீனில் பிறந்தவர்கள் தலைமைப் பண்புகளைப் பெற்றிருப்பர் என சோதிடம் கூறுகிறது.

11. கணை –பூரம் – Zozma:

கண் என்ற சொல்லின் நீட்சியே கணை என்பதாகும். கணையென்பது உருண்டு திரண்ட ஒரு பொருளைக் குறிப்பது. காலில் தசை திரண்ட பகுதி, கணைக் கால் எனப்படும். உலக்கையின் தலைப்பகுதி, கணையம் எனப்படும். இடையெழுஞ்சனி, எலி, பகவதிநாள் ஆகியவை பூரத்தை ஒட்டிய பெயர்களாகும்.[35]

புரையென்பது, நீண்டு செல்லும் துளை அல்லது உயர்ச்சி என்றவாறு அறியப்படும்.

புரையேறுதல் : காற்றுக் குழாயில் மேலேறும் பொருளால் வரும் இருமல்.

புரையோடுதல் : நீண்டு குழிபடும் புண்.

புர் -புரி : நீண்டு வளரும் ஊர், புரி -பூர் எனவும் சொல்லப்படும்.

பூரித்தல் : உப்புதல், பருத்தல்.

புர் என்ற வளர்ச்சி, புற்று என்றவாறு சொல்லப்பட்டது.

பூரி என்ற உணவுப் பொருளின், சமற்கிருதத்தில் திரிந்த சொல்லே, பூரம் என்றானது.

கணை யென்பது பூரித்தல் என்ற பொருளில், பூரம் எனத்திரிந்தது.

அரிமா என்ற குறியின் (சிம்மம்) பெருத்துச் சிலிர்த்திருக்கும் பிடரி மயிராக இம்மீன் கிரேக்கத்தில் உருவகப் படுத்தப்பட்டுள்ளது. Zoz- Ma[36] என்ற கிரேக்கச் சொல், பெரிய என்ற பொருளைத் தருவதாகும்.

12. உத்திரம் –உத்தர – Denebola[37]:

உத்திறம் என்பது தமிழ்ச்சொல்லே. ஊத்து- ஊற்று என்றவாறு, மேல் நோக்கியெழும் நிலையை விளக்குவது. ஊற்று :மேல் நோக்கியெழும் நீர். ஊற்றிறம் அல்லது ஊத்திறம் - உத்திரம் என்றானது. வீட்டின் மேலே இணைக்கப்பட்டுள்ள

விட்டத்துக்கு உத்திறம் என்பது பெயராகும். ஊற்றி : எழுகின்ற ஒன்று.

ஊற்றி - ஊத்தி- உத்தி : பல வழிகளில் முதலாவதாக எடுக்கப்படுவது.

உத்தி: ஒருவனது தலைமையில் சேரும் அணி.

உதி: எழுதல், மேலே உயர்தல்.

உத்திறம் என்ற சொல்லை, உத்தற என்றவாறு சமற்கிருதம் திரித்துக்கொண்டது. உத்திறநிலம், மேட்டுநிலம் எனப்படும். உத்திறப் பிரதேசம் என்பது, மேட்டுநாடு அல்லது நிலம் என அறியப்படும்.

தென்கோளரையில், கன்னிக்குறியில் காணப்படும் ஒளி மிகுந்த உடுவே உத்திறம் எனப்படும். தெற்கே ஒளிரும் மீன் என்ற பொருளில், தென்பொலிவு (பொலிதல் : ஒளிர்தல்) என்றவாறு Denabola எனத் திரிந்தது. மிகப்பெரும் புகழைத் தரும் மீனாகச் சோதிடத்தில் சொல்லப்படுகின்றது. பல்கலைவித்தகர் லியனார்டோ டாவின்சி இந்நாள் மீனில் பிறந்தவர் என்று கருதப்படுகின்றார். செங்கதிர் நாள், செங்கதிர் பிறந்த நாள், கதிர்நாள், மானேறு, என்றும் சொல்லப்படும்.[38]

13. ஐவிரல் : அசுதம் – Corvus:

ஐந்து மீன்களால் அறியப்படும் இக்கூட்டம், கையின் விரித்த ஐந்துவிரல்கள் போல் தோன்றுவதால், ஐவிரல் எனப்பட்டது. அய்ந்து என்ற தமிழ்ச் சொல்லே, அத்து- அத்தம் எனப்பட்டது. இதனை ஐந்துதலைப்பாம்பாகவும் உருவகம் செய்தனர். கிரேக்க மற்றும் செல்டிக் கதைகள் ஐவிரல் மீனை, பாம்பாகக் கருதினர். காக்கையொன்று (Corvus); அப்பல்லோ இட்ட கட்டளையை நிறைவேற்றாமல், பாம்புக்கு (Hydra) அருகிலிருந்த கிண்ணத்திலுள்ள பாலைக்குடிக்க காக்கை வந்ததாம். அதனைத் தடுத்து பாலைக் குடிக்கவிடாமல் பாம்பு தடுத்ததாம் (Hydra et corvus et crater)

பாம்பும் காக்கையும் உலக நாகரிகங்களில் பலவாறு இடம்பெற்றுள்ளன. மேற்கித்திய நம்பிக்கைகள் காக்கையை தீய உருவாகக் (Demon) காட்டுகின்றன. தமிழில் பாம்பைப் பற்றிய விளக்கம் ஐவிரல் (ஐந்து தலைநாகம்) எனப்பட்டது. கிரேக்கத்தில் பாம்புக்குப் பதிலாக காக்கையை Corvus எனக் கூறியுள்ளனர். Corus - Crow எனப்படும்.[39]

ஐம்மீன், ஐவிரல், களிறு, கன்னி, காமரம், கைம்மீன், கைனி, நவ்வி என்றவாறு வேறு பெயர்களும் தமிழில் உண்டு.[40]

14. அறுவை – சித்திரை – Spica[41]:

சித்திரை என்பது கோடையின் தொடக்கமாகும். கதிரவன் நிலநடுக்கோட்டுக்கு வரும் காலமும் அதுவே. வெப்பம் மிகுந்திருப்பதால், குறைந்த ஆடைகளையே அல்லது மெல்லிய ஆடைகளையே இக்காலத்தில் உடுத்துவர் என்பதால், சிறிய ஆடை என்ற சொல், சிற்றரை எனப்பட்டது. அரை யென்பது இடையெனப்படும். அரையில் அணியும் சிறு ஆடை, சிற்றரையாகும். சிற்றரை - சித்திரை அல்ல சித்ரா என சமற்கிருதத்தில் திரிந்தது.

Spica என்று கிரேக்கத்தில் அறியப்படும் சொல்லுக்கு சிறு துணியென்றே (Bandage) பொருள் சொல்லப்பட்டுள்ளது.

அறுவை (துண்டாக்கப்படும் துணி), ஆடை, சுவை, செவ்வி, தூசு, பயறு, நெய் துவட்டாத நாள், தச்சன், நடுநாள், சித்திரை என்றவாறு வேறு பெயர்களும் உண்டு.[42]

15. விளக்கு – சுவாதி – Bootes[43]:

ஒளிரும் மீன் என்ற பொருளில் விளக்கு எனப்பட்டது. சோதி, சுவாதி என்றவாறு இருசொற்கள், ஒளியைக் குறித்து சமற்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ளது. சேய் என்ற சொல், தொலைவு அல்லது உயர்வைக் குறிக்கும். சேயோன் = உயர்திலுள்ள மலையில் இருப்பவன். உயரத்திலுள்ள தீ (உடு) சேய்தீ எனப்பட்டது. சேய்தீ, சமற்கிருதத்தில் சோதி எனப்பட்டது. சுவர் என்ற சொல், உயர்வைக் குறிக்கும். சுவர் + அகம் = சுவரகம் என்பது வானத்திலுள்ள வீட்டைக்குறிக்கும். சுவரகம் - சுவர்கம் என்று திரிந்தது. அது போன்றே, சுவர்த்தீ என்ற சொல்,சுவாதி எனப்பட்டது.

கிரேக்கத்தில் இம்மீன், பூதி எனப்பட்டது. ஒளிர்கின்ற உடு என்பது இதன் பொருளாகும். பூதி - Bootes எனத்திரிந்தது என்க.

துளக்கம், மரக்கால், வீழ்க்கை, அநிலநாள், துணி என்ற பெயர்களும் விளக்கு மீன் கூட்டத்துக்கு உண்டு.[44]

16. முறம் –விசாகம் – Libra[45]:

முறம் போன்று விரிந்த இக்கூட்டம், விசாகம் என்று சமற்கிருதத்தில் சொல்லப்பட்டது. எடைக் கோலின் இரு தட்டுகள் போன்று இம்மீன்கள் உள்ளன. தென் பகுதியிலுள்ளது முறம் என்றும் (Elgenubi) வட பகுதியிலுள்ளது முற்றில் (Eschamalxi) என்றும் சொல்லப்பட்டன. பரந்து காணப்பட்ட இம் மீன் கூட்டத்தை முறம் என்றனர். விரிந்த என்ற தமிழ்ச் சொல், வியல் என்றும் சொல்லப்படும். வியலகை விரிந்தவன். வியல் +ஆழன்= வியாழன். விய என்ற தமிழ்ச் சொல், விச எனத் திரிந்தது. வியலன் - விசாகரம் என்றானது.

கிரேக்கத்தில் பரந்த இலை என்றானது (தட்டு) சொல்லப் பட்டது. Li என்பது இலை அல்லது தட்டு எனப்படும். vra என்பது பரந்த என்று பொருள்படும். Bra - Li என்ற சொற்கள் முன்பின்னாக மாற்றி Libra எனப்பட்டது - உரோமர்கள், நீதி தேவதையின் கையில் உள்ள எடைக்கோல் என்றனர். கண்ணைக் கருப்புத் துணியால் கட்டிக் கொண்டு, கையில் எடைக் கோலை வைத்திருக்கும் தேவதைப் பொம்மைகள், நீதி மன்றங்களில் காணப்படும்.

சுளகு, காற்றுமுந்து நாள், சேட்ட என்ற பெயர்களும் உண்டு.[46]

17. முடப்பனை – அனுசம் – Graffias[47]:

குட்டையாகவுள்ள பனைமரம், முடப்பனை எனப்படும். இது முற்றில் என்ற மீனுக்கு வடக்கே அறியப்படும். இம்மீனை அணுகி அல்லது அண்டி இருப்பதால் இது அனுசம் எனப் பட்டது. அணுகு - அணு - அனு வெனத்திரிந்தது. அனு வென்ற சமற்கிருதச் சொல்லுக்கு to come forward, to lie on என்றவாறு பொருள் கூறப்பட்டுள்ளது. இது ஒரு சிறப்புக்குரிய விண் மீனாகச் சொல்லப்படவில்லை. கரும்பனையென்பதே, கிராபி யாசு எனத்திரிந்துள்ளது. போந்தை (பனை), தேள், தாளி (ப்பனை), பெண்ணை, புல் என்றவாறும் சொல்லப்படும்.[48]

18. துளங்கொளி – கோட்டை –Antares[49]:

நளிக்குறியில் (விருச்சிகம்) நான்கு புள்ளிகளுடன் நேர்க் கோடு போல் தெரிவதே துளங்கொளியாகும். ஒரு தேளின் உடல் பகுதி போன்று இவை உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் தலைப்பகுதி முடப்பனையில் தொடங்கும் துளங் கொளியாகும். ஒரு தேளின் உடல் பகுதிபோன்று இவை உருவ கப்படுத்தப்பட்டுள்ளன. இதன் தலைப்பகுதி முடப்பனையில் தொடங்கும். துளங்கொளியைக் கேட்டை என்பர். கேட்டை நான்கும் ஈட்டியைப் போல என்பர். நாட்டுப்புறத்தில் இதனைத் தார்க்குச்சி என்பர். சேண் உயரம் அல்லது மேடு என்ற பொருளில், சேண் - சேடு - சேட்டை என விரியும். சேட்டை யென்பது மூத்த அல்லது முதன்மையான என்றவாறு சொல்லப் படும். இந்நான்கு மீன்களையும் சேட்டை என்றே தமிழர்கள் குறித்தனர். அது கேட்டை என்று சொல்லப்பட்டது. சேட்டை - ச்யேசுட என சமற்கிருதத்தில் திரிந்தது என்க. சேசுட குமாரன், தலைமகன் எனப்படும். சமற்கிருதத்தில் இது ச்யேசுட என்றே சொல்லப்படுகின்றது.

இந்திர நாள், தழல் எரி, சேட்டை, அந்தாரை, வல்லாரை யென்றும் தமிழில் இதற்கு வேறு பெயர்கள் உண்டு. அந்தாரை யென்பதே, Antares எனத் திரிந்தது.

19. மூலம் அல்லது குருகு – மூலம் – Accumen[51]:

மூலம் என்பதற்கு முதன்மையானது, முந்திவருவது, முன்னது என்றவாறு பொருள் கொள்ளப்படும். மூலம் - மூல என்று சமற்கிருதத்தில் திரிந்தது. சிலர் மூலம் என்பது சமற் கிருதச் சொல்லே யெனவும் மயங்கினர். மூலம் தனித்தமிழ்ச் சொல்லே. ஆதி மூலம் என்பதும் தமிழ்ச் சொற்களே. திருமூலர் என்ற பெயரையும் நோக்குக.

முன் - முல்-முல்லை: பூக்குமுன்பே வெளிவரும் மணம்.

முன் - முல் -முலை: வெளியே நீண்டிருக்கும் மார்பகம்

மூலை - இரு கோடுகள் இணையும் பகுதி.

முன் - முன் -மூலம் : முதன்மை.

சொல்லின் வேருக்கு அடுத்த விரிவு நிலை.

முன் - முல் - முல்லை : முன் வேர்ச்சொல், முல்லை மூலச் சொல். இம்மூலச் சொல் பல்வேறு சொற்களாக விரியும். முல்லை வனம், முல்லையூர், முல்லைக்கொடி, முல்லை வேந்தன், முல்லைநிலம் என்றவாறு. இவைகளில் முல்லை மூலச்சொல் லாகவும் அடுத்தவை துணைச் சொற்களாகவும் உள்ளன. பின்னொட்டுச் சொற்கள் முல்லையென்ற மூலச் சொல்லோடு இணையும்போது மட்டுமே, முல்லையோடு தொடர்புடைய

பொருள் பெறப்படும். வனம், ஊர், கொடி, வேந்தன், நிலம் போன்ற பின்னொட்டுச் சொற்கள் வேறு சொற்கள் வேறு சொற்களோடு இணையும்.

தேளுக்குக் கொடுக்கே சிறப்பைத் தருவதால், அப்பகுதியை மூலம் என்றனர். அக்குமன் அக்குலசு (Acumen -Acules) ஆகிய மீன்கள் கொடுக்குப் பகுதியில் காணப்படுபவை. இவை மூலம் எனப்பட்டன. குருகி வளைந்து கொடுக்காக நிற்பதால், இது குருகு என்றும் சொல்லப்பட்டது. குருகு என்பது புள்ளி அல்லது முனை என்றும் அறியப்படும்.

ஆனி, சினைவில், என்றில், அகரநாள், தேள்கடை, கொக்கு எனவும் விரியும்.[52]

குருகு என்பது முனை என்ற பொருளில், அக்கு அல்லது தேள்கடை, கொக்கு எனவும் விரியும்.[52]

குருகு என்பது முனை என்ற பொருளில், அக்கு அல்லது அஃகு என்ற சொல்லும் புள்ளியெனக் குறிப்பதே. புள்ளி மீன் அல்லது அஃகுமீன் என்பதே, Acumen எனத்திரிந்துள்ளது.

20. உடைக்குளம் – பூராடம் – Rukbat[53]:

இம்மீன் கூட்டத்தை நீரோடு தமிழர் தொடர்புபடுத்தினர். முற்குளம், நீர் நாள் எனவும் அழைத்தனர்.[54] பூர்வ ஆசாடம் என்பதே இதற்கான சமற்கிருதச் சொல்லாகும். பூராடம் எனச் சுருக்கப்பட்டது. ஆடியில் வீசும் காற்று, மேற்கே மழையைத் தந்து, கோடை மழையாகத் தமிழகத்திலும் பெய்யும். ஆடல் என்பதற்கு அசைதல் என்பதே பொருளாகும். காற்றின் விரைவான வீச்சால் அனைத்தும் அசைகின்ற தன்மையை ஆடி என்ற சொல் விளக்கும். அம்மியும் கூட நகரும் என்பது வீச்சின் சிறப்பை விளக்கும் எனலாம். ஆடல் என்பதற்கு நீராடுதல் என்ற பொருளுண்டு. காற்றோடும் மழையோடும் தொடர்புடைய ஆடி, அசைதல் + ஆடுதல் என்றவாறு, ஆசாடம் என்று சமற்கிருதத்தில் சொல்லப்பட்டது. பூர் என்ற நீட்சியையும் நகர்வையும் குறித்தது. முற்றிலும் அசைகின்ற நிலையை, பூர்வ ஆசாடம் என்பர்.

புர் என்ற வேர்ச்சொல், பூர் - பூராடம் என்றவாறு திரிந்தது. மழையோடு தொடர்புடைய ஆடியின் நிலைமீன், உடைக்குளம் எனப்பட்டது.

சிலைக் குறியில் (தனுசு) தோன்றும் உருவத்தை, கையில் வில்லுடன் தோன்றும் வேடனாகக் கூறினர். மேற்கித்திய வானியல் அவ்வாறே கூறுகிறது. வளைந்த கம்பு வில்லாகிறது. காமன் என்ற கடவுள், மலர் வில்லைக் கொண்டிருப்பவன் என்ற நம்பிக்கை தமிழர்களிடையே காணப்பட்டதால், வில்லையே காமன் (Kaman) என்று பாரசீக மொழி கூறுகிறது. துருக்கியர்கள் யாய் (Yai) என்றும், சிரியர்கள் கெர்ட்கோ (Kertko) என்றும் அழைத்தனர். சிலைக் குறியின் ஒளிமிகுந்த உடுவாக, Rukbat சொல்லப்பட்டது.

21. கடைக்குளம் – உத்திராடம் – Facies[55]:

சிலைக் குறியின் மற்றொரு விண்மீன் கடைக்குளம் ஆகும். இது மகரத்திலும் அறியப்படுகின்றது. இது ஆடியின் முடிவை அல்லது காற்று முடங்கலை விளக்கும் சொல்லாகும். கடை என்பது இறுதி என்ற பொருளில் அறியப்படும். ஆடி முடங்குதலை இச்சொல் விளக்குகிறது. உத்திர ஆசாடம், உத்திராடம் எனப்பட்டது. சிலையின் வடக்கே இம்மீன் அறியப்படுகின்றது. மகரத்தையும் சிலையையும் பிரிக்கும் இடத்தில் உள்ள இம்மீனை பகுமீன் என்றவாறு சொல்லியிருக்க வேண்டும். பகு -Facis என்றானது. ஆனி, ஆடி, கடைக்குளம் ஆகியவை வேறு பெயர்களாகும்.[56]

22. திருவோணம் அல்லது முக்கோல் – சிறீவோணா – Aquila[57]:

ஓணம் என்பது ஆற்றைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். ஓடுதல் என்ற சொல், ஓடு - ஓண் - ஓணம் என்றானது. ஓடு (oddu) என்ற எபிறேயச் சொல் ஆற்றைக் குறித்ததே. சிந்து ஆற்றை ஓடு என்றே எபிறேய மொழி கூறி, சிந்துவெளியையும் தற்போது இந்தியாவையும் ஓடு என்றே குறிப்பிடுகின்றது. ஓடு - ஓணா என்று திரிந்தது. திரு. சிறீ என்றவாறு திரிந்து சிறீவோணா எனப்பட்டது.

ஓண நாள், உலக்கை, மாயோன் நாள், முக்கோல், நன்று, சோனை யென்றும் கூறுவர்.[58]

இதன் தோற்றம் கழுகு பறப்பதைப் போல் தோன்றுவதால், இதனைக் கலுழன் என்றனர். திருமாலுடைய ஊர்தியாகவும் கூறினர். கலுழன் என்ற சொல்லே கிலா - அக்கிலா என்று கிரேக்கத்தில் திரிந்தது. இதனுடைய ஒளி மிகுந்த உடு அல்தார் (Al tair) எனப்படும்.

கலுழன் தமிழர்களைத் தொன்மைக் காலத்திலேயே கவர்ந்த பறவையாகும். விவிலியம், கடவுளின் நெருப்பை உலகிற்குக் கொண்டு வரும் பறவை எனக் கூறுகிறது. உரோமப் பேரரசும், இன்றுள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசும், கலுழனையே அரசாங்கப் பறவையாகவும் அரசு முத்திரை யாகவும் கொண்டுள்ளனர்.

23. காக்கை –அவிட்டம்– Delphinus:

பறவை, புள் என்றவாறு தொல்தமிழர் இம்மீனைக் குறித் தனர்.[59] திருவோணத்துக்கு அருகில் இம்மீன் அறியப்படும். காக்கையென்றும் சொல்லப்பட்டது. ஆரியர்கள், காக்கையை தங்களது முன்னோர்களாகவே கருதினர். ஆண்டுக்கொரு முறை அளிக்கப்படும். உணவை, விரும்பியுண்ணவரும் பிதிர் கள், காக்கை வடிவில் வருவதாகவே நம்பப்பட்டது. விருப்பம் என்ற சொல், இட்டம் என்றவாறும் சொல்லப்படும். இடு என்ற மூலச் சொல், கொடுப்பது; கொடுப்பதை விரும்பிப் பெறு வது இட்டம். இட்டம், இஷ்ட எனத்திரிந்தது. அவியுணவை விரும்பியுண்ணும் பிதிர்களை, அவி இட்டம் என்றவாறு கூறினர். அவிட்டம் என்று சுருக்கிச் சொல்லப்பட்டது. அவிட்டம், அவிட்ட மெனப்பட்டது.

கிரேக்கர்கள் இம்மீனை Delphinus என்றனர்.[60] இது தலைமீன் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. தலையை ஆட்டி அசைத்து மகிழும் மீன் இதுவென்பது பொருளாகும்.

24. செக்கு –சதாபிசேக் –Sadel Malek[61]:

சதயம் என்று சமற்கிருதத்தில் அறியப்படும் மீன், செக்கு எனத் தமிழில் சொல்லப்பட்டது. செக்கு எண்ணெய்யுடன் தொடர்புடையது. நெய்யை செக்கு என்றும் கூறினர். செக்கு - சேக் எனத் திரிந்தது. நூறு தடவையும் நெய்பூசுதலை சதாபி சேக் என்றனர். ஆண்டுக்கொருமுறை நெய்குளிப்பு செய்தவர், நூறாவது குளிப்பை சதாபிசேக் என்று கூறினர். சேக் என்ற சொல், பூசுதல் (Anointing) என்ற பொருளில் சொல்லப்பட்டது.

கும்பக் குறியின் தலைமீன் செக்கு ஆகும். வருணநாள், குன்று,கண்டன், போர் என்றும் அழைப்பர்.[62] செக்கு அல்லது நெய் குளியல், நூறுமுறை செய்யப்படுவது, சதம் எனப்பட் டது. இது சதை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். சதை, தசை ஆகியவை வெவ்வேறு வேர்ச் சொற்களினின்றும் விரிந்

தவைகளாகும். சதை என்ற சொல், சதா என்று சமற்கிருதத்தி லும், சடல் என்று கிரேக்கத்திலும் திரிந்தன. Malek என்பது (மலை) உயரத்தைக் குறித்த சொல்லாகும்.

25. நாழி – பூரட்டாதி – Markab[63]:

பூர்வபத்திர என்ற சமற்கிருதச் சொல், பூரட்டாதி எனப்பட்டது. பத்திர என்ற சொல், ஒளியைக் குறித்தது. முன் இரவில் தோன்றும் இம் மீனை, பூர்வ பத்திர என்றனர். பத்தி ரன் என்பது சிவனைக் குறித்தும், பத்திரி அவள் மனைவியைக் குறித்தும் சொல்லப்பட்டன. பத்திரன் (சிவந்தவன்) என்ற சொல், சினம், தீ,நெருப்பு, சுடர் ஆகியவற்றுடன் தொடர்புடை யது. அந்திப் பொழுது சிவந்து காணப்படுவதால், அதனை (முன் இரவை) கொடுங்கோல் நாழி என்றனர்.[64] இதன் சுருக்கமே நாழி எனப்பட்டது. கொடுங்கோல் என்பது சிவப்பை அல்லது தீயைக் குறித்த சொல்லாகும். பூர்வத்தில் இட்ட தீ என்பது முன் இரவில் உணரப்பட்ட மீன் எனப்படும். பூர் + இட்ட +தீ =பூரட்டாதி யானது.

26. முரசு – உத்திரட்டாதி – Algenib[65]:

மீனக் குறியில் காணப்படும் முரசு மீன், உத்திரபத்திர என அறியப்படும். உத்திரம் = மேல் அல்லது பின் என்ற பொருளில், பின்னிரவு மீன் எனப்படும். பூரட்டாதி, முன் இரவு மீனாகச் சொல்லப்படும். இம்மீன் தோன்றும் வேளையில் முரசறைந்து இதனைத் தமிழர்கள் அறிவித்தனர். இந்த முரசு அறிவிப்புடன், அன்றைய பணிகள் அனைத்தும் முடிவுற்றன என்பது இதன் கருத்தாகும். மீனத்தின் உடுவான முரசு, அல்- கெணிப் (Al-genib) எனப்பட்டது. இரவைக் கணிக்கும் மீன் என்பது இதன் பொருளாகும். பிற்கொழுங்கோல், அறிவனாள், மன்னன், முரசு எனவிரியும்.[66]

27. தோணி –ரேவதி – Alrescha[67]:

மீனக்குறியில் காணப்படும் இந்த மீன், நீருடன் தொடர் புடையது. இம்மீனைப் பொறுத்தவரை, ஒவ்வொரு மொழியி லும் ஒவ்வொரு வகையான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள் ளன. இவேத் என்ற சொல்லுக்கு, தோணி என்பது பொரு ளன்று. (Revat: Wealthy, rich, Prosperous, splendid, beautiful - sans, Dict.888) தோணி மீனை, கிரேக்கம் Al -Rescha என்று கூறுகிறது. இதற்கு முடிச்சு (Knot) என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

கடைநாள், கலம்,தோணி, தொழு, நாவாய், பஃறி பெரு நாள் என்றவாறும் சொல்லப்படும்.[68]

தொகுப்புரை:

மேற்கண்ட இருபத்தேழு மீன் கூட்டங்களின் பெயர்கள் அனைத்தும் தமிழ்மொழியிலேயே சொல்லப்பட்டுள்ளன. சமற் கிருதத்தில் சொல்லப்பட்டுள்ள பெயர்களில் பெரும்பாலான வை தமிழ்த்திரிபுச் சொற்களாகவே உள்ளன. தாலமி அளித்த கிரேக்கப் பெயர்கள் பதின்மூன்று மட்டுமே அறியப்படுகின் றது. மற்றவை பிற்காலத்தில் வைக்கப்பட்டவைகளாகும். கிரேக்கச் சொற்களில் பல, தமிழ்மூலத்தையே தழுவியுள்ளன. இந்நிலையில், திரிபுச் சொற்களைக் கொண்ட ஆரிய வானி யலும், பதின்மூன்று பெயர்களை மட்டுமே குறிப்பிடும் கிரேக்க வானியலுமே உலக வானியலுக்கு முன்னோடிகள் எனக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது மட்டுமின்றி, தொல்தமிழர் கண்டு பிடித்து அறிவித்த, தமிழர் வானியலை மறைக்கும் முயற்சி யுமாகும்.

பரணி, புணர்பூசம்,மூலம் போன்ற தமிழ்ச் சொற்களை அப்படியே சமற்கிருதத்திலும் கூறியுள்ளனர். ஒருவேளை இச்சொற்களுக்கு ஏற்ற பொருளுடைய சொற்கள் சமற்கிருத மொழியில் இல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது இம்மூன்று சொற்களுக்குமான பொருள் விளங்காமல் இருந்திருக்கலாம்.

கார்த்தீ – கார்த்திகா
உருளை – உரோகிணி
மரை– மிருகம்
ஆதிரை – ஆருத்ரா
பூசம் –பூச
மாகம் – மகம்
பூரம் –பூர்
உத்திரம் –உத்ர
சிற்றரை – சித்திரா
சேய்த்தீ – சோதி
சேட்டை – கேட்டை
திருவோணம் – சிறிவோணா
செக்கு – சேக்

என்றவாறு திரிபுபட்ட சொற்களை நோக்குக. இவையின்றி பல்வேறு கலைச்சொற்களும் தமிழினின்றே சமற்கிருதத்தில் திரிந்துள்ள விளக்கங்களை ஏராளமாகக் கூறலாம்.

விண்மீன்களைக் கண்டறிந்து கூறியவர்கள் ஆரியர்களே என்ற கருத்து மேற்கண்ட சொற்பெயர்கள் யாவும் தமிழில் உள்ளதையும், சமற்கிருதத்தில் சிலவற்றிற்கான வேர்ச் சொற்கள் கூட இல்லாததையும் கொண்டு, அச் செய்திகள் தவறானவை மட்டுமல்ல, வரலாற்றைத் திசை திருப்பும் மோசடி என்பதையும் உணர்தல்வேண்டும். தமிழ்ச் சொற்களையே எகிப்தியரும், போனீசியரும், பாபிலோனியரும் பயன்படுத்தி வந்தனர் என்பதை, அம்மொழிகளிலிருந்து சொற்களைக் கடன்பெற்ற கிரேக்க மொழியே அதனை மெய்ப்பிக்கின்றது. பாபிலோனியரின் வானியல் தொடர்பான கலைச்சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்களே என அறியாதிருந்த காலத்தில், அவை உண்மைகள் போல் தெரிந்திருக்கலாம். ஆனால் தற்கால மொழி ஆய்வுகள் உண்மை நிலையைப் படம்பிடித்தாற் போல் காட்டுகின்ற நிலையில், தமிழரின் வானியலே தொன்மையானது என்பதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதுதெளிவு. கிரேக்கர்கள் ஒரு சில உண்மைகளையும் ஒப்புக் கொண்டுள்ளனர். துருவ மீனைக் கண்டுபிடித்தவர்கள் போனீசியர்களே என்று பதிவு செய்துள்ளனர். அதனாலேயே அம்மீனுக்கு போனீசுமீன் என்று அவர்களே பெயரைச் சூட்டினர். 1022 மீன்களைக் கண்டுபிடித்ததாகக் கூறும் கிரேக்கர்களுக்கு துருவமீன் கண்ணில்படாமல் போனது எப்படி என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, ஆரியர் கிரேக்கர் உள்ளிட்ட உலகின் வானியல் தொடர்பான செய்திகள் அனைத்தும் தமிழ் மூலத்தினின்றும் எடுக்கப்பட்டவைகளே என்பதை, காலம் கடந்தேனும் இவ்வுலகம் உணரும் நாள் தொலைவில் இல்லை என்க.

கி.மு. 1000 ஆண்டுகளில், ஐரோப்பியர்களிடையே கோள்கள், விண்மீன்கள், கதிரவன், நிலவு போன்றவற்றைப் பற்றி தெளிவான அறிவு இருந்திருக்கவில்லை. ஐரோப்பியர்களுக்குத் தெளிவாகத் தெரிந்த விண்மீன், துருவ நட்சத்திம் என்று சமற்கிருதத்தில் சொல்லப்படும் வடமீனேயாகும். இம்மீன் வடகோளரையில் (northern hemisphere) இருந்ததால், கண்ணுக்குப் பளிச்செனவும் புலனாயிற்று. மற்ற விண்மீன்கள் எல்லாம் நகர்

வதையும் இடம் மாறுவதையும் போல் இல்லாமல், ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே நிலையாக இருந்த வடமீனை, இந்த உலகத்தின் பற்றுக்கோடு என நினைத்தனர். இந்த வடமீனிலேயே இந்த உலகம் கட்டப்பட்டு தொங்கிக் கொண்டிருப்பதாகவும் ஒரு கருத்து நிலவியது. இம்மீனே இவ்வுலகிற்கு செல்வத்தையும் வளமையையும் தருவதாகவும் ஒரு நம்பிக்கையிருந்தது. இதனைப் பழங்காலத்து நம்பிக்கை என்றனர்.

ஆயான் (Aeon) என்ற கிரேக்கச் சொல்லுக்கு பழமை அல்லது தொன்மை என்பதே பொருளாகும். இது ஆ + யா என்ற தமிழ்ச் சொற்களால் உருவான சொல்லே. ஆ என்பதற்குத் தொடக்கம் என்றும், யா என்பதற்கு முதுமை என்றும் தமிழில் பொருளுண்டு. ஆயா என்ற சொல் அவ்வாறான பொருளில் அறியப்பட்டதே. கிரேக்கர்கள் இந்த வடமீன் புள்ளியை, உம்பலோசு (Umphalos) என்றனர். ஆங்கிலத்தில் மேலும் இது திரிந்தது. இதன் பொருள் யாதெனில், பரந்து விரிந்த ஓரிடத்தில் அல்லது வானத்தில் இவ்வுலகைக் காக்கும் பெண்கடவுள் இருப்பதாகக் கருதப்பட்டது. Umphilos என்ற சொல்லுக்கு உயர்வு (to rise, become high, tall) என்பதே பொருளாகும். இது உம்பர் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும். உம்பர் என்பதற்கு உயர்வு என்பதே பொருளாகும்.

பொருள் ஈட்டச் சென்ற தலைவன், உம்பர் மேலுள்ள (உயர்ந்த மலையில்) தன் தலைவியை நினைத்துக் கொண்டதாக நற்றிணை கூறுகிறது.

கல்பிறங்கு உயர்மலை உம்பர் அஃது எனவே[69] – 62:10

கான்யாற்றின் உம்பர்கரையில் மான் துள்ளிக் குதிப்பதை,

இன்முகப் பெருங்கலை நன்மேயல் ஆகும்
பன்மலர்க் கான்யாற்று உம்பர்.... [70] –119 : 5–6.

எனவும் நற்றிணை கூறுகிறது.

வட மீனில் கட்டப்பட்டிருக்கும் கயிறு, இவ்வுலகைத் தன்னுடன் பிணைத்துக் கொண்டிருப்பதாக கிரேக்கர்கள் கருதினர். இக்கயிற்றின் வழியாகவே அனைத்து வளங்களும் வானிலிருந்து உலகிற்கு இறங்கியதாகவும் நம்பினர். மற்ற நாகரிகங்கள், அதனை தேவமரம் என்றவாறு கூறின. ஆரியம் கற்பகத் தரு என்று கூறுகிறது. யூத சமயமும், கிறித்துவமும் அதனை இடன் தோட்டத்துக் கனி மரம் என்று கூறுகின்றன.

இவ்வுலகிற்கு ஆற்றலையும், அறிவையும், ஆளுமையையும் அந்த Umphalos தருவதாகவே நம்பினர்.

இந்த கயிறு உலகத்தில் எவ்விடத்தில் கட்டப்பட்டிருந்த தோ (கடைக்காரர் நூலில் கட்டி தொங்கவிட்டிருக்கும் ஆப்பிள் பழத்தைக் கற்பனை செய்து கொள்க), அவ்விடத்தில்தான் இவ் வுலகை ஆளும் தலைவனோ மன்னனோ வீற்றிருந்ததாகவும் நம்பப்பட்டது. மன்னன் மூலமாகவே தெய்வீகக் கொடை மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் கருதினர். செல்டியர்கள் (Celts) இவ்வுலகம் கயிற்றால் இணைக்கப்பட்ட புள்ளியை திங் (Thing or Thung) என்று குறிப்பிடுகின்றனர்.[71] இந்தப் புள்ளி பிற் காலத்தில் பலரால் பல்வேறு இடங்களாகக் குறிக்கப்பட்டது. இங்கிலாந்தில்அறியப்படும், லிவர்பூலுக்கு அருகேயுள்ள திங் வால் (Thingwall near Liverpool), லீட்சுக்கு அருகிலுள்ள திங்லி (Thingley near Leeds), பெட்போர்ட்சயருக்கு அருகிலுள்ள திசுரித் (Thingrith in Bedford shire) என்ற இடங்கள் இவ்வாறு குறிக்கப்பட்டவைகளாகும். மன்னன், இந்தப் புள்ளியில் (Thing) இருந்து ஆண்டதால், ஆட்சிமுறையே Al - Thing என்ற சொல் லால் அழைக்கப்பட்டது. இதனை அரசாங்கத்தின் கரும்புள்ளி என்றும் கருதினர்.[72]

Thing என்ற புள்ளியைக் குறித்த சொல், தொங்கு என்ற தமிழ்ச் சொல்லே. தொங்கு -Thing எனத் திரிபுபட்டுள்ளது. இந்த Thing வழியிலான umphalos கொள்கையினை பிளேட் டோ, தனது சட்ட நூல் ஐந்தில் (Law Book -V) குறிப்பிடுகின்றார். இந்த உம்பலோசு கயிற்றின் வழியே Thing என்ற இடத்திற்கு வானத்தின் வளமை சேர்க்கப்பட்டதை, பொற்காலம் (Golden age) என்றனர்.[73]

உலகின் நடுப்புள்ளி தங்கள் தங்கள் நாட்டில்தான் உள்ளது என்பதைப் பலர் இப்போதும் நம்புகின்றனர். 1988 ஆம்ஆண்டில் ஆசுதிரேலிய அரச, இவ்வுலகின் மையப்புள்ளி, அந்நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு பாலைவனத்தில் உள்ளதாகக் கருதி (Latitude of 25^{0} 36' 36.4') அங்கு ஒரு தூணை நாட்டினர். அமெரிக்கர்களும், கான்சாசு பகுதியில் (Latitude of 39^{0} 51') ஓரிடத்தைக் குறித்தனர். இங்கிலாந்தில் பல இடங்கள் சொல்லப்பட்டன. அவ்விடத்தில் ஓக் மரம் ஒன்றையும் நட்டனர். (Mildland Oak at Littiongton). இரண்டாம் உலகப் போரில் அம்மரம் அழிந்து போகவே,மீண்டும் அவ்விடத்தில் ஓர் ஓக் மரம் நடப்பட்டது.[74]

தமிழர்களுக்கு, சிதம்பரம் என்ற ஊரே உலகின் மையப் புள்ளி என்ற கருத்து பழங்காலம் தொட்டு இருந்துவருகின் றது. ஓம்பலோசு (Omphalos) என்ற சொல், அம்பலம் என்ற சொல்லின் திரிபாகவும் இருக்கலாம். சிதம்பரத்துக்கு அம்ப லம் என்று சொல்லும் பெயரும் உண்டு. வடக்கிலுள்ளவர்கள், கைலாயத்தையே நடுப்புள்ளியாகக் கருதுகின்றனர். மேற் கண்ட நம்பிக்கைகளைக் காணும்போது, மேலைநாடுகள் நடுப் புள்ளி தொடர்பாகப் பயன்படுத்தியுள்ள சொற்கள், தமிழி னின்றே திரிபு பட்டுள்ளமையால், தமிழரிடம் தொன்மைக் காலத்திலிருந்தே இந்த நம்பிக்கை இருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. உலகிலுள்ள அனைத்து இடங்களை யுமே மையப்புள்ளிகளாகக் கருதலாம். உலக உருண்டையில் எப்புள்ளியும் மையப் புள்ளியே என்க.

இவ்வுலகிற்கு நான்கு வழிகள் இருப்பதாக மேலைநாட் டவர் கருதினர்.[75] இந்த நான்கு வழிகளின் ஊடேதான் மறு உலகிற்குச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையும் அவர்களிடத் தில் காணப்பட்டது. இந்நான்கு வழிகளும், கதிரவனின் சுற்றுப் பாதையில் தோன்றும் நான்கு புள்ளிகளே எனலாம். கதிரவன் தெற்கே மகரக் கோட்டைத் தொடுவதும், மீண்டும் வடக்கே நகர்ந்து கடகக் கோட்டையும், பின்னர் கடகக் கோட்டை விட்டு நடுக்கோட்டைத் தொடும்நாள் நான்காக (திசம்பர் 21, மார்ச் 21, சூன் 21, செப்தம்பர் 21) அறியப்படுவதை நோக்குக. (These four gateways were the points of the solar year/ the two equinoxes and the two solstices).

Solstice: Each of the two times in the year respectively at mid -summar and mid -winter/when the sun reaches its highest or lowest point in the sky at noon.

Equinox: The date twice each year about Sept.21 and March21 at which the sun crosses the celestial equator/ when day and night are of equal length.

(பகல் பொழுதின் நீட்டலே இரவு என்பதால், Noct என்ற கிரேக்கச் சொல், நீட்சி என்றபொருளைத் தருவதே. Noct - Night என ஆங்கிலத்தில் திரிந்தது.)

Qquinoct = இரவும் பகலும் சமகாலம் என்பதைக் குறிக்கும் சொல்.
Qquinox Points:Sagittarius and Genini. (சிலை - ஆடவை).
Selstice Points : Virgo and Piscis. (கன்னி - மீனம்).

தமிழர்களும் இவ்வுலகின் வாயில்களாக நான்கு திசை களைக் குறித்தனர். பின்னர் அதனை எண்திசைகளாகவும் கூறினர். ஒவ்வொரு திசைக்கும் ஒரு தெய்வம் காவலுக்காக உருவாக்கப்பட்டது. இத்தெய்வங்களின் அனுமதியுடன்தான் உள்ளே வருவதும், வெளியே செல்வதும் அனுமதிக்கப்பட் டன. சமற்கிருதம் இவர்களைத் துவார பாலகர்கள் என்று கூறுகிறது.

இந்த நான்கு திசை வாயில்களையும் கடவுள் தனது ஞாயிற்றுத் தேரால் சுற்றி வலம் வந்து, இவ்வுலகைக் காப்பதாக எகிப்தியச் சமயம் கூறுகிறது. இவனே ஓரசு (Horus) என்ற கடவுளாவான். தமிழில் மறிமான் அல்லது ஓரையன் என்ற மீன் கூட்டமே, தமிழ்க் கணியர்களால் முதன்முதலில் அறியப்பட்ட தென்பர். ஓரை என்ற தமிழ்ச்சொல்லே, ஓரியன் என்றும், ஓரசு என்றும் திரிந்தன. இம்மீன் கூட்டத்தின் ஒளிமிகுந்த மீனே மூதிரை அல்லது திருவாதிரை எனப்படுவதாகும். இந்த மீனை சிவனோடு தொடர்புபடுத்தித் தமிழர்கள் வழிபட்டது போல வே, எகிப்தியர்கள் ஓரசு எனக் கூறிவழிபட்டனர். திருமூலரும் மூதிரையைப் பற்றி கூறி, சிவனை மூவர்க்கும் முதல்வன் என்கி றார். இந்த ஓரையன் கூட்டத்தைச் சுற்றியுள்ள மீன் கூட்டங் களைச் சிவனோடு தொடர்புபடுத்தி சிவனுடைய முக்கண், சிவனுடைய கச்சை சிவனடைய சூலம், சிவனுடைய ஊர்தி யாகிய காளை, சிவனின் விரிந்த சடை என்றவாறு உருவகம் செய்துள்ளனர். ஓரசு என்பான், சிவனே எனக் கருதுவதில் தவறில்லை.

இந்த ஓரசு கடவுளையே கிரேக்கர்கள் சேயசு (Zeus) எனக் கூறினர். ஒளிம்பசு மலையில் வீற்றிருந்தவன் சேயசு. கிரேக்கர் களின் முழுமுதற் கடவுளும் இவனே. கன்னி (Virgo) என்ற பெண் கடவுள், பொற்கால முடிவில், மாந்தர்கள்மேல் வெறுப்புற்று மீண்டும் வானுலகத்துக்கு சென்றுவிட்டாத ஒரு கிரேக்கக் கதை யுமுண்டு.[76] வானத்து விண்மீன்கள் நகர்ச்சியால் இடம் மாறு வதை, அவை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்றன என்று நம்பினர். இந்த வானியல் உருவகமே உலகச் சமயங் களில் கூறப்பட்டுள்ள வெள்ளக்கதைகள் என்பர்.

குமரிக்கண்டம் ஒரு பெரு வெள்ளத்தால் அழிந்துபோனது பற்றி, தமிழ் இலக்கியங்கள் கூறினாலும், சிவனோ வேறெந்த கடவுளோ, யாரையும் அவ்வெள்ளத்திலிருந்து காத்ததாகத்

தமிழகத்தில் கதையொன்றுமில்லை. அவ்வாறு ஏதாவது கதைகள் இருந்து, அவை மறைந்து போயிருக்கலாம். ஆனால் உலக நாகரிகங்களில் சொல்லப்படும் கதைகளும், வெள்ளப் பெருக்கை தோற்றுவித்த கடவுளர்களும், அவ்வெள்ளங்களிலிருந்து காக்கப்பட்ட மாந்தர்களும், தமிழ்ச் சூழல்களிலேயே சொல்லப்பட்டுள்ளனர் என்பதால், அவ்வாறான கதைகள் தமிழகத்திலும் அறியப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம். சேயசு என்ற கடவுள், தெக்காழியன் என்பவனைக் காத்ததாக, கிரேக்கக் கதைகூறுகிறது. சேயசு என்பான், சேயன் என்ற சொல்லின் திரிபே எனலாம். தெக்காழியன் (Decaulian) என்ற பெயர், தெற்கு ஆழியன் என்ற தமிழ்ப் பெயராகவே உள்ளது. பாபிலோனியக் கதையின் கடவுளும் யா என்ற தமிழ்ப் பெயரைக் கொண்ட கடவுளே. ஊற்று நாவிப் பிசுத்தன் என்றவாறு அப்பெயரில் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்ற Utnapishtin என்பவனே, யா கடவுளால் வெள்ளத்தினின்றும் காக்கப்பட்டவனாவான். நாவாய் அல்லது நாவி என்ற சொல்லின் திரிபான நோவா என்பனை வெள்ளத்தினின்றும் எல் என்ற கடவுள் காத்ததாக விவிலியம் கூறுகிறது.

மேற்கண்ட செய்திகள் யாவும் கதிரவன் தன் பயணக் காலத்தில் தொடும் புள்ளிகளைக் கருத்தில் கொண்டு உருவகமாகச் சொல்லப்பட்டன எனலாம். எனவே கிரேக்கம் உள்ளிட்ட மேலைநாட்டு வானியல் தொடர்பான செய்திகள் அனைத்தும் தமிழ்ச் சூழலைத் தழுவியே காணப்படுவதால், வானியல் தொடர்பான செய்திகளை, காலம் காலமாக மேலைநாட்டவர்களால் கூறப்பட்டுள்ள பல செய்திகள், வானியல் உருவகங்களே எனக் கருதலாம்.

தமிழர்கள் உருவாக்கிக் கொண்ட கடவுளர்களும், சமயமும் வானியலை அடிப்படையாகக் கொண்டதே. தமிழ்ச் சமயத்தில் அறியப்படும் கடவுளர்கள், கடவுளுக்கு அடுத்த நிலையில் உள்ள தேவர்கள் (இந்திரன், வாரணன் போன்றோர்), சமயத்தை உருவாக்கிய முனிவர்கள், அறிஞர்கள் ஆகிய அனைவரும் வானத்திலுள்ள ஏதோவொரு விண்மீன் கூட்டத்தோடு தொடர்புபடுத்தப் பட்டிருப்பவர்களே. இருக்கு வேதமும் அவ்வாறான வானியல் தொடர்பான செய்திகளையே விளக்குகின்றது. (மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் வானியலும் தமிழரும் என்ற நூலைக் காண்க.)

ஆரியம் கிரேக்கம் உள்ளிட்ட இந்திய ஐரோப்பிய மொழிகள் அனைத்தும் தமிழ்மொழியின் கிளைமொழிகளே என்பதை பல்வேறு ஆய்வுகள் வழியே மெய்ப்பிக்க இயலும் என்றாலும், வானியல் தொடர்பான ஆய்வுகள், இந்திய ஐரோப்பிய மொழிகள், தமிழின் கிளை மொழிகளே என்பதை அறிவியல் சார்ந்தே மெய்ப்பிக்கும் சான்றுகளைக் கொண்டுள்ளது என லாம். கடந்த சில நூற்றாண்டுகளுக்கு முன்பு சமற்கிருத மொழி யை ஆய்வு செய்யவந்த மேலைநாட்டு ஆய்வாளர்களுக்கு தமிழின் தொன்மை பற்றிய செய்திகள் அறிவிக்கப்படவில்லை யென்பதைப் பலரும் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் அவர் தவறான செய்திகளை அறிவித்தனர் என்றும் கூறினர். தமிழின் பெருமைகளையும் தொன்மையையும், தமிழர் நாகரிக வரலாற் றையும் உலக அரங்கில் உயர்த்திப் பிடிக்க உதவிய கால்டுவெல் கங்காணியாரையும், வணக்கத்துக்குரிய ஈராசு பாதிரியார் அவர்களையும் தமிழுலகம் என்றும் மறவாது. இவ்விரு அறிஞர் பெருமக்களுக்கும் தமிழகம் என்றும் நன்றிக் கடன்பட்டிருக் கும். குறிப்பாக, ஈராசு பாதிரியார் அவர்களுக்கு, தமிழகத்தில் நினைவுச் சின்னம் ஒன்றை உடனடியாக நிறுவிட, தமிழர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

10. தமிழும் ஆரியமும்

கடந்த காலங்களில் சமற்கிருத மொழிபற்றி ஆய்வு செய்தவர்கள், ஒரு தவறான சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு, அச்சிந்தனை வழியாகவே தமிழைப் பார்த்தனர். தமிழ் சமற்கிருதத்தினின்றும் பிறந்தது, காலத்தால் பிற்பட்டது, சமற்கிருதச் சொற்களின்றி தமிழால் தனித்தியங்க முடியாது என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருந்த கருத்தின் அடிப்படையில், பலவாறான முடிவுகளை எடுத்தனர். முதற்கோணல் முற்றிலும் கோணல் என்றவாறு, தமிழ் - சமற்கிருதம் தொடர்பாகப் பிறந்த ஆய்வுகள் அனைத்தும், ஒருவன் இடையிலே புகுந்து கதை கேட்ட நிகழ்வைப் போன்று அமைந்திருந்தன.

தமிழர், தமது மொழியைப் பற்றியும், தம் இனத்தின் வரலாறு பற்றியும் அறிய முயலவில்லையென்பதோடு, எல்லா நிகழ்வுகளையும் சமற்கிருதக் கண்ணோட்டத்திலேயே நோக்கினர். தமிழ்மொழியின் மூப்புத்தன்மை, தமிழரின் வரலாறு பற்றி செய்திகள் தமிழ் இலக்கியங்களில் கிடைப்பதைவிட, விரிவாக விளக்கமாக மேற்கித்திய இலக்கியங்களில் கிடைக்கின்றன. தமிழில் ஏன் அவை எழுதப்படவில்லை என்று மறுபடியும் மறுபடியும் எண்ணிக் கொண்டிருப்பதை விடுத்து மேலை இலக்கியங்களை ஆராய முற்படுவது, இன்றைய காலத்தின் தேவையாகும். தமிழ்ச் சொற்களைப் பற்றிய கடந்த காலத்திய கண்ணோட்டத்தினின்றும் தற்கால ஆய்வுகள் மாறுபட்டுள்ளன. கடந்த நூற்றாண்டைக் காட்டிலும் தற்போது புதிய தரவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனவே அடுத்த இலக்கை நோக்கிச் செல்ல முயல்வதே சிறப்பாக அமையும்.

சமற்கிருதம் ஆரியர்களின் மொழி என்ற ஆணித்தரமான கருத்தை கடந்த காலத்தவர், மக்களிடையே பதிவு செய்து விட்டனர். இதுவே அடிப்படையில் அறியப்பட்ட தவறான முடிவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த தமிழறிஞர்களுக்கு, தமிழே மூப்புடைய மொழி என்ற உணர்

விருந்தது. ஆனால் அதனை மொழியியல் கண்ணோட்டத்தில் நிறுவுவதற்கான வழிகள் தெரியாமல் திகைத்தனர். சமற்கிருத மொழி பிற்காலத்து மொழியே என அவர்கள் உறுதியாகக் கருதினாலும் அதனை நிறுவுவதற்கானச் சான்றுகள் இன்றித் தவித்தனர். இந்தத் தடுமாற்றங்களை தமக்குச் சார்பாகப் பயன் படுத்திக் கொண்ட தமிழ்ப் பகைவர்கள்,எப்படி ஆய்ந்தாலும், முதன்மொழி சமற்கிருதமே என்ற நிலைதான் இறுதியில் எடுக்க வேண்டியிருக்கும் என்றவாறு பேசினர், எழுதினர். சமற்கிருதப் பண்டிதர்கள் தமிழைக் கொச்சைப்படுத்தி பேசிய போதெல்லாம், அதற்கு மறுப்புக் கூற இயலாமல் தமிழர்கள் தவித்தனர். பரிதிமாற்கலைஞர், சமற்கிருதத்தினும் மூப்புடைய மொழி தமிழ் என்றும், தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்றும் ஆங்கில அரசுக்கு அறைகூவல் விடுத்தார். முப்பது அகவையிலேயே தம் முடிவை எட்டிவிட்டதால், கலைஞரின் தமிழ்த்தொண்டு தமிழர்களுக்குக் கிட்டாமலேயே போய்விட்டது.

மனோன்மணீயம் சுந்தரனார் தன்மானமுள்ள தமிழார யிருந்தார். ஆரியத்தை எதிர்த்தார். ஆனால் அவருக்குத் துணை யாக எவரும் வரவில்லை. அளவுகடந்த சினத்தை ஆரியத்தின் பால் கொட்டித் தீர்த்தார். செத்தமொழியை, சீரிளமைத் தமி ழோடு இணையாக்குவதோ என வெகுண்டெழுந்தார். அவ்வ ளவுதான் அவரால் செய்யமுடிந்தது. அவருடைய காலத்துக் குப் பிறகு மறைமலை அடிகள், தமிழைக் கையிலெடுத்தார். சமற்கிருதத்தின் துணையின்றித் தமிழால் தனித்தியங்க முடியும் என்பதைத் தமது எழுத்துகள் வாயிலாக மெய்ப்பித்தார். தமி ழுக்குப் புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் மறைமலை அடிகளே என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தமிழ் இனம், கடைக்கழகக் காலத்துக்குப்பிறகு ஒரு சில குறுகிய அளவுகளை நீக்கி, அடிமைப்பட்டுப் போனதை வரலாறு கூறுகிறது. ஒரு காலத்தில் உலகெங்கும் பரவிச் சென்ற தமிழ் இனம், ஈராயிரம் ஆண்டுகளில், தனது வீர உணர்வுகளை யும், சிந்திக்கும் திறனையும் இழந்து போனது. ஆட்சி அதிகாரம், சமயம், சாதிப்பிரிவுகள் என தமிழரை எழமுடியாத அளவுக் குக் கீழே தள்ளிவிட்டனர். கடந்தநூற்றாண்டில் ஊர்ப் பணி யாளன் தலையாரிக்குக் கூட தமிழர்கள் பணிந்து போயினர். ஆட்சி அதிகாரங்கள் ஒரு பக்கம், பிராமணச் சமய அச்சுறுத்

தல்கள் மறுபக்கம் என, தமிழினத்தை அச்சக் குழிகளிலேயே அழுத்திப் போட்டிருந்தனர்.

அஞ்சி அஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருள் உலகத்தில் ஒன்றுமேயில்லை என்று பாரதி மனம் நொந்து பாடினார். இந்த இலக்கணத்துக்குத் தமிழ் அறிஞர்களும் விதிவிலக்கானவர் அல்லர். தமிழ் அறிஞர்களும், தமிழ் படித்த வர்களும், பிராமணக் கண்ணோட்டத்திலேயே தமிழ் மொழி யைக் கற்பித்தனர். ஒரு கட்டத்தில் சமற்கிருதத்தின் பெருமையை, தமிழறிஞர்களே போற்றிப் புகழ்ந்தனர். பரிமேழகரும், நச்சி னார்க்கினியரும் தங்கள் உரைகள் வழியே விதைத்த நச்சுவிதை களின் கனிகளையே, தமிழ்மொழியைப் படித்தவர்கள் சுவைத் தனர். ஒன்றைத் தமிழர்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஆரியச் சார்புக் கொள்கைகளை வலியுறுத்தி எந்த இலக்கியமும் தமிழில் படைக்கப்படவில்லை. தமிழர்கள் படைத்த நூல்களுக்கு, ஆரியக் கண்ணோட்டத்தில் உரைகள் எழுதப்பட்டன. உரை களைப் படித்தே பழகிவிட்ட தமிழ்ப் புலவர்கள், மூலத்தில் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது எனச் சிந்திப்பது இல்லை. இன்று பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தவறான சிந்தனை களைத் தமிழ் இலக்கியங்கள் வழியே விதைத்துக் கொண் டிருக்கின்றனர்.

தமிழுக்கு முதன்முதலில் அறிமுகமாகும் நூல் தொல்காப் பியமாகும். காவியம், காப்பியம் ஆகிய தனித்தமிழ்ச் சொற் களை, சமற்கிருதச் சொற்கள் என்று எப்போதோ ஒருவர் சொல்லியதை நம்பிக் கொண்டு,தொல்காப்பியரும் ஆரியரே என்று சில தமிழறிஞர்களே கூறிவந்துள்ளனர். தொல்காப்பி யத்தில் ஏராளமான சமற்கிருதச் சொற்கள் உள்ளனவென்றும், தொல்காப்பியர் சமற்கிருதத்திலேயே சிந்தித்து, அதனைத் தமிழ்ப் படுத்தி எழுதினார் என்றும் கூறினர். தொல்காப்பியத் தில் காணப்படும் பல்வேறு தமிழ்ச்சொற்களை, அவை சமற் கிருதச் சொற்களே என்றும் பட்டியலிட்டனர். இவ்வாறு தமிழில் அறியப்பட்ட ஒப்பற்ற நூல், சமற்கிருத நூலாகக் காட்டப்பட்டது. அதனால்தான் தொல்காப்பியத்தைத் தமிழ்ப் பகைவர்கள் அழிக்காமல் விட்டுவிட்டனர் போலும் என்று பாவாணர் கூறுகிறார்.

தொல்காப்பியத்தில் ஆரியக் கொள்கைகளைத் தெளி வாக வலியுறுத்தும் செய்திகள் இல்லையென்பதை அறிந்த

சிலர், இடையில் சில வரிகளை இணைத்துள்ளனர் என்று பேராசிரியர் இலக்குவனார் கூறுகிறார். பொருளதிகாரத்தில் 95ஆவது வரி,480,481,482, 483, 484 ஆகியவைகளைச் சுட்டிக் காட்டும் இலக்குவனார், இந்த இடைச் செறுகல்கள் பற்றி விரிவாகத் தமது தொல்காப்பியம் என்ற ஆங்கில நூலில் விளக்குகிறார். ஏறக்குறைய 287 இடைச் செறுகல்கள் தொல் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறுகிறார். இளம்பூரணர் 1595 வரிகள் தாம் தொல்காப்பியத்தில் உள்ளன எனக் கூறும் வேளையில் 1611 வரிகள் உள்ளனவென்று நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் கூறுகின்றனர்.[1] இவ்வாறான தமிழ் உத்திகளை மேற்கொண்டு, தொல்காப்பியம் சமற்கிருதம் வழிவந்த நூலே என்று நிறுவமுயன்றுள்ளனர். இதனை உறுதிப்படுத்தும் வகை யிலேயே,தொல்காப்பியம் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே எழுதப்பட்டதாகக் கூறினர்.

இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் பாவாணர் முடிவு கட்டினார். தமிழில் அறியப்படும் ஒரு சொல், தமிழ்ச் சொல்லா அல்லது சமற்கிருதச் சொல்லா எனக் கண்டறிய வேர்ச்சொல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறினார். ஒரு சொல்லின் வேர் தமிழில் இருந்தால், அது எவ்வாறு ஒலிக்கப் படினும், அது தமிழ்ச் சொல்லே என்று விளக்கிக் காட்டினார். தமிழை ஆய்வு செய்தவர்களுக்கு, வரலாற்றுணர்வு முற்றிலு மாக இல்லாது போனதால், பல தவறான முடிவுகளை மேற் கொண்டனர். ஆரியரின் இந்திய வருகை, வேதங்களின் தோற் றம், சமற்கிருதமொழியின் அறிமுகம், அம்மொழி எக்காலத் தில் வளர்ந்தது என்ற வரலாற்றுச் செய்திகளை எவரும் கணக் கில் கொள்ளவில்லை. தமிழர்- திரமிளர் - திராவிடர் எனத் திரிந்தது என்று யாரோ ஒரு அரைகுறைப் புலவன் சொன் னதையே இன்று வரையிலும் பலரும் மேற்கோளாகக் காட்டு கின்றனர். ஒரு சொல், திரிபுபடும்போது, சில வழக்காறுகளின் அடிப்படையிலேயே திரிபுபடும் என்பதை தற்கால மொழி ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். தமிழர் திராவிடர் ஆனதற்கு எந்த கருதுகோளும் இடந்தரவில்லை.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, பேராசிரியர் இலக்குவ னாரும், வெள்ளை வாரணனாரும் தொல்காப்பியத்தைப் பல் வேறு கோணங்களில் ஆய்வு செய்து, அந்நூலுக்குப் புதிய கண் ணோட்டத்தைக் கொடுத்தனர். பாவாணரும் தொல்காப்பி

யத்தைக் கற்றுத் தெளிந்து பல புதிய செய்திகளைக் கொடுத்துள்ளார். தற்கால ஆய்வுகள் மேலும் பல புதிய தகவல்களை அளிக்கின்றன.

சமற்கிருதத்துக்கும் ஆரியர்களுக்கும் தொடக்கத்தில் எந்தத் தொடர்பும் இருந்திருக்கவில்லை யென்பதை தற்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. ஆரியம், சமற்கிருதம், வடமொழி ஆரிய சொற்கள் அனைத்தும் சமற்கிருதத்தையே குறிப்பதாகப் பலரும் தவறாகக் கருதினர். இவை, ஒரு மொழியல்ல என்பதும், மூன்றும் வெவ்வேறு மொழிகளையுணர்த்தும் பெயர்கள் என்பதும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. ஆரியம் என்பதும், ஆரியர்களின் தாய்மொழியாகும். இம்மொழி, வடக்கு மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்த மக்கள் பேசிய மொழிகளோடு தொடர்புடையது என மேற்கித்திய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஈத்தியர் (Hitties) எனப்படும் (இந்திய - ஐரோப்பிய மக்கள் மரபு) மக்கள் பேசியமொழிக்கும் ஆரியத்துக்கும் உள்ள தொடர்புகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.[2] இவ்விருமொழிகளிலும் கிரேக்க மொழிக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. எனவே,ஆரியம் என்பது வடக்கு மெசபத்தோமிய மொழியினின்றும் திரிபுபட்ட மொழியாகும்.

சமற்கிருத மொழியைத் தமிழர்கள் உருவாக்கியது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. கிரேக்கம், ஈத்தியம், ஆரியம் ஆகிய மொழிச் சொற்களைக் காட்டிலும், சமற்கிருதத்தில் தமிழ்ச் சொற்களே பெருமளவில் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, ஆரியம் என்பதும் சமற்கிருதம் என்பதும் தனித்தனி மொழிகளாகும். வேங்கடத்துக்கும் வடக்கே பேசப்பட்ட தமிழின் திரிபு மொழிகள் (பிராகிருதம் உள்ளிட்டவை) அனைத்தும் வடமொழி யெனப்பட்டன. இதில் சமற்கிருதமும் அடங்கும் என்றாலும், வடமொழியென்பது சமற்கிருதத்தை மட்டும் குறிக்கும் சொல் அன்று. தொல்காப்பியம் கூறும் வடசொல் என்பது, சமற்கிருதத்தைக் குறிப்பதாகாது. தொல்காப்பியத்திலும், கடைக்கழக இலக்கியங்களிலும், சமற்கிருதம் என்ற சொல் காணப்படவில்லை. கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு உரையெழுதியவர்கள், வடமொழியைச் சமற்கிருதமாகச் சொல்லி வைத்தனர்.

பேராசிரியர் இலக்குவனாரும் அயோன் (Ionion) என்ற கிரேக்கச் சொல்லில் இருந்தே யவனர் என்ற சொல் பிறந்த

தாகக் குறிப்பிட்டுள்ளார்.[3] இதுவும் கூடத் தவறான சிந்தனை யாகும். அயோன் என்பது முதற்சொல்லன்று. யாவன் (Yaayan) என்ற எபிறேய மொழிச் சொல்லே முதற்சொல்லாகும்.[4] யாவன் என்ற சொல்லே, அயோன் என்று கிரேக்கத்தில் திரிந் தது. இதற்கான சான்றுகள் எபிறேய மொழியில் தெளிவாக உள்ளன. சமற்கிருதத்தில் அறியப்படும் பல குழப்பமான சொற்களின் மூலம் தமிழில்தான் உள்ளன என்பதை எபிறேய மொழி தெளிவுபடுத்துகிறது. எபிறேயர் மொழியில் அரிசி, மயில்தோகை ஆகிய தமிழ்ச் சொற்கள் உள்ளன என்பதை கால்டுவெல்லார் கூறியதையே திரும்பத் திரும்பத் தமிழறிஞர் கள் மேற்கோளாகக் காட்டி வருகின்றனர். உண்மையில் எபி றேய மொழி பற்றிய விரிவான ஆய்வை எந்தத் தமிழறிஞரும் மேற்கொள்ளவில்லை. இதுவரையில் ஈராயிரத்துக்கும் மேற் பட்ட எபிறேய மொழிச் சொற்களுக்கான மூலமும் வேரும் தமிழில் உள்ளதை, எபிறேயத்தின் "தாய்மொழி தமிழே" என்ற நூலில் 600க்கு மேற்பட்ட சொற்களைத் தேர்ந்தெடுத்து நூலா சிரியர் விளக்கியுள்ளார். எனவே, பழைய கண்ணோட்டத்தில் தமிழை இனிமேல் எவரும் அணுகக் கூடாது. எபிறேயம் மட்டு மின்றி, வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மொழிகளான பாபி லோனியம் (அக்காடியம்), சுமேரியம், ஈழம், கல்தேயம், கனானி யம், எகிப்தியம் ஆகிய மொழிகள் அனைத்தும் தமிழின் கிளை மொழிகளே என்பதை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

கி.மு.300 - கி.பி. 300 ஆண்டுக் கால அளவை, கடைக் கழகக் காலம் என்பர். இக்கால அளவில் எழுதப்பட்ட நூல் களிலும் சமற்கிருதத்தின் தாக்கங்கள் இருந்தனவென்று கூற இயலாது. கிறித்துப் பிறப்பாண்டுகளில் ஆரியர்கள் தென் இந்தி யாவுக்குள் நுழைந்தனர் என்று கருதலாம். ஆனால் அவர்களது வருகை எவ்வகையான மாற்றங்களையும், தாக்கங்களையும் தமிழகத்தில் ஏற்படுத்திவிடவில்லை. புராணங்களிலும், உப நிடதங்களிலும் காணப்படும் கதைகள், கடைக்கழக இலக்கி யங்களில் காணப்படுவதாகக் கூறி, அக்காலத்திலேயே ஆரியத் தாக்கம் தமிழகத்தில் இருந்தது எனச் சிலர் கூறினர் உண்மை யில், புராணங்களில் சொல்அறியலப்பட்டுள்ள ஆயிரக்கணக் கான தொன்மக் கதைகள், தமிழகத்தில் அறியப்பட்ட.வை களே. புராணங்கள் கி.பி. 4 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகே எழுதப்பட்டனவென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[5] புரா ணங்கள் எழுதப்படுமுன்பே, அவற்றில் காணப்பட்ட கதைகள்,

கடைக்கழக இலக்கியங்களில் அறியப்பட்டுள்ளன. ஆரியர்கள் கூறும் கடவுளர்கள் அனைவரும் தமிழ்க்கடவுளரே. அக்கடவுளரின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களே. சமற்கிருத மொழியில் பிற்காலத்தில் ஆரியர்களால் திரித்துக் கொள்ளப்பட்ட பெயர்களும் தமிழ் மூலப் பெயர்களே. பிரம்மா என்ற கடவுளை மட்டும் ஆரியர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். பெரும்ஆள் என்பதே பிரம்மா என்பதாயிற்று. பிரசாபதி, பிராணாத்பதி, பிரகத்பதி, பிராமணம் போன்ற சொற்களும் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே. விநாயகா, சரசுவதி, லெட்சுமி, உமா, உசா, சுப்பிரமணியன், சுகந்தன், விசுணு, துர்கா போன்ற எண்ணற்ற சமற்கிருதப் பெயர்கள் அனைத்தும் தமிழ்மூலத்தைக் கொண்டவைகளே.

இராமனும் கண்ணனும் தமிழர்களே. பத்தும் பிறப்புக் கதைகள் அனைத்தும் கடவுளை கிருட்டிணன், பிராமணர்களே உயர்ந்த சாதி என்று கூறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. கடவுளே அவர்களை உயர்ந்த சாதியினர், தேவசாதியின் என்று கூறுவதை மேற்கோளாகக் காட்டி, மக்களையும் நம்பவைத்தனர். மகாபாரதக் கதையென்பது அரசியல் சூது நிறைந்தது. இக்கதையில் கிருட்டிணன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும், தமிழரின் அரசியல் சட்டமாண்புகளுக்கும் போர் நெறிமுறைகளுக்கும் மாறுபட்டவை. ஆனால், போர்க்களத்தில் கிருட்டிணன் அர்ச்சுனனுக்கு அறிவுரை வழங்கியதாக பகவத்கீதை குறிப்பிடுகிறது. பாரதக் கிருட்டிணன் அரசியல் மோசடிக் காரனாகவும், அதே கதையில் வரும் கீதைக் கண்ணன் மாந்தநேயத்தைக் கூறுபவனாகவும் சொல்லப்பட்டுள்ளான். இந்த முரண்பாடுகள், கீதை பிற்காலத்தில் தொகுக்கப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே என்பது, சூத்திரனுக்குப் பிராமணன் கூறும் அறிவுரையாகும். இந்த சூட்சமத்தை அறியாமல் பலரும் அதனை நம்பினர். பாரதப் போரில் சேரன் பெருஞ்சோற்றுதியனின் பணி, தற்காலத்திய செஞ்சிலுவைச் சங்கப் பணிகளை முன்நிறுத்தும்.

உரைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, தொல்காப்பிய நூலை அறிஞர்கள் ஆய்வு செய்ய வேண்டும். பாணினியின் அட்டத்யாயீ தொல்காப்பியத்துக்கு முற்பட்டது என்பதற்கானச் சான்றுகள் இல்லை. இக்கருத்தை நிலைநிறுத்தவே, தொல்காப்பியரின் காலத்தைச் சிலர் பின்னுக்குத் தள்ளுகின்றனர். பாணினி

என்ற பெயரே, பாணன் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபாகக் காணப்படுகின்றது. மொழி இலக்கணத்தைப் பாணினி இந்திரனிடம் கற்கமுற்பட்டதாகவும், இந்திரன் கூறிய விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவனவாக இல்லையென்பதால், சிவனிடம் வேண்டி, இலக்கணத்தைக் கற்றதாகவும் ஒரு கதையுண்டு. சிவன் தமிழ்க் கடவுளே என்பதால், தமிழினின்றே பாணினி தன் இலக்கண அமைவுகளை அமைத்துக் கொண்டான் என்ற கருத்து அக்கதை வழியே அறியப்படும். பதஞ்சலி, பாணினியின் இலக்கணத்துக்கு விளக்கமளித்ததாகச் சொல்லப்படுகின்றது. பதஞ்சலி கி.பி.முதல் நூற்றாண்டைச் சார்ந்தவராகக் கருதப்படுகிறார். பதஞ்சலி சிதம்பரத்தில் வாழ்ந்திருந்ததாக, தில்லைக் கதை கூறுகிறது. பதஞ்சொல்லி என்ற பெயர், சொற்களுக்கு விளக்கம் சொல்வார் என்று பொருள்படும். புலவர்களிடம் பயிலும் மாணவர்களைக் கற்றுச் சொல்லிகள் என்பர். பதஞ்சொல்லி, பதஞ்சலி எனத் திரிந்ததாகக் கருதலாம்.

தமிழகத்தில் கடைக்கழகக் காலங்களில் சமணமும் புத்தமும் பரவலாக அறியப்பட்டிருந்தனவென்பதை தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. ஆரியக் கொள்கைகள் அறியப்பட்ட செய்திகள் அவ்விலக்கியங்களில் காணப்படவில்லை. ஆரியர் என்று கடைக்கழக நூல்கள் குறிப்பிடும் சொல், வட இந்தியர்களைக் குறித்ததே. தமிழில் அறியப்படும் அந்தணர், மேலோர், பார்ப்பனர் ஆகிய சொற்கள், தமிழ்ப் பெரியோர்களையே குறித்தன. உரையாசிரியர்கள் இப்பெயர்களுக்குரியவரை ஆரியப் பிராமணர்களாகக் காட்டிவிட்டனர். சமற்கிருதம் என்ற சொல்லை கடைக்கழக இலக்கியங்கள் எவையும் குறிப்பிடவில்லை. ஆரியர்கள் புகுத்திய சாதிப்பாகுபாடு கடைக்கழகக் காலத்தில் நடைமுறையில் இருந்ததாகவும் குறிப்புகள் இல்லை. எவரும் எந்தத் தொழிலையும் செய்யமுடிந்தது. மன்னனும் கூட பொதுமக்களினின்றும் தேர்வு செய்யப்படக் கூடியவனாயிருந்தான் கரிகாலனை யானை மாலையிட்ட நிகழ்வு, சத்திரியன் என்ற பிரிவு தமிழகத்தில் இருந்திருக்கவில்லையென்பதை உறுதிப்படுத்தும்.

கடைக்கழகம் கி.பி.300 ஆண்டுகளில் முடிவுற்றதென்பர். அதுவே வேற்று இனத்தார் தமிழகத்தை ஆளத் தொடங்கிய காலமாகும். மிகச் சிறந்த நகரிக நாகரிகத்தில் வாழ்ந்திருந்த தமிழக மக்களும், முறையான ஆட்சிகளை மேற்கொண்டிருந்த

மன்னர்களும், எவ்வாறு வேற்றுநாட்டவரால் முடக்கப்பட்டனர் என்பது பற்றியும் செய்திகள் இல்லை. மூவேந்தர்களும் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டுநாட்டையும் மக்களையும் மறந்துபோனது கூட ஒரு கரணியமாயிருக்கலாம். தமிழன் தன்னுரிமை பெற்றிருந்த காலம் கி.பி. 300 ஆண்டுகளோடு முடிவுக்கு வந்தது. இடைக்காலச்சோழர்களும், பின்னர் பாண்டியர்களும் தன்னாட்சிப் பெற்றிருந்தாலும், அக்காலங்களில் பிராமணர்களின் செல்வாக்கு உயர்ந்த நிலையில் காணப்பட்டதோடு சாதிப்பாகுபாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கி.பி. 300 முதல் 600 வரையிலான காலத்தைத் தமிழகத்தின் இருண்ட காலம் என்பர். இக்கால அளவில் நிகழ்வுற்றவை எவையும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த முந்நூறு ஆண்டு கால இடைவெளியில் வாழ்ந்திருந்த புலவர்களும் எந்தச் செய்தியையும் தெரிவிக்கவில்லை. அல்லது அந்நூல்கள் கிடைக்காமற்போயின. சேர,சோழ, பாண்டிய மன்னர்கள் தங்களது ஆட்சியை இழந்து நின்றனர் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இக்கால அளவுகளில் கல்வெட்டுகளோ செப்பேடுகளோ எவையும் கிடைக்கவில்லை.

களப்பிரர் அல்லது களப்பிறர் என்ற இனத்தார், இந்த இடைக்காலத்தில் தமிழகத்தின் மூவேந்தர்களையும் வென்று, ஆட்சியைக் கைக்கொண்டனர் என்று கருதப்படுகின்றது. களப்பிரர் என்போர் யாவர்? அவர்கள் இந்தியாவின் எப்பகுதியைச் சார்ந்தவர்கள்? எக்கரணியம் பற்றித் தமிழகத்தில் போர் தொடுத்தனர்? அவர்களது ஆட்சி எவ்வாறு நடைபெற்றது? என்பன போன்ற கேள்விகளுக்கு இதுவரையிலும் எவரும் தெளிவான விடைகளைத் தரவில்லை. வேள்விக்குடியில் கிடைத்த செப்பேடு ஒன்று, களப்பிரர்களை "கலி" அரசர்கள் என்று குறிப்பிடுகின்றது.[6] கலி என்ற சொல்லுக்கான பொருள் பற்றி ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. கலி என்ற தமிழ்ச் சொல்லுக்கு கட்டல், போர், வஞ்சகம், வலிமை, சிறுமை என்றவாறு பொருள் கொள்ளலாம். இவற்றில் எச்சொல் அம்மரபினைச் சுட்டுகிறது என்பது புரியவில்லை. கலியென்றால் ஆரவாரம், மகிழ்ச்சி என்றவாறும் பொருள் கொள்ளலாம். இருப்பினும் வேள்விக்குடிச்செப்பேடுகள், களப்பிரரைப் பகைவராகக் கருதி எழுதப்பட்டதால், வஞ்சகர் என்றும், எவ்வகையான ஒழுக்க நெறிமுறைகளும் இல்லாதவர் என்றவாறு பொருள்கொள்ளலாம்.

களப்பிரர்கள் பற்றிய பிற செய்திகளாவன:[7]

1. "கலிகுல" என்ற சொல்லை,களப்பிரர் மரபுக்கான பெயராக, சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசியின் "கொப்பரம்" செப்பேடு கூறுகின்றது.

2. "கலியப்தம்" என்றவாறு இம்மரபு, கி.பி. 10 நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட புத்த சமயக் கல்வெட்டு கூறுகிறது.

3. கலிதேவன் என்ற கடவுளை கன்னட நாட்டினர் வழிபட்ட செய்திகள் உள்ள கலிதேவனை வழிபட்ட குலம், கலி குலம் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

4. "களவப்ர" என்ற சமற்கிருதச் சொல்லின் கன்னடத்திரிபாக, "களப்பு" என்று சொல், சிரவண மலைக் கல்வெட்டில் காணப்படுகின்றது.

   (Kalavapraq) களவப்ர என்ற சமற்கிருதச் சொல்லுக்கு உறுதியான தாங்கும் தன்மை கொண்ட கோட்டை என்றவாறு மகா பாரதத்தில் பொருள் சொல்லப்பட்டுள்ளதாக சமற்கிருத அகாரதி கூறுகிறது.[8] (Kalavapra: Bearable rampart earthwork, mound, hillock, mud wall, earth or bank raised as a wall). இச்சொல்லின் வழியே, கோட்டைக் கொத்தளங்களைக் கட்டிக்கொண்டு ஆண்ட மன்னர்கள் எனக் கருதலாம்.

5. கன்னடத்தில் ஒரு பழங்குடி இனத்தாரை, "கள போரா" என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர்.

6. கன்னட நாட்டை, "களவர" நாடு என கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில், களப்பிரர்கள் தென்கன்னட நாட்டைச் சேர்ந்தவர்களே என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கன்னட மொழியும் நாடும் அக்காலத்தில் அறியப்படவில்லையாதலால், அவர்கள் தமிழ் மரபைச் சார்ந்தவர்களே என்ற கருத்தும் உண்டு.

> பெரும்புகழ் அச்சுதக் கோவே
> நந்தி மாமலை சிலம்ப
> நந்தி நிற்பரவுதல் நாவலர்க் கரிதே[9]

என்ற பாடல் வரிகளால், வடக்கேயிருந்த நந்திமலையின் மன்னனாக அச்சுதன் என்பான் ஆட்சி செய்தது வெளிப்படுகின்றது. வேள்விக் குடிச் செப்பேடு கூறும் கலியரசன், அச்சுத விக்கி

ராந்தன் என்பவனே என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக் கவியரசன் தமிழகத்தில் குழப்பங்களையும் அச்சவுணர்வுகளை யும் தோற்றுவித்து, புயலைப் போல் வெளிப்போந்து, மூவேந் தர்களைத் துடைத்தெறிந்தான் என்றும் கூறப்படுகின்றது.

பாலி மொழியறிஞரான புத்த தத்தன் என்பவர் திருச்சி ராப்பள்ளி உறையூரில் வாழ்ந்திருந்தார். அபிம்மாவதாரம் என்ற புத்த சமயநூலை அவர் எழுதினார் என்பர். அந்நூலை, பூம்புகாரில் அரசனாவிருத்த அச்சுதக் களப்பாளன் அவையில் அரங்கேற்றியதாக புத்த தத்தனே தமது நூலில் குறிப்பிடுகின் றார். இவருடைய காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டு என்பர். இக்குறிப்பின் வாயிலாக, சோழநாடு களப்பிரர் ஆட்சிக்குட் பட்டிருந்தது தெளிவாகின்றது. புத்த சமய நூலைத் தமது அவையில் அரங்கேற்ற அனுமதி வழங்கியதால், அச்சுதக் களப் பாளன் புத்த சமயத்தைச் சார்ந்தவனே எனக் கருதவும் இட முண்டு. புத்த கோசர் என்ற சமயத்துறவியும் இக்காலத்தில் வாழ்ந்திருந்தவரே.

உண்மையில் களப்பிரர்கள் எந்தசமயத்தைச் சார்ந்திருந் தனர் என்றும் கூற இயலவில்லை. எனினும் தமிழர் சமயத்துக் கும், தமிழ்ச் சமயக் குரவர்களுக்கும் எந்த உதவிகளையும் செய் ததாகத் தகவல்கள் இல்லை. பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களோடு பள்ளிச்சாலைகள், கோயில்கள் போன்றவை களுக்கு பாண்டியர்கள் காலத்தில் அளிக்கப்பட்டிருந்த நிலங் களையும், களப்பிரர் மரபு பிடுங்கிக் கொண்டது. இம்மர பினை பிற்காலப் பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடை யன் வென்று,மீண்டும் ஆட்சியைப் பிடித்தான். பிடுங்கப்பட்ட வேள்விக்குடி நிலத்தை, மீண்டும் அப்பிரமாணனின் வழி வந்த ஒருவனுக்கு அளித்த வகையில் எழுதப்பட்டதே வேள்விக்குடிச் செப்பேடு ஆகும்.

வேள்விக்குடிச் செப்பேடு தமிழ் மற்றும் சமற்கிருத மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. தமிழ் வரிகள் வட்டெழுத்து முறையிலும், சமற்கிருத வரிகள் கிரந்த முறையிலும் காணப் படுகின்றன. சமற்கிருதத்தில் அறியப்படும் முதல் தகவல் இதுவே. கி.பி. 500 ஆண்டுகளிலேயே சமற்கிருதம் தமிழகத்தில் அறிமுக மாயிற்று. இருப்பினும் சமற்கிருத எழுத்துகளால், அச்செய்தி எழுதப்படவில்லையென்பதால், சமற்கிருத எழுத்து வடிவம் இன்னும் பிற்காலத்திலேயே தமிழகத்தில் அறியப்பட்டதாகக்

கருதலாம். எனவே சமற்கிருத மொழியின் நுழைவு தமிழகத்தில் கி.பி. 500 ஆண்டுகளுக்குப் பிறகே அறியப்பட்டது எனலாம்.

இதற்கு முன்னதாக கி.மு. 700 ஆண்டுகளிலேயே தமிழ்நாட்டில் சமற்கிருதம் அறியப்பட்டது, தொல்காப்பியர் ஆரியரே, கடைக்கழக நூல்களில் ஏராளமான சமற்கிருதச் சொற்கள் உள்ளன. என்றவாறும் சொல்லப்படும் செய்திகளுக்குச் சான்றுகள் இல்லை. கி.மு. 700 ஆண்டுகளில் வடஇந்தியாவிலேயே சமற்கிருதம் பரவலாக அறியப்பட்டது எனக் கூற இயலாது. சமற்கிருதம் படித்தவர்கள் பயன்படுத்தும் மொழியாகவே இருந்தது (Scribal language) என்பதை உணரவேண்டும். பொது மக்கள் அம்மொழியைப் பயன்படுத்தவில்லை. எந்த அரசும் அம்மொழியைப் போற்றி வளர்த்ததாக வரலாறு கூறவில்லை. இடைக்காலத்தில் ஐரோப்பாவில் பயன்படுத்தப்பட்ட இலத்தீன் மொழியைப் போன்றே, சமற்கிருதம் சமய மொழியாகவே அறியப்பட்டது.

தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் அவர்கள், குறுந்தொகைக்கு எழுதிய உரைநூலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சொற்களைச் சுட்டிக்காட்டி, அவையெல்லாம் சமற்கிருதச் சொற்களாகவே உள்ளனவென்றும், கடைக்கழகக் காலத்தில் இச்சொற்கள், பல நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன வென்றும் கூறுகிறார். அகில், அரசன், அவை, ஆரியர், இமையம், உலகம், கடிகை, காமம், குணம், குவளை, சகடம், சூலி, தண்டு, தூதன், மாதம், முகம் வாசம், முத்து,பிச்சை, பாமம், நாகரிகம், பலி, தேசம் என்று விரியும். ஓரையென்ற சொல்லை வையாபுரிப்பிள்ளை உள்ளிட்ட பலரும் தமிழ்ச் சொல் அல்லவென்றே குறிப்பிட்டுள்ளனர். உண்மையில் இவையாயும், தமிழ் வேரினைக் கொண்டு தமிழ்ச் சொற்களாக அறியப்பட்டு, சமற்கிருதத்தில் திரிபுபட்ட சொற்களே எனலாம்.

கடைக்கழகக் காலங்களில், மன்னர்களால் தமிழ் போற்றி வளர்க்கப்பட்டது. ஏராளமான புலவர் பெருமக்கள் பல்வேறு இலக்கியங்களைப் படைத்தனர். அவ்வாறான சூழ்நிலை களப்பிரர் ஆட்சியில் காணப்படவில்லை. காரைக்கால் அம்மையார் மதுரை சென்று சில காலம் தங்கியிருந்தார். அங்கு தனது சிவநெறியின் சமயக் கடமைகளைக் கூட ஆற்ற அவரால் இயலாமல், திரும்பிவிட்டதாக அம்மையாரின் குறிப்புகளே

தெரிவிக்கின்றன. திருவிழாக்கள் போன்ற மக்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளும் தடைசெய்யப்பட்டிருந்தன.

படைநான் குடன்று பஞ்சவன் துரந்து
மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
அருகர்ச் சார்ந்து நின்றரன் பணியடைப்ப

என்ற கல்லாடக் குறிப்புகள், சிவவெறி மதுரையில் தடை செய்யப்பட்டிருந்ததை விளக்கும்.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் சமற்கிருத மொழியையே பயன்படுத்தியதாகச் செய்திகள் கூறுகின்றன. பிற்காலப் பல்லவர்களே, தமிழைப் பயன்படுத்தினர் எனலாம். களப்பிரர்களைப் புறங்கண்ட பல்லவர்கள், தங்கள் வெற்றியை காசாக்குடிச் சாசனம், (நந்திவர்மன்), புல்லூர்ச் செப்பேடுகள் (இரண்டாம் நந்திவர்மன்), மற்றும் பட்டத்தார் மங்கலச் செப்பேடுகள் ஆகியவற்றின் வழியே வெளிப்படுத்தியுள்ளனர். கி.பி. 550 -570 ஆண்டுகளில், பாண்டியன் கடுங்கோன் களப்பிரறை வென்றெடுத்தான். பாண்டியர்கள் அக்காலத்தில் சமணர்களாகவே இருந்தனர் எனக் கருதலாம். கடுங்கோனும் அவன் வழி வந்த சேந்தன் சிறீ மாறவர்மன், கோச்சடையன், தேர்மாறன், நெடுஞ்சடையன் (வேள்விக் குடிச் செப்பேட்டை அளித்தவன்) ஆகியோர் சமணர்களாகவே அறியப்படுகின்றனர். திருஞான சம்பந்தர் மாறவர்மனைச் சிவநெறிக்குத் திருப்பியதாக செய்திகள் கூறுகின்றன. ஆறு இலக்கத்துக்கும் மேற்பட்ட சமணர்களைக் கழுவேற்றிய காலமும் அதுவே என்பர்.

களப்பிரர் காலத்தில் தமிழ் மொழியும், சிவநெறியும் புறக்கணிக்கப்பட்டிருந்தனவென்று வரலாற்றாசிரியர் எம். அருணாசலம் கூறுகிறார்.[10] சிவநெறிக்குத் தடையும், தடையை மீறியவர்களுக்கு ஒறுப்புகளும் கூட வழங்கப்பட்டன. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்ட ஆரியர்கள், சிவநெறியை ஆரிய வழிக்குத் (Aryan Partheon) திருப்பியதாக அருணாசலம் குறிப்பிடுகிறார். இது, சமற்கிருதத் தாக்கத்தின் இரண்டாம் நிகழ்வாகும். ஆனைக் காவில் குடியிருந்த சிவனை, சம்புகேசுவரனாக இக்காலத்தில்தான் ஆரியர்கள் மாற்றினர் என்கிறார்.

சம்பு என்ற சமற்கிருதச் சொல், செம்மை அல்லது செம்பு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. நாவல் பழத்தின் உள்ளே செந்நிறம் காணப்பட்டதால், செம்புநிறம் எனப்பட்டது. செம்பு

சம்புவெனத் திரிந்தது. களப்பிரர் காலத்தில் நிறுத்தப்பட்டிருந்த சிவ வழிபாட்டு முறைகள் (ஏறக்குறைய 300 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்தன) மீண்டும் தொடங்கப்பட்டபோது, ஆலயங்களில் சமற்கிருதத்தைப் புகுத்தினர். அதற்கு முன்பு தமிழில் வழிபாடுகள் நடத்தப்பட்ட செய்திகளை பல தலைமுறையினர் அறியவில்லையென்பதால், எளிமையாக எவ்வகையான எதிர்ப்புகளுமின்றி, சமற்கிருதம் கருவறைக்குள் நுழைந்துவிட்டது. மக்களும் சமற்கிருதம்தான் முன்பும் வழிபாட்டு மொழியாக இருந்தது என்று நம்பினர் எனலாம். சமற்கிருதம் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்ட மூன்றாவது நிகழ்வு இதுவே எனலாம்.

இறைவனை வழிபட சமற்கிருதமே உரிய மொழியென்ற நிலைப்பாடு மேற்கொள்ளப்பட்ட காலத்தில், நாவுக்கரசர் ஞானசம்பந்தர் போன்றவர்கள் தமிழால் இறைவனைப் போற்றினர். என்றாலும் நால்வகைச் சாதியினரில் ஆரியரே மேல்சாதியினர் என்ற கொள்கையை சமயக் குரவர்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டனர். பத்தி (பக்தி) உணர்வே அவர்களுக்கு முதன்மையாயிருந்தது. சமய இலக்கியங்கள் தமிழில் படைக்கப்பட்ட காலங்களில், சமற்கிருதமே ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

கொடுங்கோனின் வெற்றிக்குப்பிறகு பாண்டியர்களின் ஆட்சி மதுரையில் நிலைகொண்டது. மைசூர்ப் பகுதிகளை (எருமையூர் இரணதீரன்) வென்று,மதுரையுடன் இணைத்துக் கொண்டதாக வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. சாளுக்கியம், மராட்டியம் வரை பாண்டியர்களின் செல்வாக்கு விரிந்தது. பல்லவன் இராசசிம்மனையும் வென்றனர். இச்சூழலில் வடக்கேயிருந்து பல ஆரியர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்தனர். இக்கால அளவுகளில் சமற்கிருத மொழி, தமிழுடன் கலந்தது. இக்கலப்பைத் தடுத்து நிறுத்த ஆட்சியாளர்கள் முயற்சி மேற்கொள்ளவில்லை. இடைக்காலச் சோழர்களின் எழுச்சிக் காலம் வரை பாண்டியர்கள் ஆட்சியிலிருந்தனர். அரசு மற்றும் ஆட்சி ஆணைகளிலும் சமற்கிருதம் புகுத்தப்பட்ட காலம் அதுவே எனலாம். பல்லவர்கள் தமிழர்களாயில்லாதிருந்த நிலையில், சமற்கிருத மொழிக்கு அவர்கள் ஊக்கம் கொடுத்தனர். பிராகிதம்- சமற்கிருதம் ஆகிய மொழிகளில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மன்னர்களுடைய பெயர்களும் சமற்கிருதப் பெயர்களாகவேயிருந்தன.

"விசித்திர சித்த அரசனால் (மகேந்திர வர்மன்) பிரம்ம-ஈசுவர -விசுணு கிருபையை முன்னிட்டு, செங்கல் சாந்து மரங்கள் இல்லாத இக்கோயில் கட்டப்பட்டுள்ளது", என கடலூர் மாவட்டம் மண்டகப்பட்டு கல்வெட்டுக் கூறுகிறது. பிரம்மா என்ற கடவுள் தமிழகத்தில் அறிமுகம் செய்யப் பட்டதை இக்கல்வெட்டு வெளிப்படுத்துகின்றது. மத்த விலாச பிரகசனம் என்பது மகேந்திர வர்மனால் எழுதப்பட்ட சமற்கிருத நூலென்று கருதப்படுகின்றது. இவனுக்குச் சூட்டப் பெற்ற பெயர்கள் அவனி பசனன் (உலகநேயன்), சத்ரு மல்லன் (பகைவர்க்கு தோல்வியைத் தருபவன்) குணபாரன் (நற்பேரா ளன்) என்பனவாகும். இவையாவும் சமற்கிருதச் சொற்களே.

நரசிம்மவர்மன், இரண்டாம் புலிகேசியை வென்று வாதா பியைத் தீக்கிரையாக்கினான். வாதாபியினின்றும் காஞ்சிக்குத் திரும்பியபோது, கணபதியையும் அழைத்து வந்தான். கி.பி.642 ஆம் ஆண்டுக்குமுன்பு, தமிழ்நாட்டில் கணபதி வணக்கமுறை இருந்ததில்லை. பிற்காலத்தில் சிவனின் மூத்த பிள்ளையாகவும், முருகனின் அண்ணனாகவும் கணபதி அழைக்கப்பட்டான், வேதங்களின் முதல்வன் என கணபதி சொல்லப்பட்டாலும், வேதங்களில் கணபதி என்ற பெயரே காணப்படவில்லை. புராணங்களும் கணபதியைக் குறிப்பிடவில்லை. மகேந்திரவர் மன் காலத்திலேயே சீனப் பயணி யுவான் சுவாங் காஞ்சிக்கு வந்தார். பல்லவர் ஆட்சி பற்றியும், அவ்வாட்சியில் புத்த சமயத்தினரின் நிலைகள் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். பல்லவர்களின் ஆட்சி,ஆரியம் பிராமணர்களின் கைகளுக்குள் ளேயே இருந்ததாக சீனப் பயணி குறிப்பிடுகின்றார்." ஆகமப் பிரியன் என்ற பட்டத்தை நரசிம்மனுக்குப் பிராமணர்கள் சூட்டினர். தந்தினி என்ற சமற்கிருத ஆசிரியர் "தசகுமார ஆசாரிதம்" என்ற நூலை அப்போதுதான் எழுதினார் என்பர்.

நந்திவர்மன் காலத்தில் காஞ்சியில் முத்தேசுவரர் மற்றும் வைகுந்தப் பெருமாள் ஆகிய பெயர்களில் ஆலயங்கள் எழுப் பப்பட்டன. நந்திவர்மன் சிவநெறியை விட்டு மாலிய நெறிக்கு மாறியவன். திருவரங்கத்தில் கோயில்கட்ட, நாகப்பட்டினத்தி லிருந்த புத்த விகாரைச் சூறையாடிக் கொள்ளையடித்த திரு மங்கை ஆழ்வார் இவன் காலத்தவரே. திருமங்கை ஆழ்வாரின் செயல், சமய நோக்கில் நேர்மைப் படுத்தப்பட்டது. நந்திவர் மன் ஏறக்குறைய பிராமணர்களின் அடிமையாகவே வாழ்ந்

திருந்தான். பிராமணர்களுக்குக் கணக்கிலடங்காத கொடைகள் வாரிவழங்கப்பட்டன. ஆரியர்கள் தங்களுடைய தலைமுறைக்கு வேண்டிய பெருஞ்செல்வத்தை, ஒருமுறை அசுவமேத யாகம் நிகழ்த்திக் கொடுத்தாலே பெற்றுவிடலாம் என்ற நிலையில், நந்திவர்மனை அவ்வாறு செய்யத்தூண்டினர். பெரும் பொருட் செலவு பிராமணர்களுக்குச் செய்ய வேண்டியிருக்கும் என்பதனாலேயே, பல பேரரசர்கள், அசுவமேத யாகத்தைத் தவிர்த்தனர். தமிழ்நாட்டின் பிராமணப் பிடிப்பு நிலைபெற்றிருந்ததை விளக்கும் நிகழ்வே இந்த யாக வேள்வியாகும். நந்திவர்மனின் மகன் தந்திவர்மன் (கி.பி. 795- 846) திருவல்லிக்கேணியிலிருக்கும் பார்த்தசாரதிக் கோயிலைக் கட்டினான். அக்கோயிலில் உள்ள கல்வெட்டொன்று இவனை பல்லவாபரணன் எனப்போற்றுகிறது. இவன் தன்னை பரத்வாச கோத்திரம் என்று கூறிக் கொண்டான். தன்னை ஆரியப் பிராமணீயத்தோடு இணைத்துக் கொள்வதில் பெருமை கண்டான். இவனது மகனான மூன்றாம் நந்திவர்மன் ஒருவனே தமிழைப் போற்றினான். நந்திக் கலம்பகம் இவன் எழுதிய நூலாகும்.

பல்லவர் காலத்தில் காஞ்சிபுரம் சமற்கிருத மொழியின் தலைமையிடமாக மாறிற்று. கிறித்துப் பிறப்பாண்டுகளுக்கு முன்பே, காஞ்சியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் இருந்தது. சாணக்கியர்கூட இங்குப் படித்ததாக ஒரு செய்தியுமுண்டு. பல நூற்றாண்டுகள் தமிழைப் போற்றி வளர்த்த காஞ்சி, சமற்கிருதத்தின் தலைமையிடமாயிற்று.[12]

தமிழர்களின் முழுமுதற் கடவுளாகச் சிவன் வணங்கப்பட்டான். நான்கு நிலத்துக்கு நான்கு தெய்வங்கள் அறியப்பட்டிருந்தாலும், மாலும் இந்திரனும் வாரணனும் சிவனுடைய உருவகங்களாகவே சொல்லப்பட்டனர். இம்மூவரும் மழையோடும் நீரோடும் தொடர்புடையவர்கள். மலையில் தோன்றும் ஆறு, அந்த ஆற்றைத் தோற்றுவிக்கும் மழை, மழைக்கு மூலமான கடல் என்றவாறு நானிலக் கடவுளரும் ஒருவரோடொருவர் பிரிக்க இயலாது பின்னிப் பிணைந்தவர்களே. ஒவ்வொரு நிலத்துக்கு ஒரு பெயரை இட்டுத் தமிழர் வழிபட்டனர். இதனால் நானிலத்தாரிடையே கடவுள், வழிபாடு, வணக்கமுறைகள் பற்றிய பிணக்குகள் எழுந்ததில்லை. சிவனின் உருவாக, மற்ற மூன்று நிலக்கடவுளரும் வணங்கப்பட்டனர். பாலையின் கொற்றவையும் சிவனுடைய பெண் உருவக

மாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டாள். கடைக்கழக இலக்கியங் களில், இக்கடவுள்கள் போற்றிப் பாடப்பட்டுள்ளனர். தமிழ ரிடைய வழிபாட்டு முறைகளில் பிணக்குகள் இருந்ததாக, இலக்கியங்கள் எவையும் சுட்டவில்லை.

சமணமும் புத்தமும் தமிழகத்தில் நுழைந்தபோது, அவை சமயப் பிணக்குகள் தோன்ற வழிவகுத்தன. தத்தம் சமயங் களுக்கு மக்களை இழுக்கும் கூட்டம் தேடும் போராட்டம் தொடங்கியது. தலைகளைக் கணக்காகக் கொண்டே ஒரு சமயம் பெரியதென்றும் சிறியதென்றும் சொல்லப்பட்டன. தமிழ் இலக்கியங்கள் நானிலக் கடவுளரையும் போற்றிப் பாடிய நிலையில், புத்தமும் சமணமும் தமக்கென தனி இலக் கியங்களைப் படைத்துக் கொண்டன. இதன் வழியில் ஊருக்கு ஊர் கூட்டம்சேர்க்க ஆட்கள் பணிக்கப்பட்டனர். இவர்கள் சமயத்துறவிகள் எனப்பட்டனர். சமணப் பள்ளிகளும், புத்த விசாரங்களும் கணக்கின்றி உருவெடுத்தன. கடவுள் மறுப்புச் சயமங்களான புத்தமும் சமணமும்,பிற்காலத்தில் கடவுளை உருவாக்கிக் கொண்டன.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகம் வந்த ஆரியர்கள், தமிழகத்தில் நிலவி வந்த சமயக் குழப்பங்களைக் கண்டனர். களப்பிரர் ஆட்சியில் தமிழ்ச் சமய வழிபாட்டு முறைகளும் முடக்கப்பட்டிருந்த நிலையில், ஆரியக் கொள் கைகளை முன்னிறுத்தி, தமிழர் சமயத்தைப் பிளவுபடுத்தத் தொடங்கினர். சிவநெறிக் கொள்கைகளுக்குப் புதிய விளக்கங் கள் அளிக்கப்பட்டன. படைப்புக் கடவுள் பிரம்மாவென்றும், காத்தற்கடவுள் விசுணு வெறும், அழித்தற் கடவுள் சிவன் என்றும் மூன்று கடவுளர் கொள்கையை வலியுறுத்தினர். இந்த மூன்று பணிகளையும் தமிழ்க் கடவுளான சிவனே செய்து வந்ததாகத் தமிழர்கள் நம்பினர். ஆரியப் பிராமணர் அறிவித்த சமயக் கொள்கை, குழப்பங்கள் நிறைந்ததாகக் காணப்பட் டது. ஆளாளுக்கு ஒரு கொள்கையை அறிவித்துக் கொண்டி ருந்தனர்.

இச்சூழ்நிலையில் ஆதி சங்கரர் என்ற மலையாளத்து ஆரிய பிராமணர், தமிழ்ச் சிவநெறிக்குப் புதிய கொள்கையொன்றை அறிவித்தார். ஆதிசங்கரர் கி.மு. 508ஆம் ஆண்டில் பிறந்ததாக, திருச்சூர் இராமகிருட்டிண மடத்துறவி சாக்கியானந்தா சுவாமி கூறினார். இச்செய்திக்குச் சான்றுகள் இல்லையென்று மறுக்

கப்பட்டது. மேற்கித்திய வரலாற்றாய்வாளர்கள் மெக்டோனால், கெய்த் (MC Donell, Keith) ஆகிய இருவரும் சங்கரரின் காலம் கி.பி. 750 என்பர்.கே.பி. பகத் என்பார், சங்கரரின் பிறப்பாண்டு கி.பி. 788 என்று குறிப்பிடுகின்றார். சங்கரர், சன்மத தாபனர் என்று அழைக்கப்படுகின்றார். முக்தாவளிச் சிமிருதியின்படி, இல்லறத்திலுள்ளோர் ஐந்துவழி வணக்க முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆதித்யா (ஞாயிறு), அம்பிகா (பார்வதி), விட்டுணு (திருமால்), கணபதி (பிள்ளையார்), மகேசுவரன் (சிவன்) ஆகியோரை வழிபட வேண்டும். இதற்கு இட்ட தேவதை (விருப்பக் கடவுள்) வழிபாட்டுமுறையென்று பெயர். இதனை, பஞ்சயத்ன பூசை யென்று சரங்கரர் குறிப்பிட்டுள்ளார்.[13] இதன்படி அனைத்துக் கோயில்களிலும் மேற்கண்ட ஐவருடைய உருவங்கள் வைக்கப்படல் வேண்டும்.

துவைதம் என்ற கொள்கை இரண்டு என்றும், அத்வைதம் என்பது, இரண்டல்ல என்றும் சொல்லப்பட்டன. அத்வைதம் என்ற கொள்கையைத் தந்தவர் ஆதிசங்கரர் ஆவார். சீவாத்மாவும் (உயிர்) பரமாத்மாவும் (இறைவன்) தனித்தனியானவை யென்றும், இறைவனின் நிலைக்கு மாந்த உயிர் உயரமுடியாது என்றும் சொல்லப்படும் கொள்கையே துவைதம் ஆகும். துவ என்ற சமற்கிருதச் சொல் இரண்டைக் குறிக்கும். அ +துவ என்பது, இரண்டல்ல ஒன்று என்ற பொருள் கொள்ளப்படும். சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க இயலாது என்றும் இரண்டும் ஒன்றே என்பதும் அத்வைதக் கொள்கையாகும். இந்த வகையில் மாந்தனே கடவுள் என்றும் கருதப்படும். இந்த இருவகையான குழப்பங்களுக்கிடையே விசிட்டாந்துவைதம் என்ற கொள்கையை இரமானுசர் அறிவித்தார். விசிட்டம் என்றால் மேன்மையானது என்று பொருளாகும்.

இந்த மூன்று கொள்கைகளும் ஏதோ புதிய கண்டுபிடிப்புகள் போன்று, ஆரியப்பிராமணர்களால் புகழப்பட்டன. காரணம் இவை சமற்கிருத மொழியில், ஆரியப் பிராமணர்களால் சொல்லப்பட்டவை யென்பதே. திருமூலர் அழகு தமிழில் சொன்ன சமய விளக்கங்களைத்தான், தனித்தனியாகப் பிரித்து ஆரியர்கள் அறிவித்தனர். திருமூலர் சொன்னது தமிழில் என்பதால், ஆரியர்கள் அதனை ஏற்கவில்லை. ஆதிசங்கரர் காலத்திலும் அவருக்குப் பிறகும் ஆலயங்கள் ஆரியமயமாக்

கப்பட்டன. மந்திர சாத்திரப்படி, சக்கரங்கள் வரையப்பட்டு, அவை கருவறைகளில் வைக்கப்பட்டன. இவை வைக்கப்பட்ட தாலேயே ஆலயங்களுக்கு மக்கள் கூட்டம் திரண்டு வந்ததாக வும், இச்சக்கரங்கள் இல்லாத கோயில்கள் மக்கள் கூட்டம் காப்படவில்லையென்றும் சொல்லப்பட்டன. ஆலயங்களில் கடவுளுக்கென கூட்டம் சேராமல், சக்கரத்துக்காகவே கூட்டம் சேர்ந்ததாகக் கூறும் ஆரியக் கொள்கை, உண்மையில் கடவுளை அடிப்படையாகக் கொண்டதா என அக்காலத்தில் எவரும் கேட்கவில்லை.

சமயத் தலைவர்களுக்கு மக்களிடையே செல்வாக்கு உயர்ந்ததையுணர்ந்த பலரும், தாமும் தலைவர்களாக வேண்டும் என்றும், தமக்குப் பின் ஒரு கூட்டத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கருதி, சிவநெறியை காளமுகம், பாசுபதம், மாவரதம், வாமம், வைரவம் என்றவாறு பிரித்துப் போட் டனர். திவாகரம் என்ற நிகண்டு நூல் வைசேடிகம், நியாயம், மீமாம்சம், ஆருக்கதம், புத்தம், லோகாய்தம் என்றவாறு அறுவகைக் கொள்கைகளைக் கொண்ட நூல்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றது. தமிழரின் சிவநெறியை முற்றிலும் ஆரியமயமாக்கியவர் ஆதிசங்கரரே. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி, தமிழர் சமயமாக அறியப்பட்ட சிவனி யத்தை, சமற்கித மயமாக்கியதும் இவரே.

சிவனியம், ஆகமங்கள் என்ற சமயம் தொடர்பான விதி களைத் தந்திருந்தது. அவை எக்காலத்தில் தோற்றுவிக்கப் பட்டவை என்பதற்கானச் சான்றுகள் இல்லாததால், அவை தொல்தமிழரின் சமய விதிகளாகவே கருதப்பட்டன. குறிப் பாகக் கோயில்களைக் கட்டுவதற்கான விதிமுறைகள், ஆகமங் களில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன. ஆகம் என்பதற்கு நெஞ்சு என்பதே பொருளாகும். சமயவிதிகளின் சிறப்பையுணர்த்தவே ஆகம் என்ற சொல் அளிக்கப்பட்டது. ஆகம் - ஆகமம் எனப் பட்டது. இருபத்தெட்டு வகையான ஆகம நூல்கள் தமிழில் இருந்ததாகக் கூறுவர். அவற்றில் எட்டு அழிந்துவிட்டதாகவும், இருபது நூல்களே கிடைத்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. சமய வழிபாடுகள், ஆலயக் கட்டுமானம், ஆலயங்கள் எவ் வாறு அமைக்கப்படவேண்டும் என்ற விளக்கங்கள், கருவறை பற்றிய நுணுக்கம், குடமுழுக்கு விழாக்கள் நடத்துவது போன்ற செய்திகள் ஆகமங்களில் இருந்தன.

ஆரியர்கள் எந்தக் கோயிலையும் கட்டியதாக வரலாறு இல்லை. திறந்த வெளியில் வேள்விகளைச் செய்தனர். அப்பணிகள் முடிந்தபின்னர், அவ்விடத்தை எவரும் சிறப்பிடமாகக் கருதவுமில்லை. ஆலயம் கட்டும் தொழில் நுட்பமும் ஆரியர்களுக்கு இருந்ததில்லை. தொன்றுதொட்டு பொறியியல் கட்டுமானத் துறைகளில் அவர்கள் பயிற்சி பெறவுமில்லை. கடினமான உடலுழைப்பையும் தொழில் நுணுக்கத்தையும் கொண்டுள்ள ஆலயக் கட்டுமானப் பணிகளுக்கும் ஆரியர்களுக்கும் எந்தத் தொடர்பும் எக்காலத்திலும் இருந்ததில்லை. இவர்களே ஆகமவிதிகளை உருவாக்கினர் என்ற கூற்று, நகைப்பிற்கிடமானதேயன்றி வேறன்று, இந்தியாவில் அறியப்பட்ட எந்தச் சிறப்பான கூறுகளையும், அவை தம்முடையதே எனக் கூறிக் கொள்வதில் ஆரியர்கள் முந்திக் கொள்வர்.

அண்மையில் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி கோயிலில் கண்டெடுக்கப்பட்ட ஆகமவிதிகள் தொடர்பான ஓலைச் சுவடிகள் தமிழில் எழுதப்பட்டிருந்தன.[14] இதனை ஒருவர் சமற்கிருதத்தில் மொழி மாற்றம் செய்த ஓலைச் சுவடிகளும் அங்கேயே கிடைத்தன. அவை யிரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தவர்கள், தமிழில் உள்ளதை தப்பும் தவறுமாக சமற்கிருதத்தில் மொழி பெயர்த்திருந்தது தெரியவந்தது.[15] அம் மொழி பெயர்ப்பு முற்றுப் பெறாமல் இருந்தது. அப்பணியை முடிக்குமுன்னரே அந்த மொழி மாற்றம் செய்தவர் இறந்து போயிருக்க வேண்டும். அப்பணியை முழுதும் அவர் முடித்திருந்தால், தமிழ் மூல ஓலைச் சுவடிகளை அழித்திருப்பார். பிற்காலத்தவர், சமற்கிருதத்தில் தான் ஆகம விதிகள் எழுதப் பட்டிருந்தன என்ற நிலைப்பாட்டிற்கு வரவேண்டிய சூழல் உருவாகி இருக்கும். இவ்வாறு தமிழினின்றும் எடுத்துக் கொள்ளப்பட்ட செய்திகளையே சமற்கிருத ஆகமம் என்று கூறிக் கொண்டனர். திருமூலர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட சிவ ஆகமங்கள், கி.மு.800 ஆண்டுகளுக்கு முன்பே அறியப்பட்டிருந்தன. உடல் உழைப்பின்றி பிறர் உழைப்பில் வாழ்ந்திருந்த ஆரிய இனம், அறிவு உழைப்பின்றி, தமிழரின் அறிவுச் செல்வங்களைத் தமதாக்கிக் கொண்டதை, அறிவுத் திருட்டு (Plagiarism) என்று கூறுவதைத் தவிர வேறென்ன கூறமுடியும்? ஆனால் பிற்காலத்தில் தமிழர்களால்- இத்திருட்டுகள் வெளிப்பட்டு விடும் என்பதை அப்போது

அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆகமவிதிகளில் காணப்படும் சமற்கிருதச் கலைச் சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன என்பதை மெய்ப்பிக்க இயலும். ஆகமங்களைத் தந்தது தமிழ்ச் சிவநெறியே என்பதை இனியும் மறைக்க முடியாது என்பதை அறிதல் வேண்டும்.

கடந்த நூற்றாண்டில் சென்னையில் வாழ்ந்திருந்த சிவத்தியாநாநந்த மகிரிசி என்பார் தனது இரிக்கு வேத சம்கிதை என்ற நூலின் முகவுரையில், பிற்காலத்துச் சமயத் தலைவர்கள், ஆள் சேர்க்கும் போக்கில் கூட்டங்களைப் பெருக்கிக் கொண்டு, தம்மைத் தலைவர்களாகவும் அறிவித்துக் கொண்டு, ஒன்றாகவிருந்த சமயத்தைப் பலவாகப் பிரித்துப் போட்டனர் என்று சாடுகிறார். இடைக்காலத்தில் அறியப்பட்ட சமயங்கள் எல்லாம், ஆண்டவனை மறந்துவிட்டு, ஆள் கூட்டத்தையே நம்பியிருந்ததாகக் குறிப்பிடுகிறார். இதன் அடிப்படையில் எழுந்தவைகளே தமிழ்நாட்டில் அறியப்படும் சமயப் பூசல்களாகும். புத்தத்தையும் சமணத்தையும் எதிர்த்த ஆரியம், தமிழர்களின் உதவியைக் கொண்டே, அவ்விரு சமயங்களையும் தமிழ்நாட்டிலிருந்து துடைத்தெறிந்தது. ஆறுஇலக்கம் சமணர்கள் கழுவிலேற்றப்பட்டனர் என்ற செய்தி, ஆரியத்துக்குக் கிடைத்த வெற்றி என்றாலும், வரலாற்றில் விழுந்த கரும்புள்ளி என்பதை உணரவேண்டும்.

ஆரியம் தமிழ்நாட்டில் அறிமுகமான கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப்பிறகு, தமிழர்களை சாதியின் பெயராலும், சமயங்களின் வழியிலும் கூறுபோட்டது. ஓரினமாக இருந்த தமிழ் இனத்தை பல்வேறு குழுக்களாக மாற்றியதில் ஆதி சங்கரருக்குப் பெரும் பங்குண்டு. அடுத்து வந்த இராமனுசர், விசிட்டாத்துவைதம் என்ற கொள்கையை முன்னிறுத்தி, வைணவம் என்ற பிரிவை ஏற்படுத்தினார். திருமாலே முழுமுதற் கடவுளென்றும், சிவன் காட்டுமிராண்டிக் கடவுள் என்றும் சொல்லப்பட்டனர். சிவனைத் தாழ்த்தி, திருமாலை உயர்த்தும் கதைகள் பின்னப்பட்டன. இக்கதைகளையே உண்மையான வரலாறு என நம்பிக் கொண்டு வைணவக் கொள்கைகளை ஆரியர்கள் தொடக்கத்தில் ஏற்கத் தயங்கினாலும், சைவ நெறியில் சிறப்புடன் அறியப்படாதிருந்த பலர் வைணவத்துக்குத் தாவினர். ஆதிசங்கரர் வழி வந்த சைவ

ஆரியப் பிராமணர்களின் எண்ணிக் கையைவிட, வைணவத்தில் குறைவாகவே இருந்ததையுணர்ந்த இராமானுசர், சைவப் பிராமணர்களை தம் பக்கம் இழுக்கும் முயற்சியில் தோல்வியுற்றார். இதனால் பறையர், பள்ளர், பள்ளி என அறியப்பட்டிருந்த சூத்திரர்களைப் பிராமணர்களாக்கி, தமது எண்ணிக் கையைப் பெருக்கிக் கொண்டார். இடைக்காலச் சோழர்கள் ஆட்சியில், சிவாலயங்களுக்கு பிராமணர்கள் கிடைக்காமற் போகவே, வேளாளர் மரபினர் பலர் பிராமணர்களாக்கப்பட்டனர். அவர்களே இன்று சிவாச்சாரியார்கள் எனப்படுபவர்களாவர்.

இன்று தமிழ்நாட்டில் ஆரியப் பிராமணர் என்று சொல்லிக்கொள்ளும் எவரும், ஆரியரல்லர் என்பதும், பிழைப்புக்காகப் பிராமணர்கள் ஆனவர்களே என்பதும் வரலாற்றுண்மையாகும். பிராமணர்களுக்கு அடுத்த உயர்ந்த சாதியினர் யார் என்பதில் தமிழர்களிடையே போட்டி நிலவியது; அப்போட்டியில் வேளாளர்கள் தாங்களே சூத்திரரினும் உயர்ந்தவர் எனக் காட்டிக் கொண்டனர். இவர்களை சத்சூத்திரர் (சூத்திரர்களில் தங்களுக்கு உதவுபவர்கள்) எனப் பிராமணர்கள் அழைத்தனர். சத்சூத்திரர் என்ற விருதினைப் பெற தமிழர்கள் படாதபாடு பட்டனர். தமிழரின் அறியாமையும், வெள்ளந்தித் தனத்தையும் என்னென்று சொல்வது? தம்மைத் தவிர, தமிழர்கள் அனைவரும் சூத்திரர்களே என்று ஆரியர் கருதினர்.

சூத்திரச் சாதிக்குள்ளேயே யார் பெரியவர் என்ற போட்டி இன்றுகூட நிலவுகிறது. பறையர், பள்ளி, அருந்ததியர் என்றவாறு அழைக்கப்படும் சூத்திரர்களில், உயர்ந்த சாதியினர் தாங்களே என ஒவ்வொருவரும் கூறிக் கொள்கின்றனர். முதல் அடிமை, இரண்டாம் அடிமை, மூன்றாம் அடிமை என்று கூறிக் கொள்வதில் போட்டியிடும் தமிழர்களை என்னவென்று சொல்வது. நான் இன்ன சாதியென்று கூறுவதை விடுத்து, நான் தமிழன் என்று கூறும் நிலை எப்போது வருமோ தெரியவில்லை. இந்த சாதித் தலைவர்களில் பலர் டாக்டர் பட்டம் பெற்றவர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், பேராசிரியர்கள் என்றும் தம்மை விளக்கப்படுத்திக் கொள்வது கொடுமையிலும் கொடுமையாகும். ஆரியர்கள் தமிழகத்தில் விதைத்த நச்சுவிதை இன்றும் கூட விளைச்சலைத் தந்து கொண்டி

ருப்பது தமிழர்களை எவ்வகையிலும் உயர்த்தாது என்பதைத் தமிழர்கள் உணரவேண்டும்.

சமய மறுமலர்ச்சிக் காலம் என அறியப்படும் நிகழ்வு உண்மையில்; ஆரியத்தையும் சமற்கிருதத்தையும் தமிழகத்தில் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்ட காலமாகும். பன்னிரு திருமுறைகளும் திவ்விய பிரபந்தங்களும் வர்ணாசிரம முறைக்கு எதிர்ப்பு எதனையும் தெரிவிக்கவேயில்லையென்பது, ஆரியத்தின் தாக்கம் எவ்வாறு தமிழ்நாட்டில் புரையோடியிருந்தது என்பதை விளக்கும். ஆண்டவன் ஒருவனே, மக்கள் அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகளே என்று கூறும் ஆரிய சிவநெறியும், ஆரிய வைணவ நெறியும், ஆலயங்களுக்குள்ளே சிலரை அனுமதிக்க வில்லை என்ற செய்தி, உண்மையில் இவர்கள் எல்லாம் ஆண்டவனின் அடியார்களா என்ற கேள்வியை எழுப்புகின்றது. மேற்கிலிருந்து வந்த கிறித்துவ சமயமும், இந்த நடைமுறைக்கு விலக்காகவில்லை. இன்றும்கூட, கிறித்துவத் தேவாலயங்களில் தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படுபவருக்கு உரிய உரிமைகள் வழங்கப்படவில்லை. செத்த பின்பும் கல்லறையிலும் தனியிடம் ஒதுக்கியுள்ளனர். மோட்சத்திலும் தனி இடத்தை ஒதுக்குவார்களா எனத் தெரியவில்லை. அன்பையே கற்பித்த இயேசுவின் தொண்டர்கள், ஆரியக் கொள்கைக்கும் அடிமையாகிவிட்டனர் என்பது உண்மையிலும் உண்மை. தமிழரின் சாதிப் பாகுபாட்டை, இசுலாம் ஓரளவுக்கு உடைத்தெறிந்தது என்பது ஆறுதலான செய்தியாகும்.

